ANNAMALAI UNIVERSITY ISAI TAMIL SERIES–Vol. XIII

# தமிழிசைப் பாடல்கள்

பதின்மூன்றாந் தொகுதி

80

1946

130

உலகத்தமிழ்க் கருத்தரங்கு

கலைக்காட்சிக் கூ

சென்னை

உ

சரவண முனிவர் இயற்றிய

# சென்னிமலைத் தலபுராணம்

130

2 ஆம் உலகத்தமிழ்க் கருத்தரங்கு மாநாடு
கலைக்காட்சிக் குழு
சென்னை

உரையாசிரியர் :

வித்துவான், வே. ரா. தெய்வசிகாமணி,

வேலம்பாளையம், எழுமாத்தூர் வழி, ஈரோடு R. M. S.

வெளியீடு :

சென்னிமலைத் தலபுராண வெளியீட்டுக் குழுவினர்.

7482

சிவாஜி பிரஸ், சென்னிமலை.

# சென்னிமலைத் தலபுராணம்.

## முன்னுரை

### தோற்றுவாய்.

இவ்வுலகில் வாழும் மக்களுடைய துன்ப நீக்கத்திற்கும் இன்பப் பேற்றுக்கும் இடமாயுள்ளவை ஆலயங்களே என்பது இந்திய நாட்டு மக்களின் ஏகோபித்த முடிவாகும். முன்வினைத் தொடர்பால் தாங்கொணுத துயரமுற்றலைந்த மனிதன் பலரிடத்துஞ் சென்று தீர்வு காணுது முடிவில் ஆலயத்தையடைந்து இறைவனைச் சரண்புகுந்து தன் துயரச் சுமைகளையிறக்கி வைத்து விடுகின்றுன். நன்மைகளையடைய விரும்பியவனும் ஆலயத்திற்குச் சென்று ஆண்டவனை வணங்கிக் காலக்கிரமத்தில் தான் விரும்பிய நலன்களைப் பெற்று மகிழ்கின்றுன். இவ்விரண்டும் உலகிற் கண்கூடே. காப்பவன் கடவுள். வழிபடுவோன் மனிதன்.

இவ்வுலகில் தேவரும், முனிவரும், மக்களும், ஏனைய உயிரினமும் வழிபட எளிதில் வெளிப்பட்டுப் பேறு நல்கிய மூர்த்திகள் அமைந்த ஆலயமிருக்குமிடத்தைத் தலமென்றும், அத் தலத்தில் உடல் மாசுடன் வினை மாசு கழுவும் மகிமைபெற்ற நீரினையுடைய குளம், யாறு, சுனை, கூவல் முதலியவற்றைத் தீர்த்தமென்றும் சொல்கிறோம். தீர்த்தங்களில் மூழ்குவதால் தூய்மையும், தலவாசம் செய்வதால் புண்ணியமும், மூர்த்தியைக் கண்டு தரிசிப்பதால் அறிவு விளக்கமுமுண்டாகின்றனவென்பர். இமயமுதல் குமரிவரையிலுமுள்ள நமது பழம் பெரும் பாரத நாடு இம் மூன்றையும் குறைவின்றிப் பெற்றுள்ளதால் புண்ணிய நாடு எனப் பெயர் பெற்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றின் மகிமை பொருந்திய பழமையாகிய வரலாற்றினை யறிவிப்பன தலபுராணங்களாம். ஆதலின் தலபுராணங் கற்பது இன்றியமையாததாயிற்று. தலபுராணம் படித்தவர்களே தலவழிபாட்டில் மிகுந்த ஊக்கமுடையராவார். ஆதலின் நம் முன்னோர் தலங்கள் தோறும் தலபுராணஞ் செய்து வைத்தனர். அங்ஙனம் செய்து வைக்கப் பெற்ற தலபுராணங்களில் நம் சென்னிமலைத் தலபுராணமும் ஒன்று.

*இது சென்னிமலையின் தோற்றமும் மகிமையும் ஆகிய தலச் சிறப்பும், அத்தலத்திலுள்ள தீர்த்த விசேடமும், அம்மலை மேற் கோவில் கொண்டருளிய முருகக் கடவுளாகிய மூர்த்தியின் சிறப்புமென்னுமிவற்றைத் தெளிவுறக் கூறுகின்றது.*

## சென்னிமலை.

*இதற்குச் சிகரகிரி, புட்பகிரி, சிரகிரி, சென்னியங்கிரி யென்னும் வேறு பெயர்களுமுண்டு. இம்மலை குறிஞ்சி நிலக் கடவுளாகிய செங்கேழ் முருகன் காதலித் தமர்ந்த வான் தங்கிய வரைசூழுலகமாகிய குன்றுதோறாடல் திருப்பதிகளில் ஒன்று. இது மலைநிலத்திற்குரிய இயற்கை வளங்கள் பலவும் பெற்றுத் திகழ்வது. இது கொங்கில் முதன்மையுற்று விளங்கும் மேல் கரைப் பூந்துறை நாட்டின் கண் ஈரோட்டிலிருந்து கோவை செல்லும் வழியிலுள்ள ஈங்கூர்ப் புகை வண்டி நிலையத்திலிருந்து தெற்கே நான்கு கல் தொலைவிலுள்ளது. சென்னிமலையும், சிவன்மலையும் முருகனுக்குரிய இணையொத்த தலங்களாகக் கூறுவர். சென்னிமலையில் தயிரும், சிவமலையிற் பாலும் முருகனுக்கு மிகவும் உவப்புடையனவென்பர். சென்னிமலையில் தயிர் புளிப்பதில்லை யென்பது தல ஐதீகம். திருப்புகழ்ப் பாடல் கேட்டு அருணகிரி நாதருக்கு முருகன் படிக் காசு நல்கிய தலம் இதுவாகுமென்பர். தலவிருட்சம் திந்துருணி (புளி). படிக்காசுப் புலவர் முதலிய புலவர்கள் இத்தலத்து முருகனைப் பாடியுள்ளனர்.*

> ''சென்னிமலை வேலருக்குச் சேர்கொம் பிரண்டுண்டு
> கன்னிகுற வள்ளிக்குக் காலில்லை — யின்னிலையே
> ஆட்டுக்குக் காலில்லை யானைக்குக் கொம்பில்லை
> பாட்டுக்கு ளாராய்ந்து பார்.''

*என்பது இத் தலத்தைப்பற்றி உலக வழக்கில் வழங்கும் பழைய சம்பிரதாய வெண்பா.*

## தலபுராணம்.

*புராணம் என்பதற்குப் பழமை என்பது பொருள். இது ஆகுபெயராய், பழைய வரலாற்றையுடைய நூலுக்குப் பெயரா யிற்று. திருவாசகத்தில் வரும் ''சிவபுராணம்'' என்பதற்குச் ''சிவனது அநாதி முறைமையான பழமை'' என்று எழுதி*

யுள்ள அதன் பழமையான குறிப்பு ஈண்டு நோக்குதற்குரியது. புராணம் மூன்று வகைப்படும். அவை மகா புராணம், உப புராணம், தலபுராணம் என்பன. வேதத்தின் பொருளை விளக்கு தற்குச் செய்யப் பெற்றவைகள் மகா புராணங்கள். மகா புரா ணங்களின் அங்கமாகச் செய்யப்பெற்றவைகள் உப புராணங்கள் மகா புராணம், உப புராணம் என்பவைகளிலிருந்து செய்யப் பெற்றவை தலபுராணங்கள். சொல்லிற் சிறந்தது சுருதி என்றும், பொருளிற் சிறந்தது புராணம் என்றும் கூறுவர்.

"செய்வதுந் தவிர்வதுந் தெரிக்குங் காலை
சொல்லிற் றலைமைகொள் சுருதி முதலவும்
பொருளிற் றலைமைகொள் புராண முதலவும்
மன்னரி னன்பரின் மருவுத லானுங்
குறிப்பு நடையினைக் கொண்டினி துணர்த்தலிற்
செய்யுளின் கிழத்தியே போறலானும்
அவற்றினுஞ் சிறப்புடைத் தாமெனக் கொளலே"

— அணியியல் விளக்கம், தலைமகற் படலம். சூத்திரம்-2.

புராணங்கள் உள்ளது கூறும் உலகியலானும் இல்லது கூறும் புனைந்துரையானும் பாடப் பெறுவது புலவராற்று நெறி யாம். முன்பு தமிழ் மொழியில் தலபுராணம் செய்யும் வழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. பிற்காலத் தமிழ்ப் புலவர்கள் வடநூற் புராணங்களை யாதாரமாகக் கொண்டு தலபுராணம் பாடினர். தலபுராணங்கள் தலவரலாறு மட்டும் கூறிச் செல்வன வும் தலவரலாற்றுடன் கற்பனைகளை யேற்றிக் காவிய நடையில் செய்யப்பெற்றனவுமாகிய இருவகையில் விளங்குகின்றன. புண்ணியங்களில் சிவ புண்ணியம் சிறந்ததென்றும், சிவ புண்ணி யங்களினும் ஆலயப் பிரதிஷ்டை சிறந்ததென்றும், ஆலயப் பிரதிஷ்டையினும் தலபுராணப் பிரதிஷ்டை சிறந்ததென்றும் கூறுவர். சென்னிமலைத் தலபுராண நூலாசிரியர் இருவகைப் புண்ணியங்களையும் ஒருசேரச் செய்தவர்.

## தலபுராணம் — காவியம்.

கவிகளால் செய்யப்படுவது காவியமாம். கவியாவது வளம் பொருந்திய செஞ்சொற்களால் உயிர்க்கு உடல் போலப் பொரு ளுக்கிடமாகப் பலவகையணிகளும் பொருந்தக் கற்றுவல்ல புலவ ரால் பாடப்பெறும் செய்யுட்களாம். இது பாட்டு, கட்டுரை, கலவை என மூவகையாம்.

" பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினில்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள் " — நன்னூல்.

" செய்யு ளென்பவை தெரிக்குங் காலைக்
குற்ற மொன்றின்றிக் குணம்பல வுடையவாய்
அணியொடு கெழீஇய சொல்லும் பொருளுமாம் "

" அதுதான் — பாட்டுக் கட்டுரை கலவை மூவகைத்தே "
— அணியியல் விளக்கம், செய்யுட் படலம்-2.

*காவியம் செய்யுளாற் செய்யப் படுதலின் அது செய்யுளென வும் பெயர் பெறும். அச் செய்யுளாகிய காவியம் பெருஞ் செய்யு ளெனவும், சிறு செய்யுளெனவும் இருவகையாம்.* நகர் வரு *ணனை முதல் பகைவெல்லுதல் ஈறாக உள்ள பதினெட்டுறுப்புகள் அமையப் பாடுவது பெருஞ் செய்யுளென்றும், அக் காவிய உறுப்புகள் சில வரப் பாடுவது சிறுசெய்யுளென்றும் கூறப்படும்.*

" பெருஞ்செய் யுட்டிறம் பேசுங் காலை
நகர்கடல் மலைபரு வங்கதிர் மதிகளின்
தோற்றம் பொழில்விளை யாட்டுநீ ராட்டு
மதுவுண் டாட்டுப் புணர்ச்சி பிரிவு
மணமகப் பேறு சூட்சி தூது
செலவு பெருவென்றி மூவாறு முடைத்தே "

" அவைசில குறைந்துள தாஞ்சிறு செய்யுள் "
— அணியியல், செய்யுட் படலம்-50, 51.

*திருக்குற்றலப் புராணம், சீகாளத்திப் புராணம், காஞ்சிப் புராணம் முதலியன பெருங் காவியத்திற்குரிய உறுப்புகள் முற்றும் அமையப் பாடப்பெற்ற தலபுராணங்களாம். இச் சென்னிமலைத் தலபுராணம் நாடு, நகர், மலை, புணர்ச்சி, தூது என்னும் காவியப் பொருள்கள் சிலவமையப் பாடப் பெற்றமை யால் இது சிறு காவிய வகையைச் சேர்ந்ததாம். சென்னிமலைத் தலபுராணம் சிறு காவிய வகையைச் சார்ந்ததாயினும் தன்னிக ரில்லாத் தலைவனாகிய சென்னிமலை முருகக் கடவுளைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு விளங்குதலின் இது பெருங் காவியம்போல மதிக்கத்தக்க சிறப்பினையுடையதாகும்.*

7482



" தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தெனின்
செய்யுளிற் சிறிதும் விழுமிய தாகும் "
— அணியியல் விளக்கம், செய்யுட் படலம்-4.

*செய்யுளென்னும் காவியம், வேதம் போல நன்மை தருவ தாய்க் கற்றுவல்ல புலவர்களாற் செய்யப்பட்டுத் தன்னைக் கற்போருக்குப் புகழ் முதலிய பயன்களைத் தருவதாம் என்பர்.*

" செய்யு ளென்பது மறைமுத லவற்றின்
இனிதாய்ப் புகழ்முத லியநலம் பயத்தலிற்
பாவலர்க் கொருதலை யாச்செயுந் தகைத்தே " — 1.

" புகழும் பொருளு முலக வழக்கமுந்
தீமையிற் றீர்வு நன்மையிற் சார்வு
மூவகையு மினையவுஞ் செய்யுளி னும்பயன் " — 4.
— அணியியல், தலைமதற் படலம்.

## காவியச் சுவை — கவிச் சுவை.

*காவியம் சுவையமைந்ததா யிருக்க வேண்டும். காவியம் சுவைபெற அமைய வேண்டுமாயின் அக் காவியக் கவிகள் சுவைபெற வமைந்திருக்க வேண்டும். காவியத்திற்கும் கவிக்கும் சுவை முக்கியம்.*

" பெருங்காப் பியநிலை பேசுங் காலை
... ... ... ... ... ... ... ...
நெருங்கிய சுவையும் பாவமும் பொருந்தக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப "
— தண்டியலங்காரம், பொதுவியல்-8.

*அச்சுவை சொற்சுவையும், பொருட்சுவையுமாம். இவ்விரு சுவையும் அமைந்த கவிகளே இன்பந் தருவனவாம்.*

" சொல்லினும் பொருளினும் சுவைபட லின்பம் "
— தண்டியலங்காரம், பொதுவியல்-11.

*சொற் சுவையாவது சொற் புணர்ச்சி காரணமாகத் தோன் றும் சுவை. செய்யுளின்கண் ஓசையுடைமையும், நன்மொழி புணர்த்தலும், மாத்திரையளவும், வழிமோனை வழியெதுகை*

முதலியனவும் திரிபும், மடக்கும் (யமகம்) சிலேடையும் சொற் சுவை பயப்பனவாம். நாவினுலறியப்படும் கைப்பு, புளிப்பு முதலிய சுவை போலச் செவியாற் கேட்டறியப்படும் சுவை சொற்சுவையாம். சொல்லாவது இனிய அடைமொழிகளுடன் புணர்ந்த சொற்களும் வழிமோனை முதலாயின வரத் தொடுக்கப் படும் சொற்களுமாம்.

பொருட் சுவையாவது பொருட் புணர்ச்சி காரணமாகத் தோன்றும் சுவை. பொருளாழமுடைமையும், விளங்குகின்ற உதாரண முடைமையும், தன்மை உவமை, உருவக முதலிய பொருள் பற்றிய அணிகளும் பொருட் சுவை பயப்பனவாம். பொருட் புணர்ச்சி காரணமாக உவகை முதலிய ஒன்பான் சுவைகளும் தோன்றுமென்பர் அணியியல் நூலார். இவற்றை நவரசம் என்பர் வடநூலார்.

'' அச்சுவை யுவகை நகையே யழுகை
வெகுளி பெருமித மச்ச மிளிவரல்
மருட்கை நடுநிலை யெனவொன் பதாகும் ''
— அணியியல், சுவைப் படலம்-2,

இவை ஒன்பது சுவைகளாம். பொருளென்பன :- செய்யு ளில் வரும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் பொருள்களுமாம். கவிப் பொருள்களை யுள்ளத்திற் கொள்வதாற் பெறுஞ் சுவை பொருட்சுவையாம். செய்யுளில் புறத்தே தோன் றும் சொல் பற்றிய சுவை புறச் சுவை யெனவும் செய்யுளில் வரும் சொற்களினுள் தோன்றும் பொருள் பற்றிய சுவை அகச்சுவை யெனவும் பெயர் பெறும். அணியியல் விளக்க நூலார் செய்யுளுக்காவன கூறும் சூத்திரத்தில் சுவை வேறுபாடு கூறுவது செவ்வி யென்றும், அச் செவ்வி சுவைப் பொருளுக் கிடமாமென்றும் அச்சுவை கொடி முந்திரிகைப் பழம், தெங்கம் பழம் என்னும் இரு தன்மைத்தா மென்றும், அகத்தும் புறத்தும் சுவையுடையது கொடி முந்திரிகை என்றும், அகத்துள் மட்டும் சுவையுடையது தாழை (தெங்கம் பழம்) என்றும் கூறுவர். இதனால் இச் செய்யுளிலமைந்த சுவைகளெல்லாம் அகப் புறச் சுவை, அகச் சுவை என இரண்டு வகையி லடங்கு மென்பது தெளிவாம்.

'' அத்தகு செய்யுளுக் காவன வகுப்பிற்
சொற்[redacted]பொருள் யாக்கையுங் குறிப்புள் ளுயிரும்

ஒப்பு முதலிய வணியணி கலனும்
... ... ... ... ... ... ... ... ...
சுவைநுகர்ச் சியின்மிகு வேற்றுமை தெரிக்கும்
செவ்வியு மென்மனுர் தெரிந்திசி னேரே '' — 5

'' செவ்வி பொருளின் தான மாமது
கொடிமுந் திரிகையுந் தாழையு மென்ன
மிக்குவேற் றுமையி னிருவகைத் தாகும் '' — 35

'' கொடிமுந் திரிகை யகம்புற மிரண்டினுந்
தெள்ளிய சுவைத்தெனத் தெரித்தனர் புலவர் — 36

'' தாழையுண் மறைந்த சுவைத்தா கும்மே '' — 37

*சென்னிமலைத் தலபுராணமாகிய காவியச் செய்யுளினுள் இவ்விருவகைச் சுவையும் தெளிவுற வமைந்து நிற்றலைப் பல விடங்களிற் காணலாம். அவற்றுள் இரண்டொன்று காட்டுதும்.*

*செப்பேடு கண்ட மான்மியம் நான்காவது செய்யுளில் ஆயம் என்னும் சொல் குயிலாயம், அயிலாயம், மயிலாயம், கயிலாயம் என முதன் மொழியால் திரிபுற்று ஒன்றன்பின் ஒன்ருய் எதுகை நயமுற வமைந்து நிற்றலும் இப் பாடலடிகளி லமைந்துள்ள மோனை விசேடமும் இனிய ஓசையுடைமையும் புறத்தே தோன்ற நிற்றல் புறச் சுவையாம். உவமைப் பொருள் களாகிய குயில், கோங்கமலர், வானரம், வண்டு, சோலை, மயில் ஆகியவற்றை முறையே மத்தள மொலிப்போராகவும், தாளமாக வும், தாளங் கொட்டுவோராகவும், பண்பாடும் பாணராகவும், கேட்டு மகிழ்வோராகவும் நாடக மகளிராகவும், உருவகமாக்கி இவற்றையுடைய சிரகிரிச் சாரலை நாடகசாலையாமெனக் குறிப் பினுலறிய வைத்ததும் செய்யுளினுட் பொருள் பற்றி வரும் அகச் சுவையாம். இப்பாடலில் அகச் சுவையும், புறச் சுவையும் அழகுறவமைந்திருத்தலால் இது அகத்தும், புறத்தும் சுவை யுடைய கொடிமுந்திரிகைக் குதாரணமாம்.*

*காட்சி மான்மியம் இரண்டாவது செய்யுளில் அருவி, சாரல், சுனை என்பவற்றின் வருணனை கூறிச் சிகர வரையின் பெருமை புலப்படுத்தலும், தேனெழுக்கிற்கு நெளிந்தோடும் பாம்பினை யுவமை கூறுதலும் செய்யுளினுட் பொருள் பற்றி வரும் அகச் சுவையாம். ஆதலின் இப் பாடல் அகத்திற் சுவையுடைய*

தாமரையென்னும் தெங்கம் பழத்திற் குதாரணமாம். இச் செய்யுளில் சொற்சுவையினும் அகச்சுவை மிகுதியாதல் காண்க. மற்றும் இந்நூலின் கண் சொற்சுவையும், பொருட் சுவையுமமைந்து நிற்குமிடங்கள் பலவாம்.

பூமகட் கணியாயது பூந்துறை நாடு 1—18. பூமாரி பொன்மாரி பொழி மூதூர் பூந்துறையூர் 1—23. மேதிநறும் பாலோடு புனலோடும் வெள்ளோடு 1—24. வந்துமந்த மாருதமூர் வசையதிரு நசையனூர் 1—25 எழுமாத்தூர் சத்திநா யகன் வைகு மெழுமாத்தூர் 1—26. மேயதிரு விருந்துமிக விளங்குதிரு விருந்தபுரம் 1—27. இவை இன்னுசையுடன் மோனையும், வந்த சொல் மீண்டும் வருதலாகிய மடக்கும் பெற்றுச் சொற்சுவை மிளிர்ந்து நிற்றல் காண்க.

புட்பகிரி மான்மியம் 21, 22 செய்யுட்கள் நல்லாரிருவரையும் கண்டு காதலுற்ற ஆடவர்களின் காமவேட்கை புலப் படுத்தலால் இச் செய்யுட்கள் பொருட் புணர்ச்சி பற்றிய உவகைச் சுவைக் குதாரணங்களாம்.

## நூலினியல்பு.

இந்நூல் காப்புச் செய்யுள் முதலாக 207 செய்யுட்களையும் செப்பேடு கண்ட மான்மியம், சிரகிரி மான்மியம், புட்பகிரி மான்மியம், இடும்பனுக்கு வழிகாட்டிய மான்மியம், காட்சி மான்மியம், ஆலயங் கண்ட மான்மியம் என்னும் ஆறு பெரும் பிரிவுகளையுமுடையது. இதிலுள்ள செய்யுட்கள் திரிசொற்களதிகமின்றி இயல்பாகிய செஞ்சொற்களாற் பாடப் பெற்றவை. ஆதலின் இந்நூல் படிப்போருக்கு இன்பம் தரும் எளிய நடையினை யுடையது. இந்நூல் உவமை முதலிய அணிகளும், சைவ சித்தாந்தக் கொள்கைகளும், திருமுருகாற்றுப்படை, கந்தபுராணம் முதலிய பிறநூற் கருத்துக்களும் நாடு, நகர், மலை முதலியவற்றின் வருணனைகளும், முருகக் கடவுளின் தோற்றமும் சிறந்த தோத்திரங்களுமுடையதாய்ச் சொன்னயம், பொருணயங்களிற் சிறந்து சென்னிமலையின் தோற்ற முதல் ஆலயம் எடுத்துத் தேர்ப்பணி செய்து விழாவியற்றிய தீருகவுள்ள பல வகையான செய்திகளையும் கற்பனையின்றி இயல்பாகிய தன்மை நவிற்சியாகக் கூறுகின்றது. மேற் கூறிய நூலினியல்புகளனைத்தையும் இந் நூலுரையினை நோக்கியறிந்து கொள்க.

இந் நூலாசிரியர் காஞ்சிவாழ் மறையவர்களிடமிருந்து அறிந்த செய்திகளும் முருகக் கடவுள் தனக்கு அருள் செய்ததும், சிகரகிரியில் தான் நேரில் அறிந்தனவும் தான் ஆலயமியற்றி யதும் முதலாகிய தன்னொடு தொடர்புடைய செய்திகளைத் தான் பாடிய இந் நூலின்கண் அமைத்திருப்பது, சேர முனிவராகிய இளங்கோவடிகள் தான் சாத்தனூர் பாலும், குன்றக் குறவர் பாலும் கேட்டறிந்தனவும், வஞ்சி நகரத்தில் தான் நேரில் அறிந் தனவும் தேவந்திகை மேல் தெய்வம் தோன்றித் தன்னைப் பற்றிச் சொல்லிய தன்னொடு தொடர்புடையனவுமாகிய செய்தி களமைந்த சிலப்பதிகாரம் பாடிய தன்மையை யொருபுடை யொப்பதாம்.

## நூலாசிரியர்.

சென்னிமலைத் தலபுராண நூலாசிரியர் சரவண முனிவ ரென்பவர். இந் நூலின் செப்பேடு கண்ட மான்மிய முதலிய வற்றில் சரவண முனிவனே காஞ்சிவாழ் மறையவர்களிடம் செப்பேட்டிலிருந்து சிரகிரி மான்மியம் கேட்டறிந்தானென்று தெரிதலானும் புராண வரலாறு கூறும் செப்பேடு கண்ட மான்மி யம் 13–14 செய்யுட்களில் ‘‘ ஆதரவின் அத்தலத்து மூதறிவோர் தமியேனுக் கருளினரால் ’’ என்றும், அடுத்த செய்யுளில்

‘‘ பைந்தமிழாற் சென்னிமலைப் புராணமெனப் பெயர்நிறுவிப்
பயன்கோ டற்கே

... ... ... ... ... ...

புந்திதெளி தரத்தமியே னறிந்தவா புன்மொழியாற்
புகல லுற்றேன் ’’

எனக் கூறுதலானும் சரவண முனிவரே தமிழில் சென்னிமலைப் புராணஞ் செய்தவரென்பது தெளிவாக விளங்குகிறது. சரவண முனிவர் வரலாற்றை யறிவதற்கான வேறு புறச் சான்றுக ளொன்றுமில்லை யென்றாலும் அவர் செய்த சென்னிமலைத் தல புராண நூலே அகச் சான்றாக நின்று அவர் வரலாற்றை யறியச் செய்கின்றது. சென்னிமலை மேல் முதன் முதல் முருகனுக்குக் கோவில் எடுத்தவரும் தேரியற்றி விழாச் செய்து வழிபாடியற்றி யவரும் சரவண முனிவரே யென்பதும் அந்நூலால் விளங்கு கின்றது.

## சென்னிமலைத் தலபுராணத்தா லறிதற்குரிய சரவண முனிவரின் வரலாற்றுச் சுருக்கம்.

*சரவண முனிவர் சென்னிமலையை யடுத்துள்ள திருவிருந்த புரத்தில் சிவமறையோர் குலத்தில் பிறந்து சத்திய ஞானியைக் குருவாகக் கொண்டனர். பிரமசரிய முதலிய நிலைகளில் நின்று பின்பு துறவியாய்ச் சென்னிமலைச் சார்பில் தவம் புரிந்து கொண்டிருந்தார். சென்னிமலையின் வரலாற்றை யறிய விரும்பித் திருவாவினன் குடியை யடைந்து சிவகிரியை வலமாகச் சுற்றி முருகக் கடவுளை வழிபட்டார். முருகக் கடவுள் தன் கனவில் அருளியவாறு காஞ்சிபுரம் சென்று அங்கு வாழ் மறையவர்களிடம் செப்பேட்டிலிருந்து சிரகிரி வரலாற்றை யறிந்து அதனை வேறு செப்பேட்டி லெழுதிக் கொண்டு சென்னிமலைக்கு வந்து செப்பேட்டி லெழுதியுள்ள சென்னிமலையின் மகிமைகளனைத்தையும் அம் மலைமேற் கண்டு மகிழ்ந்தார். முருகக் கடவுள் திருவாவினன் குடியில் கனவில் அருளியவாறு சென்னிமலை மேல் சரவண முனிவருக்குத் தமது அறுமுக வடிவமும், ஒருமுக வடிவமு மாகிய காட்சியைக் காட்டியருளினர். அக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்த சரவண முனிவர் அவ்விரு வடிவக் காட்சிகளையும் தோத்திரம் செய்தார். சென்னிமலை மேற் கோவிலெடுப்பித்தார். முருகக் கடவுள் அவர் வேண்டியபடியே கோவிலில் எழுந்தருளினர். வேறொரு கோவிலில் வள்ளி தெய்வயானையாரை யெழுந்தருளச் செய்தார். பின்பு சென்னிமலையின் சார்பிலுள்ள சுப்பிரமணிய தீர்த்தத்தின் பக்கத்தில் நகரமொன்றெடுப்பித்துக் கயிலாச நாதருக்கும் ஆலயமெடுப்பித்தார். அவ்வாலயத்தினுள் சித்திர மண்டப மொன்றில் வள்ளி தெய்வயானையாருடன் முருகக் கடவுளை யெழுந்தருளச் செய்தார். முருகக் கடவுளுக்குத் திருத் தேர் செய்து தேர் விழாவியற்றிச் சில காலம் வாழ்ந்திருந்த பின் சென்னிகிரி வேலர் திருவடிகளை யடைந்தார். சரவண முனிவர் தேர் விழாச் செய்து பூமியில் வாழ்ந்திருந்த சில காலத்தில் சென்னிமலை மேலிருந்து கொண்டு சென்னிமலைத் தலபுராணம் பாடினரெனத்தெரிகின்றது. சரவண முனிவர் திருவிருந்தபுரத்தில் பிறந்து வாழ்ந்தவராகலின் அத் தலத்தில் தாம் வழிபட்டு வந்த மூல மூர்த்திகளாகிய திருமுக மலர்ந்த நாதருக்கும், திருந்தார் குழலி அம்மைக்கும் தாம் பாடிய சென்னிமலைத் தலபுராணத்தில் வணக்கம் கூறினர்.*

*திருவாவினன் குடியிலும் திருவாவினன்குடி மலையிலும் முருகக் கடவுள் கோவில் தொண்டருளியது போல முறையே*

சென்னிமலை நகரத்தும் மலைமேலும் முருகக் கடவுளை யெழுந்தருளச் செய்துள்ளார். திருவாவினன்குடி மலையில் முருகக் கடவுள் இந்த மலையில் நினக்கு நம் காட்சியைக் கண்டனுபவிக்கும்படி செய்ததுபோல "அந்த வரையினிற் காட்சி தருதும் எனவருள் செய்தார்" என்றபடி சென்னிமலையினும் அறுமுக வடிவமாகவும், ஒருமுக வடிவமாகவும் காட்சி தந்தருளினர். இதனையுட்கொண்டே சரவண முனிவர் சென்னிமலையில் ஒருமுக வடிவாகிய தண்டபாணியின் திருவுருவக் காட்சியைக் கண்டு தோத்திரம் செய்யும் பொழுது, காட்சி மான்மியம் 17-வது செய்யுளில் "சிவமா மலையாய்" எனத் தோத்திரம் செய்தனரெனத் தெரிகிறது. இப் பாடலுரையில் சிவமா மலையென்பது இருவகை வழக்கிலும் வழங்குதல் நோக்கிக் காங்கேய நாட்டுச் சிவன்மலையெனக் கூறினேமாயினும் தெளிவாகநோக்குமிடத்துத் திருவாவினன்குடிச் சிவ மலையைக் குறிக்குமாறு நிற்றல் காண்க.

## சரவண முனிவர் காலம்.

சென்னிமலையிற் கருப்பக்கிரக முதலிய கோவில் திருப்பணி செய்தவர் சரவண முனிவரே யெனத் தலபுராணத்தால் அறிகின்றோம். சென்னிமலை வேலவர் கோவில் கருப்பக்கிரகத்தின் இடதுபுற நிலவு கால் பக்கம் பெயர் பொறிக்கப்படாத கல்வெட்டொன்றுளது. அது கலியுகத்திற்குட்பட்ட சாலிவாகன சகாப்தம் 1641ல் பொறிக்கப்பட்டதாக அக் கல்வெட்டிலிருந்து தெரிகின்றது. இன்றைக்கு அது 248 ஆண்டுகளின் முன் பொறிக்கப்பெற்றதெனக் கொள்ளலாம்.

சென்னிமலைத் தலபுராணத்தால் சரவண முனிவர் வாழ்ந்த காலம் அறிதற்கியலவில்லை. பழநித் தலபுராணம் மலைகள் பழநியடைந்த சருக்கம் சென்னிமலைத் தலபுராணத்தின் இடும்பனுக்கு வழிகாட்டிய சரிதத்தையொத்துப் பாடியிருப்பதும் சென்னிமலைப் புராணம்.

> "மின்பொலி நன்முது குன்றினை மேவி
> யின்புறு காவிரி யாறு கடந்தே
> பொன்பொலி புட்ப கிரிப்புற னுற்றான்"
>
> — புட்பகிரி மான்மியம், 10 செய்யுள்.

எனச் சிரகிரியாகிய புட்பகிரியைக் கூறுமாறு போலப் பழநித் தலபுராணமும்.

'' முத்தநதி நீடுமுது குன்றநெறி யேறி
நத்திலகு பொன்னிநதி நன்கரை கடந்து
புத்தமுத பானர்புகழ் புட்பகிரி யுற்ருன்

எனப் புட்பகிரியைக் கூறலானும் பழநித் தலபுராண நூலாசிரிய ராகிய வைகாவூர் வாலசுப்பிரமணியக் கவிராயரின் முற்பட்டவர் சரவண முனிவரெனத் தெரிகிறது. அவர் வாழ்ந்த காலம் சாலிவாகன சகம் 1550-ஆம் ஆண்டு என்று அந்நூற் சிறப்புப் பாயிரத்தால் தெரிகின்றது. இப்பொழுது நிகழும் சாலிவாகன சகம் 1889-ஆம் ஆண்டாதலின் இற்றைக்கு 339 வருடங்களின் முன் அவர் வாழ்ந்தவராவர்.

600 ஆண்டுகட்குப் பிற்பட்ட கல்வெட்டுக்கள் பிடாரியூர் என்றே* அந் நகரைக் குறிக்கிறது. திருவிருந்தபுரம் என்ற பெயர் 600 ஆண்டுகட்கு முன்பு வழங்கப்பட்டதாகும். சரவண முனிவர் திருவிருந்தபுரத்தில் வாழ்ந்தார் எனத் தாமே கூறுவதால் அவர் காலம் 600 ஆண்டுகட்கும் முற்பட்டதேயாகும்.

எனவே கருப்பக் கிரகம் சமைத்தவர் சரவண முனிவராத லின் அது அவர் காலத்துக் கல்வெட்டாக விருக்கலாமோ வெனின் அங்ஙனம் கொள்ளுவதற்கியலவில்லை. பிற்காலத்தில் வெளித் திருப்பணி செய்த செங்கத்துறைத் தம்பிரான் முதலி யோர் காலத்திற் பொறிக்கப்பெற்ற கல்வெட்டாயிருக்கலாமெனத் தெரிகிறது.

சென்னிமலை யடிவாரத்தில் வேட்டுவபாளையம் வேளாளத் தம்பிரான் கட்டிய மடத்தினருகில் கோமாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் முருங்கைப் பெருந் தொழுவார் சென்னி மலை வேலவருக்குத் தன்மம் விட்ட செய்தி கூறும் நிலைக்கல் சாசனமொன்றுள்ளது. முருங்கைப் பெருந்தொழு பிரமேசுர சுவாமி கோயில் கருப்பக்கிரகப் பட்டிகை வரியிலும் ஸ்வஸ்தி ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு ஏழாவது சித்திரை மாதம் செதுக்கப்பட்ட கல்வெட்டொன்றுளது. சுந்தரபாண்டியன் கி. பி. 1216ல் பட்டமேறியவன். அவனுடைய காலம் இன் றைக்கு 736 வருடங்களாகின்றன. கோவிலுக்குத் தன்மம் விடுவதென்பது கோவில் கட்டிப் பிரபலமுற்ற சிலவாண்டுகளின் பின்னரேயாம். சென்னிமலையில் முதன் முதல் கோவில் கட்டி யவன் சரவண முனிவனேயெனத் தெரிதலால் அவன் காலத் திற்குப் பின்னரே தன்மம் விட்டிருக்க வேண்டும். மேற்காட்டிய

* அந் நகர் என்பது திருவிருந்த புரத்தைக் குறிக்கின்றது.

சாசனச் செய்தியாகத் தன்மம் விட்ட காலம் 736 ஆண்டுகளின் முன்பென்றுல் சரவண முனிவர் காலம் 736 ஆண்டுகளின் முன்னரேயாகும். கற்கள் 500 ஆண்டுகளுக் கொருமுறை சட்டைவிடுமென்பர். சென்னிமலைக் கோவிற் கருப்பக்கிரகத் தின் கிழக்குப் பாகத்திலுள்ள கற்கள் பொரிந்திருப்பதும் சில இடங்களில் இரண்டு சட்டை விட்டிருப்பதும் நோக்குங்கால் கருப்பக்கிரகம் கட்டிய காலம் 736 ஆண்டுகளுக்கு முன்பென் பதில் ஐயமில்லை. கருப்பக் கிரகம் கட்டிய காலமே சரவண முனிவர் காலமாம்.

## சென்னிமலையைப் பற்றிய வரலாற்றுச் செய்தி கூறும் நூல்கள்.

| நூல்கள். | ஆசிரியர். |
|---|---|
| 1. சென்னிமலைத் தலபுராணம் | – சரவண முனிவர் |
| 2. மேழி விளக்கம் | – சரவணையா |
| 3. சென்னிமலைப் பிள்ளைத் தமிழ் | – சாமிநாதப் புலவர் |
| 4. சென்னிமலை யமகவந்தாதி | – சாமிநாதப் புலவர் |
| 5. சென்னிமலையாண்டவர் காதல் | – அங்கண்ண செட்டியார் |
| 6. கொங்கு மண்டல சதகம் | – வாலசுந்தரக் கவிராயர் |
| 7. சென்னிமலை முருகன் புலவராற்றுப்படை (குறிப்புரையுடன்) | வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் |
| 8. பூந்துறைப் புராணம் | – காளியண்ண கவிராயர் |

மற்றும் இத்தலத்திற்குப் படிக்காசுப்புலவர் பாடிய வண்ணப் பாக்களும், பல புலவர் பாடிய பதிகம் முதலிய தோத்திரப் பாடல்களுமுண்டு.

சோழன் பூர்வ பட்டயம் என்ற நூலொன்றுண்டு. அது சென்னிமலை பற்றிய செய்திகள் சில கூறுகின்றது. அது கரிகாற் சோழன் சென்னிமலையில் முதன் முதலாகக் கோவில் கட்டினுன் என்றும் நரபலி செய்வித்தான் என்றும் கூறும். அந்நூல் புதுவது புனைந்த நவீன நூல்போல் கற்பனையாகச் செய்யப் பட்ட நூலாதலின் அதிற் கூறும் செய்திகள் உண்மையானவை அல்ல.

முன்பு மலைமேற் கோவில் கட்டக் காடு வெட்டி வழி அமைத்த பெருவீரனாகிய "ஜவான்" ஒருவனுடைய சிலை மலை வழியில் உள்ளது.

## இப் புராணத்தாலறியலாகும் தலத்திற்குரிய மூர்த்திகள்.

1. மலைவழி விநாயகர் — மலைக்குச் செல்லும் வழியிலுள்ள முதல் விநாயகர் (செய்யுள்-1)

2. நடராசர் — சென்னிமலை நகர்க் கோவிலில் எழுந்தருளியுள்ள மூர்த்தி (செய்யுள்-2)

3. திருமுக மலர்ந்த நாதர் — காளிநகர்ச் சிவபெருமான் (செய்யுள்-3)

4. திருந்தார் குழலி — காளி நகர் அம்பிகை (செய்யுள்-4)

5. கைலாய நாதர் — சென்னிமலை நகர்ச் சிவபெருமான் (செய்யுள்-5)

6. பெரியநாயகி — அம்பிகை (செய்யுள்-6)

7. மார்க்கண்டேசர் — மலைமீதுள்ள சிவபெருமான் (செய்யுள்-7)

8. இமயவல்லி — அம்பிகை (செய்யுள்-7)

9. திருச்சந்தி விநாயகர் — மலைமீதுள்ள தலவிநாயகர் (செய்யுள்-8.)

10. சிரகிரி வேலாயுதர் — சென்னிமலைமேல் சரவணமுனிவருக்கு முதன்முதலில் காட்சி நல்கியவர். இவர் கோவில் மலைநகர்க்கோவிலிலுள்ளது (செய்யுள்-9)

11. சிரகிரித் தண்டாயுதபாணி — சரவண முனிவருக்கு ஒருமுக வடிவில் இரண்டாவது முறையாகக் காட்சி நல்கியவர் சரவணமுனிவர் விரும்பியபடி மலைக்கோவிலினுள் எழுந்தருளிய மூர்த்தி (காட்சி மாண்மியம் செய்யுள்-11)

12. தெய்வயானையார், வள்ளிநாயகியார் — மலைமேல் தனிக் கோவில் (செய்யுள்-9)

13. மற்றும் பரிவாரங்களாகத் துதிக்கப் பெற்றோர் — நந்தி, நவவீரர், தண்டியடிகள் முதலியோர் (கடவுள் வாழ்த்து-11)

14. வேல், மயில், சேவல், வேதியர், அருளாளர், அகம்படிமையோர். (கடவுள் வாழ்த்து-12) சென்னிமலைமேல் அருளாடிகள் மண்டபமுள்ளது.

15. சத்தியஞானி — புண்ணாக்குச் சித்தர். மலைமேல் இவர் குகையுள்ளது.

16. இடும்பன் — மலையடிவாரத்தில் காவற்கடவுளாகக் கோயில் கொண்டவர். (இடும்பனுக்கு வழிகாட்டிய மான்மியம்) இவர் வரலாறு கூறும் நூலாசிரியர் இடும்பனுக்கு வணக்கங் கூறவில்லை. பிற்காலத்தார் இடும்பனுக்குக் கோயிலெடுப்பித்தனரெனத் தெரிகிறது.

மலைமீதுள்ள விசுவநாதர் விசாலாட்சி கோவிலும் பிற்காலத்தில் எழுப்பப்பட்டதே எனத் தெரிகிறது.

## தீர்த்தம்.

1. மாமாங்க தீர்த்தம் — இச்சுனை சென்னிமலையின் தென் மேற் சரிவில் உள்ள விநாயகருக்கு எதிர்ப் புறத்திலுள்ளது (சிகரகிரி மான்மியம் செய்யுள்-27)

2. கண்டு காணாச்சுனை — இச்சுனை ஞானிகள் காண்பது (சிரகிரி மான்மியம் செய்யுள்-27)

3. சுப்பிரமணிய தீர்த்தம்—(சிரகிரி மான்மியம் செய்யுள்-30; 31) இது மலையடிவாரத்தின் வடபாலிலுள்ளது. சரவணப் பொய்கை, குமார தீர்த்தம் என்பன இதன் வேறுபெயர்கள். இதன் அருகில் சரவண முனிவர் நகரமமைத்தனர் (ஆலயங்கண்ட மான்மியம் செய்யுள்-11.)

## தல சரித்திரக் குறிப்பு.

*சரவண முனிவர் கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் சென்னிமலை மேற் கோவிலும் நகரமும் கைலாய நாதர் கோவிலும் தேர்த் திருப்பணியும் தேர் விழாவும் செய்தனர்.*

*கோமாறவர்மன்சுந்தரபாண்டியன் காலத்தில் கி. பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சென்னிமலை வேலவருக்கு நிலம் விடப்பட்டது.*

*கொண்ட நரசிம்ம நாயக்கன் காலத்தில் கி. பி. 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிடாரியூரில் சென்னிமலை வேலவருக்கு நிலம் விடப்பட்டது.*

*மைசூர் தேவராச உடையார் காரியஸ்தரான முத்துவசவய்யன் காலத்தில் கி.பி. 1654-ல் சென்னிமலை வேலவர் கோயில் வெளித் திருப்பணி செய்யப்பெற்றது. தேவராச உடையாருக்கு அவர் காரியஸ்தரில் ஒருவராயிருந்த மடவளாகம் தேவராஜய்யர் என்பவர் சிரகிரி வேலவர் மீது கந்தர் சஷ்டிக் கவசம் பாடிக் கொடுத்தார். தேவராஜ உடையார், அவர் மனைவியார், காரியஸ்தரான முத்துவசவய்யன் முதலியோருடைய சிலைகள் வள்ளியம்மன் கோவில் மகாமண்டபத் தூண்களில் செதுக்கப் பெற்றுள்ளன.*

## செங்கத்துறைப் பூசாரி :-

*இவர் கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் பல்லடம் தாலுகாவைச் சேர்ந்த செங்கத்துறை என்னும் ஊரில் வேளாளர் குலத்தில் பிறந்தவர். சென்னிமலை அடிவாரத்தில் இவருடைய சமாதியும் மடமும் உள்ளன. இவர் இளமையிலேயே துறவுபூண்டு சென்னிமலையை அடைந்து முருகக் கடவுளை வழிபட்டுப் பல திருப்பணிகள் செய்துகொண்டிருந்தார்.*

**இவர் செய்த திருப்பணிகள் :-** *மலை மேல் மகாமண்டபம், மலைக் கோவிலில் கல் பாவியது, அடிவாரத்தில் கைலாசநாதர் கோவில் வெளி மண்டபம், உள் மண்டபம், கோபுரம், திருமதில் ஆகிய திருப்பணிகள். மலை மேல் மகாமண்டபத் திருப்பணிக் கும்பாபிஷேகத்தன்று மகாமண்டபத் தூண் ஒன்றில் சிற்பி*

*இவரது உருவம் செதுக்கப்பெற்ற சிலையொன்றைக் காட்டவும் அதனைக் கண்ட தம்பிரான் "கற் பூசாரிவந்து விட்டான். இனி இந்த உடற் பூசாரிக்கு வேலையில்லை" என்றனராம். அன்று கும்பாபிஷேக முடிவில் சமாதி யெய்தினர்.*

## வேட்டுவபாளையம், வேளாளத் தம்பிரான் :-

*இவர் 19-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் சென்னிமலை யில் வாழ்ந்தவர். இவர் சமாதி பெருந்துறையை யடுத்த வேட்டுவபாளையத்தில் உள்ளது. முருகன் அருள் பெற்று வாக்குச் சொல்லுதலில் வல்லவராய் விளங்கினுர்.*

**இவர் செய்த திருப்பணிகள் :-** *சென்னிமலைப் படிக்கட்டு, படிக்கட்டுவிளக்குக்கம்பம், யாத்திரிகர் மடம், அர்த்தசாம பூஜைக் கட்டளை, அம்மன் கோவில் திருமதில், பங்குனி உத்தரத் தேர், அவினுசித் தேர், பழனிப் பூசாரி மடம் முதலிய திருப்பணிகள் இவராற் செய்யப்பெற்றவை.*

*சென்னிமலை வேலவருக்கு வழிவழியாகத் தைப் பூசத் தேர்த் திருப்பணியும், தேர் விழாவும் செய்து வரும் பூந்துறை, வெள்ளோடு, நசையனூர், எழுமாத்தூர் என்னும்நான்குவீட்டிற் குமுரிய நாட்டுக் கவுண்டர்களாகிய வேளாளப் பெருமக்கள் கி. பி. இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் புதிய தைப் பூசத் தேர்த் திருப்பணி செய்தனர்.*

*இளம்பள்ளி ஜமீன்தாராகிய திரு. ராஜலிங்கம் செட்டியார் அவர்கள் கைலாசநாதர் கோவிலில் சில திருப்பணிகள் செய்துள்ளனர்.*

## சென்னிமலை மேலுள்ள பழைய கல்வெட்டுக்கள்.

*சென்னிமலை முருகன் கோவில் கருப்பக் கிரகத்தின் இடது புற நிலவு வாயிற் சுவர்த் தலத்திலுள்ள கல் வெட்டு.*

*"ஸ்வஸ்தி ஸ்ரீ மகாமண்டலேசுவரன் கலியுகம் ௪௬௪௪-க்கு மேல் செல்லா நின்ற விபசம்வத்சரத்து பங்குனி-மீ ரு-ஆம் தேதி சென்னிமலை வேலவருக்கும்...........வள்ளிக்கும் திருக்கோயில் காரியம்.*

*நுழை வாயில் விதானத்திலுள்ள கல்வெட்டு.*

*" சோபகிருது வருஷம் பங்குனி மாசம் ய-ஆம் தேதி தேவராச உடையார் காரியத்துக்குக் கர்த்தரான முத்து......ஐயனவர்கள் நாளில் பூந்துறை வேலத்தட்டான் மகன் பழனித் தட்டான் சதரசேவை."*

*மலையடிவாரத்திலுள்ள கோமாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்துச் சாஸனமும் பிடாரியூரிலுள்ள கொண்ட தப்புவராய கண்டன் என்னும் நரசிம்ம நாயக்கன் பெயர் பொறிக்கப்பெற்ற கல் வெட்டும் மிகவும் சிதைந்துள்ளன. பிடாரியூர்த் திருமுக மலர்ந்தார் கோயில் மண்டபத்தின் வெளிப்பக்கத்து நிலவு வாயில் இடது புறச் சுவர்த் தலத்தின் அடிக் கல்லில் வெட்டப் பெற்றுள்ள பாடற் சாசனம்.*

*" ஏற்குங் கமல புரம்திரு விருந்தபுரம்*
*சேர்க்கின்ற காளிநகர் சென்னிநகர்—கார்க்குங்*
*கமலா லயர்திரு முகமலர்ந் தார்காளி*
*கமலிநகர் சென்னி நாதர்."*

---

**பணியாற்றிய தர்மகர்த்தாக்கள் :**

| | பெயர் | காலம் முதல் | வரை |
|---|---|---|---|
| 1. | தோப்புப்பாளையம், நல்லசாமிக் கவுண்டர் | — | 21-5-26 |
| 2. | உலகபுரம், செங்கோட்டு வேலப்ப கவுண்டர் | 22-5-26 | 3-4-36 |
| 3. | தோப்புப்பாளையம், முத்துசாமிக் கவுண்டர் | 4-4-36 | 28-3-41 |
| 4. * | ஈங்கூர், E. R. கந்தசாமிக் கவுண்டர் | 29-3-41 | 13-10-64 |
| 5. | சென்னிமலை, O. A. A. மாரியப்ப முதலியார் | 5-8-43 | 5-8-53 |
| 6. | ,, G. இராஜமன்னர் செட்டியார் | 5-8-53. | 8-10-63 |

* இத் தலத்தில் இவராற் செய்யப்பெற்ற கோவில் முன்னேற்றத்திற்குரிய மிகச் சிறந்த சீர்திருத்தங்கள் மிகப் பலவாம்.

## நிர்வாகத்தில் உள்ள தர்மகர்த்தாக்கள் :

| பெயர் | | காலம் |
|---|---|---|
| | தர்மகர்த்தாக் குழுத் தலைவர் : | |
| 1. | ஈங்கூர், R. K. சுப்பிரமணியம் | 13—10—64 |
| | தர்மகர்த்தாக்கள் : | |
| 2 | சென்னிமலை, S. K. மாரியப்ப முதலியார் | 3—2—54 |
| 3. | பூந்துறை, K. P. சண்முகசுந்தரசாமிக் கவுண்டர் | 13—10—64 |
| 4. | பழையகோட்டை, ஸ்ரீமதி பார்வதிஅர்ஜுனன் | 27—4—65 |
| 5. | பழனி, V. V. C. R. முருகேச முதலியார் | 28—4—65 |

## பணியாற்றிய நிர்வாக அதிகாரிகள் :

| | பெயர் | காலம் முதல் | காலம் வரை |
|---|---|---|---|
| 1. | ராமசாமி முதலியார் | 1927 | 1933 |
| 2. | அனந்தராமையர் | 1933 | 1936 |
| 3. | மா. சுப்பராயக் கவுண்டர் | 1-10-1936 | 20-2-1946 |
| 4. | அம்பிகாதாஸ் | 20-2-1946 | 1-3-1946 |
| 5. | C. S. சுப்பிரமணியம் | 23-5-1946 | 19-11-1954 |
| | ,, ,, | 16-8-1956 | 27-9-1964 |
| | ,, ,, | 5-8-1965 | நிர்வாகத்தில் |
| 6. | D. V. சுப்பையா | 19-11-1954 | 21-5-1956 |
| 7. | C. R. திருநாவுக்கரசு | 21-5-1956 | 16-8-1956 |
| 8. | N. இராமசாமி M. A., | 27-9-1964 | 5-8-1965 |

## தமிழக அறநிலையப் பாதுகாப்பு அலுவலர்கள் :

1. M. S. சாரங்கபாணி முதலியார், B. A., B. L.
   ஆணையர், இந்து அறநிலைய நிர்வாக இலாகா, சென்னை-34.
2. A. சிதம்பரம், B A , B L.
   துணை ஆணையர், இந்து அறநிலைய நிர்வாக இலாகா, சென்னை-34.
3. M. சூரியராஜ், B A., B. L.
   உதவி ஆணையர், இந்து அறநிலைய நிர்வாக இலாகா, கோயமுத்தூர்.
4. E. S. ஆதித்யராமன்,
   ஆய்வாளர், இந்து அறநிலைய நிர்வாக இலாகா, ஈரோடு.

# பதிப்பு.

சுமார் நாற்பது ஆண்டுகளின் முன்பு நான் கொங்குவேள் மாக்கதை ஏடு தேடிக்கொண்டிருக்கும் போது சென்னிமலையை அடுத்துள்ள அர்த்தநாரிபாளையத்தில் சென்னிமலைப் புராண ஏட்டுச்சுவடி ஒன்று கிடைக்கப் பெற்றேன். அது "சென்னியங் கிரி வேலாயுதர் கிருபையினலே முகாசிப்பிடாரியூர்க் கிராமத் துக்குச் சேர்ந்த அர்த்தநாரிபாளையத்திலே யிருக்கும் பழனியப்ப பிள்ளை மகன் சண்முகம் பிள்ளை எழுதியது" என்று அதன் இறுதி ஏட்டில் எழுதப் பெற்றிருந்தது. அதன்பின் சுமார் பதினைந்து ஆண்டுகளின் முன்பு பூந்துறை குண்டஞ் சென்னிய கவுண்டன் வலசுப் புலவர் வீட்டில் ஏடு தேடிக்கொண்டிருக்கும் பொழுது பூந்துறை கொல்லபட்டப்புலவன் மகன் குமாரசுவாமிப் புலவனால் எழுதி வைக்கப் பெற்றிருந்த மற்றொரு சென்னிமலைப் புராண ஏட்டுச் சுவடியும் கிடைக்கப் பெற்றேன். இவ்விரு சுவடிகளையும் பரிசோதனை செய்து வெளியிடற்குரிய காலத்தை நோக்கி யிருந்தேன்.

சுமார் பதினொரு மாதங்களின் முன்பு சென்னியங்கிரி முருகர் திருவருளினலே சென்னிமலைத் தல உரிமையாளரும் சென்னிமலைத் தலபுராண வெளியீட்டுக் குழுவின் தலைவரும் துய்யம்பூந்துறைமணியகாரருமாகியகுமாரவலசு திரு. K. சண்முக ராமசாமிக் கவுண்டர் அவர்கள் அன்பர்கள் சிலருடன் என்னிடம் வந்து தாங்கள் சென்னிமலைத் தலபுராண ஏட்டுச் சுவடிகளைப் பரிசோதனை செய்து விளக்கமான உரையுடன் வெளியிடுவ துடன் சென்னிமலைத் தல சம்பந்தமான நல்ல நூல்களையும் அச்சிட வேண்டுமென்றும் அதற்குரிய அச்சுக் கூலி முதலிய வற்றைத் தாமே தந்துவிடுவேமென்றும் கூறினர். அதன் பின்னர்ச் சில நாட்களில் சென்னிமலை வாழ் அன்பர்கள் சிலர் சென்னிமலைக் கோவில் அருச்சகர்களில் ஒருவரும் சித்தாந்த சரபமும் ஆகிய பழநி ஸ்ரீ ஈசான சிவாச்சாரியார் அவர்களின் வீட்டுப் பிரதி யென்று கூறிச் சென்னிமலைத் தலபுராண ஏட்டுச் சுவடியொன்றை என்பால் தந்தனர். அச் சுவடி வெள்ளோடு சாமிநாதப் புலவர் சிதைந்து போன ஏட்டுச் சுவடியைப் பிரதி செய்ததாக அச் சுவடியின் இறுதியில் எழுதப் பெற்றிருந்தது. அதனையும் ஒப்பு நோக்கிக் கொண்டு என்பால் கொடுத்தவர்க ளிடமே அச் சுவடியைக் கொடுத்து விட்டேன்.

அதன் பின்னர் மேற் குறித்த ஏட்டுச் சுவடிகளைப் பரிசோதனை செய்து மூலத்தைச் செப்பஞ் செய்தேன். செய்யுட்களின் பொருள் எளிதாக விளங்குவதற்குரிய வகையில் பதப் பொருட்களைத் திரட்டி எழுதுதலாகிய பொழிப்புரையும், மூலத்தில் குறிப்பாகவுள்ள செய்திகளை விவரித்து எழுதுதலும், மேற்கோள் காட்டி விளக்குதலும் ஆகிய விரிவுரை என்னும் விளக்கவுரையும் எழுதத் தொடங்கினேன். இதற்கிடையில் தலபுராணக் கமிட்டி உறுப்பினர்களிற் சிலர் என்னிடம் வந்து விரைவில் புராண உரை வேலையை முடித்துத் தரல் வேண்டும்; உறுப்பினர்களிற் பலர் அடிக்கடி புராணம் விரைவில் வெளிவரவேண்டுமென்று வற்புறுத்துகின்றனர் என்று அடிக்கடி வற்புறுத்திக் கூறினர். அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு இப் புராணப் பணியை விரைவிற் செய்து அச்சகத்திற்றர வேண்டியதாயிற்று. மற்றும் எழுதிய உரையைப் பிரதி செய்யும் பொழுதும் அச்சிடும்பொழுதும் உடனிருந்து கவனிக்கமுடியாமற் போயினமையின் நேர்ந்த பிழைகள் சிலவற்றிற்குத் திருத்தம் எழுதிப் பின்னர்ச் சேர்த்துள்ளேன். பிழை திருத்தத்திற் சேர்க்கப்படாத பிழைகள் சிலவும் காணப்படுகின்றன. அவை வருமிடங்களில் அறிஞர்கள் திருத்திப் படித்துக்கொள்வார்களாக.

33-ஆம் பக்கத்தில் உள்ள வெள்ளோடை என்னும் தலைப்புப் பாடலில் வரும் "வெண்டயனேடரண்டர் தொழும்" என்பதனை "விண்டயனே டண்டர்தொழும்" என்று திருத்திப் படிப்பதுடன் அவ் வெண்பாவின் கீழ்

"காய்மாருத் தேமாவுங் கத்தரியி லாக்கினரும்
பூமாருக் கொன்றையுமார் பொற்பதியாம் — நேம
நறுவீசர் சோலைசெறி நன்னகர்வெள் ளோடைச்
சருவீசர் வாழுந் தலம்"

என்னும் வெண்பாவைச் சேர்த்துப் படித்துக் கொள்க.

65-ஆம் பக்கத்தில் உள்ள "அசைவர வுலகந்தாங்கும்" என்பதிலுள்ள "அசைவர" வென்பதனை "அசைவற" வென்றும் 92-ஆம் பக்கத்தில் 7-வது வரியிலுள்ள "இசையைச் செய்தான்" என்பதனை "இசையச் செய்தான்" என்றும் 59-வது பக்கம் 51-வது பாடல் 3-வது வரியிலுள்ள "புரத்திருப் போன்" என்பதை "புரத்திருப்பேன்" என்றும், 128-வது பக்கம் 1-வது பாடலில் உள்ள "அலைவரு" என்பதை "அலைவறு" என்றும் திருத்திப் படித்துக் கொள்க.

" குற்றங் களைந்து குணங்கொண்டு பாராட்டல்
கற்றறிந்த மேலோர் கடன்" என்பர் ஆன்றோராகலின் இந்நூல்பற்றி அறிஞர்கள் என்மேற் குறைகாண விரும்ப மாட்டார்களென்று நம்புகிறேன்.

## நன்றியுரை.

இத் தலபுராணத்தையும் தலபுராணப் பரிசோதனைக்கு இடையில் யான் பாடிய சென்னிமலை முருகன் புலவராற்றுப் படையையும் பதிப்பித்தற்கு "வேண்டும் பொருள் முழுவதையும் உதவிய" சென்னிமலைத் தலபுராணக் கமிட்டித் தலைவருக்கும், அதன் உறுப்பினர்கட்கும் என் மனம் நிறைந்த நன்றி யாண்டும் உரியதாகட்டும். இந்நூலிரண்டையும் அச்சிட்டபின் கண்ணுற் றருளி மனமுவந்து அவற்றிற்கு அணிந்துரையாகச் சிறப்புப் பாயிரம் வழங்கியருளிய பெரியார்களனைவருக்கும் மனமொழி மெய்களாலான எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள் கிறேன். இந்நூல் பதிப்பித்தற்குப் பலவகையிலும் உதவியா யிருந்த என் அன்பிற்குரிய சென்னிமலைத் தமிழாசிரியர்களாகிய வித்துவான் திரு. சு. **வேலுச்சாமி** அவர்கட்கும், வித்துவான் திரு ஆ. **இராமசாமி** அவர்கட்கும், எனது அன்பிற்குரிய மாணவரும் ஈரோட்டுத் தமிழாசிரியருமாகிய வித்துவான் **செ. இராசுவிற்கும்**, அர்த்தநாரிபாளையம் ஆசிரியர் திரு. **அ. செ. கந்தசாமி** அவர்கட்கும் இம்மை மறுமைகளுக் குரிய எல்லா நலங்களும் மேலும் மேலும் உண்டாக வேண்டுமென்று தமிழ்த் தெய்வத்தைச் சிந்தித்து வந்திக்கிறேன். புகைப்படம் எடுத்துப் பிளாக்குகள் செய்துகொடுத்துதவிய **கோயமுத்தூர் போட்டோகிராபிக் சொசைட்டியாருக்கு** எனது உளமார்ந்த நன்றி உரியதாகுக. சிறந்த முறையில் இந்நூலைக் குறிப்பிட்ட காலத்தில் அச்சிட்டுதவிய சென்னிமலை **சிவாஜி பிரஸ்** அச்சகத்தாருக்கு எனது நன்றி.

ஒன்றுக்கும்பற்றாத எளியேனை இப்புராணத் திருப்பணியில் ஈடுபடச்செய்து ஆட்கொண்டருளிய சென்னிமலைச் செவ்வேட் பெருமானுடைய திருவடிச் செந்தாமரை மலர்களை என் சிரத்திலும் உள்ளத்திலும் வைத்துப் போற்றுகின்றேன்.

இங்ஙனம்,

வே. ரா. தெய்வசிகாமணி,

*7—1—1967.*

ஓம்.

*Mrs. Soundra Kailasam,*
C/o. P. S. KAILASAM,
JUDGE, HIGH COURT

PHONE: 72920.
"MURUGANADI"
7, KASTURI RANGA IYENGAR ROAD
TEYNAMPET, MADRAS-18.

# சூழ்ந்து வரும் மேலாம் சுகம்.

வினைதீர்க்கக் கையினிலே வேலுடையான் தங்கி
மனதீர்க்கும் சென்னி மலைப்பெருமை காஞ்சித்
தலஞ்சென்று செப்பேடு தான்படிக்கக் கேட்டான்
நலஞ்சென்று தங்குநெஞ்சி னன்!

வேதஞ் சுமந்து வியந்துருகும் வேலனிரு
பாதஞ் சுமந்து பணிந்துருகி மீண்ட
சரவணன்அம் மாமுனியான் சாற்றுகிருன் அந்தச்
சிரகிரியின் உண்மைச் சிறப்பு!

கந்தனருள் பெற்றுக் களித்த சரவணனுர்
சிந்தியநற் பூங்கவிதை; சென்னிமலைத் தீங்கவிதை
அத்தனையும் வானேர் அமிழ்தம்தான் ஆனுலும்
எத்தனைபேர் கண்டார் இதை?

மூலையிலே எங்கோ முடங்கியதை நெஞ்சமெனும்
சாலையிலே வந்தினிது தானுலவச் செய்த
சிறப்புடையார் தெய்வ சிகாமணியார் என்ருல்
மறுப்புரையா தேற்கும் மனம்!

தொட்டஇடம் எங்கணுமே தூயதமிழ்ப் பாவினயம்
சொட்டுமுயர் நூலின் சுவைமுழுதும் தன்னுரையில்
கொட்டி அளக்கின்ருர் கொங்குறைவார் என்னறிவில்
பட்டதனைச் சொன்னேன் படித்து!

படித்தேன் சுவைத்துப் படித்தேன் நான்; உள்ளம்
துடித்தேன் துடித்த துடிப்படங்கத் தோற்றேன்; ஆம்
ஊறித் திளைத்தேன் உரைநூலில் ஒன்றிரண்டு
கூறத் துடித்தேன் குறை!

நீங்காத பக்தி நெறியாளர் மாயஇருள்
தூங்காத நெஞ்சத் துதியாளர் — பாங்காக
வாழ்ந்துவரும் தெய்வசிகா மாமணியார் அன்னவரை
சூழ்ந்துவரும் மேலாம் சுகம்!

அன்புள்ள,

சௌந்தரா கைலாசம்,

*18—2—67.*

உ
முருகன் துணை.

# சென்னிமலைத் தலபுராணச் சுருக்கம்.

## காப்பு.

*எழுசீர்க் கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.*

திங்களங் குழவி தவழ்பெருங் குடுமிச்
சென்னிமா மலைதனின் புராணம்
மங்களம் பெருகச் சரவண முனிவன்
வழுத்தினன் செய்யுளா லதனிற்
றங்குறுங் கருத்தை யுரைநடை யாகச்
சாற்றுதற் கம்மலை மீதிற்
செங்கரந் தண்ட மேந்திநின் றருளுஞ்
சேய்பதம் பணிகுதும் யாமே.

## 1. செப்பேடு கண்ட மான்மியம்.

கடல் சூழ்ந்த இந் நிலவுலகத்தில் நால்வகை வருணத்தோரும் நன்கு வாழ்வதற்குரியதாய் விளங்குவது கொங்கு மண்டலம். அக் கொங்கு மண்டலத்திற்குரிய இருபத்து நான்கு நாடுகளில் முதன்மையாய் விளங்குவது பூந்துறை நாடு. அது காவிரியாற்றின் பூக்கள் நிறைந்த அழகாகிய நீர்த்துறைகளை மிகுதியும் பெற்று விளங்குவது.

பூந்துறை நாடு கண்ணுக்கினிய ஓவியங்களும் காதிற்கினிய செஞ்சொற்களும் கருத்திற்கினிய போகப் பொருள்களும் நிறைந்து விளங்குவது. அதனல் பூந்துறை நாடு பூமகளுக்கு அழகுதரும் அணிகலனக விளங்குகின்றது. அந் நாட்டினர், திருநீறு பூசுதலும் கொடைத் தன்மையும் புராணம் பயின்று நல்லறம் புரிதலும் உடையவராய் விளங்குதலின் பூந்துறை நாடு புண்ணிய நாடாகவும் விளங்குகிறது.

அந் நாட்டில் சிவன், திருமால், முருகன் என்னும் தெய்வங்களுக்குரிய ஆலயங்கள் மிகுதியாகவுள்ளன. மலை, ஆறு, சோலை

வயல் முதலியவற்றின் இயற்கை வளங்களை மிகுதியும் பெற்று விளங்கும் பூந்துறை நாடு, சிவபெருமான் அருட் சக்தியாகிய அம்பிகையுடன் சிறப்பாக விற்றிருந்தருளும் திருச்செங்கோடு, ஈரோடு, பூந்துறை, வெள்ளோடு, நசையனூர், எழுமாத்தூர் என்னும் சிறந்த திருப்பதிகளைத் தன்பாற் கொண்டு விளங்கு கின்றது.

பூந்துறையூர் முதலாகிய அறுபத்து நான்கு ஊர்களையும் பலவகையான வளங்களையும் பெற்றுப் புகழ் மிகுந்த பூந்துறை நாட்டின் கண் வானத்தை யளாவும் உயர்ச்சி பொருந்தியதாய் விளங்குவது சென்னிமலை. அச் சென்னிமலையின் சார்பில் திரு மகள் சிறப்புற விற்றிருந்தருளும் சிறப்பினையுடையது *திருவிருந்தபுரம். அந் நகரத்தில், சிவமறையோர் குலத்திற் பிறந்தவன் சரவண விரதன். அவன் இளமைப் பருவத்தில் வேதாகமங்களை யோதி யுணர்ந்தான். பிரமச்சரிய முதலிய நிலைகளில் நின்று முடிவில் துறவு வாழ்க்கையை மேற்கொண் டான். அவன் சென்னிமலையின் சார்பில் பஞ்சாட்சர மந்திரத் தைத் தியானித்துத் தவம் செய்துகொண்டிருந்தான். சென்னி மலையில் பலவிதமான அதிசயங்கள் நிகழ்வதாகக் கேள்வியா லறிந்தான். அதன் உண்மையை யறியப் பலரையும் விசாரித் தான். அவ்வதிசயங்களை நேரேயறிந்து சொல்வோரொருவரு மின்மையின் மனதில் கலக்கமுற்றுன். முதற்குருவாகிய முருகக் கடவுளின் அருளால் அவ்வதிசயங்களை அறிய விரும்பித் திருவா வினன் குடியை யடைந்தான். அங்கு முருகக் கடவுள் வீற் றிருந்தருளும் சிவகிரி யென்னும் திருவாவினன்குடி மலையை வலமாகச் சுற்றி வந்து வழிபாடு செய்தபின் தூங்கிக்கொண் டிருந்தான்.

அன்று முருகக்கடவுள் அவனது கனவில் தோன்றிக் காட்சி தந்து "அந்தணனே! நீ சிரகிரியின் மகிமையை யறிய விரும்பித் தவம் செய்தாயாகலின் இந்த மலையில் உனக்குக் காட்சி தந்தோம். இம் மலையில் காட்சி தந்ததுபோல அந்தச் *சிரகிரியிலும் உனக்குக் காட்சி தருவோம்" என்று அருளிச் செய்தார்.

---

* திருவிருந்தபுரம் பிற்காலத்தில் பிடாரியூர் எனப் பெயர்பெற்றது.

* சிரகிரி—சென்னிமலை.

சரவண விரதன் அன்பினால் பரவசமடைந்து முருகக் கடவுளை வணங்கி நின்று "பெருமானே! யான் சிரகிரியின் மகிமையை எவ்வாறு அறிவேன்" என்று மீண்டும் வணங்கினான். முருகக்கடவுள் "அந்தணனே சிரகிரியின் மான்மியம் காஞ்சிபுரத்திலுள்ள சிவாலயத்தில் சைவ நூல்கள் எழுதிவைக்கப்பெற்றுள்ள செப்பேட்டினுள் உள்ளது. அதனை யங்குச் சென்று அறிந்து கொள்வா"யென்றனர். சரவணமுனிவன் அதிசயமுற்றுக் கண் விழித்தெழுந்து முருகப் பெருமான் தன் கனவில் தோன்றி அருள் செய்தவிதமே செய்வேனென்று திருவிருந்தபுரத்தை யடைந்தான். அவன் அவ்வூரில் வாழ்கின்ற மறையவர்களிடம் திருவாவினன்குடியில் தான் முருகன் அருள் பெற்றதைக் கூறினான். பின்பு சென்னிமலையை நோக்கி வணங்கி நின்று அம் மலையில் வாழ்கின்ற முருகப் பெருமானைத் தனக்கு அருள் புரியுமாறு வேண்டிக்கொண்டு காஞ்சிபுரத்தை யடைந்தான். அத் தலத்தில் வாழ்கின்ற ஏகாம்பர நாதரைச் சிவாகம நெறியில் வழிபாடு செய்து தான் கருதிவந்ததையருளுமாறு வரம் வேண்டிக்கொண்டு கோவிலுக்கு வெளியே வந்தான். பின்பு அத் தலத்தில் உள்ள மாதவர்கள் வாழ்கின்ற மடங்கள் தோறும் சென்றான். மடங்களில் வாழ்கின்ற மாதவர்களை நோக்கிப், "பேரறிவுடைய பெரியோர்களே! இக் காஞ்சித் தலத்திலுள்ள செப்பேடுகளின் வரலாற்றினை எனக்குச்சொல்லவேண்டு"மென்று வேண்டினான். மாதவர்கள், "இத் தலத்தில் செப்பேடுள்ள அறையொன்றுண்டு என்று மறையவர்கள் சொல்லக் கேட்டதல்லாமல் யாம் பார்த்தறியோ"மென்றனர். சரவண முனிவன் உள்ளத்தில் மிகவும் கவலையுடையவனாய்க் குமரகோட்டத்தை யடைந்து குமாரக் கடவுளை வணங்கிச் செப்பேடு காட்டியருள வேண்டுமென்று வணக்கத்துடன் வேண்டிக்கொண்டிருந்தான்.

இவ்வாறு சிலநாட் கழியவும் ஒருநாள் முருகக் கடவுளின் திருவருளால் காஞ்சிபுரத்திலுள்ள மறையவர்கள் செப்பேடு சோதிக்க விரும்பிக் காஞ்சித் தலத்திலுள்ள அனைவரையும் வரவழைத்தனர். அவர்கள் முன்னிலையில் செப்பேடுகள் உள்ள அறையைத் திறந்து செப்பேடுகளையெல்லாம் எடுத்துக்கொண்டு வந்து வெளியில் வைத்து அவைகளுக்கு அபிடேகம்பண்ணிப் பூசை செய்தனர். பின்பு தலைமையான மண்டபமொன்றிலிருந்துகொண்டு அச் செப்பேடுகளை யாவரும் கேட்கும்படி படித்துக்கொண்டிருந்தனர். அந்தணர்கள் செப்பேடு படிப்பதைக் கேள்வியாலறிந்த சரவண முனிவன் மிகுந்த மகிழ்ச்சி

யடைந்தவனாய் முருகக் கடவுளின் திருவருளைப் புகழ்ந்து செப்பேடு படிக்கும் அவையினை யடைந்தான். அச் சபையை வணங்கிக்கொண்டு ஓரிடத்திலமர்ந்து அவர் படிக்கும் தல சரித்திரங்களெல்லாவற்றையும் முறையாகக் கேட்டுக்கொண்டிருந்தான். இவ்வாறு சிலநாட்கழியவும் ஒருநாள் அந்தணர்கள் முருகக் கடவுளின் தலசரித்திரம் படிக்கத் தொடங்கினர்.

சூரனை யழித்த முருகக் கடவுள், திருப்பரங்கிரி, சீரலைவாய், ஆவினங்குடி, ஏரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்னும் ஆறு தலங்களிலும் நீங்காமல் வீற்றிருப்பான்.

மற்றும் தமிழ் நாட்டின் வடபாகத்திலுள்ள திருத்தணிகை மலையிலும் தென்றிசையில் உயர்ந்துள்ள சென்னிமலையிலும் குன்றுதோறாடல் வகையாக நீங்காமல் எழுந்தருளியிருப்பான் என்று படித்தனர். அங்ஙனம் படித்ததைக் கேட்ட சரவண முனிவன் மிகுந்த அன்பினால் பரவசமடைந்து சேமநிதி காணாதவன் சேமநிதி பெற்றாற்போல மிகவும் மகிழ்ச்சி யடைந்தான். சரவண முனிவனது மகிழ்ச்சியைக் கண்ட சபையோர்கள் அதிசயமடைந்து ''நீ யார்'' என்றுவினவினர். சரவண முனிவன் ''நான் கொங்குநாட்டிலுள்ள சென்னிமலையின் சார்பிலுள்ள திருவிருந்தபுரத்திலிருப்பேன். முருகன் கதை கேட்பதற்கு வந்தேன். ஆதலினால், சென்னிமலையின் தோற்றமும் வலிமையும் கூறுவதாயுள்ள பழமையான வரலாற்றைச் சொல்ல வேண்டு''மென்று வேண்டினான். மறையவர்கள் இசைவுதந்து அவன் வேண்டியபடியே சென்னிமலையின் பழையவரலாற்றினைக் கூறத் தொடங்கினர்.

## 2. சிரகிரி மான்மியம்.

''சரவண முனிவனே! கலியுகத்தில் சிவாகமங்களும் சூத முனிவர் சொல்லிய புராணங்களும் அழியாமலிருக்கும் பொருட்டு முனிவர்கள் அவற்றைச் செப்பேடுகளில் எழுதிக் காஞ்சிபுரத்திலுள்ள கோவிலறையொன்றனுள் வைத்துப் போயினர். அவ்வேடுகள் முன்பு ஒருவராலும் எடுக்கப்படவில்லை. அறிஞர்கள் சொல்லியவாறு அச் செப்பேடுகளையெடுத்துப் படிக்கும் சமயத்தில் நீ வந்தாய். ஆதலின் நீ முருகக் கடவுளினிடத்து மிகுந்த அன்புடையை யென்பது தெரிந்தோம். ஆதலின் அச் செப்பேட்டில் உள்ளவாறு சிரகிரி மான்மியத்தை உனக்குச் சொல்லுவோம் கேட்பாய்'' என்று சொல்லுதற்குத் தொடங்கினர்.

இந்திரன் தேவ சபையில் வீற்றிருக்கும் பொழுது நாரதனை நோக்கி "இன்று நீ ஒரு விநோத மியற்றவேண்டு" மென்றான். நாரதன் அதற்குடன்பட்டுப் பூமியைச் சுமக்கும் ஆதிசேடனிடம் சென்று 'சேடனே! நான் பூமியைத் தாங்கும் உன்னுடைய கீர்த்தியை வாயுதேவனிடம் சொன்னேன். அதனைக் கேட்ட வாயுதேவன் கோபங்கொண்டு 'நாரதனே! சேடனுடைய செயல் வலிமைகளெல்லாம் என்னுடைய மூச்சுக் காற்றின் வலிமையே யாகும். சேடன் தானாகச் செய்வதற்குரிய செயலொன்றுமில்லை. நீ சொல்லிய குற்றத்தைப் பொறுத்தேன். என் முன் நில்லாமல் விரைவிற் போவாய்' என்றான். சேடனே! நான் உன்னிடத்துக் கொண்ட நட்பின் மிகுதியினால் வாயு கூறிய அவ் விழிவுரையை உன்னிடம் சொல்ல வந்தேன்' என்றான். நாரதன் சொல்லியவற்றைக் கேட்ட சேடன் மிகுந்த "கோபங்கொண்டு நாரதனே! வாயுவானவன் நான் உண்ணும் உணவல்லவோ; நான் மேரு மலையை என்னுடைய படங்களால் மறைத்துக்கொள்கிறேன். வாயுவுக்கு வலிமையுண்டானால் அம் மறைப்பை நீக்குதற்கு அவனை அவ்விடம் வரச்சொல்" என்றான்.

பின்பு நாரதன் சேடனை விட்டு நீங்கி வாயுவினிடம்சென்று "வாயுவே! உலகுயிர்களுக்கெல்லாம் பிராணன் நீயே யென்று ஆதிசேடனிடம் உன் கீர்த்தியைச் சொன்னேன். சேடன் மிகவும் கோபங்கொண்டு 'வாயுவானவன் நான் உண்ணும் உணவல்லவோ? நாரதனே! நீ அவ் வாயுவை என்முன்னிலையில் புகழ்ந்துரைத்த பிழையைப் பொறுத்தேன்' என்றான். நான் மீண்டும் உன் சீர்த்தியைக் கூறி உலகிலுள்ள உயிர்களுக்கெல்லாம் வாயுவே பிராணன் என்று சேடன் சொல்லிய இழிவுரையை மறுத்தேன்.

என் மறுப்புரையைக் கேட்ட சேடன் என்னை நோக்கி 'நாரதனே! நான் மேருமலையின் சிகரங்களை மறைத்துக்கொள்கிறேன். அம் மறைப்பை நீக்குவதற்கு வாயுவிற்கு வலிமையுண்டானால் அவனை நீ இவ்விடம் அழைத்துக் கொண்டு வருவாய்' என்று கூறினான். நீ நண்பனாதலின் அவன் சொல்லியவற்றை உன்னிடம் கூற வந்தேன். உன்னுடைய எண்ணத்திற்கேற்றபடி செய்வாய்" என்று கூறி நாரதன் நீங்கினான்.

பின்னர் ஆதிசேடனானவன் தன்னுடைய ஆயிரம் படங்களையும் விரித்துப் பொன்மயமான மேரு மலையை உலகினர் அஞ்சும்படி மூடி மறைத்துக் கொண்டான். அதனைக் கண்ட

வாயுதேவன் மிகவும் கோபங்கொண்டு மேரு மலையை வேருடன் பேர்த்தெறிவேன் என் று உலகுயிர்களெல்லாம் அஞ்சும்படி மிகுந்த வேகங்கொண்டு ஆரவாரத்துடன் மேருமலை மேல் மோதினன். ஆதிசேடன் வாயுவின் மோதலுக்குச் சிறிதும் மனங்கலங்காமல் தன்னுடைய ஆயிரம் படங்களையும் கொண்டு தன்னுடலை மேருமலையில் பொருந்தச் சுற்றி மேருமலையைத் தன்னுள் அடக்கிக்கொண்டிருந்தான்.

சேடன் மேருமலையைத் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கும் வலிமையைக் கண்ட வாயுவானவன் அப்பொழுதே தான் வெற்றிகொள்வதை மேற்கொண்டு உலகுயிர்கள் எல்லாவற்றி னிடத்துமுள்ள சுவாசங்கள் அனைத்தையும் வாங்கித் தன்னுள் அடக்கிக்கொண்டிருந்தான். அதனுல் உலகுயிரனைத்தும் சுவா சம் (பிராணன்) சிறிதுமில்லாமல் வாட்டமுற்றன.

உயிர்களின் வாட்டத்திற்குக் காரணம் நாரதன் செய்த சூழ்ச்சியென்றறிந்த இந்திரன் முதலாகிய தேவர்கள் கயிலாய மலையை யடைந்து சிவபெருமானை வணங்கி நிகழ்ந்ததைக் கூறினர்கள். சிவபெருமான் புன்னகை கொண்டு கோபமுற் றிருந்த சேடனைக் கடைக்கண்ணுல் பார்த்துச் "சேடனே! வாயு வானவன் நம்முடைய எட்டு வடிவங்களில் ஒன்றென்று அவனை நீ விரும்பாமல் அவனிடம் போர் புரிதலை மேற்கொண்டாய். அப் போரினின்றும் விரைவில் அடங்குவாய்" என்று கூறினர். சேடன் சிவபெருமானை வணங்கி "ஐயனே! தாம் கூறியவாறு செய்வே" னென்று அடங்கும் சமயத்தில் கோபமுற்றிருந்த வாயு வானவன் எழுந்து மேருமலையை நெருங்கி மோதினன். அதனுல் மேருமலையின் சிகரங்களிற் சில தென் றிசையில் சேர்ந்தன. அச் சிகரங்களில் ஒன்று கொங்கு தேசத்தில் காவிரியாற்றின் தென் றிசைக்கும் ஆன்பொருனையாற்றின் (ஆம்பிராவதி) வட திசைக்கும் நடுவிலுள்ள ஓரிடத்தில் தங்கியமர்ந்து விளங்கியது. அதற்குச் சென்னியங்கிரி யென்று பெயர். அச் சென்னியங் கிரியில் முருகக்கடவுள் எப்பொழுதும் விரும்பி வீற்றிருக்கின்ருன். அதன் மகிமை சொல்லுதற்கரியது. அம்மலையில் சிவபெருமான் அம்பிகையுடனும் முருகக் கடவுளுடனும் தங்கி வாழ்கின்ருன். அம்மலைமேல் எப்பொழுதும் பஞ்சதுந்துமி என்னும் தேவ வாத்தியம் ஒலித்துக் கொண்டிருக்கும். வித்தியாதரர்களும், முனிவர்களும் வேதம், ஆகமம், புராணம் என்னுமிவற்றைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அவற்றைக் கேட்டுக்கொண்டு

இருக்கிற கிளிகளும், நாகணவாய்ப் பறவைகளும் இடையருமல் சொல்லிக் கொண்டிருக்கும். அம்மலையின் ஒவ்வோரிடங்களிலும் அமுதமுண்பவர்களும், முனிவர்களும், தாபதர்களும், சித்தர்களும், ஞானிகளும், வாலகில்லியர்களும், வேள்வி செய்யும் மறையவர்களும் வாழ்வார்கள். சஞ்சீவனி, சந்தானகரணி, சமன கரணி, சல்லியகரணி என்னும் மருந்துகளும் அம்மலையில் உள்ளன.

மற்றும் கையாத எட்டியும், கருநொச்சியும், வெண்சாரையும், உடற்பாதுகாப்புக்குரிய வேறு மருந்து மூலிகைகளும் ஐந்தருக்களும், மாமாங்க தீர்த்தமும், கண்டு காணுச்சுனையும் உள்ள அச் சென்னியங்கிரியின் பெருமை சொல்லுதற்கரியது. அம்மலையின் ஓரிடம் பிறவிடங்களிற் பார்த்தற்கியலாத மிருகங்களையும், பறவைகளையு முடையதாயிருக்கும். ஓரிடம் மயக்கத்தையுண்டாக்கும். ஓரிடம் நிலையாத பொருள்களை நிலையுடையனவாக மதிக்கச் செய்யும். ஓரிடம் விரும்பிய பொருள்களைத் தரும். முருகன் சன்னதியில் ⁕ கருங்கொடிகள் வரா. வந்தால் கரிந்துபோய் விடும். கரியாதேல் துன்பமான காலம் வரும். அக்காலத்தில் வாழ்வோருடைய பாவங்களைத் தீர்ப்பது அம்மலையே. அம் மலையின் சார்பிலுள்ள சுப்பிரமணிய தீர்த்தம் சொல்லுதற்கரிய பெருமையுடையது. அது தன்கண் நீராடுவோருக்கு முக்தியைக் கொடுக்கும். கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நாளிலும், தைப் பூசத்திலும், வைகாசி ⁕ விசாகத்திலும், சுக்கிரவாரத்திலும், சோமவாரத்திலும் அந்தச் சுப்பிரமணிய தீர்த்தத்தில் நீராடி முருகனைத் தரிசித்தோர் மேலான முக்தியை அடைவார்கள். சரவண முனிவனே! முருகன் விற்றிருக்கும் அச்சிகரகிரியின் தோற்றத்தைச் சொன்னேம். இனி அம்மலையின் மகிமை களெல்லாவற்றையும் செப்பேட்டிலுள்ளபடி உனக்குச் சொல்வோம் கேட்பாய்'' என்று மாதவர்கள் மேலும் சொல்லுகின்றார்கள்.

## 3. புட்பகிரி மான்மியம்.

வான நாட்டில் தேவேந்திரன் இந்திராணி தன்னொரு பக்கத்தில் விளங்க அத்தாணிமண்டபத்திலுள்ள பொற் சிங்காதனத்தில் விஞ்சையர் முதலிய தேவகணங்கள் சூழ விற்றிருந்தான். அப்பொழுது நாடகமாதரிருவர் இந்திரனுடைய

⁕ கருங்கொடி—கருநிறமுடைய காகம், ஒரு பூண்டு.

⁕ விசாகம்—முருகன் பிறந்த நாள்.

கட்டளை பெற்று நாடக வரங்கிலேறி முனிவரும் மனம் சுழலும்படி நாடகமாடினர். இந்திரன் அம்மகளிரின் கூத்தினழகைக் கண்டு அம் மாதர்பால் மோகங் கொண்டான். அம்மகளிரும் இந்திரனிடம் மனம் வைத்தனர்.

இந்திரன் அம் மாதரிருவரையும் பக்கத்தில் வரவழைத்து இரத்தினாபரணங்களையும், அழகிய ஆடைகளையும் பரிசாகக் கொடுத்துத் தன் விருப்பத்தையும் தெரிவித்தான். அம் மாதரின் விருப்பத்தையறிந்த இந்திரன் ''மாதர்களே! நீங்கள் விருப்பம் நிறைவேறப் பூமியிலுள்ள ஈரோட்டைச் சார்ந்து வாழுங்கள்'' என்றான். அம் மாதரும் நன்றென்று இந்திரனை வணங்கிப் போயினர். பின்பு விதிவழியாக அம் மாதரிருவரும் பூமியிலுள்ள ஈரோட்டில் வீற்றிருந்தருளும் சிவபெருமானுடைய கோவிலின் பணிசெய்து வாழும் கணிகையரிடத்தில் இரண்டு புத்திரிகளாய்ப் பிறந்தார்கள். அம் மாதரிருவரும் மிகுந்த அழகுடையவர்களாய் சிறுநல்லார், பெருநல்லாரென்னும் பெயர் பெற்றுப் பிறைச் சந்திரனைப் போல வளர்ச்சியுற்றனர். அவர்கள் கழங்கு, பந்து, அம்மானை, ஊசல் என்னும் விளையாடல்களை மகளிருடன் கூடி விளையாடினர் பின்னர் தம் குலத்திற்கேற்ற பரத நூலிற் கூறிய வகைகள் முழுவதையும் அறிந்தார்கள். தமிழ் நூல்களையும், ஆரிய நூல்களையும் கற்றுணர்ந்து அவற்றிலுள்ள இசைப் பாடல்கள் பலவற்றைப் பாடிப் பழகினர். பொன்னாபரணமணிந்து இலக்குமியை யொத்த அழகுடையவராய் விளங்கினர். வீணை நரம்புகளைத் தடவி இசைப்பயிற்சி செய்தனர். போகவிதங்களை யறிந்தனர். நாடகமகளிர் சூழ்ந்து நிற்க நடனமாடிப் பழகினர். நடனத்தில் இந்திராணியை யொத்தனர். அழகினால் மன்மதனுடைய கண்களையும், கருத்தினையும் கவர்ந்தனர். காமநூல்களை நாடோறும் பயின்று இரதியையொத்த கட்டழகு உடையவராயிருந்தனர். நடனத்திலும், இசையிலும், அழகிலும் சிறந்து விளங்கிய அம் மகளிர் பரத்தையர் குலத்திற் பிறந்தும் விதியின் பயனுக ஆடவருக்குப் போகம் விற்றலாகிய தம் குலத் தொழிலைச் செய்யாதிருந்தனர். இவ்வாறு அம் மகளிர் வாழ்ந்துவரும் காலத்தில் தாய்மார்களும், தோழியர்களும் கூடிச் சிவபெருமான் திருமுன்பில் அம் மகளிரை அரங்கேற்றுவதற்கு விரும்பி வீதிவழியாக அழைத்துக்கொண்டு வந்தனர். அன்னமும் நாணும்படி அழகுற மென்மையாக நடந்து வந்த அம் மகளிரின் அழகு முதலிவற்றைக் கண்ட ஆடவர்கள் அவர்பால் மிகுந்த விருப்பம் கொண்டு அஞ்சலி செலுத்தி வணங்கி நிற்க

நாடகவரங்கேறுவதற்கு அம் மகளிர் தொண்டீசுவரருடைய கோவிலினுட்புகுந்து நடன மண்டபத்தை யடைந்தனர்.

அங்கு தொண்டீசுவரருடைய திருவடிகளைத் துதித்து மலர்களைச் சொரிந்து வணங்கினர்கள். அங்கு ஆடலுக்கேற்ற பலவகை வாத்தியங்கள் ஒலிக்கப் பாடலுக்கேற்ற குழலும் யாழும் பயின்று ஏழிசைப் பண்களையெழுப்பிப் பலவகையான அபிநயங்களும் நாடகவியல்புகளும் பார்க்கின்றவர்களுக்கு மகிழ்ச்சியும் மிகும்படி நடித்தனர். அதனைக் கண்டு மகிழ்ந்த அவையினர் இக் கூத்தினைக்காணச் சிவபிரானுக்குரிய இம் மண்டபத்தில் கூத்தில் விருப்பமுடைய இந்திரனுக்குரிய மண்டபமொன்றும் இருக்கவேண்டுமென்று பேசிக்கொண்டனர். அவையோர் பேசிய இச் சொற்கள் நல்லாரிருவருடைய செவியிற் புகவும் அவர்கள் பழைய உணர்ச்சியும், இந்திரன் முன்பு கூறிய சொற்களும் தம் நினைவில் தோன்றச் சிவசன்னிதியிற் பெறும் பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டு 'யாம் நினைத்த வரங்களை யெமக்குத் தருவீர்' என்று சிவபெருமானை வணங்கி விடைபெற்றுக்கொண்டு யாருடனும் பேசாமல் தம்மில்லத்திற்குச் சென்று இந்திர போகத்தை நினைத்துக்கொண்டு இரவில் கண் மூடாமல் விழித்திருந்தனர்.

அச்சமயம் இந்திரன் புரோட்டிற்கு வந்து தொண்டீசுவரரை வழிபட்டு நல்லாரிருவருக்கும் அருள் செய்தலின் பொருட்டு அவர்கள் வாழும் இல்லத்திற்குச் சென்று விண்ணுலகத்தில் முன்பு நிகழ்ந்த செய்திகளைச்சொல்லி மகிழ்ந்து மனிதரைப்போல மனம் விரும்பி அம்மாதர்களுக்குக் கலவியின்பந் தந்துகொண்டிருந்தான். இவ்வாறு சில நாட் கழியவும் இதனை யறியாத பூமியிலுள்ள ஆடவர்கள் சிலர் தம் இல்லத்திலுள்ள திரவியங்களெல்லாவற்றையும் தாமாகவே எடுத்துக்கொண்டு சென்று தம்மைப்பிணித்த காமப்பிணியை யெடுத்துரைத்தனர். அதனைக் கேட்ட அம் மகளிர் அவர்களை நிந்தித்து 'இம்மாதிரியான சொற்களை இனி எம்மிடம் கூறுதொழியுங்கள்' என்று வெறுத்து இந்திரனைக் கூடிவாழும் கற்பு நெறியில் ஒழுகினர். இளைஞர்களாகிய ஆடவர்கள் அம் மகளிரிடம் வேட்கையும், பகைமையும் கொண்டு அக்காலத்தில் உலகாளும் மன்னவனாய் புரோட்டில் விளங்கிய சோழ மன்னனிடம் நிகழ்ந்த இச் செய்தியைச் சொன்னார்கள். சோழ மன்னன் இம் மகளிரால் நாட்டிற்கு வரும் நன்மையை யறியாதவனாய் 'அம் மகளிரை யழைத்துக்கொண்டு

வாருங்க’’ ளென்று தூதர்களையேவினன். தூதர்கள் அம் மகளி ரிடம் சென்று ‘‘அரசன் உங்களை யழைத்தான் போவோம் வாருங்கள்’’ என்று சொன்னார்கள். அதனைக்கேட்ட மாதரிரு வரும் ‘‘அரசர் எங்களையழைப்பதற்குக் காரணமாக அவர்க்கும் எங்களுக்கும் என்ன தொடர்பிருக்கின்றது? உம்முடன் யாம் வரமாட்டோம்’’ என்று கோபித்துப் பேசினர்கள். அவ்வுரை கேட்ட தூதர்கள் அச்சமுற்றுத் திரும்பி யரசனை வணங்கி நிகழ்ந் ததைக்கூறினர். அரசன் அம் மாதர்களின் மனக்கருத்தையறிந்து கொண்டு யாதொன்றும் செய்யாமல் சும்மாவிருந்தான்.

அம் மகளிரிருவரும் வழக்கப்படி ஒரு நாள் தொண்டீசுவர ருடைய ஆலயத்திற்குச்சென்று சிவபெருமானுக்கு விசிறிவீசுதல், சாமரமசைத்தல், வீணை தடவிப்பாடல் பாடுதல் என்னும் தமக் குரிய பணிகளைச் செய்துகொண்டிருக்கும் சமயத்தில் சோழ வேந்தனகிய பொருநற்கிள்ளியும், தொண்டீசுவரருடைய கோவி லுக்குச் சென்று சிவபெருமானை யருச்சனை புரிந்து வழிபட்டுக் கொண்டு வாயிற்புறத்தில் வந்தனன். அதுசமயம் இருமாதரும் தம் பணிகளை முடித்துக்கொண்டு திருவாயிலின் பக்கம் வந்தார் கள். அப்பொழுது அங்கிருந்த சிலர் அரசனை நோக்கி ‘அரசே! இம்மாதர்கள்தாம் நின் கட்டளைக்கு மாறுபட்டவர்கள்’ என்றனர். அரசன் அம் மகளிரைப் பக்கத்திலழைத்து ‘‘ நீங்கள் யார்? ’’ என்ருன். அம் மகளிர் ‘அரசே! யாம் தெய்வத்திற்கு அடிமை செய்யும் பொது மகளிர்’ என்றனர். அரசன் ‘பொது மகளிராகிய நீங்கள் உம்மிடம் வருவோர் தரும் பொருளைப் பெற்றுக்கொண்டு அவர்களைச் சேரலாமல்லவா? நீர் அங்ஙனம் சேரமாட்டோம் என்று சொல்வதற்குக் காரணமென்ன?’ வென்ருன். மகளிர் ‘‘ அரசே! யாம் பூமியிற் பிறப்போராகிய மனிதரைப் புணர மாட்டோம் ’’ என்றனர். அரசன் உள்ளத்தில் நகைகொண்டு ‘ மாதர்களே! உங்கள் உடம்பில் புணர்ச்சிக்குறிகள் உள்ளன. அவற்றை நீங்கள் மறைத்துள்ளீர்கள்’ என்ருன். மாதர்கள் புன்னகைபுரிந்து ‘அரசே! உண்மையைச் சொன்னீர். யாம் மனிதரைச் சேரமாட்டோம். தொண்டீசுவரருடைய திருவரு ளால் விண்ணுலக வேந்தனைப் புணர்வோம். இவ்வுண்மை தவிரமாட்டோம்’ என்றனர். அரசன்! ‘‘ மாதர்களே நீங்கள் கூறியது உண்மையானல் தேவேந்திரனைக்கொண்டு இந்நாட்டில் பூமாரி பொன்மாரி பொழியச் செய்யவேண்டும். அவ்வாறு செய்தால் நீங்கள் வாய்மையும், கற்பும், சிவபெருமா னுக் கடிமையும் உடையவராவீர் என்பது உண்மையாகும்’’

என்றான். அம்மாதரிருவரும் "அரசரே! நீர் கூறியவாறு பூமாரி, பொன்மாரி பொழியச் செய்வோம்" என்று அரசனிடம் விடை பெற்றுச் சென்றனர். அந்தநாள் இரவில் தேவேந்திரன் தம்மைப் புணரும்பொழுது அம்மாதர் அவனிடம் நிகழ்ந்ததைச் சொன்னார்கள். அப்பொழுதே சென்னியங்கிரியிலும், சென்னியங்கிரியையுடைய அந்நாடு முழுவதிலும் பூமாரி, பொன்மாரிகள் பொழிந்தன. பூமாரி, பொன்மாரி பொழிதலைக் கண்ட உலகினர் அதிசயமடைந்தவர்களாய் அம்மாதரிருவருடைய தவத்தினையும், கற்பினையும் போற்றிப் புகழ்ந்தார்கள். அம் மாதரிருவரும் தொண்டீசுவரரை வழிபட்டுக்கொண்டு சிலநாள் பூமியில் வாழ்ந்திருந்தபின்னர் வானுலகத்தையடைந்தனர்.

அதுமுதல் பூமாரி, பொன்மாரி பெய்யப்பெற்ற அந்த நாட்டினுக்குப் பூந்துறை நாடென்றும், அந்நாட்டில் உள்ள பழமையான ஊருக்குப் பூந்துறையூர் என்றும், பூந்துறை நகரில் வாழ்கின்ற சிவபெருமானுக்குப் புட்பவன நாதனென்றும், சென்னியங்கிரிக்குப் புட்பகிரியென்றும் பெயர்கள் உண்டாயின. சரவண முனிவனே! சிகரகிரி, புட்பகிரியான வரலாறு சொன்னோம். இனி சிரகிரி முருகன் இடும்பனுக்கு வழிகாட்டிய சரித்திரத்தைச் சொல்லுவோம் கேட்பாய்.

## 4. இடும்பனுக்கு வழிகாட்டிய மான்மியம்.

பொதியமலையில் வாழ்கின்ற அகத்திய முனிவர் ஒரு நாள் அதன் சமீபமாயுள்ள குற்றாலமலைக்கு வந்தார். சூரபன்மன் முதலிய அசுரர்களுக்குப் படைக்கலப் பயிற்சி செய்வித்துக் கொண்டிருந்த இடும்பாசுரன் என்பவன் அசுரர்கள் முருகக் கடவுளது வேலினால் அழிந்தபிறகு தன்னுயிரைப் பாதுகாப்பதன் பொருட்டுத் தன் மனைவியுடன் மறைந்து பொதியமலைச் சார்பில் திரிந்துகொண்டிருந்தான். அவன் அகத்திய முனிவரைக் கண்டு வணங்கி நிகழ்ந்ததைக்கூறித் தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டினன். அகத்தியர் அஞ்சாதேயென்று இடும்பாசுரனுக்கு அபயங்கொடுத்தார். பின்பு அகத்தியர் இடும்பனை நோக்கி, "இடும்பனே! முன்பு சிவபெருமான் தந்த கந்தகிரியின் சிகரங்களாகிய சிவகிரி, சத்திகிரி என்னும் சிகரங்களிரண்டையும் திருக்கேதாரமலையின் பக்கத்திலுள்ள பூர்ச்சைவனத்தில் வைத்து வந்துள்ளேன். நீ அங்கு சென்று அவ்விரு மலைகளையும் எடுத்துக்கொண்டு இவ்விடம் வருவாய்" என்று கட்டளை

யிட்டார். அவன் வழியில் இடையூறில்லாமல் போய்வருவதற்குரிய மந்திரங்களையும் அவனுக்கு உபதேசம் செய்தார். இடும்பன் அகத்திய முனிவரை வணங்கி விடை பெற்றுக் காசியை அடைந்து விசுவேசுரரை வழிபட்டுக் கொண்டிருந்து பின்பு திருக்கேதார மலையின் ஈசான திக்கிலுள்ள பூர்ச்சை வனத்தை யடைந்தான். அங்குள்ள சிவகிரி சத்திகிரி களிரண்டையும் அருச்சனை செய்து வழிபட்டான். அகத்திய முனிவருபதேசித்த மந்திரங்களை யுச்சரித்தான். அப்பொழுது வந்த பாம்புகளையும் பிரமதண்டத்தையும் உறியாகக் கட்டினன். அவ்வுறியில் மலைகளிரண்டையும் மிகுந்த வலிமையுடன் எடுத்து வைத்துச் சுமந்துகொண்டு வந்தான். அவன் வழியிலுள்ள காசி, கங்கை, விந்தியமலை, மல்லிகார்ச்சுனம், திருக்காளத்தி மலை, அருணசலம், திருமுதுகுன்றம் என்னும்தலங்களையடைந்து நீங்கிப் பின் காவிரியாற்றை யடைந்து அதனையும் கடந்து புட்பகிரியென்னும் சென்னியங்கிரியின் சார்பினையடைந்தான். அங்கு செல்லுதற்குரிய வழி தெரியாமல் அச்சமுற்றுப் புட்ப கிரியின் மேலேறிச் சுமந்துகொண்டு வந்த மலைகளிரண்டுடன் செய்வதொன்றும் தெரியாமல் கலக்கத்துடன் நின்றான்.

அப்பொழுது புட்பகிரி முருகன் சிவந்த ஒளி பொருந்திய மேனியும், புன்சிரிப்புடன் கூடிய சிவந்த வாயும், வெட்சிமாலை யணிந்ததோள்களும், கச்சையும், வாளும் கட்டிய இடையும், பிச்சிப் பூ மாலையணிந்த குடுமியும், வச்சிரமாலை பிரகாசிக்கின்ற மார்பும், தொடுதோல்கள் சூழ்ந்த இரண்டு பாதங்களும், கைகளில் அம்பும், வில்லும் உடையவராய், நீங்காத அழகுடைய அரசனைப்போல மிகுந்த மகிழ்ச்சியுடன் இடும்பனுக்குச் சமீபமாய் அவன் எதிரில் நின்றார். இடும்பன் அவ்வழகிய வடிவத்தைக் கண்டு இங்கு என் முன் நிற்கின்ற இவன் யான் முன்செய்த தவங்களின் வடிவமாக வந்தவனே! சிவபெருமானே! திருமாலோ! பிரமதேவனே! தேவேந்திரனே! மன்மதனே! முருகக் கடவுளோ! மன்னர் மன்னனுகிய சக்கரவர்த்தியோ! அம்பையும், வில்லையும் கையில் ஏந்திநிற்கின்ற இவன் யாவனே! என்று மனதில் நினைத்து என் முன் நிற்கின்ற "நீ யார்? இவ்விடம் வந்த காரணம் என்ன?" வென்று வினவினன்.

முருகக் கடவுள் இடும்பனை நோக்கிப் "பூமாலையை யணிந்துள்ளவனே! என் தந்தை உலக முழுவதிலும் செங்கோல் செலுத்திச் சந்திரவட்டக் குடை நிழலிலிருந்து உயிர்கள

னைத்தினையும் பாதுகாக்கின்ற அரசர் சிங்கமாயுள்ளவர். நான் வேட்டையாடுதலின் பொருட்டு இம்மலைமேல் வந்தேன். அசுரர் தலைவனைப் போல் தோன்றும் நீ இரண்டு மலைகளைச் சுமந்து கொண்டு நெடுந்தூரம் சென்று திரும்பிவந்தாய் போலும். எங்கு செல்வதற்கு வந்தாய்? இம்மலைமேல் வந்த காரணம் யாது?'' என்று வினவிய முருகக்கடவுளை நோக்கி இடும்பன் சொல்வான்.

"அரசனே! நான் என் குருவாகிய அகத்திய முனிவரிட்ட கட்டளையின்படி பூர்ச்சவனத்தையடைந்து அங்குள்ள மலைகள் இரண்டையும் என் தோளிற் சுமந்துகொண்டு வழியில் பல இடையூறுகளுக்குத் தப்பி விந்தியமலையின் வழியாக இம் மலைப் பக்கம் வந்தேன். வழி தெரியாமல் மயங்கி இந்த மலையின்மேல் ஏறும்பொழுது உன்னைக் கண்டேன். யான் பொதியமலைக்குச் செல்லுதற்குரிய வழியினைச் சொல்வாய்'' என்றான். முருகக் கடவுளானவர் "அசுரனே! இம்மலை சென்னிமலை; புட்பகிரி யென்னும் பெயர்களையுடையது. இம்மலையில் எப்பொழுதும் ஆறுமுகக் கடவுள் தங்கியிருப்பான். அகத்தியர் உனக்குச் சொன்ன வழிகளில் இது நல்ல வழியாகும். இவ்வழியே நடந்து சென்று ✻வராகமலையில் தங்கி இளைப்பாறிக் கொண்டு பொதிய மலையை யடைவாய்'' என்றார். இடும்பன் மிகுந்த மகிழ்ச்சி

---

✻ வராகவெற்பென்பது கொங்கு நாட்டின் தென்றிசையிலுள்ள பழநிமலைக் குத் தெற்கேயுள்ள வராகமலைத் தொடர். இதற்குக் கருமாவரை யென்றும், பன்றிமலையென்றும் பெயர். வராக முனிவன் தவம்புரிந்து அருள் பெற்ற மலை. மிகுந்த வளமுடையது.

"அராக மற்றரன் பதமகத்துட் காண்பவ
னிராக நீண்மறை தெரியேன மாதவன்
பராக நீறணிப வன்பரித் தலாற்பெயர்
வராக மாகிரியென வழங்கிற் றெங்கணும்''— 62.

"தேனலன் பெருகிப் புனமெறிந் துழுநர்
சிறுகுடிப் பெரியதொல் வளஞ்சேர்
ஏனமால் வரைதா னென்னினும் யானை
மலையெனத் திரிதரு மொருசார்''—26.
— கருவூர்ப் புராணம். வராககிரிச் சருக்கம்.

யானைத்தந்தம், பன்றிக்கொம்பு, மூங்கில் முதலிய மலைநிலப் பொருள் களிலுண்டாகின்ற முத்துக்களும் நவமணிகளும் பிரகாசிக்கின்ற மலை வராகவெற்பு.

"மாலைவெள் ளருவிதாழ் வராக மாகிரி'' என்பது
— பழநித்தலபுராணம் கிரிச்சருக்கம் — 33.

யடைந்து முருகக்கடவுள் கூறியவாறு கவர்வழிகளில் செல்லாமல் நல்ல வழியில் சென்று திருவாவினன்குடியை யடையும்பொழுது அவனுடைய தோள்களின் பலம் குறைந்தது. அதனுல் இடும்பன் மலைகளிரண்டையும் நிலத்தின்மேல் வைத்து இளைப்பாறினன். எடுக்கமுடியாதபடி முன்னிலும் பலங் குறையவும், கோபமும், அறியாமையும் கொண்டு இவ்வாறு பலங்குறைந்ததற்குக் காரணம் யாதோவென்று ⁎சிவகிரியின்மேல் ஏறினன். அச் சிவகிரியின்மேல் குராமரத்தின் நிழலில் கையிலெடுத்த தண்டும் நூலணிந்த மார்பும், பின்தொங்கின குஞ்சியும், இடையில் தரித்த கோவணவுடையும், தண்டையணிந்த பாதங்களும் விளங்கும்படி முருகக் கடவுள் நின்ற குழந்தைப்பருவ வடிவத்தைக் கண்டான். கண்டதும் அன்பினல் மனமுருகினன். பழவினை தொடர்ந்த தனல் கோபித்துப் பொங்கி "நீ யார்? என்னுடன் போர் செய்வாய்" என்று கூறி முருகக் கடவுளுடன் போர் புரிந்தான். அப்போரில் இடும்பன் இறந்தான்.

முருகக் கடவுளின் அருளால் மீண்டும் உயிர்பெற்றெழுந்த இடும்பன், மலர்களைத் தூவித் துதித்து நின்று, "வெட்சிமாலை புனைந்தவனே! நின் திருவுள்ளக் கருத்தை அறியவல்லவர் யார்? நான் புட்பகிரியின்மேல் போகும்பொழுது வழிமயக்கம் செய்து அரசனைப்போலக் காட்சி தந்து வழியில் போகவிட்டு இந்த மலையினிடத்திலும் என்னை மயக்கச் செய்து உயிர் நீங்கும்படி செய்து என் பழவினைகளை யொழித்து மீட்டும் நான் அழியாதபடி நின் காட்சியைத் தந்தாய். நான் யாது தவம் செய்தேனே? அருள் பொழியும் தூய்மையான ஞானவடிவ முடையவனே! வணக்கம் வணக்கம்." என்று துதித்து வணங்கி நின்றான். முருகக் கடவுள் இடும்பன் வேண்டிய வரங்களெல் லாவற்றையும் தந்து "தென்றல் விளங்குகின்ற சிவகிரி, சத்திகிரி களென்னும் இம் மலைகளிரண்டையும் பாதுகாத்துக் கொண் டிருப்பாயாக" வென்று கட்டளையிட்டுச் சிவகிரியில் மறைந் தருளினர்.

சரவண முனிவனே! சிரகிரியாகிய புட்பகிரியின்மேல் முருகக் கடவுள் இடும்பனுக்கு ஆவினன்குடிக்குப் போகும்

⁎ சிவகிரி — பழநி மலை. திருவாவினன்குடி முருகப் பெருமானுக்குச் சிவபெருமான் வழங்கிய பெயர் "பழநீ" என்பது. அப் பழநி யென்னும் பெயர் திருவாவினன்குடிக்கும்; திருவாவினன்குடியை யடுத்த சிவகிரிக்கும் பெயராய் வழங்குகிறது.

வழிகாட்டிய சரித்திரத்தைச் சொன்னோம். செப்பேட்டில் வரைந்துள்ள இச் செய்திகளைச் சோர்வின்றி யறிவாய்'' என்று காஞ்சிவாழ் மறையவர்கள் சரவண முனிவனுக்குச் சொன்னார்கள். சரவண முனிவன் மிகவும் மகிழ்ச்சியடைந்து செப்பேட்டிலுள்ள சிரகிரியைப் பற்றிய செய்திகளையெல்லாம் அம் மறையவர்களைக்கொண்டு வேறு செப்பேட்டில் எழுதி வாங்கிக் கொண்டு அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு தன்னூர்க்குத் திரும்பினான்.

## 5. காட்சி மான்மியம்.

சரவணமுனிவன் காஞ்சிபுரத்திலிருந்து வரும் வழியிலுள்ள தலங்கள்தோறும் சென்று சிவபெருமானையும், முருகக்கடவுளையும் மலர்தூவி அருச்சனை புரிந்து வணங்கிக் கொண்டு வேதங்கள் போற்றும் காவிரி யாற்றை யடைந்து அதனையும் கடந்து திருவிருந்தபுரத்தை யடைந்தான்.

பின்பு அங்கு நின்றும், சந்தனக்கட்டை முதலிய குறிஞ்சி நிலப் பொருள்களைத் தள்ளிக்கொண்டு வருகின்ற நீரருவியுடன் தேனும் கலந்து பாய்கின்ற சுனைகளில் மகளிர்கள் நாள்தோறும் நீராடுகின்ற சென்னிமலையை யடைந்தான். தான் காஞ்சியிலிருந்து செப்பேட்டில் பிரதி செய்துகொண்டு வந்தபடி சென்னி மலையினிடத்தில் உள்ள தேவர் முதலியோர் வாழிடங்களும் பஞ்சதுந்துமி முழக்கமும், நால்வகை மருந்துகளும், கையாத எட்டியும், கருநொச்சியும், வேறு மருந்துகளும், சோலைகளும், தடமும், தீர்த்தமும், அரிய பறவைப்புழுக்களும், தெய்வீக முதலாகிய பல வளங்களும் ஆகியவற்றுள் பார்ப்பனவற்றைப் பார்த்தும், காதால் கேட்பனவற்றைக் கேட்டும், அதிசயமடைந்தும், கடவுளால் கருதி யருள் செய்தற்குரிய தகுதியுடையவனுய் விளங்கினான். அப்பொழுதே கார்த்திகை மைந்தனாகிய முருகக் கடவுள் சரவண முனிவனிடம் அருளாகிய கடல் போன்ற அமுதத்தை வழங்கத் திருவுளங் கொண்டவராய் அம் மலைமேல் தம்முடைய ஆறு சிரங்களும், ஆறுமுகங்களும், பன்னிரண்டு கண்களும், பன்னிரண்டு செவிகளும், புன்முறுவலும், வச்சிரம் வேல், இருதலைச் சூலம், தண்டு, வாள், பலகை, (கேடயம்) வில், அம்பு, கோழி, சக்கரம், வரதம், அபயம் என்னும் இவற்றைக் கொண்ட பன்னிரண்டு கைகளும், கடம்ப மலர்மாலையும், தோள்களும், வாகுவலயமும், நீறணிந்த மார்பும், உதரபந்தமும்,

இடையில் கட்டிய செம்பட்டாடையும், அரைநாணும், தண்டையும், சிலம்பும், திருவடிகளிரண்டும் தெரியும்படி அவனுக்குக் காட்சி தந்தருளினுர். சரவண முனிவன் காட்சியாகிய அமுதத்தைத் தன் கண்களென்னும் கரங்களால் வாரி வாரியுண்டு மகிழ்ச்சி பொருந்திய மனமுடையவனுய்க் கைகள் இரண்டையும் சிரசின்மேற் குவித்துத் தோத்திரஞ் செய்தான். [காட்சிமான்மியம் செய்யுள் 8.]

தோத்திரம் செய்தபின்பு ' ஐயனே ! நின் திருவிளையாடலை யாரறியவல்லவர். அன்று ஆவினன்குடியில் என் உள்ளத்தில் தோன்றி இச் சிரகிரி மான்மியம் காஞ்சிபுரத்தில், செப்பேட்டில் உள்ளதென்றருளிச் செய்தாய்.

படித்தவருக்கு நல்ல வாழ்வைத் தரும் அம் மான்மியத்தி லுள்ள சிறப்புகள் எல்லாவற்றையும் இந்தச் சிரகிரியில் கண்டும், கேட்டும் உய்ந்தேன். வேதங்களின் சிரசில் விளங்கும் பெருமானே ! நீ முன்பு * சிவகிரியின்மேல் சொல்லியவாறு இன்று இந்தச் சிரகிரியின்மேல் ஆறுதிருமுகங்களும் விளங்கக் காட்டிய நின் திருவருட் காட்சிக்கு என்ன கைம்மாறு செய்வேன்' என்று சொல்லிக் கைகளைச் சிரசின்மேற் குவித்து வணங்கினுன்.

அப்பொழுதே வேலைக்கரத்திலுடைய முருகக் கடவுள் தான் முன்பு காட்டிய ஆறுதிருமுக வடிவிலிருந்தெடுத்த குஞ்சிதமாகப் பொருந்திய திருவடிகளிரண்டும், கோவணவுடையும், அரைப் பட்டிகையும் நூல்விளங்கும் மார்பும், பிரம்பூன்றியதும், இடுப்பிற் சேர்த்ததுவுமாகிய இரண்டு கைகளும், ஒப்பில்லாத ஒரு திருமுகமும், பின்புறம் தாழ்ந்த சிகையும் தோன்றத் தண்டபாணி வடிவில் நின்றருளினன். இந்த ஒப்பற்ற காட்சியைக் கண்ட சரவண முனிவன் சிறந்த ஒப்பற்ற தோத்திரங்களால் தோத்திரம் செய்தான். [தோத்திரம். காட்சிமான்மியம் 13,14,15,16,17.]

இவ்வாறு தோத்திரம் செய்த சரவண முனிவன் 'பெருமானே ! உன் திருவடிகளே எனக்குப் புகலிடம்' என்று இரண்டு திருவடிகளையும் துதித்து நின்று " உன் திருவடிகளல்லாமல் எனக்குப் புகலிடம் வேறொன்றுண்டோ ? நீ வீற்றிருந்தருளுதற்குரிய கோவில் திருப்பணியை யான் செய்வதற்கு என்னுடைய மனமுதலிய அந்தக்கரணங்கள் ஒருவழிப்பட்டு

நிற்கும்படி உன்னுடைய கடைக்கண் பார்வையைச் செய் தருள்வாய்'' என்று வேண்டினான். முருகக் கடவுள் சரவண முனிவன் வேண்டிய வரங்களெல்லாவற்றையும் தந்து மேரு சிகரமென்னும் சிரகிரியில் குடிகொண்டு மறைந்தருளினார்.

சரவண முனிவன் முருகக் கடவுளை வணங்கி விடை பெற்றுக்கொண்டு சிகரகிரியை விட்டு நீங்கித் திருவிருந்த புரத்தின்கண் வந்தான். அவ்வூரிலுள்ள முதியோர்கள் சரவண முனிவனை யெதிர்சென்று வணங்கித் துதித்துத் தழுவிக்கொண்டு அதிசயமுண்டாகப் பார்த்துத் தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்று புது விருந்திட்டுச் சிறந்த ஆசனத்தில் அமர்த்தித் துதித்துச் சொல்வாராயினர்.

''வேதங்களையுணர்ந்த முனிவரே! நீர் எங்கள் மரபில் பிறந்து முருகக் கடவுளின் திருவருள்பெற்று உயர்ந்தவராயினீர். நீர் இவ்வாறு உயர்வு பெற்றது எங்களுடைய தவப்பயனாகும். நீர் எங்களுக்குச் சிரகிரியின் கதைகளெல்லாவற்றையும் சொல்லியருள வேண்டு''மென்று வேண்டினர். சரவண முனிவர் அவர்கள் மகிழும்படி சிகரகிரியின் கதைகளை மிகுந்த சிறப்புடன் கூறிச் ''சிகரகிரி வேலாயுதனுக்கு ஆலயம் எடுப்பேம்'' என்றார் அதனைக் கேட்ட சிவமறையோர்கள் எல்லோரும் மனதில் மிகுந்த மகிழ்ச்சி யடைந்தார்கள்.

## 6. ஆலயங் கண்ட மான்மியம்.

சரவண முனிவன் சிறப்புடைய சென்னிமலை முருகனுக்கு ஆலயம் எடுக்க விரும்பினான். அம்மலையில் ஆலயம் எடுத்தற்குரிய இடத்தை அளவு செய்தறிந்தான். பின்பு சிற்ப நூலையுணர்ந்த மயனையழைத்து இன்று நல்ல முகூர்த்தம் அமைந்துள்ளதென்று கூறி ஆலயம் எடுத்தற்கு வேண்டிய பொன்னும், மணிகளுமாகிய பொருள்களை நிரம்பக் கொடுத்துக் குமர கோட்டம் போன்ற கோவிலும், அமராவதி நகரம் போன்ற நகரமும் அமைக்கும்படி கூறினான்.

மற்றும் மயன் விரும்புதற்குரிய பொருள்கள் பலவற்றையும் அவனுக்குச் சிறப்பாகக் கொடுத்தான். மயனானவன், சரவண முனிவன் கூறியபடி கோவிலெடுக்கத் தொடங்கினான். அவன் கருப்பக்கிரகம், கோபுரம், அர்த்தமண்டபம், மகாமண்டபம்,

நிருத்த மண்டபம், ஆறுகால் மண்டபம், நடைவழிகள், புற மாளிகைகள், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், திருமதில், நாற்றிசைக் கோபுர வாயில்கள், வேறுபல கோவில் கள் ஆகியவற்றைக் கண்டோர் வியப்புறுமாறு மிகவும் அழகாகச் செய்தான்.

சரவண முனிவனுனவன், கோவிலேப்பார்த்து மயிலேறும் பெருமானுக்கு இக் கோவில் மிகவும் பிரியமானதாகுமென்று மனதில் மிகவும் மகிழ்ச்சி கொண்டு அன்பினுல் மனம் நெகிழ்ந்து இருகரங்களையும் சிரசின்மேற் குவித்து முருகப் பெருமான் இவ் வாலயத்தினுள் எழுந்தருள வேண்டுமென்று ஒருமுகமாகச் சிந்தித்தான். அப்பொழுதே முருகக் கடவுளானவர் தேவர்கள் சுற்றுப்பக்கங்களில் நின்று துதிக்கும்படியாக வந்து ஆலயத்தின் நடுவிடத்திலுள்ள பீடத்தையடைந்தார். கோவிலினுள்ளே ஒளி வடிவமாக விளங்குகின்ற எம் தந்தையாகிய முருகக்கடவுளை சரவண முனிவன் ஞான வொளி நிறைந்த மனதினுள் மகிழ்ந்து துதித்து நீர், மலர், தீபம் முதலிய பொருள்களைக்கொண்டு ஆகம முறைப்படி சிறப்புப் பொருந்த அருச்சனை புரிந்து வழிபாடு செய்தான். பின்பு மற்றெரு கோவிலினுள்ளே இந்திரன் மகளாகிய தெய்வயானையாரையும், மணமுள்ள மலர்களையணிந்த நீண்ட கூந்தலையுடைய வள்ளியம்மையாரையும் எழுந்தருளச் செய்தான்.

பின்பு சிரகிரியின் சார்பிலுள்ள சுப்பிரமணிய தீர்த்தத்தின் பக்கத்தில் மயனுனவன், அழகாகிய நகரமொன்றினைச் செய்து அதில் உயர்ந்த கொடிகள் நெருங்கிய மதில்கள், பலகணிகள், விழாவரு வீதிகள், செய்குன்றம், கடைவீதி, மாளிகைகள், அவற்றின்மேற் சூளிகைகள், மாட கூடங்கள் ஆகியவற்றைச் செய்தான். பின்பு அந்த நகரத்தினுள்ளே உயிருக்கு இன்றி யமையாத உடலைப்போலக் கயிலாயநாதன் என்னும் சிவபெருமான் வீற்றிருத்தற்குரிய ஆலயமொன்றும் மிகஅழகாகச் செய்தான்.

அவ்வாலயத்தினுள் அழகாகிய ஒளி விளங்குகின்ற ஓவியங் கள் நிறைந்த மண்டபமொன்றினையும் செய்தான். சரவண முனிவன் அந்த மண்டபத்தினுள்ளே தெய்வயானையாருடனும், வள்ளியம்மையாருடனும் சென்னியங்கிரி முருகக் கடவுளை யெழுந்தருளச் செய்தான்.

தன்னுள்ளத்தில் இடைவிடாதெழுந்த வேட்கை மிகுதியினால் சிரகிரி முருகன் ஏறி வீற்றிருத்தற்குரிய மேருமலை போன்ற பெரிய தேரொன்றினைச் செய்வித்து முரசங்கள் ஒலிக்கவும், தேவேந்திரனுடன் தேவர்கள் துதிக்கவும், முனிவர்கள் மலர்மாரி சொரியவும், பூமியிலுள்ளோர் கை குவித்துத் தொழவும் சிறப்பாகத் தேர்விழா நடத்தினன். பின்பு சரவண முனிவன் பக்தர்கள் தொழும்படி சில காலம் வாழ்ந்திருந்தபின் சிவபோக மனுபவித்தலை விரும்பிச் சென்னியங்கிரி முருகன் திருவடிகளில் முத்தர்கள் அடையும் முத்தியை யடைந்தனன்.

## நூலின் பயன்.

இந்தச் சென்னியங்கிரியின் புராணத்தினை நியமமாகப் படிப்பவர்களும், கேட்பவர்களும், ஏட்டில் எழுதிவைப்பவர்களும், படிக்கும் கூட்டத்தையடைபவர்களும் எந்தக் காலத்திலும் செல்வமும், கல்வியும் பெற்றுச் சிறப்புற வாழ்ந்து முடிவில் கரத்தில் தண்டினையும், வேலினையுமுடைய சிரகிரிக் கந்தன் சீர் பாதங்களையடைந்து இன்புற்றிருப்பர்.

முற்றுப்பெற்றது.

வித்துவான்

வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்,

9—11—1966

## சிறப்புப் பாயிரம்.

அருள்மொழி அரசு திருமுருக
**கிருபானந்த வாரியார் சுவாமிகள்**
அருளிச் செய்தது.

*நேரிசை வெண்பா.*

புகழ்சென் னிமலைப் புராண உரையைத்
தகவுடனே தண்டமிழால் தந்தான் — மிகவினிது
செந்தமிழ்நூல் கண்டுயர்ந்த தெய்வ சிகாமணிவேள்
கந்த னருளால் களித்து.

பகர்புலவ ராற்றுப் படைதந்தான் நன்மை
திகழ்தமிழ்நூல் யாவுமிகத் தேர்ந்தோன் — புகழ்மலிந்த
தெய்வ் சிகாமணிவேள் சீலமுடன் செந்தமிழும்
சைவ நலமுந் தழைத்து.

உ
குருவே துணை.

## சிரவணபுரம், கௌமார மடாலயத் தலைவர்
# தவத்திரு. சுந்தரசுவாமிகள் அவர்கள்

*வழங்கி அருளிய*

## சிறப்புப் பாயிரம்.

1 திருவோங்கும் செந்தமிழ்நாட் டணிகொங்கு மண்டலத்தில்
சிறப்புற் றோங்கும்
மருவோங்கும் பூந்துறைநாட் டணிச்சென்னி மலைத்தலத்தின்
வரலா றெல்லாம்
குருவோங்கு திருவிருந்த புரமிருந்த சைவமறைக்
குலத்தில் வந்தோன்
உருவோங்கு தவசிசர வணவிரதன் தமிழ்க்கவியால்
உரைத்திட் டானே.

2 சென்னிமலை வேலவர்க்குச் செய்யதிருப் பணிசெய்து
செய்யுள் ஆக
மன்னிடுசெந் தமிழ்க்கவியால் தலபுரா ணந்தன்னை
வழங்கி னுனல்
பன்னியலார் பிடாரியூர் எனவயங்கும் திருவிருந்தப்
பதியில் வாழ்ந்த
தன்னிகரில் சரவணமா முனிமுருகன் பாதமலர்
சரண்பூண் டோனே.

3 சொன்னயமும் பொருள்நயமும் தொடைநயமும் நடைநயமும்
துலங்கக் கொண்டு
நன்னயமாய் ஆறுவகை மான்மியமாய் இருநூற்றெழ்
நயந்த பாட்டால்

பன்னியசெய் யுட்கருமை உரையெழுதித் தந்தானெம்
பாவல் லோன்சீர்
மன்வேலம் பாளையம்வாழ் தெய்வசிகா மணியென்னும்
மணிநா வோனே.

4 அதிகபொருட் செறிவுடனே அமைசென்னி மலைத்தலத்திற்
காம்பு ராணம்
பொதிபொருளை நல்லதெளி வுரையாக மேற்கோள்கள்
பொருந்தக் காட்டித்
திதிபெறநல் லச்சியற்றிப் புலவர்கட்கும் பத்தர்கட்கும்
திருத்தி செய்தான்
கதிதருநற் சென்னிமலை வேலனடி யனுதினமும்
கருதும் சீலன்.

5 சென்னியப்பன் ஆனசிவன் உளமகிழப் பிரணவத்தைச்
செப்பும் எங்கள்
சென்னியப்பன் மீதுபுகழ்ப் புலவராற் றுப்படைநூல்
செகத்தோர் கொள்ளப்
பன்னியப்பால் அதற்குரிய ஆராய்ச்சிக் கட்டுரையும்
பகர்ந்த மேலோன்
மன்னியபற் பலநூல்கள் ஏட்டிலிருந் தெழுதி அச்சில்
வழங்கும் தூயோன்

6 வேளாளன் சென்னிமலை வேளாளன் எழுமாத்தூர்
வேல னூரான்
தாளாண்மைக் கூரகோத் திரராம சாமியுடன்
சார்அங் கம்மை
ஆளாக முருகனடி பரவுதவத் திருமைந்தன்
அரன்தாள் அன்பன்
தோளாத கவிவாணன் பல்லாண்டு முருகனருள்
தோய்ந்து வாழி.

குருபாதமே கதி.

## சிறப்புப்பாயிரம்.

பாஞ்சாலங்குறிச்சி அரசர் மரபினர்

மதுரை

# கவிராச பண்டிதர் செகவீரபாண்டியனர்

இயற்றியன.

### இறைவன் வாய்மொழி.

1 எம்பெருமான் திருவாயால் கொங்குதேர்
வாழ்க்கைஎன இயம்பும் அந்தச்
செம்பொருளுக்கு இனமாக எங்குமே
செழிப்புடைய கொங்கு நாட்டில்
உம்பருமே உவந்துறைய விழைந்துவரு
பூந்துறைநாடு உயர்ந்து தோன்ற
இம்பரெல்லாம் இன்பமுற எழில்முருகன்
குன்றம்ஒன்றங்கு எழுந்த தன்றே.

### தலமகிமை.

2 சென்னிமலை சேய்மலையே என்னுமுயர்
சீர்எங்கும் சிறந்து தோன்ற
மன்னிமலை யரையனெனும் இமயமலை
மரபென்னும் உறவை நாடி
முன்னிமலை அருள்முருகன் உவந்துறையும்
முதல்தலமாய் முதன்மை கூர்ந்து

---

(1) 'கொங்குதேர் வாழ்க்கை' என்று இறைவன் திருவாயால் பாடிய பாடல். இறையனர் அகப்பொருளிலும், குறுந்தொகையிலும் உளது. சிவபெருமான் திருவாயிலிருந்து கொங்கு என்னும் வாசனை மொழி மங்கலம் கலந்து வந்துளது.

துன்னிமலை சூழ்ந்துயர்ந்த தூய்கிரிக்கோர்
தொல்சரிதம் தோன்றிற் றன்றே.

## புராணம் தோன்றியது.

3 ஆதிமறை ஓதியுணர் சரவணமா
முனிவன்எனும் அந்த ணளன்
நீதிமுறை யுடன்ஓர்ந்து நிலையான
புராணத்தை நேரே செய்தான்;
ஓதியதன் பொருள்எவரும் தெளிவாக
உரைவுரை ஓர்ந்து ரைத்தான்
சோதிமணிப் புலவன்அவன் யார்?எனினே
சொல்லுகிறேன் சுருக்க மாக.

## உரை ஆசிரியர்.

4 தெய்வசிகா மணிக்கவுண்டர் எனும்பெயரைச்
சீராகச் சேரப் பெற்றுன்;
மெய்வசிகா மணியெனவே மேலோரால்
மெய்யன்பால் அழைக்கப் பெற்றுன்;
சைவசிகா மணியென்று சார்ந்தவர்கள்
சால்போடு சாற்ற நின்றுன்;
பொய்வசிகா மணிகளைநேர் காணுதான்;
போதமே பூணக் கொண்டான்.

---

(2) முன்—முன்பு. நிமலை—உமாதேவி. துன்னிமலை—மல்—வளம். ஐ—அழகு. துன்னி—நெருங்கி; நிறைந்து. வளமும் அழகும் நிறைந்து சூழ்ந்துள்ள தூயமலை ஆன சென்னிமலைக்கு ஒரு சரிதம் பண்டு தோன்றியது

(4) மெய்வசிகாமணி: மெய்—உண்மை. வசு—செல்வம். இகா—நீங்காத. மணி—மாணிக்கம்.

பொய்வசிகாமணி: பொய்—பொய் உரைகள். வசி—வசிக்கின்ற. கா—மரம் மணிகள்—மந்தர். பொய்யுரைகள் புகலுகின்ற மரம் மண் அனைய மந்தர்களை.

## மரபுமுறை.

5 கொங்குறையும் வேளாளர் குலதிலகன்;
கூரைகுல மரபில் வந்தோன்;
எங்கணுமே புகழுடைய எழுமாதை
வேலனகர் இருந்து வாழ்வோன்;
அங்கணுல குள்ளவர்பால் ஆருயிர்பால்
பேரருளை ஆர்ந்து செய்வோன்;
மங்களமாம் இனியமொழி எவ்வழியும்
பேசுகின்ற வாய்மை யாளன்.

## புலவராற்றுப்படை.

6 புலவர்ஆற் றுப்படைஎன்று ஒருநூலை
முருகன்பால் பொருந்த வைத்தோன்;
பலபுலவர் நலமாக வாழ்ந்துவரும்
படிமுறையைப் பரிந்து செய்தோன்;
கலைகள்பல கற்றுணர்ந்தோன்; கற்றவர்பால்
பேரன்பு கனிந்து நின்றோன்;
நலமுறவே எவ்வழியும் சொல்லாலும்
செயலாலும் நயமே செய்வோன்.

## படிப்பின் பண்பு.

7 படித்தவுயர் படிப்புக்குப் பண்போடு
படிந்தொழுகல் பயனும் என்றே
நடித்துவரும் உலகர்க்கு நன்போடு
நல்லறிவு நயமாய் நாடி
இடித்தறிவு கூருமல் இதமாகத்
தன்நடையால் இனிது காட்டி
வடித்தறிவு கொடுத்துவரும் வன்மையிவன்
தன்மையென வளரு மன்றே.

## தக்க சான்று.

8 தக்கவரைச் சரியாக அறியநீ
 வேண்டினே சார்ந்து சூழ்ந்த
பக்கமுறு பணத்தாலும் படிப்பாலும்
 பலவாலும் பார்க்க வேண்டா;
ஒக்கஅவன் ஈன்றெடுத்த மக்களால்
 உணரலாம் என்று முன்னோர்
மிக்கஒரு கருவியினை விளக்கினர்
 அதனைஇவன் விளக்கி நின்றான்.

## இனிய நீர்மைகள்.

9 எங்களுயர் ஆண்டவனும் முருகன்பால்
 பேரன்பு பூண்டோன்; யாண்டும்
துங்கமுறு கலையறிவோன்; கவிச்சுவைகள்
 தோய்ந்துணர்வோன்; தோட மான
பங்கமுறு பழிமொழிகள் யாதுமே
 பேசாத பண்பு வாய்ந்தோன்;
இங்கிவன்போல் ஒழுகிவரின் எவருமே
 இறையருளை எய்த லாமே!

முகவரி :

மானேஜர்:

திருவள்ளுவர் நிலையம்,
127, மேலமாசி வீதி, மதுரை.

உ
சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க.

## அணிந்துரை.

## தவத்திரு வித்துவான் இராமசாமி அடிகளார்,
## தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம், பேரூர்.

செந்தமிழ்நாட்டின் அணியாக விளங்குவது கொங்குநாடு. இந்நாட்டின் உட்பிரிவு நாடுகளுள் சிறந்து விளங்குவது பூந்துறை நாடு. பூந்துறை நாட்டின் பெருமையை எல்லோரும் உணர, ஓங்கித் திகழ்ந்து குன்றுதோறுடும் குமரவேளின் திருவருள் செறிந்து விளங்குவது சென்னிமலை. இம்மலையில் அருளாளர்களும், சொல்லாற்றல் வாய்ந்த சித்தர்களும் தங்கித் தவம்புரிந்துள்ளனர். அவர்களது தவ வலிமையால், அங்கு யாரும் எண்ணிப்பார்க்க வியலாத தூரத்தில் ஓடிய பவாநி யாற்றின் நீர் அண்மையில் கால்வாய் வழியாக ஓடிவந்து ஆறுபோலக் காட்சிதந்து பயனளிக்கின்றது. மூர்த்தி, தலம் தீர்த்தம் முறையாய் அமைந்து மக்களை நல்வழிப்படுத்துவது இத்தலம்.

இத்தலத்தைப்பற்றிய நல்வரலாற்றினைப் புராணமாகப் பாடியவர் பல ஆண்டுகட்கு முன்னர் திருவிருந்தபுரத்தில் (பிடாரியூர்) தோன்றிய சரவண முனிவர் ஆவார். சமயச் செந்நெறியில் முதிர்ந்தவராய் முருகப் பெருமான் அருளினால் காஞ்சிபுரம் சென்று செப்பேடுகண்டு அதிற்கூறிய செய்திகளை உணர்ந்து, தம் புலமைத்திறத்தினாலும், கவிதை வளத்தாலும் இத்தலபுராணத்தைப் பாடியுள்ளார். இவர் திருக்கோயில், திருத்தேர் ஆதியனவற்றை உருவாக்கினர் என்பதையும், தவ வலிமை வாய்ந்து துறவொழுக்கம் உடையவர் என்பதையும் புராண வரலாறுகளிடையே உணர முடிகிறது.

அருந்திறல் கவிதை நயத்தால் உருவாக்கிய சென்னிமலைத் தலபுராணமாகிய இந்நூலிருக்குமிடம் தெரியாமல் மறைந் திருந்தது. இதனைக் கவித்திறனும் புலமைநலனும் ஒருங்கு வாய்ந்த சைவத்திரு வித்துவான் **தெய்வசிகாமணிக் கவுண்டர்**

அவர்கள் அரிதில் தேடி விரிவுரை எழுதியுள்ளார். இவர், பழந் தமிழ் நூல்களைப் பேணிப் பாதுகாக்கும் பண்புடையவர். அடக்கமே உருவான செம்மனச் செல்வர். நுண்ணிதின் உய்த் துணர்ந்து அரிய கருத்துக்களுக்கு முன்னோர்மொழி பொருள் கண்டு சொல்லும் ஆற்றலுடையவர். தமது முதிர்ந்த வயதிலும் தளர்ச்சியின்றி இப்புராணத்திற்கு அரிய மேற்கோள்கள் பல காட்டி விளக்கவுரை தந்துள்ளார்கள்.

எல்லோரும் எளிதில் உணரத் தலபுராணச்சுருக்கமும் எழுதி வெளியிட்டுள்ளார். இந்நூல் தமிழ் கூறும் நல்லுலகிற்கும், சமயச் செந்நெறியில் ஒழுகும் சான்றோர்கட்கும் பெரிதும் பயன் படும் முறையில் வருவது போற்றுதற்கு உரியதாகும்.

இந்நூலை வெளியிடுவோரும், இவ்வெளியீட்டிற்குத் துணையாக இருந்த அன்பர்களும், சென்னிமலையாண்டவரின் திருவருளால் எவ்வகை நலங்களும்பெற்று வாழ்வார்களாக.

## உரை செய்த காலம்.

நன்மைமிகு சிகரகிரி வேலர்திரு வடியிணை
நாளுமற வாத நேயன்

நாடுபூந் துறைநாடன் குமாரநகர் வாழ்வினன்
நயமிகுங் கருப்பண்ண வேள்

தன்றவத் தோன்றல்சண் முகராம சாமிநற்
றமிழ்ப்புலவர் வரிசை தெரிவோன்

தழைபுட்ப வனநாத ராலயத் திருப்பணிசெய்
தகுநியம மேன்மை யுள்ளோன்

சென்னிமா மலைப்புரா ணச்சுவடி சோதித்துத்
தெளியவுரை செய்க வென்று

செப்புமுரை மேற்கொண்டு கலியிலை யாயிரஞ்
சேருமறு பத்தெட் டினில்

புன்மைதவிர் பராபவம் வைகாசி விசாகம்
பொருந்துபொன் வார மதுவாம்

புந்திமகிழ்ந் தேதெய்வ சிகாமணி யன்புறப்
பொருந்துமுரை செய்த நாளே.

# மேற்கோள் காட்டப்பட்ட நூல்கள்.

## முதற்குறிப்பு.

அணியியல் விளக்கம்
அபிராமியந்தாதி
அருணைக்கலம்பகம்
அரும்பொருள் விளக்கம்
அப்பரமேய தலபுராணம்
அப்பர்தேவாரம்
அஷ்டோத்திர நாமாவளி
ஆசிரியநிகண்டு
ஆதிநாதர் வளமடல்
ஆரியப்பப்புலவர் பாகவதம்
ஆண்டாள்திருப்பாவை
இரத்தினச் சுருக்கம்
இலக்கண விளக்கம்
இறையனுர் களவியலுரை
உறையூர்ப்புராணம்
உத்தரகாமிகம்
உண்மை விளக்கம்
ஐமணிமாலை
ஐங்குறுநூறு
ஔவையார்குறள்
கயிலைபாதி காளத்திபாதி
கருவூர்ப் புராணம்
கருவூர்த்தேவர் திருவிசைப்பா
[யந்தாதி
கவிசாகரம்
கனககிரிவெண்பா
கந்தபுராணம்
கந்தரலங்காரம்
கந்தரனுபூதி
கந்தர் கலிவெண்பா
கந்தர் சஷ்டிக்கவசம்
கம்பராமாயணம்
கல்லாடம்
கல்வளையந்தாதி
காஞ்சிப்புராணம்
குமாரதந்திரம்
குவலயானந்தம்
குறிஞ்சிப்பாட்டு
கொங்குமண்டல
[ஊர்த்தொகைப் பாடல்கள்
கொங்குவேள்மாக்கதை
கோபப்பிரசாதம்
கோயிற்புராணம்
கௌமாரமுறைமை
சரசுவதியந்தாதி
சருவலோக நாயகி ஒருபா ஒருபஃது
சிதம்பரமும்மணிக்கோவை
சிலப்பதிகாரம்
,, அடியார்க்கு நல்லாருரை
சிவகிரிச்சண்முகமாலை
சிவஞானசித்தியார்
சிவக்கொழுந்துமாலை
சிவப்பிரகாசம்
சிவன்மலைப் பிள்ளைத்தமிழ்
சிவன்மலைப் புராணம்
சித்தவாகடம்
சீகாளத்திப்புராணம்
சுப்பிரமணியபராக்கிரமம்
சூடாமணி நிகண்டு
செவ்வந்திப்புராணம்
சென்னிமலைப்பிரதாபக்கண்ணி
சென்னிமலை யமகவந்தாதி
சென்னிமலைக்காதல்
சென்னிமலைப் பிள்ளைத்தமிழ்
தணிகாசலப் புராணம்
தணிகைக்கலம்பகம்
தணிகைப்புராணம்
தனிப்பாடல்
தக்கயாகப்பரணி
தக்கராமாயணம்
தண்டியலங்காரம்
தாயுமானவர்பாடல்
திருஅம்பர்ப் புராணம்

திருஞானசம்பந்தர் தேவாரம்
திரிபுரசுந்தரி பிள்ளைத்தமிழ்
திருமந்திரம்
திருமுருகாற்றுப்படை
,, கவிப்பெருமாள் உரை
திருவாசகம்
திருவாதவூர்ப் புராணம்
திருவாரூர் நான்மணிமாலை
திருவிளையாடற் புராணம்
திருக்காளத்திப் புராணம்
திருக்குறள்
திருக்குற்றாலத் தலபுராணம்
திருக்குற்றாலக்கோவை
,, சிலேடைவெண்பா
திருச்சிற்றம்பலக் கோவையார் [சேனாவரையருரை
திருச்செங்கோட்டுப் புராணம்
,, பிள்ளைத்தமிழ்
திருச்செங்கோட்டுக்கோவை
,, திருப்பணிமாலை
திருச்செந்தூரகவல்
திருத்தணிகைச் சன்னதிமுறை
திருப்பல்லாண்டு
திருப்புகழ்
திருப்பெருந்துறைப் புராணம்
தென்றல் விடு தூது
தேவிமான்மியம்
துகளறுபோதம்
தொல்காப்பியம்
தொல்காப்பிய சூத்திரவிருத்தி
நளவெண்பா
நல்வழி
நன்னூல்
நாலடியார்
நாட்டுப்பாடல்
நான்மணிக்கடிகை
நைடதம்
பதிற்றுப்பத்து
பதினோரும் திருமுறை [திருமும்மணிக்கோவை
பரதசாத்திரம்
பரதநாட்டியம்
பரிபாடல்
பழநித்தலபுராணம்
பழம்பாடல்
பஞ்சமரபு
பட்டினப்பாலை
பண்டாரமும்மணிக்கோவை
பாகவதப் புராணம்
பிரபுலிங்கலீலை
பிரமோத்திரகாண்டம்
பிங்கலந்தை
புறப்பொருள்வெண்பாமாலை
புறநானூறு
புட்பவிதி
பூந்துறைப் புராணம்
பெரியபுராணம்
பெருந்தேவனார்பாரதம்
பெருந்தேவபாணி
மணிமேகலை
மதுரைக்கலம்பகம்
மறைசையந்தாதி
மன்மதோபாலங்காரக்கொத்து
மாறனலங்காரம்
மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
முத்துக்குமாரசாமி
முல்லைப்பாட்டு [பிள்ளைத்தமிழ்
மூத்தநாயனார் திருவிரட்டை [மணிமாலை
மெய்மொழிச் சரிதை
மேழி விளக்கம்
வளையாபதி
வள்ளியம்மைபுராணம்
வாலசுந்தரக்கவிராயர்,கொங்கு
வீரசோழியம் [மண்டல சதகம்
ஸ்ரீதத்துவநிதி

# உள்ளுறை.


| மான்மியம் | பக்கம் |
|---|---|
| 1. செப்பேடுகண்ட மான்மியம் ... | 1 |
| 2. சிரகிரி மான்மியம் | 62 |
| 3. புட்பகிரி மான்மியம் | 87 |
| 4. இடும்பனுக்கு வழிகாட்டிய மான்மியம் | 128 |
| 5. காட்சி மான்மியம் | 155 |
| 6. ஆலயங்கண்ட மான்மியம் | 197 |




இடும்பன்.




துவாரபாலகர்.




நந்தி.




கைலாச நாதர்.



மலைப்படி வழி.



கைலாசநாதர் கோயில்.



உற்சவ மூர்த்தி.

உ



சென்னிமலையாண்டவன் துணை.

# சென்னிமலைப் புராணம்.

## செப்பேடு கண்ட மான்மியம்.

## பாயிரம்.

### மலைவழி விநாயகர் காப்பு.

1. சாற்றுமலை யாசலமா முனிவனுளந் தனைக்கலையாற்
றேற்றுமலை வாயுவந்தோன் சென்னிமலைச் சீர்நவிற்றத்
தோற்றுமலை மானீன்ற சோதிமா லியானைமுக
வாற்றுமலை விநாயகன்பொன் னடிக்கமல மிறைஞ்சுவாம்.

பொழிப்புரை : உலகினரால் புகழ்ந்து சொல்லப்படுகின்ற பொதிய மலையில் வாழும் அகத்திய முனிவனது மனத்தை வேதநூற் பொருளால் தெளிவுறச் செய்த மலை இடங்களை விரும்பி உறையும் முருகக் கடவுள் வாழ்கின்ற சென்னிமலையின் சிறப்பாகிய வரலாறு கூறும் புராண நூலைச் செய்யுளால் பாடுவதற்கு உலகில் முதன்மையுற்று விளங்குகின்ற இமயமலை அரசன் மகளாகிய பார்வதி தேவியார் மகனைப் பெற்றருளிய சிவந்த ஒளியும் மதமயக்கமும் பொருந்தியுள்ள சென்னிமலையின் வழியில் உள்ள விநாயகக் கடவுளினுடைய அழகு பொருந்திய திருவடிகளாகிய செந் தாமரை மலர்களை வணங்குவோம் என்றவாறு.

விளக்கவுரை : *மலையாசலம் என்னும் மங்கலமொழி சாற்றும் என்னும் அடைமொழி பெற்றது. அடைமொழியைச் சாற்று என வினைத் தொகையாகக் கோடலுமாம். மலயம் - பொதியம். அசலம்—மலை. மலையாசலம்—வடமொழிப் புணர்ச்சி. மலயாசலம் என்பது மலையாசலம் என வழங்கும்.*

"தென்மலை மலயந் தென்றல் வருமலை" — பிங்கலம் 533.

"மலயத் தாரமும் மணிமுத் தாரமும்" —சிலம்பு, அந்திமாலை 92.

*பின் மூன்றடிகளிலுமுள்ள முதற் சீர்களில் மலை என்னும் ஐகார ஈற்றுப் பெயர் வருதற்கேற்ப முதலடியில் வரும் மலயம் என்பதிலுள்ள லகர மெய் மேல் நின்ற அகரத்தை ஐகாரமாக்கி மலையம் எனக் கூறினர்.*

*"அ ஐ முதலிடை யொக்கும் சஞய முன்" என்பது நன்னூல் விதி. மலையாசலம் என்னும் தொடர் மொழி*

"தகமலை யாசல் மாதுபர் தீர்த்தோய் தலங்கள்விஞ்சு
தகமலை யாசலப் பண்ணவ னல்லுளஞ் சார்ந்தவனே"

*—என வரும் சிரகிரி யமக வந்தாதி 35-ஆம் செய்யுளிலும்,*

*"மலைய மாமுனி வழிபாடு ஞற்றமுன்" —எனச் சென்னிமலைப் புராணம் காட்சி மான்மியம் முதற் செய்யுளிலும் வருதல் காண்க. மலயம் சந்தனமும் செந்தமிழும் தென்றலும் தமிழ் முனிவராகிய அகத்தியரும் வாழ்தலையுடைய மலையாகலின் அதனைச் "சாற்றுமலை யாசலம்" என அடைமொழி கொடுத்துக் கூறினர். மலையாசலம் என்னும் அடைமொழியால் முனிவன் என்பது ஏனைய முனிவர்களை யொழித்து அகத்திய முனிவரை உணர்த்திற்று.*

"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனும்"
— என்பது தனிப்பாடல்.

*முருகக் கடவுள் வேதங்களின் முதலிற் கூறப்பெறும் குடிலை என்னும் பிரணவ மந்திரப் பொருளை உபதேசித்து அகத்தியனுருடைய உள்ளந் தெளிவுறச் செய்தனர் என்னும் புராண வரலாற்றினை உட்கொண்டு "முனிவனுளந் தனைக்கலையாற் றேற்றுமலை வாயுவந்தோன்"— என்றார்.*

"கூடஞ் சுமந்த நெடுமுடி நேரி
விண்டடை யாது மண்புகப் புதைத்த
குறுமுனி தேற நெடுமறை விரித்தோய்" — கல்லாடம்.

"அளவில்பல கலையங்க மாரணங்க ளுணர்ந்த
அகத்தியனுக் கோத்துரைக்கு மண்ணல்" — சிவப்பிரகாசம் 4.

கலை என்பதற்கு இலக்கண நூல் எனப் பொருள் கோடலுமாம். குன்றம் எறிந்த முருகவேளிடம் முன்பு அகத்தியனூர் தமிழ் இலக்கணம் பயின்றார் என்பது பழைய வரலாறாகலின்,

“இறைஞ்சும் கலசக் குறுமுனிவர்க்
கினியவியற் சொற்றனி புணர்த்து
மொழியுங் கனிவாய் தமிழ்மணக்கும்
முருகா! முத்தந் தருகவே”

— திருச்செங்கோட்டுப் பிள்ளைத்தமிழ்.

முருகக் கடவுள் ஐவகை நிலங்களில் குறிஞ்சி என்னும் மலைநிலத்திற்குரிய கடவுளாகலின் “மலைவா யுவந்தோன்” என்றார்.

“சேயோன் மேய மைவரை உலகமும்” — தொல்காப்பியம்.

மலைவாய் என்பதை அலைவாய் எனப் பதம் பிரித்துத் திருச்செந்தூரில் விரும்பி வாழ்தற்குரியோன் எனப் பொருள் கோடலுமாம்.

“அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே” - திருமுருகாற்றுப்படை

கொங்கில் குமரன் குன்றுதோறாடல் திருப்பதிகளில் ஒன்றாய் விளங்கும் இத் திரு மலை மேருவின் சிகரம் எனப் புராணங் கூறுதலானும், ஏனைய மலைகளினும் இம்மலையில் முருகன் முதன்மையான அருள் சுரந்து விளங்குதலானும் இதனைச் சென்னிமலை என்றார். தமிழ் மொழியில் சென்னிமலையின் சிறந்த வரலாறு கூறும் நூல் இதுவேயாகலின், “சென்னிமலைச் சீர் நவிற்ற” என்றார்.

பிள்ளையார் பார்வதிதேவியார் திருக்கைலாச மலையில் பிரணவ மந்திரத்தில் வேட்கையுற்றுப் பெற்ற பிள்ளையாகலின், “தோற்றுமலை மான் ஈன்ற” என்றார்.

“காருலவுங் காவினிலோ ரோவிய மண்டபத்திற்
கவுரியுட னிறைபுகமுன் கருதினர்பார்க் குங்கால்
ஓர்குடிலை யிரண்டுருவுற் றுயர்களிறு பிடியா
யுடன்புணரு மாயிடைவந் துதித்த விளங்களிறு”

— சிவன்மலைப் பிள்ளைத்தமிழ்க் காப்பு - 1

பிள்ளையார் செவ்வானம் போன்றும் பவளம் போன்றும் சிவந்த ஒளித் திருமேனியராகலின், ‘‘ சோதி மாலி யானை ’’ என்றார்.

‘‘ வேழத்திரு முகத்துச் செக்கர்மேனி விநாயகனே ’’

‘‘ நல்லார் பழிப்பில் எழிற்செம் பவளத்தை ’’

— மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை.

பிள்ளையார் முகம் மதமயக்கமும், பிரணவ வடிவாகிய யானைமுக வடிவும் பெற்றுத் திகழ்தலின் அதனை ‘‘ மாலி யானை முகம் ’’ என்றார். பிள்ளையார் திருவுருவங்களில் முதன்மையாய் விளங்குவது திருமுகமாதலின் அதனை முதலிற் கூறினார். மால்—என்பதற்குப் பெருமை எனப் பொருள் உரைத்தலுமாம்.

மலையிற் செல்வோர் இடையூறின்றிச் சேறற் பொருட்டு மலைவழியில் முதன்மையுற விளங்கி வீற்றிருப்பவராகலின் பிள்ளையார் ‘‘ ஆற்றுமலை விநாயகன் ’’ எனப் பெற்றார். ஆறு—வழி. இம்மலைவழி விநாயகர் மலைவிநாயகர் என வழங்கப் பெறுவார். ‘‘ திருமலை விநாயகன் இணையடி வழுத்துதும் ’’— எனச் சென்னிமலைப் பிள்ளைத் தமிழ் காப்புப் பருவத்திலும்; ‘‘ சென்னிமலை விநாயகனைச் சிந்தை செய்து ’’ – எனச் சென்னி மலையாண்டவர் காதல் 93-வது கண்ணியிலும் கூறப்படுதல் காண்க. இவ்விநாயகரை மலைவழி முதல் விநாயகன் என்பர். மலையில் விளங்கும் தலவிநாயகர் சந்தி விநாயகர் எனப் பெறுவார். அவர் வணக்கம் தனியாக வேறுகூறுதல் காண்க.

பிள்ளையார் தன்னின் மேலான நாயகர் இல்லாதவராகலின் விநாயகன் எனப்பெற்றார். பிள்ளையார் திருவடிகள் அழகும், குளிர்ச்சியும், கண்டோரால் விரும்பப்படும் தன்மையும் பெற்றுத் திகழ்தலின் அவற்றை ‘‘ அடிக் கமலம் ’’ என்றார். பிள்ளையாருடைய திருமேனியின் வடிவம் முழுதும் அடியார்கள் சிந்தித்தற் குரியதெனினும் அவற்றுள் திருவடிகளே மிகவும் சிந்தித்தற்கும், சரணடைதற்கும், பேறு நல்குவதற்கும் உரிய மிகுந்த சிறப் புடையன வாகலின் ‘‘ அடிக் கமலம் இறைஞ்சுவாம் ’’ எனத் திருவடிகளுக்கு வணக்கம் கூறினார். திருவள்ளுவதேவர் முதலிய பிறரும் இறைவனுடைய திருவடிகளுக்கே வணக்கங் கூறுதலும் காண்க.

மால் + யானை — மாலியானை. இதனுள் லகரத்தின் முன் யகரம் வர இகரச் சாரியை தோன்றியது. அடிக் கமலம்—உருவக அணி. இச்செய்யுளின் முதலடியின் முதற்சீரில் வந்த மலை என்னும் சொல்லே பின்னர் வந்த மூன்றடிகளின் முதற் சீர்களி லும் வரச் செய்யுள் செய்திருப்பது சொற்பின் வருநிலை யணியாம்.

" அணியெனப் படுவது துணிவுறக் கிளப்பின்
செய்யுட் கழகு செய்துநிற் பதுவே "

அணியியல் விளக்கம். சூத்திரம்-2.

ஆசிரியர் பலவகை அணிகளும் பொருந்தச் செய்யுள் செய்தன ரென்க.

" விக்கினே சுரனே வேண்டித் துதிக்கின்
எக்கரு மங்களும் இயல்புற வாமே " — என்பது

குவலயானந்தமாகலின் முதலில் விநாயகர் வணக்கம் கூறினர். காப்பாகக் கூறிய இச் செய்யுளில், " சென்னிமலைச் சீர் " எனச் செயப்படு பொருளும்; " இறைஞ்சு வாம் " எனத் தெய்வ வணக்கமும் உடன் கூறுதலின் இது பாயிரத்தின்பாற் படும்.

" தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும்
செப்புவ தாகும் சிறப்புப் பாயிரம் "

என்பது பழைய இலக்கண சூத்திரமாகலினும்

" நேய முடனே நிருமிக் கும்பொருள்
ஆய வனைத்து மடக்கிக் காட்டுதல்
பாயிர மெனவே பகரப் பெறுமே " — என்பது

குவலயானந்த மேற்கோள் சூத்திரமாகலினும் என்க. நாம் என்பது தோன்று எழுவாய்; இறைஞ்சுவாம் என்பது பயனிலை.

காத்தற் றொழிலுக்குரிய கடவுள் திருமாலாகலின் முதலில் அவருக்கன்றோ காப்புக் கூற வேண்டும்? விநாயகரைக் காப்புக் கடவுளாகக் கூறிய தெற்றுக்கெனிற் கூறுதும். திருமால் காப்புக் குரிய கடவுளாயினும் அவர் செய்யும் காப்புத் தொழிலும் இடையூறின்றி முற்றுவிக்கும் கடவுள் விநாயகராகலின் அவரே காப்புக்குரிய கடவுளாமென்க. திருமாலின் காவியமாகிய மாபார தத்தைத் தமிழிற் செய்த பெருந்தேவனார் முதலியோரும் தாம் செய்த மாபாரதத்தின் முகப்பில் விநாயகருக்கே காப்புக் கூறி யிருத்தலும் காண்க.

"பாவார் பலகலைநூல் பாதம் பணிவோன்
தேவாதி தேவன் திருமதலை — ஓவாத
விக்கினங்கள் தீர்த்தருளும் வேழமுக மும்மதத்துக்
கைக்கொம்ப னிக்கதைக்குக் காப்பு."

"ஓத வினையகலும் ஓங்கு புகழ்பெருகும்
காதற் பொருளனைத்துங் கைகூட்டும் — சீதப்
பனிக்கோட்டு மால்வரைமேற் பாரதப்போர் தீட்டும்
தனிக்கோட்டு வாரணத்தின் ருள்"

"ஏடாக மாமேரு எழுத்தாணி தன்னுடைய
கோடாக மாமுனிசொற் குன்றுமல் — நீடும்
பழுதிலா வண்ணமிகப் பாரதத்தை யன்று
எழுதினு னெங்கட் கிறை" — பெருந்தேவனுர் பாரதம்.

*சென்னிமலைத் தலபுராணம் பாடுதவற்கு மலைவழி விநாயகன் திருவடித் தாமரைகளை வணங்குவோம் என்பது கருத்தாம்.*

# கடவுள் வணக்கம்.

## நடராசர்.

2. சொல்கொண்ட சதுர்வேதந் துதித்துவந் தனைகூறச்
சுரர்வந் தேத்த
வெல்வந்த தவமுனிவ ரிருபுடையும் விழிபொழிநீர்
மாரி பெய்ய
வல்வந்த முலையுமையாள் வரிநெடுங்க ணருள்கொழிப்ப
மன்று ளாடும்
வில்வந்தண் ணிதழிபுனை விமலனிரு பதகமலம்
விருப்பஞ் செய்வாம்.

**பொழிப்புரை:** புகழ் பொருந்திய நான்கு வேதங்களும் தோத்திரம் செய்து வணக்கம் கூறவும், தேவர்கள் விரும்பி வந்து தோத்திரஞ் செய்ய வும்; ஆசையை வென்ற தவத்தையுடைய பதஞ்சலி, வியாக்கிர பாதர் முதலிய முனிவர்கள் இரண்டு பக்கங்களிலும் நின்று தரிசித்துத் தம்முடைய கண்களில் வழிகின்ற ஆனந்த நீர் மழையைச் சொரியவும்; சூதாடு

கருவியை யொத்த முலைகளை உடைய உமாதேவியார் தமது செவ்வரி பரந்த நீண்ட கண்களிலிருந்து நீங்காத அருளை வழங்கவும், பொன்னம்பலத்துத் திருநடஞ் செய்கின்ற வில்வத்தையும், குளிர்ச்சியாகிய கொன்றை மலர் மாலையையும் தரித்துள்ள அம்பலவாணனுடைய இரண்டு திருவடிகளையும் விரும்புதலைச் செய்வோம் என்றவாறு.

விளக்கவுரை : *சதுர்வேதம் : இருக்கு, யசுர், சாமம், அதர்வணம். சொல்வந்த என்பதற்குச் சிறந்த சொற்கள் வளர்ந்துள்ள எனப் பொருள் உரைத்தலுமாம்.*

'' வேதந் துதிவந்து வந்தனை கூர் '' என்பது பிரதிபேதம்.

*வல்—சூதாடு கருவி, முலைக்கு உவமை.*

'' சித்திர வல்நிகருங் கொங்கை பங்கர் '' — மறைசையந்தாதி.

'' சூதனைய கொங்கைச் சுவையை யவாவினுள் ''
— ஆதிநாதர் வளமடல் 28.

'' ஈரடி மெல்லினம் வல்லினமாகு மிருதனமே ''
— அருணைக் கலம்பகம்.

*சிவபெருமான் உலகுயிர்களுக்கு அருளுதற் பொருட்டுக் கொண்ட இருபத்தைந்து உருவத் திருமேனிகளுள் ஒன்று திருவம்பலத்தில் நிருத்தம் பண்ணும் கூத்தப் பெருமான் திருவுருவம். இவர் செய்யும் திருக் கூத்துப் பஞ்சகிருத்தியத் திருநடனம் எனப் பெயர் பெறும். இத்திருக் கூத்தினாலே அகில உயிர்களும் இயங்குகின்றன.*

'' தேவர்கள் தானவர் சித்தவித் யாதரர்
மூவர்க ளாதிமுப் பத்துமூ வர்கள்
தாபதர் சத்தர் சமயஞ் சராசரம்
யாவையும் ஆடிடும் எம்மிறை யாடவே ''

'' தத்துவம் ஆடச் சதாசிவம் தானாடச்
சித்திகள் ஆடத் திசைகளும் ஆடிட
வைத்த சராசர மாட மறையாட
அத்தனும் ஆடினன் ஆனந்தக் கூத்தே ''
— திருமந்திரம் 2731, 2789.

இத் திருக் கூத்தினைத் தரிசிக்கும் ஆற்றல் உயிர்களுக் கின்மையினாலே அம்பிகை சிவபெருமானுடைய திருக் கூத்தினைத் தரிசித்து அதன் பயனை உயிர்களுக்கு நுகர வைப்பள் ஆதலினால் "வல்வந்த முலையுமையாள் வரிநெடுங்கண் அருள் கொழிப்ப மன்றுளாடும் விமலன்" என்றார்.

"இத்தொழி லைந்துநின் மெய்த்தொழி லாகப்
பாலுண் குழவி பசுங்குடர் பொறுதென
நோயுண் மருந்து தாயுண் டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக் கின்னருள் கிடைப்ப
வைய மீன்றளித்த தெய்வக் கற்பின்
அருள்சூற் கொண்ட வையரித் தடங்கட்
டிருமாண் சாயற் றிருந்திழை காணச்
சிற்சபை பொலியத் திருநடம் புரியும்
அற்புதக் கூத்த!" — சிதம்பர மும்மணிக்கோவை 2, 11, 20.

## திருமுகமலர்ந்த நாதர்.

3 மெய்யிலணி நீற்றினொளி விளங்குநிலாத் துண்டமதி
மிளிர்செவ் வேணி
மையனையை யைந்துருவா யாறு தத்துவங்க
ளாயி னானைத்
தையலொரு பாலரசு வீற்றிருப்ப வருள்புரியுந்
தலைவன் றன்னைச்
செய்யதிரு முகமலர்ந்த தேவையடி போற்றிவினை
தீர்து மன்றே.

*பொழிப்புரை:* உடம்பிலணிந்த அழகிய திருவெண்ணீற்றினொளி யும் சிவந்த சடையில் பிரகாசிக்கின்ற நிலாவென்னும் ஒளிபொருந்திய சந்திரகண்டமும் விளங்கப்பெற்ற பிரகாசிக்கின்ற சிவப்பாகிய சடையை யுடைய சர்வேசுரனும்; இருபத்தைந்து வடிவங்களாகியும், முப்பத்தாறு தத்துவங்களாகியும் விளங்குகின்றவனும்; உமாதேவியார் தனதொரு பாகத்தில் ஐந்தொழில் புரிதலாகிய அரசுபுரிந்து சிறப்பாக வமர்ந்திருக்கும் படி உயிர்களுக்கு அருள்புரிகின்ற தலைவனும் ஆகிய சிவந்த திருமுக மலர்ந்த நாதன் என்னும் பெயருடைய கடவுளின் திருவடிகளைத் துதித்து வினைகளினின்றும் விலகுவோம் என்றவாறு.

விளக்கவுரை : ஐயைந்துருவாயென்றது மகேசுவரருடைய இருபத்தைந்து உருவங்களையாம். அவற்றின் வரலாறு — சிவதத்துவமானது சுத்தவித்தை, ஈசுரம் (மகேசுரம்), சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் ஐந்து பிரிவுகளையுடையது. அவற்றுள் சிவம் அருவமானது. சதாசிவம் அருவுருவமானது. மகேசுரம் உருவமானது. சிவம், சத்தி என்னும் இரண்டும் சமமாயிருக்கும் நிலை சதாசிவம். சதாசிவமானது சிவசாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்த்திரு சாதாக்கியம், கன்ம சாதாக்கியம் என ஐந்து வகையாயுள்ளது. அவற்றுள் கன்ம சாதாக்கியத்தின் ஆயிரத்தொரு கூற்றிலே சகளரூபமாகியுள்ள மகேசுவரர் செகம் என்னும் இயந்திரத்தை இயக்கி உயிர்களுக்கு அருள் புரிதற் பொருட்டு இருபத்தைந்து (பஞ்ச விஞ்சதி) வடிவங்களையுடை யவராயிருப்பர். அவ்வடிவங்கள் 1. சந்திரசேகரர், 2. உமாமகேசுரர், 3. இடபவாகனர், 4. கலியாணசுந்தரர், 5. சுந்தரக்கூத்தர், 6. பலிகொள்மூர்த்தி, 7. மதனதகனர், 8. காலாரி, 9. திரிபுராரி, 10. சலந்தராரி (சலந்தரனை யழித்தவர்), 11. மாதங்காரி (யானையுரித்தோர்), 12. வீரபத்திரர், 13. அரியர மூர்த்தர், 14. அர்த்தநாரீசுவரர், 15. கிராதர், 16. கங்காளர், (வாமனனுடைய முதுகெலும்பைக் கொண்டவர்) 17. சண்டேசானுக்கிரகர், 18. நீலகண்டர், 19. சக்கரப்பிரதானர், 20. விக்கினேசுவரானுக்கிரகர், 21. உமாகந்தபாகர், 22. ஏகபாதர், 23. ஆடகேசுவரர் (பதுமாசனத்திலிருப்பவர்), 24. தட்சிணாமூர்த்தி, 25. இலிங்கோற்பவர் என்பனவாம். இவ்வடிவங்கள் இருபத்தைந்தையும் ' ஒன்றாகியைந்தாயை யைந்துருவாய் வருவாய் போற்றி '- எனத் திருவிளையாடற் புராணமும்; '' ஒன்றா யிருதிறமாய் ஓரைந்தாய் ஐயைந்தாய்............நின்றாய் சிவனே. '' – எனக் கந்தபுராணமும் குறித்தல் காண்க.

தத்துவாதீதனாகிய சிவன் தத்துவங்களில் தோய்ந்தும், தோயாமலும் விளங்குவன். தோய்தலுண்மை நோக்கி, '' ஆறாறு தத்துவங்க ளாயினானை '' — என்றார். இறைவன் தத்துவ வடிவினன் என்பதை,

'' மண்ணிலங்கு நீரனல்கால் வானுமாகி
மற்றவற்றின் குணமெல்லா மாய்நின்றாரும் ''
'' தன்னவனா யுலகெல்லாந் தானே யாகித்
தத்துவனாய்ச் சார்ந்தார்க் கின்னமுதானானை ''
'' தத்துவனை யுத்தமனைத் தழல்போல் மேனி யன்றானை''
எனவரும் அப்பர் தேவார அடிகளா னுணர்க

"செப்பின தத்துவங்கள் சிவமுத லவனி யந்தம்
முப்பதோ டாறு நாம மொழிந்தவவ் வடைவினாலே"
— மெய்மொழிச் சரிதை - தத்துவசிருட்டி – 5.

என்றபடி தத்துவங்கள் முப்பத்தாறென்பது சைவநூற் கொள்கையாதலின் "ஆறுறு தத்துவங்கள்" — என்றார்.

அத்தத்துவங்கள் சிவதத்துவமைந்தும், வித்தியா தத்துவ மேழும், ஆன்மதத்துவம் இருபத்துநான்குமாக முப்பத்தாறும்.

சிவதத்துவம்—சுத்த வித்தை, ஈசுரம் (மகேசுரம்) சதாசிவம், சத்தி, சிவம் என ஐந்துமாம். இவை சுத்த தத்துவங்களென்றும் சொல்லப்பெறும்.

வித்தியா தத்தும்—காலம், நியதி, கலை, வித்தை, ராகம், புருடன், மாயை என்னும் ஏழுமாம். இவை மிசிர தத்துவமென்று சொல்லப்பெறும்.

ஆன்ம தத்துவங்கள் :—

1. பூதங்கள் 5; பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்.

2. ஞானேந்திரியங்கள் 5; சுரோத்திரம் (செவி), துவக்கு (மெய்), சட்சு (கண்), சிங்நுவை (நா), ஆக்கிராணம் (மூக்கு).

3. தன்மாத்திரைகள் 5; சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்.

4. கன்மேந்திரியங்கள் 5; வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம்.

5. அந்தக்கரணங்கள் 4; மனம், புத்தி, அகங்காரம், சித்தம்.

இவ்விருபத்து நான்கும் அசுத்த தத்துவங்கள் என்று சொல்லப்பெறும்.

சிவபிரான் அருள்வடிவாகிய அம்பிகையைக் கூடி நின்றே உயிர்க்கருள் புரிஞதலின் "தையலொரு பாலரசு வீற்றிருப்ப வருள்புரியுந் தலைவன் றன்னை"—என்றார்.

"அண்டப் பெருந்திரள் அடைவின் றளித்த
கன்னி கொண்டிருந்த காவற் கடவுள்"

எனக் கல்லாடத்திலும்,

"நீல மேனி வாலிழை பாகத் தொருவன்"
என் ஐங்குறு நூற்றிலும்,

"மணியியல் வெண்ணகை வல்லி பாகனே"
என அணியியல் விளக்கத்திலும் இறைவனை இறைவியோடு சார்த்திக் கூறப்பட்டிருத்தலும் காண்க.

திருமுக மலர்ந்த நாதர் என்பது சென்னிமலையை யடுத்து விளங்கிய திருவிருந்த புரத்துச் சிவபெருமான் திருநாமம்.

"திருமுக மலர்ந்த நாதர், அருள்புரி குழந்தை வேலர்
சிரகிரி யமர்ந்து வாழும் பெருமாளே"
என்பது சென்னிமலைத் திருப்புகழ்.

## திருந்தார் குழலி.

4. முருந்தார்வெண் ணகையாளை முதிராமென் முலையாளை முழுநீர் நீலந்
தருந்தாரை விழியிலருள் பொழிவாளைத் தனிநுதற்கட் டலைவர் பால்விற்
றிருந்தாளை யுலகமெலா மீன்றாளை யீன்றபடி யறனென் ணான்கும்
வருந்தாது புரிதிருந்தார் குழலுமையை மலர்தூவி வணக்கஞ் செய்வாம்.

பொழிப்புரை: மயிலிறகினடி போன்ற வெண்மையான பற்களை யுடையவளும்; முற்றாத இளமை பொருந்திய மிருதுவான முலைகளையுடையவளும்; நிறைவாகிய நீரில் மலர்ந்த நீலோற்பல மலர் போன்ற கூர்மையான கண்களிலிருந்து அருளைச் சொரிகின்றவளும்; ஒப்பில்லாத நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானது பக்கத்தில் சிறப்புடன் அமர்ந்திருப்பவளும்; உலகுயிர்கள் எல்லாவற்றையும் ஈன்றருளியவளும்; ஈன்றதற்கேற்ப உலகுயிர்கள் நல்வாழ்வுறும் பொருட்டுத் தருமங்கள் முப்பத்திரண்டையும் செய்தருளிய திருந்தார்குழலி யென்னும் திருநாமமுடையவளும் ஆகிய அம்பிகையை நல்ல மலர்களைத் தூவி (அருச்சித்து) வணங்குதல் செய்வோம் என்றவாறு.

விளக்கவுரை: முருந்து — மயிலிறகினடி; பற்களுக்கு உவமை.

"முருந்துறழ் மூரலார்தம் மிகுதியை மொழியலாமோ?"
— நைடதம் நாட்டுப்படலம்.

*திருந்தார் குழலியென்பது திருமுகமலர்ந்த நாதர்பால் வீற்றிருக்கும் அம்பிகையின் திருநாமம். அழகாகிய பூமாலையை அணிந்த கூந்தலையுடையவள் என்பது பொருள். திருத்தார்குழலி என்பது திருந்தார்குழலியென வழங்குகின்றது.*

*அம்பிகை இறைவர்பால் இருநாழி நெல் பெற்று முப்பத்தி ரண்டு அறங்களையும் செய்தார் என்ற புராண வரலாற்றை யுட்கொண்டு; "அறனெண் ணான்கும் வருந்தாது புரிதிருந் தார் குழலுமையை" — என்றார்.*

## கயிலாச நாதர்.

5. குயிலாய முழவுவிம்மக் கோங்கலர்வா னரந்தாளங் கொட்டப் பைந்தேன்
அயிலாய மிஞிறுபா ணிசைமிழற்றப் பொதும்பர்தலை யசைப்பத் தோகை
மயிலாய நடம்புரியுஞ் சிரகிரிச்சா ரலின்வைகு மணிப்பொற் கோயிற்
கயிலாய நாதனிரு கனைகழற்பொற் சேவடிகள் கருத்துள் வைப்பாம்.

பொழிப்புரை: குயில்களின் கூட்டம் முழவு வாத்தியவொலி யொலிக்கவும்; குரங்குகள் கோங்க மலர்களைப் பறித்துத் தாளங்கொட்ட வும்; செழுமையாகிய தேனையுண்கின்ற தேனீக்கள் இசைப் பாட்டொலி யொலிக்கவும்; சோலைகள் மகிழ்ச்சியால் தலையசைக்கவும்; தோகையை யுடைய மயிலின் கூட்டமானது நடனமாடுகின்ற சென்னிமலைச் சாரலில் இருக்கின்ற இரத்தினங்கள் பதித்துப் பொன்னாற் செய்த கோயிலின் கண் விளங்கும் கயிலாச நாதனுடைய ஒலிபொருந்திய வீரக்கழலணிந்த அழகிய சிவந்த பாதங்களை நினைவில் வைப்போம் என்றவாறு.

விளக்கவுரை: *கயிலாயநாதர்—சென்னிமலைச் சார்பில் கோவில் கொண்டருளிய சிவபிரான் திருநாமம். ஆயம்–கூட்டம். இப்பாடலில் முன்வந்த ஆயமென்னுஞ் சொல் பின்னும் வருதலால் சொற் பின்வருநிலை யணியாம்.*

குயிலோசையை முழவமாகவும், கோங்க மலர்களைத் தாள மாகவும், தேனிக்களைப் பாடகர்களாகவும் உவமானங்களால் உவமேயங்களை யிலக்கணையாகக் கூறுதலின் இப்பாடல் உருவக வுயர்வு நவிற்சி யணியாம். முழவொலி குயிலோசைக்கு உவமை " தண்குயில் முழவமேங்க " பரஞ்சோதி திருவிளையாடற் புராணம். தருமிக்குப் பொற்கிழி யளித்த படலம் பாடல் 20.

## பெரிய நாயகி.

6. வானநா யகிதவள வனசநா யகிபதும
மலர்ப்பொற் கோயிற்
றூனநா யகிபோற்றுஞ் சரணநா யகிகயிலைத்
தலைவர் பாகத்
தானநா யகியறிவுக் கறிவாகி யப்பாலுக்
கப்பால் நின்ற
ஞானநா யகிபெரிய நாயகிசீ ரடியிதய
நளினஞ் சேர்ப்பாம்.

பொழிப்புரை: வான நாட்டிற்குத் தலைவியாகிய இந்திராணியும், வெண்மையாகிய தாமரை மலரிலிருக்கும் தலைவியாகிய சரசுவதியும், செந்தாமரை மலராகிய அழகிய கோயிலை இடமாகக் கொண்டிருக்கும் இலக்குமியும் துதிக்கின்ற சிறந்த பாதங்களையுடைய உலகநாயகியும், கயிலைமலைத் தலைவராகிய சிவபெருமானது வாமபாகத்தை யிடமாகக் கொண்டு விளங்கும்நாயகியும், அறிவுக்கு அறிவு தருபவளாயும், சுட்டப் பெறும் அவ்வவ் விடங்களுக்கு அப்பாற் பட்டவளாயும் நின்ற ஞானநாயகி யாகிய பெரியநாயகியின் சிறப்புப் பொருந்திய பாதங்களை நம்முடைய மனமாகிய தாமரை மலரில் சேர்ப்போம் என்றவாறு.

விளக்கவுரை: இங்கு நாயகியென்னும் சொல் பின்னும் வந்தது சொற் பின்வருநிலை யணியாம். இதய நளினம் உருவகம். எல்லா நாயகிகளுக்கும் நாயகியாய் விளங்குபவள் கயிலைநாதரது நாயகியாகிய பெரியநாயகியாம் என்பது கருத்து.

## மார்க்கண்டேசுரர்.

7. சேற்கண்டே மலரோதிச் சிறுமதிவா ணுதலிலவி
னிதழ்வாய்ச் செந்தேன்

பாற்கண்டே யனையபனி மொழியிமய வல்லியொரு
பாக மாக
மேற்கண்டே சுரர்போற்ற விளங்கிவளர் சிகரகிரி
மீதின் மேவு
மாற்கண்டே சுரர்வாச மலரடிமா மலர்தூவி
வணங்கல் செய்வாம்.

பொழிப்புரை: கெண்டைமீன் போன்ற கண்களையும்; தேன் பொருந்திய மலர்களை யணிந்த கூந்தலையும்; சிறிய பிறைச் சந்திரன் போன்ற ஒளிபொருந்திய நெற்றியையும்; இலவம் பூவினிதழ் போன்ற சிவப்பாகிய உதட்டினையும்; செந்தேனையும், பாலையும், கற்கண்டையும் போன்ற சுவையமைந்த குளிர்ச்சியான சொற்களையுமுடைய இமயவல்லி யானவள் தனது ஒருபக்கமாக விளங்கவும்; மேலாகிய வானத்திலிருந்து தரிசித்துத் தேவர்கள் எல்லோரும் துதிக்கவும்; உயர்ந்து விளங்கி வளர் கின்ற மாற்கண்டேசுவரருடைய மணம் பொருந்திய மலர்போன்ற அழகிய திருவடிகளை அழகாகிய சிறந்த மலர்களைத் தூவி யருச்சித்து வணங்குதலைச் செய்வோம் என்றவாறு.

விளக்கவுரை: *சேற்கண்டே மலர் என்பதனை சேல்+கண்+தேம்+மலர் எனப்பிரித்தும்; பாற்கண்டே என்பதனை பால்+கண்டு என்று பிரித்தும் பொருள் காண்க. சுவையமைந்த என்பது இசையெச்சம். மார்க்கண்டேசுரர் என்பது எதுகை நோக்கி மாற்கண்டேசுரர் என வந்தது.*

*மிருகண்டுவின் புதல்வர் மார்க்கண்டேய முனிவர் அவரது கோத்திரத்தில் பிறந்த சிவப்பிராமணர்களால் மலைமேல் பிரதிட்டை செய்து வழிபடப்பெறுகின்ற சிவலிங்கப் பெருமானுக்கு மார்க்கண்டேசுவரர் என்றும் அவரது பாகத்தில் விளங்கும் அம்பிகைக்கு இமயவல்லி யென்றும் பெயர்.*

## திருச்சந்தி விநாயகர்.

8. உருச்சந்தி யாக்கைநரம் பிறைச்சிமச்சை மூளைமல
முதுநீர் தோயக்
கருச்சந்தி யாதுதொண்டர்க் கருள்புரிவோ னருளியசேய்
கழுநீர் வாவி

தருச்சந்தி யாவும்வளங் கெழுசெழுநீர்ச் சிரகிரியில்
துயங்கி வாழும்
திருச்சந்தி விநாயகன்சே வடிபோற்றி யிடையூறு
தீர்து மன்றே.

பொழிப்புரை : உருவும், பொருத்தும், கட்டும், நரம்பும், தசையும், உமிழ்நீரும், மூளையும், மலமும், சுக்கிலமும், கலக்கும்படி உண்டாகின்ற கருப்பத்தைக்கூடாமலிருக்கும்படி அடியார்களுக்கு அருள்செய்கின்ற சிவபெருமான் தந்தருளிய புதல்வனுயுள்ள செங்கழுநீர் மலர்கள் நிறைந்த வாவி, உயர்ந்த மரங்கள், சந்தியிடங்கள் முதலிய யாவும் அழகு பொருந்த விளங்குகிற செழுமையாகிய தன்மையுடைய சென்னிமலையின்மேல் விளங்கி வாழ்கின்ற திருச்சந்தி விநாயகனுடைய செம்மையாகிய திருவடிகளைத் துதித்துத் துன்பங்களினின்றும் நீங்குவோம் என்றவாறு.

விளக்கவுரை : உரு நிறமுமாம். மச்சை—இரதம்; முதுநீர் என்பது எழுவகைத் தாதுக்களினென்ருகியஉமிழ்நீர். செழுநீர், செழுமையாகிய நீர் எனினுமாம். இப்பாடல் திரிபு என்னும் சொல்லணி பெற்று வந்தது.

"ஈரெழுத்து முதலா வீரா றெழுத்தும்
ஓரடி போல நான்கடி தன்னிலும்
முதலெ ழுத்துவேரு மொழிவது திருக்கே"

—என்பது கவிசாகரத்தில் வரும் திரிபினிலக்கணமாம்.

திருச்சந்திவிநாயகர் மலைமீதுள்ள தலவிநாயகர்.

"சந்ததம் பெருகுந் திருச்சந்தி யைங்கரன்
ருளிணை வணக்க முறுவாம்" — சென்னிமலைப் பிள்ளைத் தமிழ்.

சென்னிமலையை யடுத்துள்ள கமலைநகர் விநாயகரைத் திருச்சந்தி விநாயகர் எனக் கூறுதலுமுண்டு.

"பூவுலகிற் சொல்லும் பொருள்தழைக்கப் பொன்கமலை
மேவுதிருச் சந்தி விநாயகன்பா தந்துணையே."
— சென்னிமலைக் காதல்.

சந்திவிநாயகர் — காலை, மாலை, உச்சி என்னும் மூன்று சந்திகளிலும் வணங்குதற்குரிய விநாயகர். முச்சந்தி, நாற்சந்தி, ஐஞ்சந்திகளில் விளங்குகின்ற விநாயகர் எனினுமாம். திருக்காளத்தி மலையிலுள்ள தலவிநாயருக்கு அஞ்சந்தி விநாயகர் என்று பெயர். திருநெல்வேலியிலுள்ள விநாயகருக்குச் சந்தி விநாயகர் என்பது பெயர்.

## சிரகிரிக் குமரன்.

9. திருமுடிக ளிருமூன்றும் மூவிரண்டு திருமுகமுந்
திகழ்நான் மூன்று
திருவிழியும் முந்நான்கு திருமகர குண்டலமுந்
திருநான் மூன்று
திருமணிவா குவுந்திருக்கை முந்நான்குஞ் சிரகிரிச்சேய்
திருநூன் மார்புந்
திருவடியு நூபுரமுந் திருக்கறவே துதித்துமனத்
திருத்தி வாழ்வாம்.

பொழிப்புரை: சென்னிமலை மேல் வீற்றிருந்தருளும் குமாரக் கடவுளுடைய அழகாகிய சிரங்கள் ஆறினையும், ஆறுதிருமுகங்களையும், விளங்குகின்ற பன்னிரு திருக் கண்களையும்; அழகிய பன்னிரண்டு மகரக் குழைகளையும், அழகிய இரத்தினாபரணங்கள் விளங்குகின்ற பன்னிரண்டு திருத் தோள்களையும்; திருக்கரங்கள் பன்னிரண்டனையும்; முப்புரிநூல் விளங்கும் திருமார்பினையும்; இரண்டு திருவடிகளையும்; திருவடிச் சிலம்புகளையும் நம்மனத்தில் தியானித்துத் தோத்திரம் செய்து வாழ்வோம் என்றவாறு.

விளக்கவுரை: *முடி — சிரம், கிரீடம். மகரகுண்டலம் — காதணி. சிரகிரிக் குமாரர் ஆறுமுக வுருவினின்றும் கொண்ட ஒரு திருமுக வடிவினராதலின் ஆசிரியர் ஆறுதிருமுக வடிவைத் தோத்திரம் செய்தார். இந்நூல் காட்சி மான்மியம் 11-ஆம் செய்யுள்காண்க.*

## தெய்வயானை வள்ளியம்மையார்.

10. நறைக்கோலப் பரங்கிரியிற் சிரகிரிச்செவ்
வேள்புணர்ந்த நாம வேற்கட்
குறைக்கோல வெண்மதிவா ணுதற்றெய்வ
குஞ்சரிதாள் குறித்து வாழ்த்தி
மறைக்கோலக் கிழவுருவாய்ப் பணிந்துகந்தன்
விநோதமண மகிழ்ந்து மேவு
கறைக்கோல வயினெடுங்கட் குறக்கோல
மடந்தைபதங் கருதி வாழ்வாம்.

*பொழிப்புரை:* தேனும் அழகும் திகழ்கின்ற திருப்பரங்குன்றத்தில் சிரகிரிவாழ் முருகக் கடவுள், கற்பு நெறியில் மணஞ்செய்து கூடிய அச்சந் தரும் வேல் போன்ற கூர்மையான கண்களையும் கலைகுறைந்த அழகிய வெண்மையாகிய பிறைச் சந்திரனைப் போன்ற ஒளி பொருந்திய நெற்றியை யுமுடைய தெய்வயானையம்மையாருடைய பாதங்களை நினைந்து துதித்து; முருகப் பெருமான் நான்மறைக்குரிய அந்தணர் வேடத்தில் கிழவுருவ மாய்ச் சென்று மகிழ்ச்சி தரும் களவு மணத்தை விரும்பிக் கூடிய விடம் பொருந்திய அழகிய வேல் போன்ற நீண்ட கண்களையுடைய குறப் பெண் வடிவமாக விளங்கிய வள்ளிநாச்சியாருடைய இரண்டு சீர் பாதங்களையும் மனதில் நினைந்து வாழ்வாம் என்றவாறு.

*விளக்கவுரை:* *முருகக் கடவுளின் இடது பாகத்தில் தெய்வ யானையாரும், வலது பாகத்தில் வள்ளியம்மையாரும் முறையே செங்கழுநீர் மலரும், தாமரை மொக்கும் கரங்களில் திகழ விளங்குவர்.*

''நறைகதித்த மலர்க்கழுநீர் நளினமவன் விழியருகு
நலக்க வேந்தி
நிறைகதித்த உளத்தொடிடம் வலமமர்ந்த மாதர்பதம்
நினைத்தல் செய்வாம்''
— தணிகைப் புராணம், கடவுள் வாழ்த்து.

''கந்தரிடத் தமரும்தெய்வ யானையைத் தொழுது''

''காதலுடன் புரிந்திறைவன் வலப்பாகத் தமரும்
கன்னியெனும் வள்ளிபத முன்னிவழுத் திடுவோம்''
— தணிகாசலப் புராணம், கடவுள் வாழ்த்து.

''ஏமநிறத் தொருமடவாள் இடத்தில் நீல
மகளொருத்தி வலப்புறத்தில் நிற்கக் காணில்
வரந்தரு சுப்பிர மணியமாம்.'' — கௌமாரமுறைமை 2, 71.

*தெய்வயானை பொன்னிறமும் வள்ளி நீல நிறமு முடையவர்.*

## நந்தியடிகள், வீரர்கணம், நால்வர் தண்டியடிகள் முதலியோர்.

**11.** ***காவனந்தி யடிபோற்றி யிலக்கத் தொன்பான்***
***கணங்களா கியவீரர் கழல்கள் போற்றி!***
***மேவுகவு ணியர்கள்பிரா னடிகள் போற்றி!***
***வேலிமிழ்கண் மேன்மிதந்தோன் விரைத்தாள் போற்றி!***

*நாவலவ னடிபோற்றி வாத வூர*
*னளினமலர்ப் பதம்போற்றி! நம்பர் செம்பொன்*
*சேவடிதாழ்ந் துயர்தண்டி முதலா மேன்மைத்*
*திருத்தொண்டத் தொகையினர்தாள் போற்றி! போற்றி!*

*பொழிப்புரை:* கயிலை மலையிற் காவல் பூண்டொழுகும் நந்தியடிக ளுடைய திருவடிகளுக்கு வணக்கம். முருகக் கடவுளைச் சூழ்ந்து வாழும் கணங்களாகிய இலக்கத் தொன்பது வீரர்களுடைய திருவடிகளுக்கு வணக்கம். கவுணிய குலத்தினருக்குத் தலைவனாய் விளங்கிய திருஞான சம்பந்தனுடைய திருவடிகளுக்கு வணக்கம். கடலில் கட்டிப் போட்ட கல்லின் மேல் மிதந்த திருநாவுக்கரசருடைய மணம் பொருந்திய திருவடி களுக்கு வணக்கம். நாவலூரில் தோன்றிய திருநாவலனாகிய சுந்தரனு டைய திருவடிகளுக்கு வணக்கம். வாதவூரில் பிறந்த மாணிக்கவாசக னுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளுக்கு வணக்கம். சிவபெருமா னுடைய சிவந்த பொன்மயமாகிய அழகு பொருந்திய திருவடிகளை வணங்கி உயர்வு பெற்ற சண்டேசுரர் முதலாகிய மேன்மை பொருந்திய திருத் தொண்டத் தொகையில் கூறப்பெற்ற அடியார்களுடைய திருவடிகளுக்கு வணக்கம். வணக்கம். என்றவாறு.

*விளக்கவுரை: இப் பாடலில் தண்டியெனக் கூறியது சண்டேசுவர நாயனாரை. சண்டேசுவர நாயனாரே திருத் தொண்டர்களுக்குத் தலைமையாய் விளங்கும் தன்மைபெற்றவர்.*

> ''தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு மண்டத் தொடுமுடனே
> பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும் போனகமும் மருளிச்
> சோதி மணிமுடித் தாமமு நாமமுந் தொண்டர்க்கு நாயகமும்
> பாத கத்துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே''
>
> — திருப்பல்லாண்டு.

*தண்டி யென்னும் பெயருடைய சண்டேசுவர நாயனார் வரலாறு பெரிய புராணத்துள் 21-வது புராணமாகக் கூறப்பெற் றுள்ளது.*

*சண்டேசுர நாயனாருக்கு வழங்கும் வேறு பெயர்களில் தண்டியடிகள் என்பதும் ஒன்று. இதனை,*

> ''உண்டிதா னஞ்சமானுர் சேடமுண் டுயர்வுபூண்ட
> தண்டிதாள் போற்றிசெய்து'' — எனக் கருவூர்ப் புராணத்திலும்;

"புண்ணியம் பாதக மாகப் போற்றிய
அண்ணலந் தண்டித னடிகள் போற்றுவோம்" — எனத்
தணிகைப் புராணத்திலும் கூறியிருத்தல் காண்க.

தண்டியடிகள் என்னும் பெயருடைய நாயனுர் வேறொருவர். அவர் "நாட்டமிகு தண்டிக்கு மூர்க்கர்க்கு மடியேன்"- எனத் திருத்தொண்டத் தொகையில் பாடப் பெற்றவர். இவர் வரலாறு பெரிய புராணத்தில் 32-வது புராணமாகக் கூறப் பெற்றுள்ளது.

இங்குக் கூறிய திருத்தொண்டத் தொகையினரென்போர் திருத்தொண்டத் தொகையிற் பாடப்பெற்ற தில்லை வாழந்தணர் முதலிய திருக்கூட்டத்தினராகிய தொகையடியார்கள் ஒன்பதின் மரும் திருநீலகண்டர் முதலிய தனியடியார்கள் அறுபத்து மூவரு மாவர். போற்றி யென்பது ஈண்டு வணக்க மென்னும் பொருளில் வந்தது. ஒருவகை வியங்கோள் வினைமுற்று.

"ஈசனடி போற்றி யெந்தையடி போற்றி" — என்பது திருவாசகம்.

## வேல், மயில், சேவல், வேதியர், அருளாளர், அகம்படிமையோர்.

12. சென்னிமலைச் சேவகன்பொற் றிருக்கை வேலுஞ்
சிகண்டியுங்குக் குடக்கொடியின் திறலும் போற்றி!
சென்னிமலைச் சேய்பதம்வந் தனைக ளாற்றுஞ்
சிவவிரதச் சைவவே தியர்தாள் போற்றி!
சென்னிமலைச் செவ்வேள்சீ ரருள்பெற் றோங்குந்
தெளிதருசிந் தையினர்திரு வடிகள் போற்றி!
சென்னிமலைச் சினகரன்குற் றேவ லாற்றுந்
திகழுமகம் படிமையர்தாள் போற்றி! போற்றி!

**பொழிப்புரை:** சென்னிமலையில் விளங்கும் வீரமுடைய முருகக் கடவுளினுடைய அழகிய திருக்கரத்தில் விளங்கும் வேலாயுதத்திற்கும், மயில்வாகனத்திற்கும், கோழிக் கொடியின் வெற்றிக்கும் வணக்கம் சென்னிமலை முருகன் திருவடிகளுக்கு வழிபாடு (ஆராதனை) செய்யும் சிவனை வழிபடும் விரதமுடைய சைவப் பிராமணர்களுடைய பாதங்களுக்கு வணக்கம் சென்னிமலையில் சிறப்புடன் அமர்ந்திருக்கும் செவ்வேளாகிய கடவுளின் சிறப்பாகிய அருள் பெற்றுயர்ந்த தெளிந்த மனமுடைய

அருளாளர்களின் திருவடிகளுக்கு வணக்கம். சென்னிமலைத் திருக்கோவிலுடையானுக்குப் பணிவிடை செய்து விளங்குகின்ற திருக்கோவிலின் உள் வேலைக்காரர்களனைவருடைய சீர் பாதங்களுக்கும் வணக்கம். வணக்கம். என்றவாறு.

**விளக்கவுரை :** *கொடியுந் திறலும் போற்றி என்பது பிரதி பேதம். அருளாளரென்போர் முருகக் கடவுளினருளால் தெளிந்த மனமுடையவராய் முக்கால நிகழ்ச்சிகளையும் பிறழாது கூறுவோர். இவர் அருளாடிகள் எனவும் வழங்கப் பெறுவர் அருளாடிகளிற் சிலர் சென்னிமலையிற் பல சிறந்த கோவிற்திருப் பணிகள் செய்துள்ளனர். சென்னிமலையின் மேல் அருளாடி மண்டப மொன்றுள்ளது.*

*அகம்படிமையர் என்போர் கோவிலினுள் முருகக் கடவுளுக்குத் தொண்டு செய்து விளங்குவோர். அவர்கள் திருக் கோவிலினுள்ளே கடவுளின் திருமேனியைச் சார்ந்து பக்கத்தே நின்று அபிடேகம், அலங்காரம் முதலிய திருத்தொண்டினைச் செய்வோர்.*

> " பொங்கிய திருவினீடும் பொற்புடைப் பணிகளேந்தி
> மங்கலத் தொழில்கள்செய்து மறைகளாற் றுதித்து மற்றுந்
> தங்களுக் கேற்றபண்பிற் றகும்பணி தலைநின்றுய்த்தே
> யங்கணர் கோயிலுள்ளா வகம்படித் தொண்டுசெய்வார் "
>
> — பெரிய புராணம் — தில்லைவாழந்தணர் புராணம்.

*திருக்கோவிலினுள்ளிடத்தும் வெளியிடத்துமிருந்து செய்யப் பெறும் மலர்பறித்தல், மாலை தொடுத்தல், சந்தனமுறைத்தல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கிடுதல், இசைபாடுதல், நிருத்த மாடுதல் முதலியன புறத்தொண்டெனப்பெறும்.*

*திருக்கோவிலினகத்தும் புறத்தும் திருத்தொண்டு செய்யும் திருக்கோவில் பணிவிடைக்காரரனைவரையும் சேர்த்து வணக்கம் கூறுதலுமுண்டு.*

> " காவார்ந்த திரிகூடத் தாணுவுக்கும் வேணுமொழிக்
> கவுரி யார்க்கும்
> தேவாரப் பணிபுரிவா ருழவாரப் பணிபுரிவார்
> சேவை செய்வார்
> பூவாசத் தொடைதொடுப்பார் புகழ்வாசத் தொடைதொடுப்பார்
> பூசை செய்வார்
> ஆவார்கண் முதலாய வடியார்கட் கடியார்கட்
> கடிமை செய்வாம். "
>
> — திருக்குற்றாலத் தலபுராணம்.

## சத்திய ஞானி.

வேறு.

13. போழிளவெண் பிறைச்சடையும் நுதல்கிழிந்த
    கனல்விழியும் புணரி யீன்ற
காழ்மிடறு முமையிடனுங் கரந்துதே
    சிகவடிவாய்க் கவினத் தோன்றி
ஏழ்பவவே லையைமலர்த்தாட் புணையினுற்
    கடந்தேற்றி யெனையாட் கொண்டு
வாழ்வுதருஞ் சத்தியஞா னியையிதய
    மலர்த்தவிசில் வழுத்தல் செய்வாம்.

**பொழிப்புரை:** பிளவாகிய இளமை பொருந்திய வெண்பிறைச் சந்திரனையணிந்த சடையையும், நெற்றியைக் கிழித்து விளங்கும்படியான நெருப்புக் கண்ணையும்; பாற்கடல்பெற்ற கருமையாகிய விடம்பொருந்திய கண்டத்தையும்; உமாதேவியாரமர்ந்த இடப்பாகத்தையும் மறைத்து ஞானுசிரிய வடிவமாய் அழகுறத்தோன்றி என்னை யடிமைகொண்டு தன்னுடைய மலர்போன்ற திருவடிகளாகிய தெப்பத்திஞல் பிறவிக்கடல்கள் ஏழையும் கடந்து கரையேறச்செய்து முத்திவாழ்வினைத் தந்தருளிய சத்திய ஞானியை இருதய கமலமாகிய ஆசனத்தில் வைத்துத் துதித்தல் செய்வோம் என்றவாறு.

**விளக்கவுரை :** *காழ்—கருமை. ஆகுபெயராய் விடத்தினை யுணர்த்திற்று. " கரையேற்றி "—பிரதி பேதம். சிவபெருமான் தன்னுருவை மறைத்துச் சத்திய ஞானியென்னும் பெயருடைய ஞானுசிரியனுக வந்து உபதேசம் செய்து முத்திவாழ்வருளினுர் என்பது இப்பாடலின் கருத்தாம். இப்பாடல் நூலாசிரியரின் குருவணக்கம்.*

*பிறவியைக் கடலென்றதற்கேற்ப அதனைக் கடத்தும் ஞானுசிரியருடைய திருவடிகளைத் தெப்பமாக உருவகஞ்செய்தார். இதயகமலம், மலர்த்தவிசு என்பன உருவகங்கள்.*

*ஏழு பிறவிகள்—தேவர், மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பவைகளாம். சத்திய ஞானியின் வேருனவர் சத்தியஞானி தரிசினிகள் என்பார்.*

அவர் சைவ சித்தாந்த சந்தானுசிரியர்களில் ஒருவர். சத்திய ஞானியார் சித்திகள் கைகூடப் பெற்றவராய்ப் பொய் நாக்கு புண்ணுக்கு என்று அடிக்கடி கூறிக்கொண்டிருந்தமையின் புண்ணுக்குச் சித்தர் எனப் பெயர் பெற்றனர் என்பர். சென்னி மலையின் மேல் இவர் சிவ சமாதி யெய்திய குகை புண்ணுக்குச் சித்தர் குகையென விளங்குகிறது.

நூலாசிரியர் காலத்தில் சிறந்த ஞானசிரியராய் விளங்கிய சத்திய ஞானியென்பார் கருவூர்த் தலபுராண நூலாசிரியராலும் போற்றப்படுகின்ருர்.

''கதமல மடுவிற் ரேயா தனுதினங் கருதுந் தூயர்
சிதமல ரிதய வாவி முகிழ்ப்பினுஞ் சிவபு ரக்கோ
சதமலர் வதன வாசான் சத்திய ஞானி ஞானம்
பதமலர் தமியே னுள்ளத் தடங்கெழு பான்மைத் தாமால்''
— கருவூர்ப் புராணம், பாயிரம்.

''பாசமுதன் மூன்றுணர்த்திப் பிறப்பொழித்த பரஞான
தேசிகனுஞ் சத்தியஞா னியைப்பணிந்து சிந்தைசெய்வாம்''
— திருக்காளத்திப் புராணம், கடவுள் வாழ்த்து 20.

## புராண வரலாறு — அவையடக்கம்.

14. போதமுடன் சூதமுனி வர்க்குரைத்த
மூவாறு புரான முற்றும்
மாதவரிக் கலியுகத்திற் சிதையாது
செப்பேட்டில் வரைந்து காஞ்சிச்
சேதிமத்தில் அமைத்தவற்றுட் சிரகிரிமான்
மியந்தனைச்செஞ் செவியான் மாந்தி
ஆதரவி னத்தலத்தின் மூதறிவோர்
தமியேனுக் கருளி னுரால்.

பொழிப்புரை : வியாச முனிவர் மிகுந்த விவேகத்துடன் சூதமுனி வருக்குச் சொல்லிய பதினெண் புராணங்கள் முழுவதையும் முனிவர்கள் இந்தக் கலியுகத்தில் அழிந்துபோகாமலிருக்கும்படி செப்பேடுகளில் எழுதிக் காஞ்சிபுரத்திலுள்ள கோவிலறை யொன்றனுள் வைத்தவற்றுள் சிரகிரி மான்மியமிருப்பதனைச் செவிவழிச் செய்தியாலறிந்து; பின்னர் அதனை யெடுத்து அன்பினுல் அக் காஞ்சித் தலத்தில் வாழ்கின்ற பழமையாகிய அறிவினையுடைய பெரியோர்கள் எனக்குச் சொன்னுர்கள் என்றவாறு.

**விளக்கவுரை :** *பதினெண் புராணங்களாவன :-*

"மச்சங் கூர்மம் வராகம் வாமனம்
பதுமம் வைணவம் பாகவதம் பிரமம்
சைவ மிலிங்கம் பௌடிய நாரதீயம்
காருடம் பிரமகை வர்த்தங் காந்தம்
மார்க்கண் டேயமாக்கி னேயம் பிரமாண்டம்
பாற்படு பதினெண் புராண மாகும்" — பிங்கலந்தை 444.

*ஈண்டுத் தமியேன் என்ற தன்மை யொருமைப் பெயர் சரவண முனிவனை யுணர்த்திற்று. எவ்வாறெனில் காஞ்சிவாழ் மூதறிஞரிடத்துச் செப்பேட்டிலிருந்து கிரகிரி மான்மியங் கேட்டறிந்தவன் சரவண முனிவனாகலின் என்க.*

"கிளர்சிர வெற்பாம் புட்ப கிரிமிசை யிடும்ப னுக்குக்
குளவனு வினன்குடிக்குப் போம்வழி கூறுங் காதை
வளமுற வுரைத்திட் டோஞ்செப் பேட்டினில் வரைந்த மாற்றஞ்
தளர்வற வுணர்தி யென்னச் சரவண முனிக்குச் சொற்றூர்"

"தகைபெறச் சொற்ற வாய்மை சரவண முனிவன் கேளா
வகமகிழ் தூங்கிச் செப்பேட் டிருந்தவா றவரைக் கொண்டே
யிகலற வேறுசெப்பேட் டிவையெலா மெழுதி வாங்கி
மிகவிடை பெற்று மீண்டான் வேதியர் குலத்தின் மிக்கான்"
— சென்னிமலைப் புராணம்,
இடும்பனுக்கு வழிகாட்டிய மான்மியம் 32, 33.

**15 செந்தமிழ்நாட் டுறையுமுதுக் குறைவுடையோர்**
**தெரிந்துபிறர்க் குரைக்கு மாறு**
**பைந்தமிழாற் சென்னிமலைப் புராணமெனப்**
**பெயர்நிறுவிப் பயன்கோ டற்கே**
**யந்தவரை மிசைவைகு மடலயில்வேற்**
**கிறைசந்தி தானத் தன்பர்**
**புந்திதெளி தரத்தமியே னறிந்தனவா**
**புன்மொழியாற் புகல லுற்றேன்.**

*பொழிப்புரை:* செந்தமிழ் நாட்டில் வாழ்கின்ற பேரறிவுடைய பெரியோர்கள் தாமறிந்து பிறர்க்குச் சொல்லும் படிக்கும்; அதனால் இம்மை மறுமைப் பயன்களைக் கொள்ளுதலின் பொருட்டும்; பசுமையாகிய தமிழ் மொழியில் சென்னிமலைப் புராணமென்று பெயர் வைத்து அந்த மலையின் மேல் வீற்றிருக்கும் வலிமையும் கூர்மையும் பொருந்திய வேலையுடைய

முருகக் கடவுளின் திருமுன்பில் அன்பர்களுடைய உள்ளந் தெளிவடையுமாறு யான் கேட்டறிந்தபடி என் புன்சொற்களால் கவியாகச் சொல்லுதற்குத் தொடங்கினேன் என்றவாறு.

விளக்கவுரை : *இப் பாடலால் நூல் வழங்கும் நிலமும்; நூலின் பெயரும், பயனும்; நூல் செய்த இடமும் கூறினாராயிற்று. செந்தமிழ் நாடு—செவ்விய தமிழ் வழங்கும் நிலம்.*

"செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு"
— தொல்காப்பியப் பனம்பாரனார் பாயிரம் 5.

*வடக்கில் வேங்கட மலையும், தெற்கில் குமரித் தீர்த்தமும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்களும் எல்லையாகவுடைய நிலப்பரப்பு செந்தமிழ் நாடாம்.*

"வடவேங்கடந் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து"
— தொல்-பனம்பாரனார்-சிறப்புப்பாயிரம்.

"குமரி வேங்கடங் குணகுட கடலா
மண்டிணி மருங்கிற் றண்டமிழ் வரைப்பில்"
— சிலப்பதிகாரம் நூற்கட்டுரை - 1. 2.

*முதுக்குறைவு—பேரறிவு. "முதுக்குறைவு பேரறிவு முகரி மையுமாகும்"—பிங்கலந்தை 1847. ஈண்டுப் பசுமையென்றது செழுமை யென்னும் பொருள் தருவதாகும். பயன் என்றது அறமுதலிய நாற்பயனுமாம். "அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே"—என்பது நன்னூலாகலின். காஞ்சித் தலத்துப் பேரறிஞர்கள் பால் சிரகிரி மான்மியங் கேட்டறிந்த சரவண முனிவரே தமிழ் மொழியிற் சென்னிமலைப் புராணம் செய்தனரென வுணர்க. நூல் செய்த இடம் சிரகிரி முருகன் திருமுன்பாம்.*

*வேறு.*

**16. ஆண்டகை பொறுக்குந் தொண்ட
ராற்றிய குற்ற மென்றுட்
காண்டகை மையினுற் சொற்ற
காதையின் சோர்வும் புன்சொற்
பூண்டகை தவமெல் லாமும்
பொறுத்திடு மெனக்கொண் டேன்வான்
சேண்டகை சிகர வெற்போன்
றிருவுளந் தெரிக் கொணுதே.**

*பொழிப்புரை:* ஆண்டவன் அடியார் செய்த குற்றங்களைப் பொறுத்தருள்வானென்று யான் என்னுள்ளத்தி லறிந்தமையால் யான் பாடிய நூலின்கண் வரும் பொருட் குற்றங்களும் இழிவாகிய சொற்களைச் சேர்த்த சொற்குற்றங்களும் ஆகிய எல்லாக் குற்றங்களையும் பொறுத்தருள்வான் என்று கருதியிந் நூல் செய்தலை மேற்கொண்டேன். வானமளாவியதும் அகலமானதும் அழகுடையதுமாகிய சென்னிமலையில் வீற்றிருக்கும் முருகக் கடவுளது திருவுள்ளக் கருத்து எவ்வாறிருக்குமென்று என்னால் தெரிந்து சொல்ல முடியாது என்றவாறு.

விளக்கவுரை : *ஆண்டகை — ஆண்மைத் தன்மையுடையவன். பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைப் பெயர். ஆள் + தகை எனப் பிரித்து ஆளுந்தற்றன்மையுடைய கடவுள் எனப் பொருள் கோடலுமாம். கைதவம் ஈண்டுக் குற்றமென்னும் பொருளில் வந்தது. பொறுக்கும் என்னும் செய்யுமென்னும் வாய்பாட்டு வினைமுற்று ஆண்பாலில் வந்தது.*

"வெறுக்குந் தகைமைகள் செய்யினுந்தம் மடியாரை மிக்கோர்
பொறுக்குந் தகைமை புதியதன்றே" — அபிராமியந்தாதி.

*என்றாராகலின் "ஆண்டகை பொறுக்குந் தொண்டராற்றிய குற்றம்" — என்றார். "இந்நூற் குற்றங்களை ஆண்டவன் பொறுத்திடும் எனக் கொண்டேன்" — எனக் கூறுதலால் அவையிலுள்ள அடியவர்களும் புலவர்களும் பொறுப்பர் என்பது தோன்ற நிற்றலின் ஆசிரியர் நுணங்கு மொழிப் புலவருக்கு வணங்கு மொழி விண்ணப்பமாகிய அவையடக்கம் கூறினாராயிற்று.*

## நாடு.

*வேறு.*

17. பன்ன ருஞ்சதுர் மறைகளும் வேதபா ரகரும்
கொன்னெ டுஞ்சிலை மன்னருங் குலவிவாழ் கொங்கிற்
பின்னி வெண்டிரை கொழித்திரு கரையொலி பெருக்கும்
பொன்னி யந்துறை தெ்றாறுந்திகழ் பூந்துறை நாடு.

*பொழிப்புரை:* சொல்லுதற் கியலாத பெருமையையுடைய நான்கு வேதங்களும், வேதங்களைப் பயில்கின்ற அந்தணர்களும், அச்சந்தரும் நீண்ட வில்லையுடைய அரசர்களும் விளங்கி வாழ்கின்ற கொங்கு நாட்டில் வெண்மையாகிய அலைகள் ஒன்றோடொன்று பிணைந்து மேலே கிளம்பி

இருபுறத்துமுள்ள கரைகளில் ஒலிமிகச் செய்கின்ற காவிரியாற்றின் அழகிய நீர்த்துறைகள் மிகுதியாக விளங்குதலையுடையது பூந்துறை நாடு.

**விளக்கவுரை :** *குடகு மலையிலிருந்து பொற் பொடிகளை வாரிக்கொண்டு வருதலினால் காவிரிக்குப் பொன்னி யென்று பெயர்.*

"போலு நான்முகனையும் பொன்னி மாநதி"
— பெரியபுராணம், திருநாடு 2.

*காவிரித் துறை மிகவும் அழகு வாய்ந்ததாகலின் "அம்துறை" என்றார்.*

"இருங் காவிரித் துறை" — திருச்செங்கோட்டுக் கோவை.

*கொங்கு இருபத்து நான்கு நாடுகளில் தலைமை பெற்றது பூந்துறை நாடு. காவிரியாறு இந் நாட்டின் நடுவிற் செல்லுகிறது. அதன் கீழ் கரையிலுள்ளது கீழ் கரைப் பூந்துறை நாடு என்றும்; மேல் கரையிலுள்ளது மேல் கரைப் பூந்துறை நாடு என்றும் பெயர் பெறும். காவிரியாற்றின் அழகிய துறைகளையுடைய இரு கரைகளிலும் விளங்குதலின் இந் நாட்டைப் "பொன்னியந் துறைதொறுந் திகழ்பூந் துறைநாடு" என்றார். தொறும்—மிகுதி. காவிரியாறு இருபுறத்துச் சோலைகளிலுமுள்ள பூக்களை மிகுதியாகக் கொண்டு வந்து நிரப்புதலின் அதன் துறைகள் பூந்துறை எனப் பெயர் பெற்றன.*

*காவிரியில் மலர்கள் நிரம்பியிருத்தலை*

"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூவாடை யதுபோர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி"

*— என்னும் சிலப்பதிகார வடிகளால் காணலாம். காவிரியின் பூந்துறைகள் மிகுதியும் நிரம்பப் பெற்ற நாடாகலின் பூந்துறை நாடு எனப் பெயர் பெற்றது எனினுமாம். தாசி வயிற்றிற் பிறந்த இரட்டைப் பெண்களின் கற்பு மகிமை விளங்குதலின் பொருட்டு இந்திரன் பொன் மாரி, பூமாரி பொழிவித்த நாடாகலின் பூந்துறை நாடு எனப் பெயர் பெற்ற தென்பது தலபுராண வரலாறு.*

**18. தேம லர்த்திரு மாளிகை பொறித்தசீ ரெழுத்தும்
பாம கட்கெதிர் பசுங்கிளி பயின்றசெஞ் சொல்லும்**

ஏமு றும்பல பொருள்களும் யாப்புறுத் திடலாற்
பூம கட்கணி யாயது பூந்துறை நாடு.

பொழிப்புரை: மணம் பொருந்திய தாமரை மலரில் வாழ்கின்ற இலக்குமி தேவியும் விரும்பும் அழகிய மாளிகைகளில் எழுதப்பட்டுள்ள சிறப்புடைய எழுத்தென்னும் ஓவியங்களும், சரசுவதிக்கு ஒப்பாகுமாறு பச்சைக் கிளிகள் இடையறாது (சொல்லுகின்ற) பேசுகின்ற இயல்பாகிய செஞ்சொற்களும், உயிர்கள் இன்புறுதற்குக் காரணமாகிய பலவகைப் போகப் பொருள்களும் செறிந்திருத்தலினால் பூமிதேவிக்கு (ஆபரணமாக) அணியாக விளங்குவது பூந்துறை நாடு.

விளக்கவுரை: *தேம்—மணம், தேன். பொறித்த—எழுதிய; எழுத்து—ஓவியம். ஓவியம் எழுதப்படுதலின் எழுத்தெனப் பெயர் பெற்றது.*

"இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம்" — என்னும் *பரிபாடலடியும்; அதற்குச் "சித்திரங்கள் நிற்றலையுடைய மண்டபங்களை" எனப் பரிமேலழகர் எழுதிய உரையும் காண்க. ஏம்—களிப்பு; ஏமம் என்பது ஏம் எனவாயிற்று. யாப்புறுத்தல்—செறிந்திருத்தல். பூமகள்—பூமிதேவி. இப் பாடலில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களின் பெயரும் அமைந்திருத்தல் காண்க. பார்வைக்கு அழகுதரும் ஓவியம் முதலியனவும்; செவிக்கின்பந் தரும் செஞ்சொல் முதலியனவும்; மற்றும் அனுபவித்தற்குரிய பலவகையான அழகுடைப் பொருள்களும் நிறைந்திருத்தலால் பூந்துறை நாடு பூமிதேவிக்கு அழகுதரும் ஆபரணம் போல்வதாயிற்று.*

19. வெண்ணி லாத்திரு நீற்றொளி மெய்யினில் விளங்க
நண்ணி னோர்க்கரு ளிருநிதி வழங்கிநன் களித்துப்
பண்ணி சைப்புரா ணம்பயின் றறம்பயின் றிடலாற்
புண்ணி யந்தரு நாடது பூந்துறை நாடு.

பொழிப்புரை: அந்நாட்டிலுள்ளவர்கள், தம் உடம்பில் வெண்மையாகிய நிலாவொளி போலத் திருநீற்றின் ஒளி விளங்க, அடைந்தவர்களுக்கு அருளுடன் இருநிதி வழங்கி நன்றாகப் பாதுகாத்தலாலும்; பண்ணுடன் கூடிய இசைப் பாடல்களையும் புகழ்பொருந்திய புராணங்களையும் படித்தலினாலும்; மற்றும் பலவகையான அறச் செயல்கள் செய்வதனாலும்; புண்ணியத்தைத் தருகின்ற சிறந்த நாடாக விளங்குவது பூந்துறை நாடு.

**விளக்கவுரை :** *திருநீற்றின்ஒளிக்கு வெண்மையாகிய சந்திர வெளிச்சம் உவமை.*

"பவளமால் வரையில் நிலவெறிப் பதுபோல் பரந்த நீற்றழகு"
— திருவாதவூர்ப் புராணம், காப்பு 1.

*நீறு பூசுதலும், நிதி வழங்கலும், புராணம் பயிலுதலும் முதலிய அறச் செயல்கள் பலவும் நிகழ்தலின், "புண்ணியந் தரு நாடது பூந்துறை நாடு என்றார். பண், இசை என்பன ஒரு பொருட் சொற்கள். ஆகு பெயராய்ப் பாடலையுணர்த்தியது. பண்ணுடன் கூடிய பாடலைப் பண்ணத்தி என்பர் பஞ்சமர புடையார்.*

**20.** **ஆய நாட்டிடை வளத்தினை யளப்பதற் கெளிதோ**
**சேய செஞ்சடா டவிப்பிரான் சிவாலயம் பலவும்**
**பாயன் மாசுணப் பண்ணவன் சேதிமம் பலவும்**
**சாயன் மஞ்ஞையோன் றலங்களும் பலவுமுண் டேனும்**

**பொழிப்புரை:** நீண்ட சிவந்த நிறம் பொருந்திய சடைக் காட்டினையுடைய சிவபெருமான் வீற்றிருக்கின்ற சிவாலயங்கள் பலவும்; ஆதி சேடனாகிய பாம்பினைப் படுக்கையாகவுடைய திருமால் வீற்றிருக்கின்ற கோயில்கள் பலவும்; மென்மையாகிய மயிலில் வீற்றிருக்கும் முருகக் கடவுள் வீற்றிருக்கின்ற தலங்களும் மற்றுமுள்ள தேவர் வாழிடங்கள் பலவும் உள்ளன வென்பதை அறிந்தாரெனினும் அந்நாட்டின் கண் விளங்கும் இயற்கையழகினை அளந்து சொல்லுதற் கெளிதாகுமோ? ஆகாது என்றவாறு.

**விளக்கவுரை :** *ஆய—அந்த; சுட்டு முதல் நீண்டது. வளம்—பொருள், அழகு. சடா+அடவி=சடாடவி, வடமொழிப் புணர்ச்சி, தீர்க்க சந்தி. மாசுணம் என்றது ஈண்டு அனந்தன் என்னும் பாம்பு. சேதிமம் — கோவில். சாயல் — மென்மை, அழகு. அந் நாட்டில் சிவன், திருமால், முருகன் என்னும் மூவருக்கும் மற்றுமுள்ள தேவருக்கும் உரிய தலங்கள் பலவாம். எளிதோ—ஓகாரம் எதிர்மறை.*

## நகரச் சிறப்பு.

## திருச்செங்கோடு.

(வேறு)

21. அங்கோடிங் கோடுழல்வேற் கருளோடம் பிகையோடு
வெங்கோடு திகழ்கோல விடையோடு வருவோனூர்
சங்கோடு புனலோடு தருகோடி னருகோடிச்
செங்கோடாங் கோடாருந் திருத்தாவு செங்கோடு.

பொழிப்புரை: வானிடத்திலும் பூமியினிடத்திலும் பிறந்துழல்கின்ற என்னிடத்தில் அருளுடன் கூடிய அம்பிகையுடனே அச்சந்தரும் கூர்மையாகிய கொம்புகள் விளங்குகின்ற அழகாகிய எருத்தின் மேல் அருள்செய்தற்கு வருகின்ற அர்த்தநாரீசுவரனுக்குரிய ஊராவது சங்குகளுடனே நீரானது வளர்கின்ற மரக் கொம்புகளின் அருகிலோடிச் செங்குத்தாக விழுதலையுடையதாகிய உச்சியைப் (சிகரம்) பொருந்திய அழகு நிறைந்த திருச்செங்கோட்டினையடுத்து விளங்கும் திருச்செங்கோடு என்னும் ஊராம் என்றவாறு.

விளக்கவுரை: அங்கு—சேய்மைச் சுட்டிடப்பெயர்—வானம். இங்கு—அண்மைச் சுட்டிடப் பெயர்—பூமி. ஓடு இரண்டும் எண்ணுப் பொருளன. அருளே சக்தியாதலின் "அருளோடம்பிகை யோடு"—என்றார்.

"அருளது சத்தியாகும் அரன்றனக்கு" — சிவஞான சித்தியார்.

ஓடு இரண்டும் உடனிகழ்ச்சிப் பொருளன. விடையின் கொம்பு அச்சந்தருங் கூரிய கோடாகலின் "வெங்கோடு"—என்றார். ஊர்—திருக்கொடி மாடச் செங்குன்றூர் எனினுமாம். சங்கோடு—ஓடு—உடன்; ஓடுதரு கோடு—வினைத் தொகை—நீண்டு வளர்கின்ற மரக் கொம்பு. செங்கோடு—செங்குத்து.

"ஆயிழையாள் செங்கோடு பாய்துமே யென்றாள்" — நாலடியார்.

"செங்கோட் டுயர்வரைச் சேணுயர் சிலம்பில்" — சிலப்பதிகாரம்.

செங்கோடு—செவ்வியதாகிய மலையுச்சி யெனினுமாம். திருத்தாவு செங்கோடு என்றது திருச்செங்கோடு என்னும் தலமாம்.

*திருச்செங்கோடு என்பது மலைக்கும் ஊர்க்கும் பெயராதல் வழக்கிற் காண்க. அவாய் நிலையான் திருச்செங்கோடு என்னும் ஊர் என்பது வருவித்துரைக்கப்பட்டது.*

'' திருவேரகந் திருச்செங்கோடு '' — திருச்செங்கோட்டுப் புராணம்.

'' இருக்கோடு பலகலைக ளாகமங்கள் குரவோர்க ளிருக்குங்கோடு
செருக்கோடு முமையரனைப் பிரியாம லினிதிருக்குந்
[திருச்செங்கோடே ''
— திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை.

'' ஆயுந் தமிழ்த்திருச் செங்கோடு ''
— திருச்செங்கோட்டுப் பிள்ளைத் தமிழ்.

'' சொற்கின்ற சங்கப் பலகையிலேறித் துகளறுநூல்
கற்கின்ற வர்திருச் செங்கோடை வெற்பில் ''
— திருச்செங்கோட்டுக் கோவை.

*பூந்துறை நாட்டில் தென் கயிலாயமெனச் சிறப்புற்றுச் சிவபிரான் அம்பிகைக்கு இடப் பாகந் தந்து அர்த்தநாரீசுவரராக வீற்றிருக்கும் மலையாகலான் திருச்செங்கோட்டை முற்கூறினார். மற்றும் இப் பாடலில் '' உழல்வேற்கு அருளோடம்பிகையோடு.........வருவோனூர் '' — என்பதனால் இத் தலம் நூலாசிரியரின் வழிபடு கடவுள் வீற்றிருக்குந் தலமெனத் தெரிகின்றது. ஊர் செங்கோடு என முடிவு செய்க.*

## ஈரோடு.

**22. சீரோடு மோடரிக்கட் சிலையோடு சிவனுநுதல்
வாரோடு மிகன்முலைபால் மருவியதொண் டீசரூர்
காரோடு பொழிலூடு காரிகையா ராடுபனி
நீரோடு காவிரிநன் னீரோடு மீரோடு.**

**பொழிப்புரை:** அழகுடன் நீண்ட செவ்வரி பரந்த கண்களையும்; வில்லுடன் ஒத்த வளைவாகிய புருவத்தையும்; கச்சணி பரந்த முகிழ்த்த முலைகளையுமுடைய வாரணி தேவி வலப் பாலில் பொருந்தியுள்ள தொண்டீசுவரர் வீற்றிருக்கும் ஊ ரா வ து; மேகங்கள் சஞ்சரிக்கின்ற சோலையினிடத்தில் மகளிர்கள் நீராடும் பனிநீருடன் காவிரியாற்றின் நல்ல நீரும் ஓடுகின்ற ஈரோடாம் என்றவாறு.

விளக்கவுரை : அரி—செவ்வரி. சிவணு—ஒத்த. நுதல்—நெற்றி யெனினுமாம். வார்—கச்சு. இகல்—மாறுபாடு. வாரோடு மிகன் முலை—அன்மொழித் தொகைப் பன்மொழித் தொடராய்ச் சிவபிரானது வலப் பக்கத்து வீற்றிருக்கும் வாரணியம்மனை உணர்த்திற்று. ஈரோடு சிவபிரான் அகத்தியருக்கு மணக் கோலம் காட்டிய தலமாகலின் அம்மன் வலப் பாகத்து வீற்றிருக்கின்றார் என்க.

"வடிவுடை மங்கைதன் னோடு மணம்படு கொள்கையி னரும்"
— ஞானசம்பந்தர் தேவாரம் பாண்டிக் கொடுமுடிப் பதிகம்.

பூந்துறை நாட்டில் இந்திரன் பொன்மாரி, பூமாரி பெய்வித்த புகழுக்குரியதாகலினானும்; சிவபிரான் சேடியரிருவர்க்கு அருள் செய்த தலமாகலானும்; காவிரிக் கரையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச்சிறப்புமுடைய தலமாகலானும்; சேர சோழபாண்டிய மன்னர்கள் அத் தலத்துச் சிவபிரானை வழிபட்டு கெடிஸ்தலாமாகக் கொண்டிருந்த நகரமாகலினாலும் ஈரோட்டை இரண்டாவது நகரமாக வைத்துப் போற்றினர். ஓடு என்னும் சொல் இப் பாடலின் எல்லா வடிகளிலும் அடுத்தடுத்து வருதல் சொற்பின் வருநிலை யணியாம்.

"கன்ன லொடித்துவருங் காவிரிநீர் சார்ந்திடுமூர்
சொன்ன மழையாய்ச் சொரிந்தவூர்—அன்னவயல்
சூழுமூர் தெய்வந் துலங்குமூர் நல்லறிஞர்
வாழுமூ ரீரோடை யூர்" — ஐமணிமாலை.

## பூந்துறை.

23. தாமாரி யருந்தமிழ்வா ணருந்தாப தரும்போற்றும்
காமாரி புட்பவன நாதனருள் கவினுமூர்
தேமாரி நிகழ்வானஞ் செறிபாரி சாதமலர்ப்
பூமாரி பொன்மாரி பொழிமூதூர் பூந்துறையூர்.

பொழிப்புரை: வடமொழிப் புலவரும், தமிழ்ப் புலவர்களும், முனிவர்களும் புகழ்கின்றதும்; மன்மதனை யெரித்த புட்பவன நாதனாகிய சிவபெருமானுடைய திருவருள் அழகாக விளங்குகின்றதும் ஆகிய ஊரா வது; தெய்வத் தன்மை பொருந்திய மேகம் விளங்குகின்ற வானத்தில் நெருங்கிய பாரிசாத மலராகிய பூமாரியும், பொன்மாரியும் பொழியப்பெற்ற பழமை மிகுந்த ஊராகியுள்ள பூந்துறை யென்னும் ஊராம்.

**விளக்கவுரை :** *தாம் என்பது மூவிடத்தும் வரும் அசைச் சொல்.*

" அன்றுந் தாம்தான் கின்றுநின் றசைமொழி " — நன்னூல் 441.

*" தாம்......போற்றும் " — எனக் கூட்டித் தாமாகவே போற்றும் எனினுமாம். காமாரி—மன்மதனை யெரித்தவர். புட்பவன நாதன்—புட்பவனமென்னும் சங்க வனத்தில் வீற்றிருப்பவர்; இவர் இந்திரனுக்குத் தம் திருமேனி முழுதும் பூவாய் விளங்கும் படி காட்சி நல்கியவர்.*

" இந்தவித மேனியெல்லாம் பூவாய்த் தோன்ற
இமையவர்கோன் புட்பலிங்க மெனப்பேர் சாற்றும் "
— பூந்துறைப் புராணம்.

*பாரிசாத மலர்—ஐந்தருவின் மலர்களில் ஒன்று. பூமாரி, பொன் மாரி பொழிந்த வரலாறு இந் நூலின் புட்பகிரி மான்மியத்தில் காண்க.*

" சீரிய செங்கம லாலய மேவுந் திருவெழின்மிக்
காரிரு மங்கையர்க் காவயி ராவதந் தன்னில்வந்து
போரியல் வேல்விழி யிந்திராணி நாயகன் பொன்னெடுபூ
மாரிபொ ழிந்தது மீரோடை சூழ்கொங்கு மண்டலமே "
— வாலசுந்தரக் கவிராயர், கொங்குமண்டல சதகம்.

" பூமாது வாழும் புகழ்மாது போற்றிசைக்கும்
நாமாதெந் நாளும் நயக்குமே—கோமேவு
கோட்டங் கரமாகும் கொங்கென்னுஞ் செல்விக்கு
நாட்டமாம் பூந்துறையூர் நாடு " — ஐமணிமாலை 1.

*இவ்வூரைத் தலைநகராகப் பெற்ற நாடு பூந்துறை நாடு.*

" மாகஞ் சிறந்திரட்டும் மார்த்தாண்டன் பாற்கவரி
பூகஞ் சிறந்திரட்டும் பூந்துறையே—ஆகஞ்சும்
வேதவனத் தானிறைஞ்சும் வேதவனத் தானிறைஞ்சும்
வேதவனத் தானிறைஞ்சும் வீடு " — நாட்டுப் பாடல்.

## வெள்ளோடு.

**24.** **ஓதுரிவை யேகாச ருமைநேசர் பவநாசர்**
**தாதகிதோள் புனேயீசர் சருவேசர் வாசவூர்**
**மாதவிநீ ழலினோடும் வயலோடும் மதகோடு**
**மேதிநறும் பாலோடு புனலோடும் வெள்ளோடு.**

பொழிப்புரை: உலகினராற் சொல்லப்படுகின்ற யானைத் தோலைப் போர்வையாகத் தரித்தவரும், உமாதேவியிடத்தில் அன்புடையவரும் (பிறவியைக் கெடுப்பவரும்) பாவத்தை நாசஞ் செய்பவரும், ஆத்திமலர் மாலை புனைந்த தோளினையுடைய ஈசரும் ஆகிய சருவலிங்கேசுவரர் நித்திய வாசஞ் செய்யும் ஊராவது மாதவி (குருக்கத்தி) மர நிழலிடத்தும், வயல்களினிடத்தும், மதகுகளினிடத்தும், எருமைகளின் நல்ல பாலுடனே தண்ணீரும் ஓடுகின்ற வெள்ளோடாம் என்றவாறு.

விளக்கவுரை: *வெள்ளோடு பூந்துறை நாட்டின் இரண்டாவது நகராம், உரிவை—தோல். உருவை—பிரதி பேதம் ஏகாசம்—போர்வை. ஏகாசர் என்பது பொருளடியாகப் பிறந்த பொருட் பெயர். பவம்—பிறப்பு, பாவம். மேதி—எருமை. வெள்ளோடு பழமையான வயல் நிலம் செறிந்த ஊராகலின் அந்நிலத்து வாழும் எருமைகள் கொழுத்த புற்களை மேய்ந்து திரிந்து தம் கன்றை நினைந்து சொரியும் மிகுதியான பால், நீரோடு கலந்து செல்லுதலின் "மேதிநறும் பாலோடு புனலோடும் வெள்ளோடு" என்றார்.*

*வெண்மையான நீரையுடைய ஓடையை யடுத்துள்ள ஊராதலின் வெள்ளோடை எனப் பெயர் பெற்றது.*

"வெள்ளோடை யாம்பனிறை வெண்டையனோடை ரண்டர்தொழும்
வெள்ளோடை யாம்பனிறை வெள்ளோடை—வெள்ளோடை
ஏற்றவிடங் கையனு ரேற்றவிடங் கையனுர்
ஏற்றவிடங் கையனு ரில். — நாட்டுப் பாடல்.

"மேல்பாலில் வாசவன்றன் கரியொன் றேகி
விளங்குமதம் பொழிந்துநிழற் சுழித்து விம்மிக்
கல்லாலுங் கோட்டாலும் நிலத்தைக் கீண்டு
கண்டதுநீர் வெள்ளோடை கமழ்பா லோடை
சேலோடு வரால்குதிக்குங் கழனி சூழும்
திவ்வியமா தவிநீழற் சிமையா ளோடும்
நால்வேதந் தான்முழங்கச் சருவ லிங்க
நாயகரா யிருந்தவரைக் கண்டார் வானோர்"
— பூந்துறைப் புராணம்.

*அத்தலத்து அம்பிகையின் திருநாமம் பாடகவல்லி. இவ்வம்மையின் மேல் பிள்ளைத் தமிழ் நூலொன்றுண்டு.*

## நசியனூர்.

25. கொந்தவிழ்பைந் தாரோடு நீரோடு குவித்தங்கோ
விந்தமட மயில்பயில்மூ வேந்தர்வழி படுவானூர்
சந்தனஞ்செண் பகம்பாரி சாதமலர் பொதுள்பொதும்பர்
வந்துமந்த மாருதமூர் வசையறு நசையனூர்.

பொழிப்புரை: அழகிய விழிகளையுடைய விந்தமலைக்குரிய வீர லட்சுமி யென்னும் துர்க்கா தேவி தங்கி வாசஞ் செய்யப்பெற்ற தோள்களை யுடைய சேர சோழ பாண்டியரென்னும் மூவேந்தரும் கொத்தாக மலர்ந்த மலர்களுடனும், நீருடனும் கைகளைக் குவித்துக்கொண்டு வழிபடப் பெற்ற சிவபெருமான் வாழ்கின்ற ஊராயுள்ளது; சந்தன மரமும், சண்பக மரமும், பாரிசாத மரமும் ஆகியவற்றின் மலர்கள் நெருங்கியுள்ள சோலை யில் தென்றற் காற்றுச் சஞ்சரிக்கின்றதும்; பழியை நடுங்கச் செய்வது மாகிய நசையனூராம் என்றவாறு.

விளக்கவுரை: *கொந்து—பூங்கொத்து. மெலித்தல் விகாரம். நசையனூரிலுள்ள சிவபெருமானுக்கு மூவேந்தரேசுவரர் என்று பெயர். அரசர்களுடைய தோள்களில் வீரலக்குமி வீற்றிருந்து வெற்றியும், வீரமும் அருளுவாளாகலின் "விந்தமட மயில் பயில் மூவேந்தர்" — என்றார். வீரதுர்க்கை விந்திய மலையில் வாசஞ்செய்பவளாதலின் "விந்தமட மயில்"-என்றார். விந்தியாசலவாசினி என்பது அவளுக்குப் பெயர்.*

"பின்னஞ் செய்தியான் பின்புவிந் தப்பிறங் கலிற்போய்
நன்னர் வீற்றிருந் தருளுவ னடுங்கலி ரென்றாள்"
— தேவிமான்மியம். அத்தியாயம் 11—27.

*விந்தம்—அரவிந்தமென்பதன் முதற்குறையாகக் கொண்டு தாமரை மலர் எனினுமாம். அப் பொருளுக்கேற்ப "மடமயில் பயில்" என்பதற்கு இலக்குமி வாசஞ் செய்கின்ற என்று பொருள் கொள்ளலுமாம்.*

"செறிவாய் வளர்பயிரும் தெண்ணீர்க் கமலப்
பொறிவாழ் நசையா புரியே—நெறிவானோர்
ஓங்குமூ வேந்தரத்தர் ஓங்குமூ வேந்தரத்தர்
ஓங்குமூ வேந்தரத்த ரூர்"
— நாட்டுப் பாடல்.

"கொண்மூவேந் ததன்வடக்கி லசுரர் தம்மாற்
குலைகுலைந்து புவியதனிற் குறுகிப் பின்பு
எண்மூவேந் தருந்தொழுத விலிங்கந் தன்னை
யிணையடிக ளர்ச்சித்து விதயங் கூர்ந்து
பண்மூவேந் தருந்தொழுது பாடி யாடிப்
பங்கயப்பொற் சுனையதனிற் படிந்து வாழ்த்தி
மண்மூவேந் தருந்தொழுது முத்தி பெற்ற
மன்னுநசை யாபுரியை வணங்கிக் கண்டார்"

— பூந்துறைப் புராணம்.

## எழுமாத்தூர்.

26. கொழுமாத்தூங் கமழவிழுஞ் செழுஞ்சோலைக் குவளைமலர்
கெழுமாத்தூக் குந்தாது வயலின்வளங் கிளர்மூதூர்
செழுமாத்தூ ரியமுழங்கு காஞ்சியிற்சீ ரறம்புரிய
எழுமாத்தூர் சத்திநா யகன்வைகு மெழுமாத்தூர்.

**பொழிப்புரை:** கொழுமையாகிய மாங்கனிகள் தூய்மையாகிய மணம் கமழும்படி யுதிர்கின்ற செழுமையாகிய சோலைகளும், குவளை மலர்களிற் பொருந்திய பொன்னிறம் மிகப் பெற்ற மகரந்தம் நிறைந்த வயல்களின் வளமும், விளங்குகின்ற பழமையாகிய ஊராகவுள்ளது; அழகாகிய வண்டுகளும், வாத்தியங்களும் ஒலிக்கின்ற காஞ்சிபுரத்தில் சிறப்பாகிய அறங்களைச் செய்தற் பொருட்டு எழுந்த அம்பிகை பொருந்திய சத்தி நாயகன் வாழ்கின்ற எழுமாத்தூர்.

**விளக்கவுரை :** *தூ—பற்றுக் கோடாகிய கிளைகளினின்றும் எனினுமாம். குவளை—செங்கழுநீர் மலர். மாத்து—மாற்று என் பதன் போலி—பொன்னிறம். தாது—மகரந்தப் பொடி. மா— வண்டு; தூரியம்—வாத்தியங்கள். மாது + ஊர் = மாத்தூர். விரித்தல் விகாரம். வயலின் வளம்—செந்நெல், செவ்விளநீர், சிறுபயறு, கரும்பு, வாழை முதலியன. மகரந்தப் பொடிகள் மிகுதியும் உரமாதலின் வயலின் வளம் மிகுகின்றன வென்க. அம்பிகை காஞ்சிபுரத்தில் சிவபிரானிடம் இரு நாழி நெற் பெற்றுக் காமக்கோட்டத்திலிருந்து முப்பத்திரண்டு அறங்களை யும் புரிந்தாள் என்ற புராண வரலாற்றை யுட்கொண்டு "காஞ்சியிற்சீ ரறம்புரிய எழுமாத்தூர்"—என்றார்.*

"தாழைவனம் பூகவனஞ் சந்னப்பூங் காவனமும்
வாழைவனஞ் சூழுமெழு மாத்தூரே—தாழை
நகமே யடர்த்த நகமே யர்டத்த
நகமே யடர்த்த நகர்" — நாட்டுப் பாடல்.

"பையரா வணிந்த சடைப்பரமன் றன்னைப்
பலதேவ ரர்ச்சித்துத் தென்பால் வைகி
மைதவழுந் தாழையொடு பூகம் வாழை
மன்னுபடீ ரஞ்சூழ்ந்த வனத்தில் வைகித்
தெய்வமென வந்துதித்த சப்த மாதர்
செழுமுன்னுட் செய்தசிவ லிங்கந் தன்னைக்
கைகூப்பி யெழுமாதைச் சத்தி யீசர்
கழலிணையைப் பூசித்தார் கருத்தில் வானோர்"
— பூந்துறைப் புராணம்.

*இத் தலத்துச் சிவபெருமான் சத்தி விசேடம் உடையராக லின் சத்திநாயகர் எனப் பெயர் பெற்றார். சர்வலோக நாயகி யென்பது அம்பிகையின் திருநாமம். இத் தலத்திற்குரிய நூல்கள் சிவக்கொழுந்து மாலை, சர்வலோக நாயகி ஒருபா ஒரு பஃது முதலியனவாம்.*

"பூங்குமு தஞ்செண் பகமுல்லை நீலம் பொலிகமலங்
கோங்குசெங் காந்த ளுறுங்காம வல்லிக் கொடிபடரப்
பாங்கமர் கற்பக தாருவென் றேநினைப் பாடிநிற்பேன்
தேங்கம லத்தெழு மாதையிற் சத்திச் சிவக்கொழுந்தே"
— சிவக்கொழுந்து மாலை 1.

"கூடு கிடந்திடப் புட்கவர் வேடன் கொடுஞ்செயல் போல்
நாடு முடல்விழக் கூற்றுயிர் கொள்ளா நலம்புரிந்தே
வாடும் பயிர்மழை யாமெழு மாதை மலைமகளென்
னோடுங் கருத்தி லிருந்துகந் தாள்வை யுலகிடத்தே"
— சருவலோக நாயகி ஒருபா ஒருபஃது–10.

## திருவிருந்தபுரம்.

27. ஆயபதி முதலியவெண் ணெண்பதியு மிகவணிபெற்
றேயவளம் பலநலம்பெற் றிசைபெறுமந் நாட்டகத்திற்
சேயுயர்வின் ணகடுதொடுஞ் சிரகிரியி னெருசாரல்
மேயதிரு விருந்துமிக விளங்குதிரு விருந்தபுரம்.

*பொழிப்புரை:* மேற்கூறியனவாகிய பூந்துறையூர் முதலிய அறுபத்து நான்கு ஊர்களையும் மிகவும் சமீபத்தில் கொண்டு தகுந்த செல்வ முதலிய பலவகை நன்மைகளையும் பெற்றுப் புகழ்பெற்று விளங்கும் அப் பூந்துறை நாட்டினிடத்தில் முருகக் கடவுள் வீற்றிருக்கின்றதும் மிகவும் உயர்ந்த வான முகட்டின் நடுவாகிய இடத்தைத் தொடுகின்றது மான சிரகிரியின் வடசார்பில் யாவரும் விரும்புகின்ற இலக்குமி இருந்து மிகவும் சிறப்புற்று விளங்குகின்ற திருவிருந்தபுரம் உள்ளது என்றவாறு.

*விளக்கவுரை :* *ஆயபதி முதலியவெண் ணெண்பதி யென்றது மேல் கரைப் பூந்துறை நாட்டுக்குரிய முப்பத்திரண்டூர் களும் கீழ்கரைப் பூந்துறை நாட்டுக்குரிய முப்பத்திரண்டூர்களும் ஆக அறுபத்து நான்கு ஊர்களுமாம் என்க.*

"நற்கா விரிக்குமேல் கரைதனிற் பூந்துறைசொன்
னளிர்கொண்ட வெள்ளோ டையூர்
நசையனூ ரெழுமாதை யெனுமுயர் புகட்பெரிய
நகரமொரு நான்க தாகச்
சொற்சேர வேவகுத் துப்பின்னு மவைதனைச்
சூழ்பதிக் ஞாலே ழெனத்
தூய்தாக்கி யாகமுப் பத்திரண் டதன்மிசைத்
தொல்பதி சிறப்ப தல்லாற்
பொற்பான கீழ்கரையில் நாலெட்டு நகரம்
புரப்பதற் காக முன்னம்
புரிதரு செங்கோட்டில் வீற்றிருந் தழகுதிகழ்
பூந்துறைநன் டை ளுகிச்
சிற்சோதி யாகிச் செகச்சோதி யானவா!
சிறுதே ருருட்டி யருளே!
சிகரா சலத்தில்வளர் தெண்டா யுதக்கரா!
சிறுதே ருருட்டி யருளே."

— சென்னிமலைப் பிள்ளைத் தமிழ்.

## மேல்கரைப் பூந்துறை நாட்டூர்கள்-32.

"பூந்துறைசை வெள்ளோடை நசையனூ ரெழுமாதை
புகழ்சேர் பிடாரிநகரம்
பூங்கமழும் ஈங்கியூர் பெருந்துறை சாத்தனூர்
பொன்காள மங்கலமதும்
ஆய்ந்ததமிழ் கூறுங் குழா நிலை கிளாம்பாடி
யாண்மைகொள் முடக்குறிச்சி

யனுமநகர் பழமங்கை குழைவிளக் குக்காக
மறச்சலூர் விளக்கேத்தியும்

வேந்தர்மகி ழிஞ்சநகர் சத்திமங் கலமதும்
மிக்கசே மூர்மங்கலம்

வீரநக ரீரோடு பேரோடு சித்தோடு
மிக்கான திண்டற்புதூர்

சேர்ந்துமழை பேய்ந்தருளு மிலவமலை திருவாச்சி
திகழ்பனசை யோடாநிலை

தென்முருங் கைத்தொழுவு முப்பத் திரண்டூர்
சிறந்தபூந் துறைசைநாடே.''

## மேல்கரைப் பூந்துறை நாட்டூர்கள்-32.

''மோரூ ருடன்முளசை குலவுமே மப்பள்ளி
முற்றுதக டப்பாடியும்

மோடமங் கலமேழி பள்ளியிரு புலிபிரிதி
முட்டில்சிறு முளசையணிமூர்

நீரூர்கு மரமங்கை யகரஞ்சே தாபுரம்
நிழலுற்ற கருமாபுரம்

நீதிவட் டூர்மணலி கோக்களூயு முஞ்சனியும்
நிலைகொள்கூத் தம்பூண்டியும்

சீரூரு மானங்கூர் கொக்கரா யன்பேட்டை
தேவைகா டச்சிநல்லூர்

செயமா விரட்டியுட னேலத்தி வாடியும்
செய்யபடை வீடுபட்லூர்

ஏரூர் வயற்கழனூர் மண்டபத் தூர்தோக்கை
யின்பமிகு சித்தளந்தூர்

இணையில்கத் தாரியுடன் முப்பத் திரண்டூர்க
ளினியபூந் துறைசைநாடே.''

— கொங்குமண்டல வூர்த்தொகைப் பாடல்கள்.

*சேய்—முருகன், தூரமெனினுமாம். திரு—இலக்குமி திருவிருந்தபுரம்—இது பிடாரியூர் என வழங்குகின்றது. இவ் ஊர் நான்கு யுகத்திலும் நான்கு பெயர் பெற்றதாகக் கூறுவர். அதற்கேற்ப அத்தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபிரானும் நான்கு யுகங்களிலும் நான்கு பெயர் பெற்றதாகக் கூறுவர். பிடாரியூரின் நான்கு பெயர்கள் கமலபுரம், திருவிருந்தபுரம், காளிநகர், சென்னி நகர் என்பனவாம். முறையே அத் தலத்திற்குரிய சிவபெருமானின் திருநாமங்கள் கமலாலயர், திருமுக மலர்ந்த*

நாதர், காளிநாதர், சென்னிநாதர் என்பனவாம். அவ்வூர்ச் சிவன் கோவிலில் முன்மண்டபச் சுவரிலுள்ள சிதைந்துபோன கல்வெட்டுப் பாடல் ஒன்று இவ் வரலாற்றுக்கு ஆதாரமாக உள்ளது. அப் பாடல் பின்வருமாறு

"ஏற்குங் கமல புரம்திரு விருந்தபுரம்
சேர்க்கின்ற காளிநகர் சென்னிநகர்—கார்க்குங்
கமலாலை யர்திருமு கம்அலர்ந் தார்காளி
கமலிநகர் சென்னி நாதர்."

பூந்துறை நாட்டின் ஐந்தாம் வீடு பிடாரியூர் என்பர்.

"ஐந்தாம் வீட்டின்பேர் பிடாரியூரா மதுகாளி பூசித்த
தலமதாகும்." — என்பது பூந்துறைப் புராணம்.

திருவிருந்தபுரம் சென்னிமலைக் செவ்வேளுக்குரிமையுடைய பழமையான நகரமாதலினாலும்; இந் நூலாசிரியர் பிறந்த ஊரா கலானும்; பூந்துறை நாட்டின் ஐந்தாவது நகரமாதலினாலும் ஈண்டுக் கூறப்பட்டதென்க.

## செப்பேடு கண்ட வரலாறு.

28. தொல்பதியி னிடைச்சைவ சமயநெறித் தொழுகுலச்சீர்
மல்கிவளர் மார்க்கண்ட கோத்திரத்தின் மாதவங்கள்
நல்குசர வணவிரத முனிவனுன் மறைக்கேள்விப்
பல்கலையு மோதியுணர்ந் தவன்பனவர் தம்மேலான்.

**பொழிப்புரை:** பழமையாகிய திருவிருந்தபுரத்தில் சைவசமய நெறிகளை மேற்கொண்டொழுகுகின்ற சிவமறையோர் குலத்தில் மார்க்கண்டேய கோத்திரத்தில் முன்பு செய்த பெருந்தவந் தந்த சரவண முனிவன் என்பவன் நான்கு வேதங்களைக் கேள்வியாலறிந்தும் பலகலையாகம நூல்களைப் படித்தறிந்தும் அந்தணருள் மேன்மையுடையவனாய் விளங்கினான் என்றவாறு.

**விளக்கவுரை:** மார்க்கண்ட கோத்திரம்—மார்க்கண்டேய முனிவரை முதலாகக் கொண்ட கோத்திரம். நான்கு யுகங்களிலும் விளங்கிய பழமையாகிய ஊராகலின் தொல்பதி யென்றார். வேதங்கள் நான்கும் எழுதாக் கிளவியாய்க் காதினாற்

கேட்டறிதற்குரிய சுருதியாகலின் நான்மறைக் கேள்வியென்றார். பலகலை—பல கலைஞானங்களாகச் சொல்லப்பட்ட சிவாகம நூல்கள்.

"பலகலை யாகம வேதம்" — சிவப்பிரகாசம் முதற் சூத்திரம்.

ஆகமங்கள் நூல் வடிவினவாகலின் ஓதியுணர்ந்து என்றார். சைவ சமயத்திற்குப் பொது நூலாகிய வேதமும், சிறப்பு நூலாகிய சிவாகமமும் உணர்ந்தான் என்பதாம்.

"வேதமோ டாகம மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவும் சிறப்புமென் றுன்னுக
நாத னுரையிவை நாடிலிரண் டந்தம்
பேத மதென்னிற் பெரியோர்க் கபேதமே" — திருமந்திரம்.

29. பிரமச்சா ரியத்திருந்து மில்வாழ்க்கை பெரிதுவந்து
மரிவையுட னகத்துறைந்து மறனுதி நாற்பொருளும்
தெரியவுணர்ந் தைம்புலப்போக் கறிந்துசிவ தத்துவத்தில்
துரியநிலைத் துறவுதனிற் சுகாதீத னயினன்.

**பொழிப்புரை:** அவன் குருவினிடம் வித்தை பயிலுதலாகிய பிரமச்சரியத்தில் (மாணவ நிலை) இருந்தும்; மனைவியுடன் கூடி வாழ்தலாகிய இல்லற வாழ்க்கையை விரும்பி வாழ்ந்தும்; வானப் பிரத்த நிலையில் மனைவியுடன் காட்டகத்தில் வாழ்ந்தும்; அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் பொருள்களின் இயல்பினை நன்ருகத் தெரியும்படியறிந்தும், ஐம்புலங்களிற் செல்லுதலாகிய உலகியல் கேடுதருவதாமென்பதனை யறிந்தும், அவற்றிற் பற்றுவையாது உறுதி தரும் சிவமாகிய உண்மைப் பொருளினைப் பற்றிச் சுத்த நிலையாகிய துறவற நெறியில் நின்று மேலான பேரின்ப சுகத்தை யுடையவனுயினன் என்றவாறு.

**விளக்கவுரை:** சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் தன்மாத்திரைகளைக் காரணமாகக் கொண்டு தோன்றிய உலகமாகலின் உலகியலை "ஐம்புலப் போக்கு" — என்றார்.

மனம் உலகியலில் ஐம்புல வின்பங்களை நாடுதல் கேடுதருமாகலின் அவற்றில் பற்றுவையாது துறந்து மேலான பரம் பொருளை நாடி உய்தி கூடுதல் வேண்டும். இதனை

''ஊற்றினிற் களிறுதுஞ்சும் ஒளியினிற் பதங்கமாயும்
நாற்றத்தின் வண்டுவீயும் சுவையின்மீ னுசமெய்தும்
ஏற்றதோ ரிசையினுலே யிறக்குமா லசுணங்கல்வி
யாற்றலிற் புலன்களைந்து மடக்கிடல் வேண்டுமன்றே''

''ஐயமி லறிவினுலே யழிவின்றி யகண்டமாகி
மெய்யெனும் பொருளாமெம்மை மேவுவான் கானனீர்போல்
வையக மாதியாய வழங்கிய வுலகமெல்லாம்
பொய்யுறு பகுதிநின்று போந்தவென் றெண்ணல்வேண்டும்''
— ஆரியப்பப் புலவர் பாகவதம்.

*உலகியல் கேடுதருவதாம் என்பதனை யறிந்தவன் நித்திய மான வாழ்வு பெறுதற்குச் சிவத்தைப் பற்றி நின்று உலகியலைத் துறத்தல் வேண்டு மாகலின் '' ஐம்புலப் போக்கறிந்து சிவதத் துவத்தில் துரியநிலைத் துறவுதனில்'' — என்றுர்.*

*சிவதத்துவம் ஐந்து வகையாய் இருக்கும். அவை சுத்த தத்துவமெனப் பெயர் பெறும்.*

''வித்தையோ டீசர் சாதாக் கியஞ்சத்தி சிவங்க ளைந்தும்
சுத்ததத் துவஞ்சி வன்றன் சுதந்தர வடிவ மாகும்''
— சிவஞான சித்தியார்.

*துரிய நிலை—சுத்த நிலை. கேவலம், சகலம், சுத்தம் என்னும் மூன்றவத்தைகளில் மூன்ருவது நிலை. சுகாதீதன்—மேற்பட்ட சுகமுடையவன். சுகாதீதம்—சதாகாலம் நிஷ்டைகூடலாற் பெறும் ஆனந்தா தீதமான நிலை. மேலான சுகமுதிக்கும் சுத்தாத்துவித அனுபவப் பேறே சுகாதீதமாம்.*

''சகசநிலை காட்டினை சுகாதீத நிலையந் தனைக்காட்ட நான்
செல்லுமோ'' — என்பர் தாயுமானவர்.

''இந்தச் சகத்தில் இனிநீ விழியாமல்
அந்த அறிவின் அயர்ந்ததுபோல்—தொந்தமறப்
போதா யிதுவே சுகாதீதம் பொய்யற்ரோர்க்
காதார மான அருள்'' — துகளறு போதம். 57.

*பிரமசாரிக்குப் பிரமனும்; இல்லறத்தானுக்குத் திருமாலும்; வானப் பிரத்தனுக்குச் சூரியனும்; துறவிக்குச் சிவபெருமானும்*

தெய்வமாகக் கூறுதலின் துறவியாகிய சரவண முனிவன் சிவதத்துவத்தில் பற்று வைத்துச் சுகாதீதனுயினுன் எனினுமாம்.

30. சாத்துவிகக் குணமடைந்து தாபதரோ டொழுகுவா
ஞத்தழும்ப வேதாந்தத் துட்பொருளை நவின்றுணர்ந்து
சீர்த்திகழுஞ் சிகரகிரி விளங்குமொரு சாரணைந்து
மாத்தவநா டொறும்புரிந்தைந் தெழுத்தினையு மனத்
[தெழுதி.

**பொழிப்புரை:** மேலும் சாத்துவிக மென்னும் ஞானகுணத்தை யடைந்து, தவத்தினருடன் கூடிப் பழகி, நாவில் தழும்புண்டாகுமாறு உபநிடதங்களை யோதி,யவற்றினுட் பொருளை யறிந்து, சிறப்பாக விளங்கும் சென்னிமலையின் ஒரு பக்கத்தையடைந்து, ஐந்தெழுத்தையும் மனதில் இடைவிடாது தியானித்து, நாள்தோறும் பெருமையாகிய தவத்தினைப் புரிந்து என்றவாறு.

**விளக்கவுரை:** *இச் செய்யுள் தவம் செய்யும் சரவண முனிவரது இயல்பினைக் கூறுகின்றது. சாத்துவிக குணம்-உயிர் களுக்குரிய முக்குணங்களில் ஒன்று. சாத்துவிகம் ஞானமாம்.*

"நலங்கொளுஞ் சாத்துவீக ஞானமா மிராசதந்தான்
சலங்கொளக் கோபமாகுந் தாமத மஞ்ஞானங்காண்"

"சிட்டநல் லறிவுசாந்தஞ் சிருட்டியோ டின்பமற்றும்
சட்டென வீதல்தன்மந் தயாவிவை சாத்துவீகம்"
— மெய்மொழிச் சரிதை-தத்துவசிருட்டி.

*தாபதர் — தவமுடையவர். வேதாந்தம் — வேதத்தின் முடிந்த பொருளைக்கூறும் உபநிடதங்கள். இவை வேதசிரசு எனக் கூறப்பெறும். தவமாவது ஐம்புலன்களையும் அடக்கி மனதை ஒருநிலைப்படுத்திச் சிவத்தைத் தியானித்தல்.*

*ஐந்தெழுத்து — பஞ்சாட்சர மந்திரம். இது தம்மை ஓது வார்க்கு நன்னெறிகாட்டிச் சிவத்தில் சேர்ப்பது. மனத்தெழுதி — மனதில் பதிய வைத்து என்பதாம். "உள்ளக் கிழியின் உருவெழுதி" என்றதூஉம் காண்க.*

முனிவர்களுடன் கூடி உபநிடதங்களைப் பயின்று அவற்றி னுட் கூறும் உண்மைப் பொருள் பரமசிவனே யென்றறிந்து சிந்தித்தற்கரிய அகில உலக வடிவினனாகிய அப்பரமசிவனைச் சிந்தித்தற்கெளிதாகிய அவனது எழுத்துருவாகிய பஞ்சாட்சர மந்திர வடிவில் இடைவிடாது தியானித்துத் தவம்புரிந்தான் சரவணமுனிவன். இறைவன் பஞ்சாட்சர வடிவினனென்பதை

'' நாலாய மறைக்கிறைவ ரானார் போலும்
நாமவெழுத் தஞ்சாய நம்பர் போலும் ''
— அப்பர் திருவீழிமிழலைத் திருத்தாண்டகம்.

'' ஆடும் படிகேள்நல் லம்பலத்தா னையனே
நாடுந் திருவடியி லேநகரம் — கூடும்
மகர முதரம் வளர்தோள் சிமயம்
பகருமுகம் வாமுடியப் பார் '' — உண்மை விளக்கம் 32.

என்பவற்று லறிக:

'' செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுள் மந்திரமஞ் செழுத்துமே ''— என்றும்

'' நல்லக விளக்கது நமச்சி வாயவே ''— என்றும்

சைவத் திருமுறைகள் கூறுகின்றன வாகலின் சரவணமுனிவன் '' ஐந்தெழுத் தினையு மனத்தெழுதினன் '' என்க.

31. **வீற்றிருந்து மெய்ஞ்ஞான வமுதினைமென் மேலுண்டு**
**நோற்றிருப்பா னுள்ளுள்ளே நோக்குதலுந் தேக்குணர்வு**
**தோற்றுசிர கிரியிலதி சயந்தினைப்புற் றெழுமொழியை**
**யாற்றலுறக் காண்டுமென வவ்வுரையின் மீதுவந்தான்.**

**பொழிப்புரை:** சிறப்புறவிருந்து உண்மை ஞானமாகிய வமுதத்தினை மேன்மேலும் உண்டு தவவிரதத்தை மேற்கொண்டிருப்பவன் உள்ளத்தி னுள்ளே ஞானநோக்குற்றிருக்கவும்; புறத்தில் நிறைந்த ஞானம் விளங்கு கின்ற சென்னிமலையில் அதிசயங்கள் நிறைந்திருத்தலால் அவற்றைப் பற்றி உலகினரிடத்தே தோன்றும் சொற்களினுண்மைப் பொருளை உறுதி பொருந்த விசாரித்தறிவாமென்று அம் மொழியின்மேல் மனம் வைத்து வெளியில் வந்தான் என்றவாறு.

*விளக்கவுரை :* *திளைப்புற்று — அனுபவித்ததால், உலகத்தினரிடத்தே யென்பது இசையெச்சமாக வருவித்துரைக்கப்பட்டது. மொழி ஆகுபெயராய்ப் பொருளையுணர்த்திற்று. அவ்வரையின்மீது என்பது பிரதிபேதம். காண்டும் ஒருமையிற்பன்மை வந்தது. அதிசயந்தணையுற் றெழுமொழி என்பதும் பிரதிபேதம்.*

**32\. சில்போதில் அதிசயமே திளைப்பதன்றிப் பிறிதறிந்து**
**சொல்வோரு மின்றிமனந் துளங்கிவிதிர் விதிர்த்துநின்று**
**வெல்வேலர் திருவருட்கு முதற்குருவை விரும்பிமறை**
**சொல்வேலி யிடுந்திருவா வினன்குடியைத்**
**[தொழுதணைந்தான்.**

**பொழிப்புரை:** சில சமயங்களில் சென்னிமலையில் அதிசயங்கள் நிகழ்வதாகச் சொல்வதன்றி; அவ்வதிசயங்களை நேரிலறிந்து சொல்வோர் பிறரின்மையினுல் மனங்கலங்கி நடுக்கமுற்று நின்று; முருகக்கடவுளுடைய திருவருளால்தான் அறியமுடியுமென்று; பகைவரை வெல்கின்ற வேலையுடைய முருகக்கடவுளுடைய திருவருளைப் பெறுவதற்குக் காரணமாயுள்ள குருவையடைய விரும்பி; வேதங்கள் தம்முடைய சிறந்த சொற்களால் வேலியிட்டுத் துதிக்கின்ற திருவாவினன்குடியைக் கும்பிட்டுக்கொண்டு சேர்ந்தான். என்றவாறு.

*விளக்கவுரை :* *ஆசாரியன் மூலமே இறைவனருள் எய்த வேண்டுமாகலின் "வெல் வேலர் திருவருட்கு முதற்குருவை விரும்பி"—என்ருர். முதற்குரு என்றது ஈண்டு ஆவினன்குடியில் வீற்றிருக்கும் முருகக்கடவுளையாமென்க.*

"கொன்றைச் சடையார்க் கொன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழைப் பகர்வோனே" — திருப்புகழ் 47.

"ஓமெனுந் தாரக வொண்பொருள் சிவனுக்
காமென மொழிந்தே யருட்குரு வானேன்"
— திருச்செந்தூர் அகவல்.

"உழல்மதில் சுட்ட தழல்நகைப் பெருமான்
வணங்கிநின் றேத்தக் குருமொழி வைத்தோய்"
— கல்லாடம்.

*வேதமுதல்வனுகிய முருகக் கடவுள் விரும்பி வீற்றிருக்கும் படைவீடுகளுள் ஒன்ருகலின் ஆவினன்குடியை வேதங்கள் வேலி*

யிட்டுத் துதிக்கின்றனவென்க. வேலியிடுதல் என்பது காவல் செய்தல், சூழ்ந்து நிற்றல் எனினுமாம்.

33. சார்ந்துசிவன் மலையைவழி பாடுசுற்றித் தன்னொளிக்கண்
கூர்ந்துநனி விழித்துள்ளே குழைந்துபுலா திகள்வேறு
சோர்ந்து விழியாறுய்த் தூங்குதலும் பூங்கதம்ப
மார்ந்தபுய னனவினிற்சென் றடைந்தவன்போ
[லெதிர்நின்றே.

பொழிப்புரை: அங்கு சார்ந்து சிவன்மலை யென்னும் பழனிமலையை வணங்கி வலமாகச் சுற்றிவந்து, தனது அறிவாகிய ஒளிபொருந்திய ஞானக் கண்ணை மிகுதியும் கூர்ந்து விழித்து, உள்ளங் குழைந்து, தனது மனத்தின் வேறுகிய ஐம்புல வுணர்ச்சி முதலியனவும் சோர்வுற்றுப் புறக்கண் விழியா தவனுய்த் தூங்கிக்கொண்டிருக்கவும்; அழகிய கடப்பம் பூமாலையை யணிந்த முருகக் கடவுள் கண்விழித்திருக்கும்பொழுது நேரில் வந்தது போலக் கனவினில் சரவண முனிவனுடைய எதிரில் நின்று; என்றவாறு.

விளக்கவுரை: சிரகிரியின் மகிமையை அறிவிக்கும் குரு எதிர்ப்படாமையால் சோர்வுற்று, மனக்கண் விழித்துப் புறக்கண் மூடித் தூங்கினுன். கதம்பம் — கடம்பம். தோளில் மாலை சூடுதல் மரபாதலின் "பூங்கதம்ப மார்ந்த புயன்"—என்றுர். "ஆர்த்த பூங்கடம் பணிகொள் மொய்ம் பினுன்" — பரங்கிரிப் பதிற்றுப்பத்தந்தாதி. "திண்டோள் மிலைந்த பொன்மாலை யோடு" — சென்னிமலைப் புராணம். பழனிமலைக்குச் சிவகிரியென்றும்; அதனருகிலுள்ள இடும்ப மலைக்குச் சத்தி கிரியென்றும் பெயர். "பழனிச் சிவகிரி மீதினி லேவளர் பெருமாளே!" திருப்புகழ்—42.

34. "அந்தண! நீ யதிசயங்கேட் பதுநிமித்தந் தவம்புரிந்தாய்
நந்தமதி சயம்வரையு நமதுவரை ஞானகுணச்
சிந்தையனு தலினுனக்கே தினைப்பித்தாந் தினைத்தபடி
யந்தவரை யினிற்காட்சி தருது"மென வருள்புரிந்தான்.

பொழிப்புரை: "அந்தணனே! நீ சிரகிரியின் அற்புதங்களைக் கேட்டறிதலின் பொருட்டுத் தவம் செய்தாய் நம்முடைய அதிசயம் பொருந்திய நமது திருவாவினன்குடியைச் சார்ந்த மலையின்கண்

ஞானகுணமிகுந்த மனமுடையனுதலின் உனக்கு நமது திருவுருவக் காட்சியைக் கண்டனுபவிக்கும்படி செய்தோம். நீ கண்டனுபவித்தபடி அந்தச் சிரகிரியில் உனக்குக் காட்சி தருவோ'' மென்றருளிச் செய்தார்.

**விளக்கவுரை :** *நந்தம் — நம்முடைய. ஞானகுணம் — ஞானகுணமாகிய குணம். இருபெயரொட்டு. வரையும் என்றது பொருந்திய என்னும் பொருளில் வந்தது.*

35. தழுதழுத்து விழுந்தெழுந்து தடங்கண்ணீ ருருவிதர
வழுதழுது குடந்தம்பட் ''டடியேனை யாளாயோ?
பழுதுனக்குண் டோ? யாது தவம்புரிந்தேன்?''
[எனவுருகித்
தொழு ''தொருவிண் ணப்பமது சொல்வதுண்டு
[சுடர்வேலோய்!''

**பொழிப்புரை :** பேசுதற் கியலாதபடி நாத்தடுமாறிப் பூமியில் விழுந்து, வணங்கி யெழுந்துநின்று பெரிய கண்களிலிருந்து நீர் ருவி பொழிய மிகவும் அழுது கை குவித்துக் கும்பிட்டு, ''அடிமையாகிய என்னை யாட்கொள்வதால் உனக்குக் குற்றமுண்டாகுமோ? நான் முன்பு என்ன தவம் செய்தேன்? ஒரு சிறிதும் தவஞ்செய்யாதேனுயினேன்.'' என்று மனமுருகி நின்று, ''ஒளிபொருந்திய வேலையுடைய பெருமானே! உன்னைக் கும்பிட்டுச் சொல்லிக் கொள்வதொரு விண்ணப்ப முண்டு'' என்றவாறு.

**விளக்கவுரை :** *தழுதழுத்து — நாத்தடுமாறி — இரட்டைக் கிளவி. அழுதழுது—அடுக்குத் தொடர். குடந்தம்பட்டு—வழிபட்டு*

''குடந்தம்பட்டுக் கொழுமலர் சிதறி''
திருமுருகாற்றுப்படை — 229.

*கைகுவித்து மெய்வளைத்துச் செய்யும் வழிபாடு குடந்தம் என்பர்.*

''குடந்தம் பட்டெதிர் நின்றிடுங் கோக்குலத்தரசன்''
— காஞ்சிப்புராணம். கழுவாய்—66.

*தழுதழுத்தல் முதல் குடந்தம்படல் ஈருகவுள்ளவை அன்பின் மெய்ப்பாடுகளாம். முன்பிறப்பில் ஒருதவமும் செய்யாதேன் உன்காட்சி பெறுதற்கு என்ன பெருந்தவம் புரிந்தேனே? வென்பான் ''யாதுதவம் புரிந்தேன்'' — என்றான்.*

36. "அவ்வரையின் மான்மியமே நாயடியேனறிந்திடுமா
றெவ்வழித்"தென் றிறைஞ்சுதலும், "எழிற்காஞ்சி
[புரத்தினிடைச்
செவ்வழித்தேன் பயில்கடுக்கைச் சிவபெருமான்
[சினகரத்துட்
சைவநெறிச் செப்பேட்டி லுள்ளதுசார்ந் தறிதி"என்றான்.

பொழிப்புரை: "அந்தச் சிரகிரியின் மகிமையை நாய்போலும் அடிமைத் தன்மையுடைய நான் அறிந்திடுவது எவ்வழியில்?"— என்று விண்ணப்பித்து வணங்கவும்; "அழகிய காஞ்சி புரத்தினிடத்தில் செவ்வழி யென்னும் பண்ணைத் தேன்வண்டுகள் பாடுகின்ற கொன்றைமலர் மாலை யணிந்த சிவபெருமான் வீற்றிருக்கின்ற கோவிலினுள்ளே சைவசமய நூல்கள் எழுதி வைக்கப்பெற்ற செப்பேட்டிலுள்ளது; அங்குச் சென்று அதனை யறிவாய்." என்றருளிச்செய்தார். என்றவாறு.

விளக்கவுரை: மான்மியம்—மகிமை.

"தேவிமான்மியஞ் செந்தமிழாற் சொல."
— தேவி மான்மியம். காப்பு-1.

நாயடியேன்—நாய்போலும் விசுவாசமுடைய அடிமைத்தன்மை யுடையேன்.

"எறிந்த வேல் தைத்தாலும் வால்குழைக்கும் நாய்" —நாலடியார்.

நாய்போன்ற இழிவுத்தன்மையுடையவன் எனினுமாம்

"நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்கு"
— திருவாசகம் சிவபுராணம் - 60.

செவ்வழி—நெய்தல் நிலப் பண்.

"சேக்கை நல்லியாழ் செவ்வழி பண்ணி"
— கொங்குவேள் மாக்கதை 33-99.

"செவ்வழிப் பண்ணிற் சிறைவண் டரற்றும்" — சிலம்பு.

தேன்—வண்டு.

"தேனென்ப நறவும் வண்டும், தித்திப்பென் றறைதல் முப்பேர்"
— அரும்பொருள் விளக்கம் 678.

கடுக்கை—கொன்றை மலர். சினகரம்—கோவில்.

காஞ்சி, தொண்டை நாட்டில் தலைமை பெற்று விளங்கும் திருநகர மாதலினாலும்; பாரத நாட்டிலுள்ள மிகவும் அழகு பொருந்திய அயோத்தி, மதுரை, மாயை, அவந்திகை, காசி, காஞ்சி, துவாரகை என்னும் புண்ணிய நகரங்கள் ஏழனுள் ஒன்றாகலானும்; அம்பிகை ஆறு சமயங்களையும் அறங்கள் முப்பத்திரண்டனையும் வளர்த்து வீற்றிருக்கின்ற அழகிய ஆதிபீடமாகிய காமகோடி பீடத்தினையுடையதாகலானும் அதனை "எழிற்காஞ்சிபுரத்தினிடை" என்றார்.

சைவநெறி யென்றது சைவ நெறி கூறும் நூல்களுக்குப் பெயராயிற்று. சைவ நெறி யென்பது வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம் என்னும் உட்சமயங்கள் ஆறனுள் மேலானதாகிய சைவ சமயமாம். அது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், உயிர் என்னும் எட்டு வடிவங்களில விளங்கிப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும் புரிந்து உயிர்களின் துயரத்தை மாற்றித் தன்னில்வேறு தானொன்றில்லாமல் விளங்குகின்ற சிவன் என்னும் பரம்பொருளை வழிபட்டுய்யும் நெறி கூறுவதாம்.

சிவனை வழிபடும் நெறிகள் நான்காம். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. முறையே இந்நெறியில் நிற்போர் பெறும் பயன்கள் நான்காம். அவை சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியமென்னும், பேரின்ப நிலைகளாம். சைவநெறி கூறும் நூல்கள் சிவாகமங்களும் புராணங்களுமாம். முற்காலத்தில் முனிவர்கள் காலபேதத்தால் இந்நூல்கள் அழிவுறாதபடி செம்புத்தகடுகளில் எழுதிக் காஞ்சிபுரத்துக் கோவிலின்கண்ணுள்ள மண்டபமொன்றில் வைத்துப் பூட்டிப் பத்திரப்படுத்தினார்கள். ஆதலின், "காஞ்சிபுரத்தினிடைச்......சைவநெறிச் செப்பேட்டிலுள்ளது சார்ந்தறிதி" யென்றார்.

**37. செய்யவுளக் கண்பரப்பித் தூங்கினேன் திரும்பிமிக**
**வையகநோக் குபுவிழித்து மதனுதி வழிமறித்து**
**"மையனெனக் கருளியவா றதுபுரிவல்" எனக்கருதி**
**மெய்யுணர்வு கெழுமுதிரு விருந்தபுரம் மேவினனால்.**

பொழிப்புரை : செம்மையாகிய உள்ளக்கண் விழித்துத் தூங்கின வனுகிய சரவண முனிவன் மிகவும் மனம் வேறுபட்டுப் பூமியை நோக்கி விழித்துப் பார்த்துக் "காமம் முதலிய உட்பகைகள் தடைசெய்தும் முருகப் பெருமான் என்னிடம் வந்து அருள்செய்த விதமே அதனைச் செய்வேன்" என்று நினைத்து மெய்மையாகிய ஞானம் நிறைந்த திருவிருந்த புரத்தை யடைந்தான். என்றவாறு.

விளக்கவுரை : உளக்கண் விழித்துப் புறக்கண் மூடித்தூங் கினன் என்பார் "உளக்கண் பரப்பித் தூங்கினேன்"-என்றூர். தூங்கினேன்—வினையாலணையும் பெயர். மதநூதி நெறிகள் ஆறு. அவை காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் என்பனவாம். இவை உள்ளிருந்தே பகைவர்போல் நன்மையை யடைய வொட்டாது தடைசெய்தலால் இவற்றை உட்பகை யென்பர். இப்பகைகள் தடைசெய்தும் முருகப் பெருமான் அத்தடைகளைக் கடந்து வந்து அருள் செய்தது அதிசயமாம் என்பார் "ஐயனெனக் கருளியவாறு"—என்றூர்.

"ஐயனெனக் கருளியவா ருர்பெறுவார் அச்சோவே"—திருவாசகம்.

புரிவல்—புரிவேன். தன்மையொருமை வினைமுற்று.

சிவதல வாசம் செய்வோருக்குச் சிவஞானம் உண்டாகும் என்பதனை யுட்கொண்டு "மெய்யுணர்வு கெழுமுதிரு விருந்த புரம்"— என்றூர்.

38\. பெற்றவா முற்றவர்பாற் பெறமொழிந்து சிரகிரியின்
பற்றுமனத் தெழுதியந்தப் பருப்பதத்தை வணங்கிநின்று
"கொற்றநெடுந் தனிவடிவேற் குழவனி யருளியவா
றிற்றைஞான் றேகின்றேன்" எனமலர்க்கை
[குவித்தகன்றுன்.

பொழிப்புரை : ஆவினன் குடியில் முருகன் அருள்பெற்ற விதம் முழுமையும் அவ்வூரிலுள்ளவருடன் பொருந்தச் சொல்லி மனதில் சிரகிரி யினிடத்தில் அன்புவைத்து அம்மலையை வணங்கி நின்று, "வெற்றியை யுடைய நீண்ட ஒப்பற்ற கூர்மை பொருந்திய வேலையுடைய முருகப் பெருமானே! நீ அருள் செய்த விதமே இன்றையத் தினம் காஞ்சிபுரம் செல்கின்றேன்." என்று சொல்லிப் பின்பு மலர் போன்ற கைகளைக் குவித்துக் கும்பிட்டுப் போனுன். என்றவாறு.

விளக்கவுரை : பெற்றவாறு என்பது பெற்றவா எனவாகி யது தொகுத்தல் விகாரம். முற்று—முற்றும் என்பதன் முற்றும்மை தொக்கது. அவர் என்னும் பலர்பாற் சுட்டுப்பெயர் திருவிருந்த புரத்துவாழ் அறிஞரைச் சுட்டிற்று. குழவ—அண் மைவிளி. குழவன்—குழவென்னும் இளமைப் பொருளுணர்த் தும் உரிச்சொல் லடியாகப் பிறந்த பொருட்பெயர்.

'' மழவுங் குழவு மிளமைப் பொருள ''
— தொல்காப்பியம் உரியியல் 14.

காஞ்சிபுரம் என்பதனை இசையெச்சமாக வருவித்துக்கொள்க.

39. புலன்களும் மனுதிகளும் பொருந்தியொரு வழிகாட்டத்
தலங்களுமற் றுளபிறவுந் தனைந்துதனைந் தகன்றுபோய்
நலங்கிளறும் இமயவல்லி நாடொறுமா தவம்புரிந்து
கலந்தறனென் னுன்கியற்றுங் காஞ்சிபுரந்
[தனையடைந்தான்

பொழிப்புரை: ஐம்பொறிகளும், மன முதலிய அகக்கருவிகளும் ஒன்றுபட்டு ஒருவழிகாட்டச் சிவதலங்களும் மற்றுமுள்ள பிறவிடங்களும் ஆகியவற்றை நீங்கிச்சென்று அழகுடன் விளங்குகின்ற காமாட்சிதேவியார் பொருந்தவிருந்து முப்பத்திரண்டறங்களையும் செய்கின்ற காஞ்சிபுரத்தினை யடைந்தான். என்றவாறு

விளக்கவுரை : புலன் ஆகுபெயராய்ப் பொறிகளை யுணர்த் திற்று. மனுதிகள்—மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அகக்கருவிகள். பொறிகளும் மனமும் ஒருவழிப் பட்டாலன்றிக் குறித்தவிடத்திற் செல்லுதல் இயலாதாகலின் ''புலன்களும் மனுதிகளும் பொருந்தி யொரு வழிகாட்ட''—என்றார். தணந்து —நீங்கி. இமயவல்லி—காமாட்சிதேவி. உமாதேவியார் காஞ்சிபுரத்தில் சிவபெருமானைப் பூசித்து இருநாழி நெற்பெற்று இல்லற தருமத்தை விருத்தி செய்யவேண்டும் என்னும் கருணை யினுல் உலக வுயிர்கள் பெருகும்படி காஞ்சிபுரத்திலுள்ள காமக் கோட்டத்தில் இருந்துகொண்டு முப்பத்திரண்டு அறங்களையும் செய்தருளினர் என்பது புராண வரலாறு. அவரியற்றிய முப்பத் திரண்டு அறங்களாவன:—

'' ஆதுலர் சாலையைய மறுசம யத்தோர்க் குண்டி
ஓதுவார்க் குணவுசேலை யுறுமேறு விடல்கா தோலை

மாதுபோ கம்மகப்பால் மகட்பேறு மகவ ளர்த்தல்
வேதைநோய் மருந்து கொல்லா விலைகொடுத் துயிர்நோய்
[தீர்த்தல்

கண்ணுடி பிறரிற்காத்தல் கன்னிகா தானங் காவே
வண்ணுர்நா விதரேசுன்ன மடந்தடங் கண்மருந்து
தண்ணீர்பெய் பந்தல்கோலத் தலைக்கெண்ணெய் சிறைச்சோருேடு
பண்ணுன விலங்கூ ணல்கல் பசுவின்வா யுறைகொடுத்தல்

அறவையாம் பிணமடக்க லறவைத் தூரியம் வருந்தா
நிறுவியே யிடம்விடாமல் நிறையத்தின் பண்ட நல்கல்
உறுதியா வுரிஞ்சுகின்ற தறியிவை யோது மெண்ணுன்
கறநிலை யபிதானங்க ளம்பிகை செய்யு மாறே''

— சூடாமணி நிகண்டு.

40. சென்றிமவான் மகடழுவக் குழைந்தபிரான் சேவடியை
நின்றிருநான் குறுப்புமிக நிலனுறத்தாழ்ந் தெழுந்தேத்தி
மன்றலர்தூ யாகமத்தின் வழியின்வழி பாடாற்றி
யின்றடியேன் குறித்துவந்த தெளிதினினல் குதியென்றே.

பொழிப்புரை : காஞ்சிபுரத்தில் சென்று இமயமலையரசன் மகளாகிய உமாதேவியானவர் தம்முடைய இரண்டு திருக்கரங்களாலும் தழுவத் தமது திருமேனி குழைந்த சிவபிரானுடைய செம்மையாகிய திருவடிகளை அன்புடன் நின்று எட்டுறுப்புக்களும் நிலத்திற் பொருந்த மிகுதியும் வணங்கியெழுந்து நின்று தோத்திரம் செய்து மணம் பொருந்திய மலர்களைத்தூவிச் சிவாகமங்கள் கூறும் வழியில் வழிபாடு செய்து ''இன்றையத் தினம் அடிமையாகிய நான் கருதிவந்த காரியத்தை (பொருளை) எளிதாகக் கிடைக்கும்படி தந்தருள்வாய்'' என்று சொல்லி. என்றவாறு.

விளக்கவுரை : *திருமேனி குழைந்த வரலாறு:– உமாதேவியார் காஞ்சிபுரத்திலுள்ள கம்பை நதிக்கரையில் சிவலிங்க பூசனை செய்துகொண்டிருக்கும்பொழுது கம்பாநதி பெருக்கெடுத்துக் கரைபுரண்டு வரவும் உமாதேவியார் அச்சமுற்று மாவடியிலுள்ள சிவலிங்கப் பெருமானைத் தழுவிக்கொண்டார். அப்பொழுது தேவியாரின் முலைத்தழும்பும், கைவளைத் தழும்பும் தம்மேற் படும்படி சிவபெருமான் தம் திருமேனி குழைந்து காட்டினுர்.*

''வடவரை குழைத்ததோர் பவள மால்வரை
முடிவொடு முதலிலா மாவின் மூலத்து

மடநடை யிளங்கொடி வளைக்க ரத்தொடு
குடமுலைக் கம்மவோ குழைந்து காட்டிற்றே.''

— காஞ்சிப் புராணம்.

*இருநான்குறுப்பு:— இரண்டு கால், இரண்டு கை, இரண்டு தோள், நெற்றி, மார்பு என்னும் எட்டுறுப்புக்கள். எட்டுறுப்பு நிலத்தில் தோய வணங்குதல் அட்டாங்க வணக்கமாம். குறித்து வந்தது என்றது சிரகிரியின் மகிமையை.*

41. போற்றிவிடை கொண்டுபுறம் போந்துபுரி தவங்கள்பல
வாற்றினர்கண் மடங்கடொறு மடைந்தடைந்து
[வைகிமறை
சாற்றுமுதுக் குறைவினிரித் தலத்தினிற்செப் பேடுண்டாந்
தேற்றுமனத் தினனுக வதன்றிறமை செப்புமென.

*பொழிப்புரை :* துதித்து விடைபெற்றுக் கொண்டு கோவிலுக்கு வெளியே வந்து விரும்புதற் குரிய தவம் பல புரிவோர் வாழும் மடங்கள் தோறும் சென்று சென்று அவ்வவ் விடங்களில் தங்கியிருந்து (அங்குள்ள மறையவர்களைநோக்கி) ''சிறப்பாகச் சொல்லப் படுகின்ற வேதங்களை யறிந்த அறிவின்மிக்க பெரியோர்களே! இக் காஞ்சித் தலத்தில் செப்பேடுகள் உள்ளனவாம். நான் தெளிந்த மனமுடையவனுகும்படி அதன் தன்மையைச் சொல்லுங்கள்'' எனக்கேட்கவும். என்றவாறு.

*விளக்கவுரை : முதுக்குறைவினர்—பண்படியாகப் பிறந்த முன்னிலைப் பொருட்பெயர்.*

42. ''உண்டுகெதி தடத்திஞே ருழிச்செப்பே டுறையுமறை
பண்டுளதென் றருமறையோர் பகர்மொழிகேட்
[டறிந்ததல்லாற்
கண்டறியோங் காணுத தெல்லாமுங் காஞ்சிதனில்
அண்டர்பிரா னருளிலுண்டிங் கதுநிகழ்ந்த
[தறிவின்மிக்கோய்''!

*பொழிப்புரை:* மடங்களிலுள்ள தவப்பெரியோர்கள் (சரவண முனிவனை நோக்கி) ''அறிவின் மிக்கவனே! (கோயிலின்கண்) உள்ளதாகிய (சுற்றுப் பிரகாரத்தின்) நடைவழியிலுள்ள ஓரிடத்தில் செப்பேடுள்ள

அறையொன்று பழமையாகவுள்ளதென்று அந்தணர் சொல்லிய வார்த்தை களைக் காதினுற் கேட்டதல்லாமல் யாம் பார்த்தறியோம். சிவபெருமான் திருவருளினுல் காஞ்சிபுரத்தில் பிறவிடங்களில் கண்டறிய முடியாத அதி சயங்களெல்லாமுண்டு. அவ்வதிசயம் முன்பு நிகழ்ந்தது ''—(என்றனர்) என்றவாறு.

*விளக்கவுரை : காணுதது—எதிர்மறை வினையாலணையும் பெயர். அதிசயங்கள் மிகுந்த தலம் காஞ்சிபுரமாகலின், ''காணுத தெல்லாமுங் காஞ்சிதனிலுண்டு ''—என்றுர். அவ் வதிசயம் நிகழ்தற்குக் காரணம் சிவபிரான் திருவருள் என்பார். '' அண்டர்பிரான் அருளில் ''—என்றுர்.*

'' பாட்டினி லடங்காக் காஞ்சியின் பெருமை ''

— என்பர் கச்சியப்பர்.

'' காணுத வதிசயங் காஞ்சிபுரத்தில்
காணுத கதையெலாங் கந்தபுராணத்தில் ''

— என்பது உலகவழக்கு.

43. தமர்மொழிந்த மாற்றமது கேட்டலுந்தா னுளங்கவன்று
குமரகோட் டந்தனிற்போய்க் குமரனைவந் தனையாற்றி
'' யமரர்கோ வே!யெனையாட் கொண்டதுல கறிவிப்பக்
கமழ்குரவ! செப்பேடு காட்டெனப்போற்
[றெருடுமுறைகால் ''

*பொழிப்புரை :* தம்மவராகிய தவத்தினர் கூறிய சொற்களைக் கேட்ட சரவண முனிவன் மனதில் கவலையுற்றுக் குமரகோட்டமென்னும் முருகன் கோவிலுக்குச் சென்று வணங்கி வழிபாடு செய்து, '' தேவர் தலைவனே ! மணங்கமழும் குரவம்பூமாலையை யணிந்தவனே ! என்னை நீ அடிமை கொண்டதை உலகிற்கு அறிவிக்கும்பொருட்டுச் செப்பேட்டினைக் காட்டுவாய்.'' என்று துதித்தலைச் செய்து அங்கு வாழ்கின்ற காலத்தில். என்றவாறு.

விளக்கவுரை : *தமர்—தம்மவர் (மறையோர்)-தமர்-கிளைப் பெயர். குமரகோட்டம்—காஞ்சியிலுள்ள முருகனது கோவில்*

'' கோவில் கொண்டருளின் வைகுங் குமரகோட்டத்து மேயோன் ''

— கந்தபுராணம்.

*செப்பேடு கிடைக்குமோ கிடைக்காதோ என்னும் ஐயத்தால் கவலையுற்றன் என்க. முருகன் தன்னை ஆட்கொண்டது உண்*

மையென்பதை உலகினர் அறியும்பொருட்டுச் செப்பேடு காட்ட வேண்டும் என்று வேண்டினன். 'கமழ்குரவ' என்பதற்குத் தெய்வ மணங்கமழுகின்ற குருவாயுள்ளவனே யெனினுமாம்.

44. சில்பகற்சென் றிடவொருநாட் செவ்வேற்சேய் [திருவருளால்
நல்வளங்கூர் திருக்காஞ்சி நகருறைநான் மறைத்தலைவர்
"தொல்பதியிற் சேமித்த செப்பேடு சோதிப்ப
வெல்லவரும் வம்மி"னென வறைதிறந்தாங் [கெடுத்துவந்தே.

பொழிப்புரை: சிலநாள் கழியவும், ஒருநாள் செம்மையாகிய வேலையேந்திய முருகக்கடவுளின் திருவருளால் நல்லவள மிகுந்த காஞ்சிபுரத்தில் வாழ்கின்ற நான்கு வேதங்களையும் கற்றுத்தலைமையுற்ற அந்தணர்கள் "பழமையாகிய கோவிலிற் சேர்த்து வைத்துள செப்பேட்டினைப் பரிசோதனை செய்வதற்கு நகரிலுள்ள அனைவரும் வாருங்கள்." என்று சொல்லிக் கோவிலின் கண்ணுள்ள அறையைத் திறந்து அச்செப்பேடுகளை யெடுத்துக் கொண்டுவந்து. என்றவாறு.

விளக்கவுரை: செவ்வேற்சேய்—செந்நிறமுடைய வேலாற் பெயர்பெற்ற சிவந்த மேனியராகிய முருகக் கடவுள்.

"எய்யா நல்லிசைச் செவ்வேற்சேய்"— திருமுருகாற்றுப்படை.

45. ஆயவற்றுக் கபிடேகம் புரிந்துபூ சனையாற்றி
மாயிருஞா லத்துள்ளோ ரியாவரையும் வருவித்து
நாயகமண் டபத்திலிருந்து நவின்மொழிகேள் [வியினறிந்து
மேயசர வணமுனிவன் உவகைவே லையிற்படிந்தான்.

பொழிப்புரை: அச்செப்பேடுகளுக்கு அபிடேகம் செய்து (கழுவி) பூசை புரிந்து, மிகப்பெரிய பூமியிலுள்ளோரனைவரையும் வரவழைத்துத் தலைமையாகிய முன்மண்டபத்திலிருந்து படிக்கின்ற செய்தி (யைக்) கேள்வியாலறிந்து சென்ற சரவண முனிவன் மகிழ்ச்சியாகிய கடலினுள் மூழ்கினன் என்றவாறு.

விளக்கவுரை: மாயிரு—எதுகை நோக்கி யகர உடம்படு மெய்யேற்றது. ஒருபொருட்பன்மொழி. நாயகமண்டபம்—மகாமண்டபம் எனினுமாம். உவகைவேலை—உருவகம். காஞ்சியிலுள்ள மறையவர்கள் முன்பு சேமித்து வைத்திருந்த செப்பேடுகளைப் பரிசோதனை செய்தலின்பொருட்டு எடுத்துவந்து அறிஞர்கள் எல்லோரையும் வருவித்துக் கேட்கும்படி படிக்கின்ற செய்தியைக் கேள்வியாலறிந்த சரவண முனிவன் அடைந்த அளவில்லாத மகிழ்ச்சியின் மிகுதியைக் கடலாக உருவகம் செய்த ஆசிரியர் "உவகை வேலையிற் படிந்தான்" என்றார்.

46. ஆடினன்கூத் தங்கைகொட்டி அகமகிழா [மயிர்பொடிப்பப்
பாடினன்வேற் கிறைசீர்த்தி பாடியடி மலர்சென்னி
சூடினன்கண் ணீரருவி சொரிதரச்சூழ் வலங்கொண்டு
நாடினன்செப் பேடுபடிப் பவரவையை நணுகலுற்றான்.

பொழிப்புரை: மகிழ்ச்சியினால் கூத்தாடியும் அழகிய கைகளைக் கொட்டியும், மனதில் மகிழ்ச்சியுற்றும், உடம்பிலுள்ள மயிர்கள் சிலிர்க்கவும்; வேலையேந்திய முருகக்கடவுளின் கீர்த்திகளைப் பாடினான். முருகனைப் பாடி அவனுடைய திருவடி மலர்களைச் சிரசினிற் சூடினான். பின்பு மகிழ்ச்சியினால் கண்ணீரானது அருவியாகச் சொரியும்படி கோயிலை வலமாகச் சுற்றி வந்து விருப்பமுடையவனாய்ச் செப்பேடு படிப்பவர் கூடியுள்ள சபையினிடத்தையடைந்தான் என்றவாறு.

விளக்கவுரை: முன்பு முருகப் பெருமான் அருள் செய்தபடி காஞ்சியில் செப்பேடு காண நேர்ந்தமையால் அம் முருகனின் திருவருளை வியந்து அவனது கோவிலை வலமாகச் சுற்றி வழிபட்டான் என்க. கூத்தாடுதல் முதலியன மகிழ்ச்சியினால் உண்டாகிய மெய்ப்பாடுகளாம். அங்கை—உள்ளங்கை யெனினுமாம்.

47. அச்சபையை வணங்கியொரு சாரிருந்தா னாய்ந்தாய்ந்து
முச்சகமெய் தியதலத்தின் காதைமுறை பலகேட்டான்
எச்சரிதை யுஞ்சிலநாட் கேட்பளவில் இகல்வடிவேற்
செச்சையங்கண் ணியன்சரிதை செப்புவான் [தொடங்கினரால்.

*பொழிப்புரை:* செப்பேடு படிக்கின்றோர் கூடியுள்ள அந்தச் சபையை வணங்கிக் கொண்டு ஒரு பக்கத்திலிருந்தான். மிகவும் ஆராய்ந்து சொல்லிய மூவுலகத்திலுமுள்ள தல சரித்திரங்கள் பலவற்றையும் முறையாகக் கேட்டான். எல்லாத் தல சரித்திரங்களையும் சில நாளளவில் கேட்டுக் கொண்டிருக்கும்பொழுது வலிமையும் கூர்மையும் பொருந்திய வேலையேந்தியுள்ள வெட்சிப்பூமாலையணிந்த முருகப்பெருமானுடைய தலசரிதங்களைச் சொல்வதற்கு (படிப்பதற்கு) ஆரம்பித்தார்கள்.

*விளக்கவுரை: முச்சகமெய்தியதலம்—சேர, சோழ, பாண்டியமென்னும் மூன்று நாடுகளிலுமுள்ள தலங்கள் எனினுமாம். செச்சையங்கண்ணியன்—வெட்சிப்பூ மாலையணிந்தவன்.*

''கச்சினன் கழனினன் செச்சைக் கண்ணியன்''

— திருமுருகாற்றுபடை 208.

48. சூரன்முத லியர்த்தொலைத்த சுடரிலைவேற் குழவனென்று
மாரமலி பரங்கிரிசீ ரலைவாயா வினன்குடிமற்
றேரகம் குன்றுதோ ரூடல்பழ முதிர்சோலை
பேரமர்மூ விருதலனும் பிறழாம லுறைதருமால்.

*பொழிப்புரை:* சூரபன்மன் முதலிய அசுரர்களைக் கொன்ற ஒளி பொருந்திய இலைவடிவமைந்த வேலையேந்திய முருகக் கடவுள், சந்தன மரங்கள் நிறைந்த திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் ஆவினன்குடி, திருவேரகம், குன்றுதோரூடல், பழமுதிர்சோலை என்னும் ஆறு தலங்களிலும் எப்பொழுதும் நீங்காமல் வாசம் செய்வான்.

*விளக்கவுரை: சூரன் முதலியர்—சூரபதுமன், சிங்கமுகன், தாரகன் முதலிய அசுரர்கள். இவர்கள் காசிபருக்கு மாயையினிடமாகப் பிறந்தவர்கள். தேவர்களைக் காப்பதற்கு முருகக் கடவுள் சூரன் முதலிய அசுரர்களை வேல் என்னும் சக்தியாயுதத்தால் அழித்தார்.*

''பார்முதிர் பணிக்கடல் கலங்கவுள் புக்குச்
சூர்முதற் றடிந்த சுடரிலை நெடுவேல்''

— திருமுருகாற்றுப்படை 45, 46.

*குழவன்— இளமையுடையவன். குளவன்—பிரதிபேதம்.*

முருகக் கடவுள் பரங்குன்றம் முதலிய ஆறுதலங்களிலும் படைகளுடன் இருந்து சூரன் முதலிய அசுரர்களைச் சங்கரித்தார் என்பர்.

"குன்றுதோ ருடல்பரங் குன்றலைவா யேரகஞ்சீர்
துன்றுபழ முதிர்சோலை தொகுமாவி னன்குடியாய்த்
தானவரை வேரறுத்துச் சயந்தனுறு துயர்நீக்கி
வானவரைப் புரந்துசசி மங்கிலியந் தந்தளித்தோய்"
— தணிகைக் கலம்பகம்.

முருகக் கடவுள் தேவசேனைகளுடன் வீற்றிருந்த இடங்களைப் படைவீடென்பர். இவ் வாறுதலங்களையும் ஆறுபடைவீடென்றும்; அவற்றை நாடோறும் கூறுவோர் சிறந்த பேறு பெறுவர் என்றும் கூறுவர்.

"ஆறுபடைவீடு, வீறுமனதோடு, கூறுமடியார்கள்,
பேறுபெறுவாரே" — திருமுருகாற்றுப்படை.
— கவிப்பெருமாள் உரை ஏட்டுச்சுவடி.

"வித்தக வீரன் விறற்படை வீடென்"
— எனக் கொங்குவேள்மாக்கதையில் படைவீடென்னும் இச்சொல் பயின்றுவருதல் காண்க.

ஏரகம்—திருச்செங்கோடு. பழமுதிர்சோலை—அழகர் மலையின் மேற்பகுதி. சூரசங்காரத்திற்குப்பின் முருகக் கடவுள் சேனைகளுடன் தங்கியிருந்த இடங்கள் ஆதலின் பரங்குன்று முதலிய ஆறுதலங்களும் படைவீடு எனப் பெயர்பெற்றன வென்பாரு முளர்.

49. ஆங்கவற்றுள் வளர்தமிழ்நாட் டகத்துவட பாற்றணியல்
ஓங்கலினும் தென்றிசையில் உயர்சிகர கிரிமீதும்
பூங்குரவன் குன்றுதோ ருடல்வகை பூதலத்தில்
நீங்கரிதாய் வைகுமென நிகழ்த்தினர்மற் றதுகேளா.

**பொழிப்புரை:** அத்தலங்களினுள் குன்றுதோருடல் வகையிலமைந்த தமிழ்வளர்கின்ற நாட்டின் வடபாகத்திலுள்ள தணிகை மலையின் கண்ணும்; அதன் தென்றிசையிலுள்ள உயர்வாகிய சென்னிமலையின்

மேலும் குராமலர் மாலையை யணிந்த முருகக்கடவுள் நீங்குதலில்லாமல் வாழ்வான் என்று படித்தனர். அவர் படித்ததைக் கேட்டு. என்றவாறு.

**விளக்கவுரை:** *முருகனுக்குரிய மாலைவகைகளுள் குரவம் பூ மாலையும் ஒன்று ஆதலின் பூங்குரவன் என்றார்.*

"குராப்புனை தண்டையந் தாளருள்வாய்";

"குராப்புனை தண்டையந் தாள்தொழல் வேண்டும்"

— கந்தரலங்காரம்.

*தணியல்—திருத்தணிகை மலை. தணிகை முதலிய மலைகள் குன்று தோறாடலாம் என்பர்.*

"தணிகையாதிப் பூவுல குள்ளவெற்பில் பொற்புறு மேனைவைப்பிற்
கோவில்கொண் டருளின்வைகும் குமரகோட் டத்துமேயோன்"

— கந்தபுராணம்.

*நிகழ்த்தினர்—சொல் நிகழ்த்தினர்; படித்தனர். கேளா—செய்யா வென்னும் வாய்பாட்டு வினையெச்சம்; கேட்டு.*

50. சரவணமா முனியெழுந்து தழுதழுத்து விதிர்விதிர்த்துப்
பரவசனாய்ப் புரிந்ததவப் பயனைமனந் தனிற்றெரிந்து
சிரமிசைக்கை முடித்தழுது சேமநிதிப் பொருள்காணான்
கரமிசைபெற் றேனுவகைக் கடலினுக்கோர் [கரைகாணான்.

**பொழிப்புரை:** பெருமை பொருந்திய சரவண முனிவன் எழுந்து நின்று நாத்தடுமாறி நடுக்கமுற்று (தன்வசமற்று) பரவசனாய்த் தான் முன்புசெய்த தவத்தின் பயனை மனதிலறிந்து தலைமேற் கைகளைக் குவித்து அழுகையுற்றுத் தன் நல்வாழ்வுக்கான பொருளைக் கண்டறியாதவன் அப் பொருளைக் கையினிடத்துப் பெற்றதுபோலத் தான்கொண்ட மகிழ்ச்சியாகிய கடலினுக்கு ஓர் எல்லை (கரை) காணாதவனாயினான் என்றவாறு.

**விளக்கவுரை:** *தழுதழுத்து, விதிர்விதிர்த்து — இவை அன்பின் மெய்ப்பாடுகள். இவை இரட்டைக் கிளவிகள். தன் வசம் என்பதன் எதிர்மறை பரவசம். செப்பேட்டிலிருந்து சிரகிரி முருகன் பெருமை கேட்டற்குக் காரணமாயிருந்தது தான் முன்*

செய்த தவப்பயனும் என்பான் "தவப்பயனை மனந்தனிற் றெரிந்து"—என்றார். சேமநிதி—இன்பத்திற்குக் காரணமான பொருள் எனினுமாம். பெற்றேன் என்பதில் போல என்னும் உவமையுருபு தொக்கது. சென்னிமலையின் மகிமை தெரியாது வருந்திப் பின்பு காஞ்சியில் செப்பேட்டினின்றும் சிகரகிரியைப் பற்றிச் சொல்லக்கேட்ட சரவண முனிவனுக்குப் பொருள் காணாது வறுமையுற்றலைந்து பின் கையிற் பொருள் பெற்றேனை உவமை கூறினார். இது உவமையணி.

"இல்லார்க்குக் கிழியீடு நேர்பட் டாலென"

— திருவிளையாடற்புராணம்.

உவகைக்கடல் — உருவகவணி. சரவணமுனிவன் அடைந்த மகிழ்ச்சி அளவிடற்கரியதாகலின் அதனைக் கடலாக உருவகம் செய்தார்.

51. அன்னதுகண் டவையினுள்ளோர் அதிசயித்''தன்
[பினினீயார்?''
என்ன''வெனை யாளுடையார் இயைந்தகொங்கு
[நாட்டகத்துச்
சென்னிமலைச் சாரல்வைகுந் திருவிருந்த புரத்திருப்போன்
கொன்னெடுவேற் குமரனது கதைகேட்பான்
[குறித்துவந்தேன்.''

பொழிப்புரை: அச் சரவண முனிவனது மகிழ்ச்சியை யறிந்த சபையோர்கள் அதிசயமடைந்து சரவண முனிவனை நோக்கி "அன்பினை யுடைய நீயார்?"—என்று கேட்கவும்; சரவண முனிவன் "என்னை ஆளாகவுடைய முருகப்பெருமானுக்கு இயைபுடைய கொங்கு நாட்டின்கண் உள்ள சென்னிமலை முருகன் கதை கேட்பதற்குக் கருதி வந்தேன்" என்றான். என்றவாறு.

விளக்கவுரை: அன்னது—சுட்டடியாகப் பிறந்த பெயர்—மகிழ்ச்சி. எனையாளுடையார் என்றமையின் சரவண முனிவனுக்கு முருகக் கடவுளின்பாலுள்ள அன்பு புலப்படும். ஆளுடையாரியைந்த சென்னிமலை என்றமையின் முருகக் கடவுளுக்கு அம்மலை மிகவும் விருப்பமானது என்பதும்; கொங்குநாட்டகத்துச் சென்னிமலை யென்றமையால் அம்மலை கொங்கு நாட்டிற்குச் சிறப்புத்தரும் மலை என்பதும்; சாரல் வைகுந் திருவிருந்தபுரம்

என்பதனுல் திருவிருந்தபுரம் அம்மலையின் அருகிலுள்ளது என்பதும்; கதைகேட்பான் என்றமையின் முன்பு சரவண முனிவன் சென்னிமலையின் மகிமையைக் கேட்டறியாதவன் என்பதும்; குறித்து வந்தேன் என்பதனுல் அக்கதை கேட்டலில் அவனுக்குள்ள பெருவிருப்பமும் புலனுகும்.

**கொங்குநாடு**— தேன்நிறைந்த நாடு என்றும்; கொங்கன் ஆண்ட நாடு என்றும் பெயர்க்காரணம் கூறுவர். கொங்கின் கிளைநாடுகளாகிய பூந்துறை நாடு, காங்கேய நாடு முதலியன பூந்துறை, காங்கேயம் முதலிய தலைநகர்களால்பெயர்பெற்றமை போலத் தலைமை நாடாகிய கொங்குநாடும் "கொங்கு" என்னும் தலைநகரால் பெயர் பெற்றதென்பதே தக்கதெனத் தெரிகின்றது.

**கொங்கு :-** வைகாவூர் (வையாபுரி) நாட்டில் செல்லும் சிற்றுற்றின் கரையிலுள்ள மிகவும் பழமையான நத்தமாகத் திகழும் "கொங்கூர்" என்பதே கொங்கு என்னும் நகரமாம்.

"சேரர் கொங்குவை காவூர்நன் ஞட்டினில்"

— என்னும் திருப்புகழ் அடியிற் குறித்த கொங்கு என்பது நாட்டையன்றிக் கொங்கு என்னும் ஊரையும் குறிக்குமாறு அமைந்திருத்தலுங் காண்க.

52. "நோற்பருமா தவமுயன்ற நோன்பினுல் வந்தடைந்தேன்
நாற்பெருங்கேள் வியின்மிக்கீர்! நவைதீரச் சிரகிரியில்
தோற்றரவும் ஆற்றலுமாய்த் தொன்றுதொட்டு
[வருங்கதையைச்
சாற்றும்"எனச் சிரந்துளக்கி "சாற்றுதுங்கேட்
[குதி"யென்ருர்.

**பொழிப்புரை:** "பெருமை பொருந்திய நான்கு வேதங்களையும் மிகுதியாகக் கேட்டறிந்த பெரியோர்களே! பொறுத்தற்கரிய தவவிரதங் களை மேற்கொண்டு முயன்று செய்த பெருந் தவத்தால் உங்களிடம் வந்து சேர்ந்தேன். ஆதலினுல் புகழ் பொருந்தியதும் கேட்போருக்கு வலிமை தருவதுமாய்த் தொன்றுதொட்டு வருகின்ற சிரகிரி முருகன் கதையைச் சொல்லுங்கள்" என்று கேட்கவும்; மறையோர்கள் சிரமசைத்துச் (இசை வறிவித்துச்) "சொல்லுவோம் நீ கேட்பாய்" என்றனர் என்றவாறு.

**விளக்கவுரை:** *சரவண முனிவன் காஞ்சிவாழ் மறையவர் கலையடைந்ததற்குக் காரணம் தான் முன் செய்த கடுந்தவ விரதங்கள் என்பானுப் "நோற்பரு மாதவமுயன்ற நோன்பி றல் வந்தடைந்தேன்"—என்றுன். நாற்பெருங் கேள்வி—அறம், பொருள், இன்பம், விடு என்னும் நான்கினையும் பற்றிக் கூறும் நாற்கேள்வி யெனினுமாம். தோற்றரவு—தொழிற் பெயர்.*

"துன்பக் கதியிற் ரேற்றர வின்றி" — மணிமேகலை.

*தோற்றரவுமாற்றலுமாய் என்பதற்குச் சிரகிரியின் தோற்றத்தைக் கூறுவதாயும், ஞானத்தைத் தருவதுமாயும் எனவுரைத்தலு மொன்று. ஆற்றல்—ஞானம்.*

"ஆற்றலே பொறை முயற்சி அதிகமே வலியே ஞானம்"
— சூடாமணி நிகண்டு.

*சிரகிரி வரலாறு தற்காலத்தில் வழங்கும் புதுவது புனைந்த கற்பனையாகிய நவீனத்தைப் போலாகாது தொன்மை தொடங்கி வரும் உண்மைக் கதையாம் என்பார் "தொன்று தொட்டு வருங்கதையை"— என்றூர்.*

*செப்பேடு கண்ட மான்மியம் முற்றும்.*

*ஆகத் திருவிருத்தம்–52.*

# 2. சிரகிரி மான்மியம்.

1. அந்தனன் வதன நோக்கி
யருமறை முனிவர் சொல்வார்
மந்தர மதனி னுற்றல்
வழுத்துதற் கெளிதோ சூதன்
நந்தலின் முனிவர்க் கன்று
நைமிசா ரணியத் தோது
முந்தைநூற் புராண மீண்டு
வந்தது மொழிதும் கேட்டி.

பொழிப்புரை: சரவண முனிவனது முகத்தைப் பார்த்து அருமையாகிய வேதங்களை உணர்ந்த முனிவர்கள் சொல்வாராயினர்: "மந்தர மலையின் சிகரமாகிய சென்னிமலையின் பெருமை சொல்லுதற் கெளிதானதோ? சூதமுனிவரானவர் முன்பு கெடுதலில்லாத முனிவர்களுக்கு நைமிசாரணியம் என்னும் வனத்திற் சொல்லிய பழைய நூல்களாகிய புராணங்கள் இவ்விடத்திற்கு வந்ததைச் சொல்வோம் கேட்பாய்." என்றவாறு.

விளக்கவுரை: மேரு மலையினின்றும் தோன்றியது மந்தர மலை. மேரு மலையின் சிகரமாய் மந்தர மலை போன்று விளங்குவது சிரகிரியாதலின் அதனை "மந்தர" மென்றுர். நைமிசாரணியம் —தருப்பைக் காடு; இது இமய மலையை அடுத்துள்ளது; தவ சித்தியை எளிதில் தருவது. புராணம் — பதினெண் புராணங்கள். ஈண்டு—இடச் சுட்டுப் பெயர். காஞ்சிபுரத்தைக் குறிக்கின்றது.

2. முன்னைய யுகங்கண் மூன்று
முறைவளர் நெறியி னீடும்
பின்னையிக் கலியு கஞ்சொற்
பிறழ்ந்தறம் வழுவி யல்கு
மன்னவான் முனிவ ரெந்தை
யாகம புராண மெல்லா
மின்னகர் தனிற்செப் பேட்டில்
எழுதிவேற் றறையி லுய்த்தார்.

*பொழிப்புரை:* பழமையாகிய முதன் மூன்று யுகங்களும் நியாயம் வளர்தற்குரிய நல்வழியில் நிலைத்து நிற்கும் (மிகுந்து செல்லும்) அவற்றின் பின்பு வந்த இக் கலியுகமானது சொன்ன சொல் மாறுபட்டு அறத்தினின்றும் தவறி நியாயத்திற் குறைவுடையதா யிருக்கும் ஆதலால் அந்த மேன்மையாகிய நைமிச வனத்து முனிவர்கள் எம் தந்தையாகிய சிவ பெருமான் அருளிச் செய்த சிவாகமங்கள், புராணங்கள் ஆகிய எல்லா வற்றையும் (அழியாமலிருக்கும்படி) இத் திருக் காஞ்சிக் கோவிலில் செப் பேட்டில் எழுதி வேருகிய அறையொன்றினுள் வைத்தார்கள் என்றவாறு.

*விளக்கவுரை: இக் கலியுகத்தில் அந்தணர் முதலியோர் வேதாகம புராணங்களைக் கைவிடுவராதலின் அவைகள் அழியா மலிருக்கும் பொருட்டு முனிவர்கள் செப்பேட்டில் எழுதிக் காஞ்சித் திருக் கோவிலில் உள்ள அறை ஒன்றினுள் வைத்துப் பூட்டினுர்கள் என்பதாம். முன்னைய மூன்று யுகங்கள் : கிரேதா; திரேதா; துவாபரம் என்பன. கலியுகத்தில் அறம் வழுவும் என்பதனை*

"வேந்தன்றன் செங்கோல் விலங்கும் மிகுகுலத்தோர்
ஆய்ந்தவறங் கைவிட் டவத்தமாய்ச்—சாந்தமலி
பூமகளும் பொய்க்கும் புவிமகளும் தான்பொய்க்கும்
நாமகளும் பொய்க்கும் நயந்து."

"மாமறையோர் தங்கள் மரபொழிந்து மாமறைநூல்
தாமறியா ராகமத்தைச் சார்ந்தறியார்—மேவரிய
மாக மவுலிபுனே மன்னவனே மாவிந்தம்
போகவல்லார் போமின் புரிந்து"

"ஐயோ கலிகாலம் வந்தக்கால் மானிடர்க்குப்
பொய்யே வலிகொடுக்கு மாதலால் — துய்யபுகழ்
மன்றலருந் தார்த்தருமர் மண்மே லிருப்பரிதே
என்றருளிச் செய்தா ரெடுத்து"

– என்னும் பெருந்தேவனுர் பாரதப் பாடல்களால் அறிக.

"தரித்தி டார்மறை தம்மொடு சாத்திர புராணம்
பரித்த பாரத மிவற்றினை நொய்தெனப் பழிப்பர்"

— திருக்காளத்திப் புராணம்.

*வேதாகம புராணங்களை அருளிச் செய்தவன் சிவபிரானுகலின், "எந்தையாகம புராணமெல்லாம்"— என்றார்.*

3. எழுதுசெப் பேடு முன்னர்
எடுத்தது மிலையிப் போது
முழுதொருங் குணர்ந்தோர் சொற்ற
மொழிதிறம் பாதெ டுத்துப்
பழுதற வோதும் போதில்
வந்தனை பனவ செவ்வேட்
குழுவலன் புடையை யென்ப
துணர்ந்தனம் உணர்த்து மன்றே

**பொழிப்புரை:** முன்பு எழுதி வைக்கப்பெற்ற செப்பேட்டினை இதுவரையிலும் யாரும் எடுத்ததில்லை. இப்பொழுது நூல்கள் முழுவதையும் ஒருங்கு கற்றறிந்த பெரியோர்கள் சொல்லிய சொற்களின்படி மாறுபடாமல் எடுத்துக் குற்றமில்லாமற் படிக்கும் சமயத்தில் நீ வந்தாய். இதனால் அந்தணனே! நீ செந்நிற முடைய முருகவேளுக்கு விடாது தொடர்ந்த அன்புடையவனாய் இருக்கின்றாய் என்பதை அறிந்தோம். ஆதலின் உனக்கு அதனை அறிவிப்போம் என்றவாறு.

**விளக்கவுரை:** *பனவ—அந்தணனே, சரவண முனிவனே. அண்மைவிளி. கருவேள் என்னும் மன்மதனினின்றும் பிரித்துக் காட்டச் செவ்வேள் என்றார்.*

"கண்டேத்துஞ் செவ்வேள் என்று இசைபோக்கி" – சிலப்பதிகாரம்.

*உழுவல்—விடாது தொடர்தல்.*

"உழுவ லன்பின் உள்ளந் தாங்கி"
"உழுவ லன்பின் உதயண குமரன்" – கொங்குவேள் மாக்கதை.

4. செயிரறு முனிவர் விண்ணோர்
ஏனையோர் நெருங்கச் செங்கை
வயிரவாட் படையோ னோர்நாள்
மகிழ்ந்துவீற் றிருக்கு மேல்லை
யயிரிசை மகதி யாழ்நா
ரதன்முகம் நோக்கி யங்கண்
மயர்வறு சிறுபுன் மூரல்
வழங்கியோர் மாற்றஞ் சொல்வான்.

*பொழிப்புரை :* குற்றமற்ற முனிவர்களும் தேவர்களும் மற்றுமுள்ளோர்களும் நெருங்கியிருக்கச் செம்மையாகிய கையில் வச்சிரமென்னும் வாட் படையை யுடைய தேவேந்திரனனவன் ஒருநாள் மகிழ்ச்சியுற்றுத் தேவ சபையில் சிறப்புற அமர்ந்திருக்கும் சமயத்தில் நுட்பமான இசையமைந்த மகதி என்னும் யாழினையுடைய நாரத முனிவனது முகத்தைப் பார்த்து அவ்விடத்தில் மயக்கமற்ற தெளிவாகிய புன்சிரிப்பினைச் செய்து ஒரு வார்த்தை சொல்வானுயினன் என்றவாறு.

விளக்கவுரை : *வயிரவாட் படையோன் — தேவேந்திரன். அவனுக்கு வச்சிரபாணி என்பது பெயர். ஏல்வை—சமயம். மகது—மேன்மை. நாரத வீணைக்கு மகதி யாழ் என்று பெயர்.*

"நாரதன் மகதியாழ் நரம்பு தைவர" — பழநித் தலபுராணம்.

5\. "இசைமுனி வரனே! இன்றோர்
விநோதநீ யியற்று" கென்னத்
"தசமொரு நூறு கண்ணா!
விடைதரு" கென்று சென்றே
அசைவர வுலகந் தாங்கும்
அனந்தனை அணுக வன்னோன்
"வசைதவிர் முனிவ! விண்டை
வந்ததென்? மொழிதி" யென்றான்.

*பொழிப்புரை :* "இசையில் வல்ல நாரத முனிவனே! இப்பொழுது நீ ஒரு விளையாட்டினைச் செய்க" என்று சொல்லவும் (நாரதன் இந்திரனை நோக்கி) "ஆயிரம் கண்களை யுடைய தேவராசனே! நீ கூறியவாறு (விளையாட்டியற்றச் செல்வதற்கு) எனக்கு விடை தருக" என்று சொல்லி விடைபெற்றுச் சென்று; அசைதலில்லாமல் பூவுலகத்தைத் தலையில் தாங்கிக் கொண்டிருக்கின்ற ஆதிசேடனை அடையவும்; அச் சேடன், "குற்றமற்ற முனிவனே! இவ்விடம் வந்தது எதன் பொருட்டுச் சொல்வாய்" என்றான் என்றவாறு.

விளக்கவுரை : *இந்திரன் கண்ணுயிரத்தோன் ஆதலின் அவனைத் "தசமொரு நூறுகண்ணா" என்றார். ஈண்டை—ஐகார வீற்றுக் குற்றுகர மொழி.*

6\. பூதலம் வெஞ்சூழ் கொண்டு
போதலும் வடகு டக்கின்
மாதிரம் காவல் பூண்ட
வாயுவின் மருங்கிற் போய்நீ

மேதினி முழுதுந் தாங்குஞ்
சீர்த்தியை விளம்பி னேனப்

போதவன் மொழிந்த வார்த்தை
பொருதுளம் புழுங்கி வந்தேன்.

பொழிப்புரை : (யான் பூதல யாத்திரையை விரும்பிப்) பூமியை வலமாகச் சுற்றிக் கொண்டு போகையில் வடமேற்குத் திசையின் காவலை மேற்கொண்ட வாயு தேவனிடம் சென்று (சேடனாகிய) நீ பூமி முழுவதையும் சிரசில் தாங்கிக் கொண்டிருக்கிற உனது கீர்த்தியைச் சொன்னேன். (அதனைக் கேட்டு வாயுதேவன்) அப்பொழுது சொல்லிய இழிவுரைகளைக் கேட்டுப் பொறுக்காமல் மனம் வருந்தி வந்தேன் என்றவாறு.

விளக்கவுரை : வடகுடக்கு—வடமேற்கு. மாதிரம்—திசை. மதுகைடவரின் கொழுப்பினின்றும் பூமி படைக்கப்பட்டதாக லின் அதற்கு மேதினி என்று பெயர். மேதம்—கொழுப்பு.

"அத்திதி மைந்தர் மேத மதுகொண்டே யவனி தன்னைச்
சித்தசன் சனகன் செய்யச் செய்யமே தினியென் றோர்பேர்
இத்தரை மருவிற் றம்மா" — தேவிமான்மியம் 1—52.

அவன்—வாயுதேவன். சுட்டுப் பெயர்.

7. எனமனஞ் சினவு கொண்டி
யாதென வினவ வெல்லாந்

தனதுயிர்ப் பென்றுன் சேடன்
றனக்கொரு செயலு முண்டோ?

பனவநீ சொற்ற குற்றம்
பொறுத்தனன் படர்தி யென்றுன்

அனையது பகர வந்தேன்
அடுத்தநட் பதனுன் மன்னே.

பொழிப்புரை : என்று சொல்லவும், ஆதிசேடன் கோபங்கொண்டு (வாயுவானவன் சொல்லிய) இழிவுரை என்ன என்று கேட்கவும் (நாரதன்) ஆதிசேடனால் செய்தற்குரிய செயலொன்றேனு முண்டோ? சேடனது செயல்வலிமை எல்லாம் வாயுவாகிய தனது காற்றின் (மூச்சு) வலிமையே யாகும். அந்தணனே (நாரதனே) நீ சொல்லிய குற்றமான சொற்களைப்

பொறுத்துக் கொண்டேன். இங்கு நில்லாமல் விரைந்து செல்வாய் என்றனன். எனக்கு உன்னிடத் தமைந்த நட்பின் மிகுதியினால் வாயு கூறிய இந்த இழிவுரைகளை உன்னிடம் சொல்லுவதற்கு வந்தேன் என்றான் என்றவாறு.

**விளக்கவுரை :** *என—என்று சொல்ல. சொல் என்னும் சொல் குறைந்து வருதலால் என என்பது சொல்லெச்சம். எல்லாம் என்பது உயிர்கள் எல்லாம் எனினுமாம். ஈண்டுக் குற்றம் என்றது ஆதிசேடனது வலிமையை நாரதன் மிகுத்துரைத்ததையாம். உற்றது சொல்வோன் நட்பினானாதலின் ''பகரவந்தேன் அடுத்த நட்பதனால்'' என்றான்.*

8. என்றலுங் கொறுகொ றுத்தே
யெழுந்துநெட் டுயிர்ப்பு வாங்கி
நன்றுநன் றுலவை யாற்றல்
நானுணும் போன மன்றே
சென்றியான் வடபொற் குன்றை
மறைக்கின்றேன் திரள்ப ணத்தால்
வன்றிற லுளதே லாண்டு
வருவதற் குரைசெய் யென்றான்.

**பொழிப்புரை :** என்று சொல்லவும் ஆதிசேடன் கோபங்கொண்டு எழுந்து நின்று பெருமூச்சு வாங்கி வாயுவின் வலிமை மிகவும் நன்றாயிருக்கிறது? அவ்வாயுவானவன் நான் உண்ணும் உணவல்லவோ? யான் விரைந்து சென்று வடதிசையிலுள்ள பொன்மயமான மேருமலையை எனது ஆயிரமாகத் திரண்டுள்ள படங்களால் மறைத்துக் கொள்கிறேன் அம் மறைப்பினை நீக்குதற்கு வாயுவின்பால் மிகுந்த வலிமையுண்டானால் அம் மேரு மலையினிடத்தில் வருதலின் பொருட்டு அவ் வாயுவினிடம் சொல்வாய் என்றான். என்றவாறு.

**விளக்கவுரை :** *கொறுகொறுத்து — இரட்டைக்கிளவி; கோபத்தைப் புலப்படுத்தும் ஒலிக்குறிப்பு. நன்று நன்று என்னும் அடுக்கு இகழ்ச்சி குறித்து நின்றது. உலவை—காற்று; வாயு. பாம்புக்கு வாயு உணவாதலின் சேடன் ''நானுணும் போனமன்றே'' என்றான். காற்று பாம்புக்கு உணவாதலை,*

''காலே மிகவுண்டு காலே யிலாத கணபணத்தின்
மேலே துயில்கொள்ளும் மாலோன்மருக செவ்வேலவனே''

என்ற கந்தரலங்கார்ச் செய்யுளானும் (கால்—காற்று)

''வீண்பல பேசியென்ன மேதினியைப் பாம்பெடுப்ப
தூண்பல மோபின்னை யொருபலமோ ''

என்ற தென்றல்விடு தூது அடிகளானும் உணர்க (ஊண் — காற்றுணவு). போனகம்—உணவு. போனகம் என்பதன் தொகுத்தல் விகாரம் போனம்.

9. புனைந்துரை புணர்த்தி நீங்கிப்
பொருக்கென மருத்து வைகும்
நனந்தலை குறுக வீணை
நாயக! வருக வென்ன
மனங்கவன் றவன்போல் நிற்ப
மற்றதை யவன்வி னவ
அனந்தனின் றுரைத்த தாழ்வை
யறையவுட் கூசி னேனல்

**பொழிப்புரை:** பொய்யுரைகளைப் (சேடனதுமனதிற்)பொருந்துமாறு கூறி விரைவாக வாயுதேவன் வாழ்கின்ற அகன்ற இடத்தை (உலகம்) அடையவும்; வாயுவானவன், ''யாழில் வல்ல தலைவனே! வருக.''வென்று முகமன் சொல்லவும்,(நாரதன்) மனதில் கவலையுற்றவன் போல் நிற்கவும்; அக் கவலைக்குக் காரணமாகவுள்ளது யாது என்று அவ் வாயுவான வன் கேட்கவும்; நாரதன் ஆதிசேடனுனவன் இன்றைய தினம் சொல் லிய இழிவுரைகளை உன்னிடம் சொல்வதற்கு உள்ளத்தில் அச்சமுற்றேன் என்றவாறு.

**விளக்கவுரை:** புனைந்துரை—பொய்மை. பொருக்கென—விரைவுக் குறிப்புச் சொல். மருத்து—வாயு; உலகத்தை யழித்த லுடையது என்பது பொருள். நனந்தலை—அகன்ற இடம்.

''நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு'' — முல்லைப் பாட்டு. கூசினேன்—அச்சமுற்றேன்; வெட்கமுற்றேன் எனினுமாம்.

10. கூசவ தெவன்கொ லென்று
கொதித்தெழுந் ததனை யய்ய
பேசுகென் றலும்பா தாளப்
பிலத்தினைப் பெயர்ந்து சென்று

மாசுண முன்ன ருஞ்சீர்
வழுத்தினேன் மனங்கொ தித்தென்
போசனந் தனையென் முன்னர்ப்
புகழ்பிழை பொறுத்தே னென்ன.

பொழிப்புரை : வாயுவானவன் அச்சமுறுவதெதற்காகவோ? என்று சொல்லிக் கோபித்தெழுந்து (சேடன் கூறிய) அத் தாழ்வுரையை ஐயனே நீ சொல்லுக வென்றலும்; நாரத முனிவன் பாதாள வுலகமாகிய பிலத்தினைக் கடந்து சென்று ஆதிசேடன் முன் நின்று உனது புகழைச் சொன்னேன். அதனைக் கேட்ட சேடன் மனங் கொதித்து எனது போசன மாகிய வாயுவை எனது முன்னர்ப் புகழ்ந்து பேசிய உன் குற்றத்தைப் பொறுத்துக் கொண்டேன் என்று சொல்லவும் என்றவாறு.

விளக்கவுரை : அதனை—சேடன் கூறிய அத் தாழ்வுரையை. பாதாளப்பிலம்—பாதாளமாகிய பிலம்; இருபெயரொட்டு; கீழ் உலகம். மாசுணம் — பாம்பு. ஈண்டு ஆதிசேடனை உணர்த் திற்று. வாயு பாம்புக்கு உணவாம்.

" வாயுவான பஞ்சடைத்து மாயோன் துயிலும் மலரணையே "
— செவ்வந்திப் புராணம்.

11. மீட்டுமுன் சீர்த்தி கூறி
மேயபல் லுயிர்கட் கெல்லாம்
வாட்டமில் பிராண னென்றே
மறுத்தலும் வடகுன் றப்பல்
கோட்டினை மறைக்கின் றேன்வி
றுண்டெனிற் கொணர்த்தி யென்ன
நாட்டினன் நீயே நண்ப
னுதலின் நவில வந்தேன்.

பொழிப்புரை : நான் மீண்டும் உனது புகழைச்சொல்லி உலகில் பொருந்திய உயிர்களுக்கெல்லாம் " வாடுதல் இல்லாத பிராணன் வாயுவே " என்றுசொல்லிச் சேடனுரையை மறுக்கவும் சேடன், வடக்கில் உள்ள மேருமலையின் பலவாகிய (ஆயிரம்) சிகரங்களைச் சூழ்ந்து மறைத்துக் கொள்கிறேன். அவ்வாயுவினிடம் வெற்றிகொள்ளும் வலிமையுண்டானால் அவனை இங்கு அழைத்துக்கொண்டு வருவாய் என்று சொன்னான் நீயே என்னுடைய நண்பனாதலின் அவன் கூறியதை உன்னிடம் சொல்லுவதற்கு வந்தேன் என்றவாறு.

*விளக்கவுரை : பிராணன்—சுவாசம். வடகுன்றம்—மேருமலை பல்கோடு—ஆயிரம் என்னும் பலவாகிய சிகரம். வீறு—வலிமை. உற்றது கூறுவோன் அற்றமில் நண்பனாதலின்; நவிலவந்தேன் என்றனன்.*

12. நின்னது நினைவுக் கேற்ற
வாறிகழ்த் துதி நீ யென்றே
யின்னன மன்னோன் கூறி
யேகிய பின்னர்ப் போகிப்
பன்னக மன்னர் கோமான்
பணாடவி பரப்பி யந்தப்
பொன்னச லத்தை மூடிப்
பொதிந்தனன் புவன மஞ்ச

பொழிப்புரை : நீ உன்னுடைய கருத்திற்கேற்றபடி செய்வாய் என்று நாரதன் கூறிவிட்டுச் சென்றபிறகு போகி என்னும் பாம்பரசருக் குத் தலைவராகிய ஆதிசேடன் தன்னுடைய படங்களாகிய காட்டினை (மிகுதியை) விரித்து அந்தப் பொன்மயமாகிய மேருவென்னும் மந்தர மலையை உலகத்தார் அஞ்சும்படி மூடி மறைத்தான் என்றவாறு.

விளக்கவுரை : *ஏற்றவா என்பது ஏற்றவாறு என்பதன் விகாரம்.*

''வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்'' — என்பது திருக்குறள் - 401.

*ஆகலின் நினைத்து முடிவுசெய்தபின்னரே போரியற்ற வேண்டும் ஆகலின் ''நினைவுக்கேற்றவாறு நிகழ்த்துதி நீயே யென்றான்''. அன்னோன்—நாரதன். போகிப் பன்னகம்—போகியாகிய பாம்பு; இருபெயரொட்டு. பாம்பு பல்லை நகமாக உடையதாகலின் பன்னகம் எனப் பெயர்பெற்றது. பண + அடவி — பணாடவி தீர்க்கசந்தி. படக்காடு என்னும் பொருள் தருவது. பொதிந்தனன் — மறைத்தான்.*

13. கண்டனன் உலவை வேந்தன்
கதுமெனக் கனன்று பொங்கி
யண்டமுந் திசைக ளெட்டு
மாருயிர்த் தொகையு மஞ்ச

விண்டொடு செம்பொற் குன்றை
வேரொடுங் களைவ லென்றே
சண்டவே கங்கொண் டார்த்துச்
சதாகதிப் பெயர் நிறுத்த

பொழிப்புரை : வாயுவேந்தனானவன் சேடன் மேருவை மறைத்ததைப் பார்த்தான். விரைவாகச் சீற்றங்கொண்டு பொங்கியெழுந்து வானுலகமும் எட்டுத்திசையும் அவற்றிலுள்ள அருமையாகிய உயிர்த் தொகுதிகளும் அஞ்சும்படி, வானத்தைத் தொட்டுக்கொண்டிருக்கிற மந்தர மலையை அடியோடு களைவேன் என்று மிகுந்த வேகங்கொண்டு ஆரவாரித்துச் சதாகதி என்னும் தனது பெயரினை உலகில் நிலைநிறுத்தற் பொருட்டு என்றவாறு.

விளக்கவுரை : உலவைவேந்தன் — வாயுவாகிய அரசன். உலவை–உலாவுதலை யுடையது என்பது பொருள். கதுமென-- விரைவுக்குறிப்புச் சொல். களைவல்—களைவேன். தன்மை ஒருமை வினைமுற்று. சண்ட வேகம்—மிகுதியான வேகம். ஒரு பொருட் பன்மொழி. சதாகதி—வாயுதேவன். இடைவிடாது சஞ்சரித்தலை உடையது. நிறுத்த என்னும் வினையெச்சம் அடுத்த பாட்டின் ஈற்றில் வரும் இழைக்கலுற்றான் என்னும் வினை கொண்டு முடிதலான் இப்பாடல் குளகம்.

"குளகம் பலபாட்டு ஒருவினை கொள்ளும்" —தண்டியலங்காரம்.

14. இடைவிடா தடர்க்கச் சேடன்
இருள்கொளா தாட லேற்றுப்
படமொரா யிரமுங் கொண்டு
படர்பெருங் குன்றைப் பற்றி
யுடலினை யமரச் சுற்றி
யுழிவுரு தடக்கி நிற்கு
மடலினை நோக்கி யூதை
யாடலொன் றிழைக்க லுற்றான்

பொழிப்புரை : இடைவிடாமல் மோதவும் ஆதிசேடன் மனதில் மயக்கங்கொள்ளாமல் எதிர்த்துப்போர்செய்தலை மேற்கொண்டு தன்னுடைய ஓராயிரம் படங்களையும் கொண்டு பரந்துள்ள பெரிய மேருமலையைப் பற்றித் தனது உடலினை (அம்மலை) நிறையச் சுற்றி மனங்கலங்காமல் தன்னுள்

அடக்கிக் கொண்டிருக்கிற வலிமையை நோக்கி வாயுவானவன் (உபாய மான) வெற்றிச் செயலொன்றினைச் செய்தற்குத் தொடங்கினுன் என்றவாறு.

*விளக்கவுரை : இருள்—மயக்கம். ஆடல்ஏற்று—வெற்றி கொள்ளுதலை மேற்கொண்டு எனினுமாம். உழிவு — சுழற்சி. அடல்—வலிமை. ஊதை—வாயுதேவன். ஊதுதலையுடையது என்பது பொருள். ஆடல்—வெற்றி.*

15. மன்னுயி ரனைத்தி னுள்ள
 சுவாசங்கள் அனைத்தும் வாங்கித்
 தன்னுழி யடக்கிக் கொண்டு
 சதாகதி யிருந்த லோடு
 மன்னிலை யுயிர னைத்தும்
 பிராணனென் றின்றி யல்கப்
 பொன்னுல குற்ருேர் மற்ருேர்
 யாவரும் புலர்ந்து வாடி.

*பொழிப்புரை :* வாயுவானவன் நிலையான உயிர்கள் அனைத்திடத்திலுமுள்ள சுவாசங்களாகிய மூச்சுக்காற்றுகள் அனைத்தையும் கவர்ந்து தன்னிடம் அடக்கிக் கொண்டிருக்கவும் அப்பொழுது உயிர்கள் யாவும் பிராணவாயு சிறிதுமில்லாமல் சுருங்கியதனுல் சுவர்க்க வுலகத்திலுள்ள தேவர்களும், மற்றையோர்களும் வாட்டமுற்று என்றவாறு.

*விளக்கவுரை : வாயுவானவன் தனது கூருகிய உயிர்ச் சுவாசங்களை வாங்கிக் கொண்டதனுல் உயிர்கள் பிராணவாயு சிறிதுமின்றி வருந்தினவென்பது கருத்து. அல்க—குறைதலால்.*

16. நரம்புளர் வீணை வல்ல
 நாரதன் புணர்ப்பி தென்றே
 புரந்தரன் முதலோர் தேர்ந்து
 வெள்ளியம் பொருப்பைச் சார்ந்து
 கரம்பயல் மழுவல் லாளன்
 கனைகழற் பாதம் போற்றி
 யிரந்துநின் றடுத்த தெல்லா
 மெடுத்தெடுத் துரைக்க லுற்ருர்

*பொழிப்புரை :* இந்திரன் முதலிய தேவர்கள் இவ்வாறு நிகழ்ந்ததற்குக் காரணம் நாரதமுனிவனுடைய சூழ்ச்சியே யென்றறிந்து அழகிய கைலைமலையை அடைந்து கையிற் பொருந்திய மழுவாயுதத்தை யுடைய வலிமை மிக்க சிவபெருமானுடைய ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த திருவடிகளைத் துதித்துக் குறைகளைப் போக்குமாறு இரந்துநின்று நிகழ்ந்ததையெல்லாம் மிகவும் நன்ருக எடுத்துச் சொன்ஞர்கள் என்றவாறு.

*விளக்கவுரை : புணர்ப்பு—சூழ்ச்சி. புரந்தரன்—இந்திரன். பகைவர்களின் உடம்பைப் பிளப்பவன் என்பது பொருள். மழுவல்லாளன்—சிவபிரான். மழுவாயுதத்தைச் செலுத்துவதில் வல்லவன். வெள்ளியம் பொருப்பு—கைலாயமலை.*

"பொன்மலைக் கொடியுட னமர்வெள்ளி யம்பொருப்பில்"
— பெரியபுராணம்-திருநாவுக்கரசர்-34.

17. எம்மையா ளுடைய வள்ளல்
இளநகை புரிந் திருந்த
வெம்மணை புயங்க வேந்தை
விழிக்கடை சாத்தி யூதை
நம்முடை யுருவ மெட்டி
லொன்றென்று நயவா திங்ஙன்
கொம்மெனப் புரியும் ஆடல்
அடங்கெனக் கூறுங் காலை

*பொழிப்புரை :* எங்களை அடிமையாக வுடைய அருள் வள்ளலாகிய சிவபெருமான் புன்சிரிப்புச் செய்து ஆங்கிருந்த கோபம் பொருந்திய பாம்புகளுக்கரசனுகிய சேடனைக் கடைக்கண் பார்வை செய்து "சேடனே நீ வாயுவானவன் எம்முடைய எட்டு உருவங்களில் ஒன்றென்று மதியாமல் இவ்விடத்தில் விரைந்து செய்யும் போரினின்றும் அடங்குவாய்" என்று கூறும்பொழுது என்றவாறு.

*விளக்கவுரை : வெம்மை+அணை—வெம்மணை. வெம்மை—கோபம். புயங்கவேந்து–பாம்பரசன். சிவபெருமானின் உருவம் எட்டு. அவை: பார், நீர், தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், உயிர் என்னும் எட்டுமாம்.*

"இருநிலனுய்த் தீயாகி நீரு மாகி இயமான னுயெறியும் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றுகி ஆகாச மாயட்ட மூர்த்தி யாகி"
— அப்பர் தேவாரம்.

*கொம்மென—விரைவுக் குறிப்புச் சொல். ஆடல்—போர்.*

18. ஐய ! யா னதுசெய் வேனென்
றடிதொழீஇ யொடுங்கும் போதில்
வெய்யவங் கூழெ ழுந்து
மேருவை யடர்ந்து மோதி
ஒய்யென முடிகள் தம்மை
யுடற்றலுஞ் சிலபொற் கோடு
செய்யதென் றிசையிற் சென்று
சேர்ந்தன சேர்ந்த வற்றுள்

**பொழிப்புரை:** (சேடன் சிவபிரானை வணங்கி) ஐயனே போர்செய்யா தடங்குதலாகிய அச்செயலைச் செய்வேன் என்று ஒடுங்கிய சமயத்தில் கொடிய வாயுவானவன் எழுந்து மேருமலையை நெருங்கி மோதி விரைவாக மேருவின் சிகரங்களைச் சிதைக்கவும் சில சிகரங்கள் நல்ல தென்றிசையில் சேர்ந்தன. அங்ஙனம் சேர்ந்தவற்றுள் என்றவாறு.

**விளக்கவுரை:** *அடிதொழீஇ—சொல்லிசை அளபெடை வங்கூழ்—வாயு. தென்றிசை—தென்திசையிலுள்ள தமிழ் நாடு.*

"மாதவஞ் செய்த தென்றிசை வாழ்ந்திட"

"திசையனைத்தின் பெருமையெல்லாம் தென்றிசையே வென்றேற"
— பெரியபுராணம்.

*சிலபொற்கோடு என்றது மூன்று சிகரங்கள்.*

"விரைவிற் படரு தைவெகுண் டுபறித்,
தொருமுத் தலைகொண் டதுணர்ந் திலனோ"
— கந்தபுராணம். 22-18.

19. கொங்கிடைப் பொன்னி யாற்றின்
தென்றிசைக் குளிர் தரங்கம்

பொங்கியெர் மருங்குர் சூழான்
பொருணையின் வடபா றுப்பண்
தங்கியோர் முடிய மர்ந்து
தயங்கிய ததற்கு நாமம்
திங்கள்வந் துலவுந் தெய்வச்
சென்னியங் கிரியென் றோதும்

பொழிப்புரை : ஒரு சிகரமானது கொங்குநாட்டில் காவிரியாற்றின் தென்றிசையில் குளிர்ச்சியாகிய நீரலைகள் பெருகி எல்லாப் பக்கங்களிலும் சூழ்கின்ற ஆன்பொருணையாற்றின் வடதிசையில் உள்ள நடுவிடத்தில் தங்கி அமர்ந்து விளங்கியது தங்கிய அச்சிகரத்திற்குப் பெயர் சந்திரன் வந்து உலாவுகின்ற தெய்வத் தன்மை பொருந்திய சென்னியங்கிரி என்று சொல்லப்படும் என்றவாறு.

விளக்கவுரை : கொங்கு நாட்டிற் காவிரி யாறு சிறந்ததாகலின், ''கொங்கிடைப் பொன்னியாற்றின்'' என்றார். மூத்த பிள்ளையார் அகத்திய முனிவர் கொண்டு வந்த கரக நீரைக் கவிழச்செய்து காவிரி பிரவகிக்கும்படி செய்தது கொங்குநாட்டில் ஆதலின் அதனையுட்கொண்டு கூறினாரெனினுமாம். வரலாறு கந்தபுராணம் காவிரி நீங்கு படலத்திற் காண்க.

குடகு மலையிலுள்ள பொற் சன்னங்களைக் கொண்டு வருதலின் காவிரிக்குப் பொன்னி யென்ற பெயராயிற் றென்பர்.

''மலைத்தலைய கடற்காவிரி, புனல்பரந்து பொன்கொழிக்கும்''

என்பது பட்டினப் பாலை—6,7.

தரங்கம்—அலை. ஆன்பொருணை—ஆம்பிராவதி யாறு.

''ஆனிவானி யான்பொருணை சூதநதியான் பொருந்தமாகும்''

என்பது பிங்கலம் 566. காமதேனுவின் பால் கலக்கப் பெற்றதனால் இதற்கு ஆன் பொருணை என்னும் பெயர் உண்டாயிற்று என்பர். தங்கியது — விளங்கியது. ''திங்கள்வந் துலவுந் தெய்வச் சென்னியங் கிரி'' என்பது மலையின் உயர்ச்சியை மிகுத்துக் காட்டலால் உயர்வு நவிற்சி அணியாம்.

''திங்கள் சூடியமுடிச் சிகரத் துச்சியில்''

— பெரிய புராணம் — திருநாடு 4.

*முருகப்பிரான் திருவருள் மகிமை விளங்குதலால் "தெய்வச் சென்னியங்கிரி" என்றார்.*

*சென்னியங்கிரி வரலாறு :-*

> "திணிமுடிச் சேடனும் வாயுவுந் தர்க்கித்துச் செம்பொனெளிர்
> அணிமக மேருவைச் சுற்றுகை யாலம் மலையினுச்சி
> நணுகிய காலி லடிபட்டுப் பூந்துறை நாட்டில்விழ
> மணிமுடிச் சென்னி மலையா னதுங்கொங்கு மண்டலமே"
> — வாலசுந்தரக் கவிராயர் கொங்குமண்டல சதகம், ஏட்டுச்சுவடி.

> "மாமேரிற் சேடனெடு வாயுபக வானெதிர்த்துத்
> தாமோதி மூன்றுமுடி தான்பறித்துப் — போமளவில்
> அன்று விழுந்தகிரி யாமெனவே சொல்கின்ற
> மன்றதனிற் சென்னி மலையுடையோன்" — மேழி விளக்கம்

**20.** இந்திரன் பதத்து மாயோன்
பதத்துமே லிலங்கி யோங்கி
வந்தன பதத்துங் கந்த
வரையினும் பரங்குன் றத்துஞ்
செந்திலி விடத்துஞ் சீரா
வினன்குடி யினுமெய் ஞானந்
தந்தவே ரகத்தும் வேதஞ்
சாற்றுங்குன் றிடங்கடோறும்.

**பொழிப்புரை:** பொன்னுலகமும், மாவிந்தமும் அவற்றிற்கு மேல் விளங்கியுள்ள உலகங்களும், கந்தகிரியும், திருப்பரங்குன்றமும், திருச்செந்தூரும், சிறப்பாகிய திருவாவினன் குடியும், உண்மை ஞானத்தை உபதேசித்த திருவேரகமும், வேதங்களிற் சொல்லப்படுகின்ற குன்றுகளின் இடங்களும் என்றவாறு.

**விளக்கவுரை :** *சென்னிமலையை யொப்ப முருகன் விரும்பி வீற்றிருக்கும் தலங்கள் இச் செய்யுளிலும் அடுத்த செய்யுளிலும் கூறப்படுகின்றன.*

**21.** பழமுதிர் சோலை வெற்பும்
பைங்கன்கள் பரப்புந் தோகைக்
குழாமயிற் கணங்க ளாடு
குமரகோட் டத்தும் போல

வழகமர் வரையி தென்றே
யறுமுகக் கடவுள் வானோர்
தொழவினி திருக்கு மென்ரு
லதன்றிறம் சொல்லற் பாற்றே.

*பொழிப்புரை :* பழமுதிர் சோலை மலையும், பசுமையாகிய கண்களைப் பரப்பும் இறகுத் தொகுதிகளையுடைய மயிற் கூட்டங்களாடுகின்ற குமர கோட்டமும் போல அழகு பொருந்திய தலம் இச் சென்னிமலை யென்று விரும்பி ஆறுமுகங்களையுடைய முருகக் கடவுளானவர் தேவர்கள் தொழும் படி வீற்றிருப்பர் என்றால் அம்மலையின் மேன்மை நம்மால் அளவிட்டுச் சொல்லும் பான்மை யுடையதோ ? என்றவாறு.

*விளக்கவுரை : முருகன் விரும்பி யுறையும் தலங்கள் :*

'' வச்சிர மெடுத்த செம்மல் வைகிய துறக்கந் தன்னில்
அச்சுதன் பதத்துக் கப்பா லானதன் பதத்தில் விண்ணோர்
மெச்சுறு கந்த வெற்பில் வீற்றிருந் தருளு மாபோல்
கச்சியிற் குமர கோட்டங் காதலித் திருக்குங் கந்தன் ''

'' மேவருங் கூடன் மேலை வெற்பினில் அலைவாய் தன்னில்
ஆவினன் குடியில் நல்லே ரகந்தனில் தணிகை யாதிப்
பூவுல குள்ள வெற்பில் பொற்புறு மேனை வைப்பிற்
கோவில்கொண் டருளின் வைகும் குமரகோட் டத்து மேயோன் ''

'' ............முன்னவன்
மழமுதிர் களிறென வருதல் வேண்டிய
பழமுதிர் சோலையம் பகவற் போற்றுவாம் '' — கந்தபுராணம்.

22\. தாமரைக் கிழவன் செந்தா
மரைக்கணன் சரிம ஞளன்
மாமலர் மாரி பெய்து
வழுத்திவந் தனைக ளாற்றக்
காமர்பூந் தத்தை மென்சொற்
கவுரியோ டயில்வேற் செங்கைக்
கோமக னெடும்வெள் ளேற்றுக்
குழகனெஞ் ஞான்றும் வைகும்

*பொழிப்புரை:* தாமரை மலரை யுரிமையாகவுடைய பிரம தேவனும், செந்தாமரை மலர் போன்ற அழகிய கண்களையுடைய திருமாலும். இந்திராணியின் கணவனாகிய தேவேந்திரனும், பெருமையாகிய மலர்களைச் சொரிந்து துதித்து வணக்கம் செய்ய மிகவும் அழகிய கிளி மொழி போன்ற மென்மையாகிய சொற்களையுடைய அம்பிகையுடனும், கூர்மையாகிய வேலைக் கரத்திலுடைய முருகனுடனும் வெண்மையாகிய ஏற்றையுடைய சிவபெருமான் எந்தக் காலத்திலும் அம் மலையில் இடைவிடாது வாழ்வான் என்றவாறு.

*விளக்கவுரை: பார்வதி, முருகன், சிவன் இம்மூவரும் சேர்ந்த கோலம் சோமாஸ்கந்த வடிவமாகும். குளகன்—பிரதிபேதம்.*

"கொன்றை வேணி யார்தாமும் பாகங் கொண்ட குலக்கொடியும்
வென்றி நெடுவேல் மைந்தரும்தம் விரைப்பூங் கமலச் சேவடிக்கீழ்"
— பெரியபுராணம்.

23. பஞ்சதுந் துமியு மல்லற்
பழமறை முழக்குந் தொல்சீர்
மிஞ்சுமா கமமு ழக்கும்
புராணத்தின் மிகுமு ழக்குஞ்
செஞ்சொலாற் கிளியும் பூவை
யினங்களுஞ் செப்பு மென்ருல்
விஞ்சையர் மறையோர் அங்கண்
விளம்பல்மற் றரிதோ வன்றே.

*பொழிப்புரை:* ஐம்பேரிகை என்னும் வாத்திய ஒலியையே யல்லாமல், பழமையாகிய வேதங்களின் ஒலியையும், பழமையாகிய சிறப்பு மிகுந்த சிவாகமங்களின் ஒலியையும், புராணங்களின் மிகுந்த ஒலியையும், தம்முடைய இயல்பாகிய செஞ்சொற்களால் கிளிகளும், நாகண வாய்ப் பறவைக் கூட்டங்களும் சொல்லிக்கொண்டிருக்கு மென்ருல் அவற்றை வித்தியாதரர்களும், முனிவர்களும் அம் மலையிடத்தில் சொல்லிக்கொண்டிருத்தல் அரிதாகுமோ ? (எளிதே யாமென்க). என்றவாறு.

*விளக்கவுரை: பஞ்சதுந்துமி—ஐந்து முகமுடைய முழவம் என்பர்.*

"முகமைந்து மணத்த முழவந் துவைக்க"— கல்லாடம்.

*வானத்தில் முழக்குந் தேவவாத்தியங்கள் ஐந்து எனலுமாம்.*

"அந்தர துந்துமி யைந்து மார்த்தெழ"
— தணிகாசலப்புராணம் 329.

*வேதாகம புராணங்களைத் தம் இயல்பாகிய சொற்களினற் கூறுத லின் அவை 'செஞ்சொல்' எனப்பெற்றன. செஞ்சொல்— இயற்கைச்சொல்.*

"தென்னுண் டேனிற் றீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்"
— கம்பர்.

*கிளியும் பூவையும் ஆகமமோதல்,*

"தெள்ளு மோசைத் திருப்பதி கங்கள்பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்"
திருத்தொண்டர் புராணம். திருநகரச்சிறப்பு.

"கோகுலங்கள் பாடக் குயில்கூவக் கொஞ்சுகிளி
யாகமங்கள் ஓதும் அறுவரைவாய்"
— பெருந்தேவனுர் பாரதம். மாவிந்தம் 97.

"சுருதி யாகம புராண சாத்திர மெலாஞ்சொலும்
பொருளுந் தோன்றிடப் பூவையும் கிள்ளையும் புகலும்"
— சிவன்மலைப் புராணம்.

"ஆகமநூல், மித்திர வன்னியும் பூவையும் கேட்டு
வியந்து ரைக்கும்" — மறைசையந்தாதி.

24. அருந்துமா ரமுத ரோர்பால்
அருந்தவ முனிவ ரோர்பால்
திருந்துதா பதர்கள் ஓர்பால்
சித்தவித் தகர்மற் றேர்பால்
வருந்துரு திருக்குந் தெய்வ
வாலகில் லியர்க ளோர்பால்
சொரிந்தவி வேள்வி யாற்றுஞ்
சுருதியோ ரொருபால் வைகும்

*பொழிப்புரை:* (அம்மலையில்) சிவஞானமாகிய அமுதத்தை உட் கொள்பவர் ஒருபக்கமும், அருமையாகிய தவத்தைச் செய்கின்ற மௌன விரதமுடைய முனிவர் ஒருபக்கமும், திருந்திய சடைமுடி தரித்த தாபதர் கள் ஒருபக்கமும், சித்தர்களும், ஞானிகளும் மற்றேர் பக்கமும், எப்பொழு

தும் வருத்தமுருமல் இருக்கும் வாலகில்லியர் என்னும் ரிஷிகள் ஒருபக்கமும், நெய்சொரிந்து வேள்வி செய்யும் வேதமுணர்ந்த அந்தணர்கள் ஒருபக்க மூந் தங்கியிருப்பார்கள். என்றவாறு.

**விளக்கவுரை :** *அமுதர் என்போர் யோகநெறியால் பிரமரந்திரத்தின்கண் உள்ள தாமரை முகையை மலரும்படி செய்து அத்தாமரை மலரின் தாதுக்களில் உள்ள சந்திர மண்டலத்தை மூலாக்கினியினுல் இளகப்பண்ணி அம்மண்டலம் வழியாக ஒழுகும் அமிர்தத்தைத் தேகமுழுவதும் நிரப்பிப்பூரணப் பிரகாசத்தைத் தியானித்துக் கொண்டிருப்போர்.*

> " ......அலர்மதி மண்டலத்தின்
> முகமார்க்க வமுதுடல முட்டத் தேக்கி
> முழுச்சோதி நினைந்தி ருத்தல் "— சிவஞான சித்தியார்.

*வாலகில்லியர் என்போர் இளமையுடைய அறுபதினுயிரம் தவரிஷிகள். வைகும்—செய்யும் என்னும் வாய்பாட்டு வினை முற்று பலர்பால் படர்க்கையில் வந்தது.*

25\. சிந்துயி ருய்க்குஞ் சஞ்சீ
வனியொரு பாலிற் றுண்டஞ்
சந்துசெய் துறுப்புக் கூட்டுஞ்
சந்தான கரணி யோர்பால்
உந்துமம் புறைப்புத் தீர்க்குஞ்
சல்லிய கரணி யோர்பால்
நந்துறு விரணந் தீர்க்குஞ்
சமனநன் கரணி யோர்பால்

**பொழிப்புரை :** இறந்துபோன உயிரைத் தருகின்ற சஞ்சீவனி ஒரு பக்கமும், துண்டமானவற்றைச் சேர்த்து உறுப்புக்களைப் பொருந்தச் செய்யும் சந்தானகரணி ஒருபக்கமும், செலுத்துகின்ற அம்பு தைத்தலால் உண்டாகும் புண்ணைத் தீர்க்கும் சல்லியகரணி ஒருபக்கமும், மிகுந்த காயங்களைத் தீர்க்கும் நல்ல சமனிய கரணி ஒருபக்கமும் என்றவாறு

**விளக்கவுரை :** *இச் செய்யுளிற் கூறிய நான்கும் உடலும் உயிருங் காக்கும் நால்வகை மருந்துகளாம்; இவை இம்மலையில் உள்ள மூலிகைகள்.*

''சல்லிய கரணி சந்தான கரணி
சமனிய கரணி முதலி லுதித்த
மிருத சஞ்சீவனி மருந்துநால் வகையே'' — பிங்கலம்.

26. மூப்புவெம் பிணிசாக் காடு
முதலன தீர்க்குங் கைப்பு
யாப்புறு தலைத்தீர் எட்டி
யருங்கரு நொச்சி யோர்பால்
பாப்பினுட் சுதைவெண் சாரைப்
பாப்பின மோர்பா லப்பாற்
காப்புறு மருந்தி னீட்டங்
கணக்கிலை குணிக்கற் பாற்றே

பொழிப்புரை: முதுமை, கொடிய நோய், மரணம் முதலியவை களைத் தீர்க்கும் கசப்புப் பொருந்தி யிருத்தலினின்றும் நீங்கிய எட்டி மரமும்; அருமையாகிய கருநொச்சியும் ஒருபக்கமும், பாம்புகளினுள் பால் போன்ற வெண்மையாகிய சாரைப் பாம்புக் கூட்டங்கள் ஒருபக்கமும்; அவ்வவ் விடங்களில் உடற் பாதுகாப்புக்குரிய மிகுதியான மருந்து மூலிகைக் கூட்டமும் கணக்கில்லாதனவாய் உள்ளன. அவை அளவு செய்தற் குரியனவாமோ? என்றவாறு.

விளக்கவுரை: யாப்புறுதல்—பொருந்தியிருத்தல். பாப்பு —பாம்பு. கருநொச்சி—இதன் வாசனை வீசும் இடங்களி லெல்லாம் பாம்பு முதலிய விஷப் பிராணிகள் அணுகா; மிகுந்த வாசனையுடையது. வெண்சாரைப் பாம்பு—இது வெண்ணிற முடையது; இதன் அறுந்த உடல் கூடிச் செல்லும். இதனுல் கடிக்கப் பெற்றவனுக்குச் சகல சித்தியும் உண்டாம்.

''அற்றவுட லொன்றி யயலேகுமஃ தின்பேர்
முற்றுமுழு துந்தவள மாயமுது சாரை
மற்றது சினந்துயரு வாயெயிறு வௌவிப்
பற்றுமள விற்சகல சித்துபரி யாகும்''– அப்பரமேய தலபுராணம்.

27. திருக்கிளர் திருவை நல்குந்
தெய்வவைந் தருக்க ளோர்பால்
பொருக்குமா மகத்திற் பொங்கிப்
பெருகிடுந் தீர்த்த மோர்பால்

பொருக்கெனக் கண்டு காணு
திருக்குமோர் பொய்கை யோர்பால்
பருப்பதச் சிகரக் குன்றின்
பான்மையா ளக்க வல்லார்

பொழிப்புரை: அழகு விளங்குகின்ற செல்வத்தைத் தரும் தெய்வத் தன்மை பொருத்திய ஐந்தருக்களொரு பக்கமும்; பெருமையாகிய மக நட்சத்திரத்தில் நிறைதலை யுடையதாய்ப் பொங்கிப் பெருகும் மாமாங்க தீர்த்தம் ஒருபக்கமும், விரைவாகக் காணப்பட்டுக் காணுமலிருக்கின்ற ஒப்பற்ற சுனை ஒருபக்கமும்; பொருந்தி யிருக்கின்ற பர்வதமாகிய சென்னிமலையின் தன்மையை அளந்து சொல்ல வல்லவர் யார்? (ஒருவருமிலர்) என்றவாறு.

விளக்கவுரை: ஐந்தரு: சந்தானம், தேவதாரம், கற்பகம், மந்தாரம், பாரிசாதம், என்பன. இம் மரம் ஐந்தனையும் தெய்வ மரம் என்பர். மகாமக தீர்த்தம் என்பது மாமாங்க தீர்த்தம் என வழங்குகின்றது. இத் தீர்த்தம் மலையின் மேல் தென்மேற் றிசையில் உள்ள விநாயகர் கோவிலை யடுத்துள்ளது. மழை வறட்சியுற்ற காலத்தில் மக நட்சத்திரத்தில் கற் றவளையும் வெண் சாரைப் பாம்பும் குரல் எழுப்ப நீர் பொங்கி வழியும். இதில் நீராடுவோரும், உட்கொள்ளுவோரும் உடற் பிணியும், கிரக பீடையும் நீங்கப் பெறுவர்.

''தேமாங் கனிபல வின்கனி வாழைச் செழுங்கனியும்
மாமாம் பயறும் கடலையு முட்கொண் டருள்புரியும்
ஓமாங்க வேழமு கேசுரன் கோயிற் கெதிர்ச்சுனையில்
மாமாங்கம் பொங்கி வருபுகழ்கொள் கொங்கு மண்டலமே''

— வாலசுந்தரக் கவிராயர், கொங்கு மண்டல சதகம் ஏட்டுச் சுவடி.

காணுச் சுனை: முன்பு தோன்றிப் பின்பு காணப் பெருத சுனை. இச் சுனை ஞானியர்களின் காட்சியில் பலகால் புலப்படுவதாகக் கூறுவர்.

''காணுச் சுனையும் கருநொச்சி கல்லதன்மேல்
தோணுத புல்லுருவிச் சூழ்ச்சிகளும்'' — மேழிவிளக்கம் 8.

''சுந்தரஞ்சேர் கருநொச்சி வெண்சாரை காணுச்
சுனைகளுடன் மாமாங்கச் சுரர்தீர்த்தம் வாழும்

புந்திமிகும் சென்னிமலைப் புத்தேட்கு மாண்பாய்ப்
பூசத்தேர் நடத்திவைக்கும் பூந்துறைநன் னாடே''

— பூந்துறைப் புராணம்.

28\. காண்பதற் கரிய புள்ளும்
மிருகமுங் கவினு மோர்பால்
மாண்பொரு ளீட்டந் தன்னை
மறைத்துள மருட்டு மோர்பால்
ஊண்பொரு ளிளமை தன்னை
யுண்டென மதிக்கு மோர்பால்
வேண்டிய வேண்டி யாங்கு
விரும்பினர்க் கருளு மோர்பால்.

*பொழிப்புரை :* பிற விடங்களிற் காண்பதற்கியலாத பறவைகளும், மிருகங்களும் அழகுறத் திகழ்வ தோரிடம்; பெருமையாகிய பொருள்களைக் காட்டி மறைத்து உள்ளத்தை மயங்கச் செய்வ தோரிடம்; நிலையற்ற உணவு, செல்வம், இளமையாகியவற்றை என்றும் உள்ளனவாக மதிக்கச் செய்வதோரிடம்; விரும்பிய பொருட்களை விரும்பியபடியே விரும்பினவர் களுக்குக் கொடுப்பதாயுள்ள தோரிடம் என்றவாறு.

*விளக்கவுரை : இச்செய்யுளில் இம்மலைமேல் உள்ள பலவகையான இட விசேடங்கள் கூறினர்.*

''வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்''

*—என்ற திருக்குறளோடு ஈற்றடி ஒத்திருத்தல் காண்க.*

*ஊணும் பொருளும் இளமையும் நிலையாமையுடையன.*

''இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவியவான் பெருஞ் செல்வமும் நில்லா''

— சிலம்பு – பதிகம் – 109.

*நிலையில்லாத பொருள்களை அறிவுமயக்கம் செய்து நிலையுடையன வாக மதிக்கச் செய்யும் இடமும் அம்மலைமேல் உண்டு.*

29. பொருங்கொடிக் குக்கு டத்தோன்
பொருவுசன் னதியில் வெய்ய
கருங்கொடி வாரா வந்தாற்
கரிந்திடும் கரிவு ருதேல்
வருங்கொடி தாய காலம்
வருமந்தக் காலத் துற்றோர்
தருங்கொடி தாய பாவந்
தீர்க்குமச் சயிலந் தானே

*பொழிப்புரை :* போர் செய்கின்ற கோழிக் கொடியை உடைய சென்னிமலை முருகன் திருமுன்பிற் கருமையாகிய நிறமுடைய காகங்கள் வரமாட்டா. வந்தால் கரிந்துபோகும். கரிவுருதாயின் கொடுமையாகிய துன்பக்காலம் வரும் வளர்கின்ற துன்பமிகுந்த அக்காலத்தில் வாழ்ந்திருப் போருக்கு வரும் பாவங்களை அச் சென்னிமலையானது தீர்த்துவைக்கும் என்றவாறு.

*விளக்கவுரை :* குக்குடம்: கோழிக்கொடி. கொடி—காகம். கருங்கொடி — கருங்கொடியென்னும் பூண்டு எனினுமாம். சயிலம்- மலை. பாவம் — பாவம் காரணமாக வரும் துன்பமாம்.

30 தோற்றுகைக் கிரியின் சாரற்
சுப்பிர மணிய தீர்த்தஞ்
சாற்றுதற் கரிய தீர்த்தம்
சண்முக னருளால் முன்னம்
நோற்றுயர்ந் தோரும் வேத
நுவல்வரு முனிவோர் தாமும்
ஊற்றமில் இளமை யோரும்
சூழ்ந்தாட வீடுதவும் தீர்த்தம்

*பொழிப்புரை :* நெடுந்தூரத்தில் உள்ளோருக்கும் தோன்றுதலை யுடைய அச் சிகரகிரியின் வடசாரிபில் சுப்பிரமணிய தீர்த்தம் என்பது ஒன்றுண்டு. அது சொல்லுதற்கரிய பெருமையுடைய தீர்த்தமாகும். முருகப் பெருமானுடைய திருவருளால் முன்பு தவஞ்செய்து உயர்ச்சி பெற்றோரும் வேதங்களை ஓதுகின்ற முனிவர்களும் உறுதியில்லாத இம்மை மறுமைப் பிறப்பினுக்கு உரியவர்களும் தன்னை வலமாகச் சுற்றி வந்து நீராடினால் முத்தியைத் தரும் சிறந்த தீர்த்தமாகும்.

விளக்கவுரை : சுப்பிரமணிய தீர்த்தம் என்றது சரவணப் பொய்கையாம். இது தெப்பக் குளத்தின் கீழ்த் திசையில் உள்ள மலைவழி விநாயகர் கோவிலின் எதிர்ப்புறமாகத் தென் கிழ்த் திசையிலுள்ளது. குமார தீர்த்தம் என்பதும் பெயர். இதனை நல்ல கிணறென்று வழங்கிய காலமு முண்டு.

31. கார்த்திகைத் திங்கள் தன்னிற்
கார்த்திகை தைப்பூ சத்தில்
ஏத்துவை காசித் திங்கள்
விசாகத்தி லேழ்வா ரத்தில்
வாய்ந்தசுக் கிரவா ரத்தில்
மதிவாரந் தன்னி லந்தத்
தீர்த்தநீ ராடிச் சேயைத்
தெரிசித்தோர் முத்தி சேர்வர்.

பொழிப்புரை : கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நாளிலும்; தை மாதத்தில் வரும் பூச நாளிலும்; ஏழு நாட்களில் (புண்ணியப் பயனைத் தருதற்கு வாய்ப்புடைய) ஒன்றாகப் பொருந்திய வெள்ளிக்கிழமையிலும், திங்கட்கிழமையிலும் அந்த சுப்பிரமணிய தீர்த்தத்தில் நீராடி முருகனைத் தரிசித்தோர் முத்தி உலகத்தை அடைவர் என்றவாறு.

விளக்கவுரை : தீர்த்த விசேடங் கூறியது இச் செய்யுள். இச் செய்யுளிற் கூறிய கார்த்திகை முதலான நாட்கள் முருகனுக் குரிய சிறந்த நாட்களாதலின் அந்நாட்களில் குமார தீர்த்தத்தில் நீராடி முருகனைத் தரிசிப்போர் முத்தி சேர்வர் என்றார்.

32. சிரகிரி யுயர்ந்த தோற்றஞ்
செப்பின மினிமேல் வாசக்
குரவன்விற் றிருக்கு மந்தக்
குவட்டின தாற்ற லெல்லாம்
வரமிகு மிவ்வேட் டுள்ள
வாறுனக் கின்னுஞ் சொல்கேம்
சரவண முனிவ கேட்டி
யென்றனர் சாற்று கின்றார்.

**பொழிப்புரை :** உயர்ந்த சிரகிரி தோன்றிய வரலாற்றைச் சொன்னேம். இனிமேல் வாசனை பொருந்திய குரவ மலர் மாலை யணிந்த முருகப் பெருமான் சிறப்புடன் அமர்ந்திருக்கும் அந்த மலையினது பெருமைகளையெல்லாம் மிகுந்த மேன்மை பொருந்திய இந்தச் செப்பேட்டிலுள்ளபடி இன்னமுஞ் சொல்லுவோம். சரவண முனிவனே கேட்பாய் என்று முனிவர்கள் சொல்லுகின்றுர்கள் என்றவாறு.

**விளக்கவுரை :** *தோற்றம் புகழ் எனினுமாம். ஆற்றல் சத்தி எனினுமாம். காஞ்சிவாழ் மறையவர் என்னும் தோன்ரு எழுவாய் சாற்றுகின்ருர் என்னும் பயனிலைகொண்டு முடிவுற்றது. என்றனர்—முற்றெச்சம்.*

*சிரகிரி மான்மியம் முற்றிற்று.*

*ஆகத்திருவிருத்தம் 84.*

## 3. புட்பகிரி மான்மியம்.

1. வான நாட்டினில் வச்சிர வாட்படை வள்ளல்
கான விஞ்சையர் இயக்கர்கிம் புருடர்காந் தருவர்
கூனல் யாழினர் வானவர் கோதில்கேள் வியினிற்
போன சிந்தையர் ஏனையர் முறைமுறை போற்ற

*பொழிப்புரை:* விண்ணுட்டில் அரசாட்சி செய்கின்ற வயிர வா ளென்னும் ஆயுதத்தை யுடைய வள்ளல் தன்மை மிகுந்த தேவேந்திரனுன வன் இசைவல்ல வித்தியாதரர்களும், இயக்கர்களும், கிம்புருடர்களும், காந்தருவர்களும், வளைவாகிய யாழினை யேந்தியவர்களும், தேவர்களும்; குற்றமில்லாத வேத நூற் கேள்வியில் (மேற்போன) செலுத்திய மன முடைய முனிவர்களும், மற்றையோரும் முறைமுறையாகப் புகழவும். என்றவாறு.

*விளக்கவுரை: மண்ணுலகத்தினும் மாட்சிமையுடையதாய்ப் போகங்களிற் சிறந்து விளங்குவது பொன்னுடாகிய விண்ணு டாகலின் அதனை "வான நாட்டினில்" என்றும்; அந் நாடு வச்சிரமென்னும் வாளாயுதத்தால் பகைவரை வென்று பாது காக்கப் படுதலின் வச்சிர வாட் படையென்றும்; அவ் வச்சிர தரனுகிய இந்திரன் தேவர் தலைவனுதலின் அவன் தலைவர்க் குரிய சிறப்பியல்புகளிற் சிறந்த ஓவாதுதவும் ஈகைத் தன்மை யுடையவனுய் விளங்குதலின் அவனை வள்ளல் என்றும் கூறினுர். தலைவர்க்குரிய குணங்களில் ஈகை சிறந்தது.*

"தலைவன் புகழொளி யறம்பொரு ளின்பம்
பொறைகுணந் தன்வயி னுடையோ னுகும்"

"குடிமை பேரெழி லாட்சி யீகை
திறமை புலமைமிக் குயர்ச்சி பணிவெனும்
ஈங்கிவை முதலாம் என்மனுர் புலவர்"

"ஈகைமுன் னிறைவற் கியம்பிய தாகும்"
— அணியியல். தலைமகற் படலம் 5, 7, 16.

*காந்தருவர் பாடுந் தொழிலில் வல்லவர். யாழினர்—யாழ் வாசித்தலிற் சமர்த்தராயுள்ளோர். இவர் கந்தருவருள் ஒரு*

*வகையினர். இப் பாடலிற் குறித்த விஞ்சையர் முதலிய ஏழு வகையினரும் பதினெண் தேவ கணத்தைச் சேர்ந்தவராவர். பதினெண் தேவ கணத்தினராவோர்*

''அமரர் சித்தர் அசுரர் தைத்தியர்
கருடர் கின்னரர் நிருத்தர்கிம் புருடர்
காந்தருவ ரியக்கர் விஞ்சையர் பூதர்
பசாச ரந்தரர் முனிவ ருரகர்
ஆகாய வாசியர் போகபூ மியரெனப்
பாகு பட்டன பதினெண் கணமே'' — பிங்கலம் 92.

*முறைமுறை—பன்முறை. அடுக்குத் தொடர். மிகுதிப் பொருட்டு.*

2. இருகு ரும்பைமென் முலைகளும் பூண்களு மிமைப்ப
பொருத டங்கணுள் புலோமசை யொருபுடை யிருப்ப
வருகு மேனகை திலோத்தமை யுருப்பசி யரம்பை
தெரிவை மாதர்குற் றேவல்பன் முறைமுறை திருத்த.

**பொழிப்புரை:** இரண்டு தென்னங் குரும்பை போன்ற மென்மையாகிய தனங்களும் விளங்கும்படி போர் செய்கின்ற பெரிய கண்களையுடையவளாகிய இந்திராணி தேவியானவள் ஒருபக்கம் அமர்ந்திருக்கவும்; இருபக்கத்திலும் மேனகை, திலோத்தமை, ஊர்வசி, அரம்பை என்னும் தெய்வப் பெண்கள் குற்றேவல் பலவற்றையும் முறையாகத் திருத்தமுறச் செய்யவும் என்றவாறு.

**விளக்கவுரை:** *மகளிர் தனத்திற்குத் தென்னங்குரும்பை உவமையாதலை*

''குரும்பைமென் முலையா ராட''
*— என்னும் நைடத அடியாலுணர்க.*

*புலோமசை—புலோமன் புதல்வி. இந்திரனுடைய மனைவி. மேனகை முதலியோர் இந்திர சபையில் நடமாடுவோர்.*

''மேனகை யரம்பை யுருப்பசி திலோத்தமை
யான நால்வரு நாடகத் தரம்பையர்'' — பிங்கலம் 176.

இந்திரனுக்குக் குற்றேவல் புரிதலும் இம் மகளிருக்குரிய தொழி லாம் ஆதலின் "தெரிவை மாதர்குற் றேவல்பன் முறைமுறை திருத்த"— என்றார்.

தேவர் தலைவனாகிய இந்திரனுக்குத் தலைவியாயுள்ளாள் வடிவு முதலிய தன்மைகளாற் சிறந்தவளாதல் வேண்டுமாகலின் "இருகு ரும்பைமென் முலைகளும் பூண்களும் இமைப்பப்; பொருத டங்கணாள் புலோமசை" யெனப் பெற்றாள்.

"தலைவி யெனப்படு வாள்வடி விளமை
மேனிநா ணொழுக்க முடைமை பெருந்திரு
வீகை யழகுமேன் மையின்ன னவுளாள்"

— அணியியல் தலைமகள் 9.

3. சீர்கி டந்தவத் தாணிமண் டபத்தினுட் செழும்பொன்
னேர்கி டந்தசிங் காதனத் திருக்கின்ற காலை
கார்கி டந்தபைம் பூங்குழற் கானிய ரிருவர்
வார்கி டந்தபூண் முலையினர் சூழ்வர வந்தார்.

பொழிப்புரை: சிறப்புப் பொருந்திய அரசிருக்கை மண்டபத்தி னுள்ளே செழுமையாகிய பொன்னாற் செய்த அழகு பொருந்திய சிம்மாச னத்தில் அமர்ந்திருக்கும் பொழுது கருமையாகிய நிறம் பொருந்திய அழ கிய கூந்தலையுடைய நாடக மகளிரிருவர் கச்சினுள்ளே கிடந்த ஆபரண மணிந்த முலையினையுடைய மகளிர் பலர் சூழ்ந்து வர நடுவில் வந்தனர் என்றவாறு.

விளக்கவுரை: சிங்காதனம்—சிங்கமுகம் அமைத்துச் செய் யப் பெற்ற ஆசனம். கார் கிடந்த—மேகம் தாங்கிய. குழற் கானியர்—கூந்தற் காட்டை யுடையவர்.

"குழற்கா டேந்துமிள வஞ்சிக் கொடியே"

— மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்.

மேகமனைய கருநிறமும் காட்டினை யொத்த செறிவுமுடைய கூந்தலை யுடையராகலின் "கார்கி டந்தபைம் பூங்குழற் கானி யர்" என்றார். மேகம் காட்டில் தங்குமென்னும் நயம் காண்க. கானியர்—பெண்களென்னும் பொருளில் வந்தது. கரணியர்

என்ற பாடத்திற்குக் கூத்து மகளிர் எனப் பொருள் கொள்க. இருவர் என்றது மேனகை முதலிய நால்வருள் இருவரையாம்.

4. ஆட லன்றரங் கேறுவா ரனுமதி யேற்றுத்
தோட லர்ந்ததார்ச் சுரர்மனங் கவர்ந்துகண் பரப்பிப்
பாட லுஞ்சதி விதங்களும் பரதத்தின் பண்பும்
கூட நின்றுகூத் தாடினர் முனிவருங் கொட்ப.

**பொழிப்புரை :** தாம் நாடகமாடுதற்குரிய அந் நாளில் நாடக மேடையில் ஏறியாடுதற்குரிய அம் மகளிர் இந்திரனுடைய கட்டளையை யேற்று இதழ் விரிந்த கற்பகப் பூமாலை யணிந்த தேவர்களுடைய மனதைக் கவர்ந்து தமது கண் பார்வையைப் பரப்பி; இசைப் பாடல்களும், தாள வொத்தின் வகைகளும், பரத சாத்திரப் பண்பும் தம்முடன் பொருந்தும்படி நின்று முனிவர்களும் மனஞ் சுழலும்படியாகக் கூத்தாடினர் என்றவாறு.

**விளக்கவுரை :** ஆடலன்று என்றது தாம் நாடகமாடுதற்குரிய முறை நாளைக் குறித்து நின்றது. இந்திரன் கட்டளை யேற்றே நாடகமாடுதல் வேண்டுமாகலின் "அனுமதியேற்று" என்றார்.

பாடல்—இசைப்பாடல்கள். அவை சிந்து, திரிபாதி, சவலை, சமபாதம், செந்துறை, வெண்டுறை, தேவபாணி, வண்ணம் என்பவைகளாம். இவற்றை இசைக்குரிய பாடல்களாகக் கூறுவர்.

சதிவிதம்—தாளவொத்தின் வகை. அவை சச்சபுடம் முதல் பெத்தாபரணம் ஈறாகக் கூறும் நூற்றெட்டாம். பரதத்தின் பண்பு—பரதநூலிற் கூறியுள்ள பதாகை முதலாகிய அபிநய வகைகள்.

இசைப்பாடலும், தாளமும், அபிநயமும் இயைய வருவதே கூத்தாகலின் "பாடலுஞ் சதிவிதங்களும் பரதத்தின் பண்புங்; கூடநின்று கூத்தாடினர்" — என்றார். இவற்றின் விரிவைப் பஞ்ச மரபு முதலிய நூல்களிற் காண்க.

5. போகி யென்பெயர் நிறுத்திடப் புரந்தரன் காணு
மோக முள்ளுறுத் திடமன முகிழ்த்திடும் போழ்திற்

ரேகை மார்தருந் துணைவிழிச் சுரும்புதூ தாக
வேகி டப்பணித் திதயமு மவனிடத் துய்த்தார்

**பொழிப்புரை :** போகியென்னும் தனது பெயரை நிலைநிறுத்துதற் பொருட்டுத் தேவேந்திரன் அந்நாடக மகளிர் ஆடும் கூத்தினைக் கண்டு உள்ளத்தினுள்ளே மோகமானது வருத்துதலினால் மனம் சுருங்கும் சமயத்தில் அந்த நாடக மகளிர் காமவேட்கை தருகின்ற தம்முடைய இரண்டாகிய கண்களென்னும் வண்டுகளை இந்திரனிடம் தூதாகச் செல்லுமாறு ஏவித் தம்முடைய மனத்தினையும் அவனிடத்துச் செலுத்தினர் என்றவாறு.

**விளக்கவுரை :** *போகி—போகங்களை அனுபவிப்பவன். என் என்பது என்ற என்பதன் விகாரம். புரந்தரன்—பகைவருடம்பைப் பிளப்பவன். தேவேந்திரன். இந்திரன் போகியாதலின் போகத்திற்குரிய மாதர்பால் மோகமுற்றான். அம் மாதரும் தாம் இந்திரனிடம் வேட்கையுற்றிருப்பதைக் கட்பார்வையால் அவனுக்கு முன்னறிவித்துப், பின் மனதை அவனிடத்துச் செலுத்தினர். ஒருவர்பால் ஒன்றை வேண்டிச் செல்வோர் முன் தூதனுப்பிப் பின் செல்லுதல் முறையாகலின், ''துணை விழிச் சுரும்பு தூதாக ஏகிடப் பணித்து; இதயமு மவனிடத்துய்த்தார்''— என்றார். சுரும்பு—வண்டு. மகளிர் கண்ணிற்கிணையாகும் பொருள்களில் வண்டுமொன்றாகும். விழிச்சுரும்பு—உருவகம். தூது செல்லுதற்குரிய பொருள்களில் வண்டுமொன்றும் ஆகலின் சுரும்பு தூதாக வென்றார்.*

''இயம்புகின்ற காலத் தெகினமயில் கிள்ளை
பயம்பெறுமே கம்பூவை பாங்கி—நயந்தகுயில்
பேதைநெஞ்சந் தென்றல் பிரமரமீ ரைந்துமே
தூதுரைத்து வாங்குந் தொடை'' — இரத்தினச்சுருக்கம்-7

*பிரமரம்—வண்டு.*

6. ஆய காலையிற் புரந்தர னருகினில் அழைத்துச்
சேய மாமணிப் பூணணி தூசணி செலுத்தி
வாயி னுன்மலர்க் கண்ணினுற் கையினுல் மாத
ரேயு மாறுள முணர்தரச் சூட்சியி னிசைத்தான்

**பொழிப்புரை :** அப்பொழுதில் தேவேந்திரனனவன் அம் மகளிரைத் தன் முன்னிலையில் வரவழைத்துச் சிவந்த பெருமை பொருந்திய இரத்தினு

பரணங்களையும் (அணிதற்குரிய) அழகு பொருந்திய ஆடைகளையும் வரிசையாகக் கொடுத்துச் சொல்லினுலும், பார்வையினுலும், சைகையினுலும் அம் மாதர்கள் தன் உள்ளத்தின் விருப்பத்திற்கிசையும்படி அவர்கள் உள்ளம் அறியுமாறு உபாயங்களால் (நுட்பமாக) தெரிவித்தான் என்றவாறு.

விளக்கவுரை : *வாய், கண், கை என்பன முறையே சொல், பார்வை, சைகை என்னும் பொருள்களில்வந்த ஆகுபெயர்களாம் இசைத்தான் என்பது சொன்னுன், இசையைச் செய்தான் என்ற பொருள் தருவதாம்.*

7. சொற்ற சூள்வுவெள் விடைப்பிரான் தொல்புவி மீதில்
அற்றை நான்முகன் சென்னியைக் கொய்திட மாய்ந்தங்
குற்ற சென்னியீ ரோடென வுடைந்துவீழ் தலத்தைப்
பற்றி வாழ்மினென் றுனைப் பணிந்துபோ யினரால்.

பொழிப்புரை : (பிரமன் உலகத்தைப் படைத்தலால் தானே முதற் கடவுள் என்று) சூளுரைத்தமையால் வெண்மையாகிய எருத்தினையுடைய சிவபெருமான் (சினந்து) அப்பொழுதே நான்முகனுடைய தலையொன்றினைக் கொய்யவும்; கொய்யப்பட்ட தலையானது ஈரோடென்று சொல்லும்படி பழமையாகிய பூமியின்கண் உடைந்து வீழ்ந்த தலமாகிய ஈரோட்டைச் சார்ந்து வாழுங்கள் என்று கட்டளையிடவும் (அம் மாதர்) நன்றென்று இந்திரனை வணங்கிக்கொண்டு சென்றனர் என்றவாறு.

விளக்கவுரை : *ஈரோடு—பிளந்த ஓடு. ஈரோடு கபாலபுரியாமென்பர். மறந்தை, புரந்தை, மயிலை, கபாலபுரி யென்பன ஈரோட்டின் பழம் பெயர்கள்.*

*பிரமன் படைத்தற் றொழிலைச் செய்தலால் தானே முதற் கடவுள் என்று கூறிச் சிவபராணை யிகழ்ந்த பொழுது சிவபெருமான் வெளிப்பட்டு வயிரவரை நோக்கவும்; வயிரவர் பிரமனது தலையைக் கொய்தாரென்பது புராண வரலாறு.*

"உலக மூன்று மொருங்குடன் படைத்த
மலரோன் தன்னை வான்சிர மரிந்தும்"
— கோபப் பிரசாதம் 4, 5.

*காவிரியின் கரையருகில் ஈரோடுள்ளதென்பதை.*

''காவிரியின் கரையருகீ ரோடை தன்னிற்
கதித்திடுலிங் கந்தனது பெயராற் செய்து''

என்னும் பூந்துறைப் புராணத்தாலு முணர்க.

''கன்ன லொடித்துவருங் காவிரிநீர் சார்ந்திடுமூர்''

— ஐமணிமாலை.

விண்ணுட்டில் தேவேந்திரன் இந்திராணியைக் கூடி வாழ்பவ னுதலின் தான் காதலித்த மகளிரைக் கூடுதற்கு இயலாதாகலின் அவர்களை மண்ணுட்டிற் பிறக்கும்படி கூறினுரென்க. அன்றியும் ஈரோட்டின் மகிமையை விளக்குதற்பொருட்டு அம்மகளிரைப் பூமியில் பிறக்குமாறு கூறினனெனவுமாம்.

8. விண்ணி னின்னன நிகழ்ந்திட விதிவழி யதனுன்
மண்ணி னித்தலத் தெம்பிரான் கோயிலின் வாழ்க்கைப்
பண்ணி னன்மொழிப் பரத்தையர் பாற்றுணை வியரும்
மண்ணில் வந்துதித் தாரிரண் டலர்மகள் பொருவ

பொழிப்புரை: வானுலகத்தில் இவ்விதம் நிகழவும், ஊழின் வழியால் பூமியிலுள்ள ஈரோடென்னும் இந்தத் தலத்திலுள்ள எமது சிவபெருமான் வீற்றிருக்கும் கோவிலினடத்தில் பணிபுரிந்து வாழ்தலை யுடைய இசைபோலும் நன்மையாகிய மொழியைப் பேசும் கணிகைமாத ரிடத்தில் இரண்டு பெண்களும் இரண்டு இலக்குமியைப் போலப் பூமியின் கண் வந்து தோன்றினுர்கள் என்றவாறு.

விளக்கவுரை: விதி கட்டளை யெனினுமாம். விண்மாதர் மண்மாதராய்ப் பிறக்கும்படி நேர்ந்தது விதிவழியாம் என்பார் ''விதிவழியதனுல்'' என்ருர். எம்பிரான் என்றது ஈரோட்டில் விளங்கும் திருத்தொண்டீசுவரமுடையான் என்ற சிவபிரானை யாம். எம்பிரான் என்பதனுல் ஆசிரியருடைய சிவபக்தியின் மேன்மை விளங்கும். பரத்தையர் என்போர் வழிவழிச் சிவ பெருமானுக்குத் தொண்டு செய்தொழுகும் உருத்திர கணிகையர். ''இரண்டலர்மகள் பொருவ''—என்பது இல்பொருள் உவமை.

பூந்துறைப் புராணம் இச் சரிதத்தைச் சிறிது வேறுபடக் கூறும்.

9. பாரு தித்திடு மிருவரும் பருவங்க டோறுஞ்
சீரு தித்திடத் திருவங்க ளுதித்திடச் சிறந்தே
யேரு தித்திடுஞ் சிறுநல்லார் பெருநல்லா ரென்னும்
பேரு தித்திடு மிருவரும் பிறையென வளர்ந்தார்

பொழிப்புரை : பூமியில் பிறந்த இரண்டு மாதரும் தாம் பெற்ற பருவங்கள் தோறும் சிறந்த அழகுகள் தோன்றவும்; திருவருள் பெருகவும்; சிறந்து விளங்கிப், பின்பு அழகு விளங்குகின்ற சிறுநல்லார் பெருநல்லார் என்னும் பேர்பெற்று விளங்குகின்ற இரண்டுபேரும் வளர்கின்ற பிறைச் சந்திரனைப்போல வளர்ச்சியுற்றார்கள் என்றவாறு.

*விளக்கவுரை : பருவங்கள் என்றது மகளிர்க்குரிய எழுவகைப் பருவங்களையாம். அவை பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்பனவாம். முறையே இவற்றிற்குரிய வயது ஏழு, பதினொன்று, பதின்மூன்று, பத்தொன்பது, இருபத்தைந்து, முப்பத்தொன்று, நாற்பது என்பனவாம். அழகு பலவகையாம் ஆதலின் "திருவங்கள் உதித்திட"- எனப் பன்மையாற் கூறினர்.*

*இம்மாதர்ப் பற்றிய ஐதிகங்கள் பூந்துறை நாட்டிற் பலவிடங் களிற் கூறப்படுகின்றன. மாட்டின்மேற் போடும் பொதிபோன்று நடுவில் தாழ்ந்து இருபுறத்தும் உயர்ந்த சிகரங்களையுடையதாய்ப் பொதிமாமலையெனப் பெயர்பெற்று விளங்கும் கனககிரியென்னும் எழுமாத்தூர் மலை இம்மாதர் இருவர் பெயரால் சின்னநல்லாள் பெரியநல்லாள் மண் கொழித்த மலையென உலகினரால் இன்றும் வழங்கப்படுகின்றது. இம்மலை எழுமாத்தூருக்கு மிகவும் அழகு தருவதாயுள்ளது.*

"கோலவேல் வீரன் குலாவுகன கக்குன்றின்
ஞால மகிழ்காட்சி நல்கிநுய் - தாலத்தில்
ஏழ்மாதர் வாழ்த்து மெழுமாதை யம்பதி நீ
வாழ்மா நிலத் தினிது மண்" — கனககிரி வெண்பா.

10. பூங்க முங்குபந் தம்மனை யூசல்பூ வையரோ
டாங்க மர்ந்துபன் முறைவினை யாடிய பின்னர்ப்
பாங்க மைந்ததங் குலத்தினுக் கேற்றவா பரதந்
தீங்கு ருவகை சிரமத்தின் செயல்முழு துணர்ந்தார்.

பொழிப்புரை : ஆங்குள்ள மகளிருடன் விரும்பி (தங்கி) அழகிய கழங்கும், பந்தும், அம்மானையும், ஊசலும் பலமுறையாக விளையாடிய பிறகு உரிமையாக வமைந்த தங்கள் குலமுறைக்குத் தகுந்தவிதமாகப் பரத நூன் முறைக்குக் குற்றமுண்டாகாத வகையில் சிரமத்துடனே பரதநாட்டியத் தொழில் முழுவதையும் அறிந்தார்கள் என்றவாறு.

விளக்கவுரை : *கழங்கு—கழற்சிக்காய். கழங்காடுதல் முதலியன மகளிர்க்குரிய விளையாடல்களாம்.*

"ஆடுகழங் கம்மானை" — இலக்கண விளக்கப்பாட்டியல்.

"கழங்காடு மகளி ரோதை யாயத்து" — சிலம்பு.

"பாவையுங் கந்துங் கழங்கும்" — கொங்குவேள் மாக்கதை.

*அம் மகளிர் நாடகக் கணிகையர் குலத்தினராதலின் பரதம் அவர்களுக் குரியதாயிற்று. பரதம்—பரத நாட்டியம்.*

"பாடல் வண்டரற்றுந் தாரினன் பரதப்
பனுவலுங் கசடறப் பயின்றான்"

திருவிளையாடற்புராணம். கான்மாற்றியாடிய படலம்-7.

*பாவம், ராகம், தாளம் மூன்றுங் கூடியது பரதமாம்.*

"பாவமோ டராக தாளமிம் மூன்றும்
பகர்ந்திடு முறையினாற் பரதம்" — பரதசாத்திரம்.

*பரத சாத்திரம் தாண்டவம், நிருத்தம், நாட்டியமென்னும் மூவகைக் கூத்தும் முறையுறக் கூறும். பரதம் பயிலுதல் மிகவும் சிரமமானதாகலின் அதனைச் "சிரமத்தின் செயல் முழுதுணர்ந் தார்"— என்றார். சிரமம் என்பது கூத்தினுக்குரிய தொழில் வகைகளுக்குப் பெயராம் என்பர்.*

"பருமித்தல் சிரமஞ் செய்த லென்ப" — பிங்கலம் 1446.

*பரதமாகிய கூத்துப் பயிலுதல் சிரமம் என்பதனை*

"உறைத்தவிக் கூத்துக் கற்கும் போதுதன் னுடலிற் சால
வருத்தநோ யெய்தி யிந்த வகுத்த நான் மறையுந் தேரு

வருத்தமா யறிவாய் வெள்ளி யம்பலத் தாடி நின்ற
நிருத்தனுர் தமக்கு முண்டே யென்பது நினைவிற் கொண்டான்''
என்னும் திருவிளையாடற் புராணச் செய்யுளானுமுணர்க.

(வேறு)

11. வண்டமிழு மாரியமும் மாறில்பல நூலும்
கொண்டிசைக ளேபயில்வு கொண்டுமுறை பாடித்
தண்டரள மாதலைவ ளத்தொடையல் சூடி
அண்டர்புகழ் வாணிநிக ராமென வளர்ந்தார்.

**பொழிப்புரை:** வளம் பொருந்திய தமிழ்மொழியும் வடமொழியும் ஆகியவற்றிலுள்ள மாறுபாடில்லாத (ஒத்த கருத்துடைய) பல நூல்களைக் கற்றும்; இசைப் பாடல்களைப் பயின்றும்; அவற்றைப் பலமுறையாகப் பாடியும்; குளிர்ச்சி பொருந்திய முத்துமாலைகளையும், வெண்மையாகிய (மல்லிகை, முல்லை முதலிய) வெண்ணிறப் பூக்களால் தொடுக்கப் பட்ட பூமாலைகளையும் தரித்தும்; தேவர்கள் புகழ்கின்ற கலைமகளுக்கு ஒப்பாம் என்று சொல்லும்படியாக வளர்ந்தார்கள் என்றவாறு.

**விளக்கவுரை:** *தமிழும் ஆரியமும் தம்முள் ஒத்த மொழிகளாகலின் ''வண்டமிழு மாரியமும்'' என்ருர். அம்மகளிரிருவரும் கல்வி, வெண்ணிற மாலை தரித்தல் முதலியவற்ருல் வாணியை யொத்தவராயினர். உவமையணி.*

''உவமை யென்ப தோரிரு பொருளுக்
கொப்புமை தோன்றச் செப்புவ ததுதான்'' — அணியியல்-5.

12. மங்கல வளம்பல மகிழ்ந்துதின மேவிப்
பொங்குநறு மாமணி பொலன்கல னணிந்தே
குங்கும நரந்தமுலை கொட்டியெழில் மீறிச்
செங்கமல பீடிகை சிறந்ததிரு வொத்தார்

**பொழிப்புரை:** நாள்தோறும் மங்கலமாகிய பொருள்கள் பலவற்றைப் பெற்று நல்ல அழகு விளங்குகின்ற பெரிய செம்பதுமராக மணிகளாலானதும்; பொன்னல் இயன்றதுவும் ஆகிய ஆபரணங்களை அணிந்தும்; குங்குமக் குழம்பையும், கத்தூரியையும் முலைகளில் அப்பியும் அழகின்

மிகுந்து செந்தாமரை மலர்ப் பீடத்தில் சிறப்புற விருக்கின்ற இலக்குமியை யொத்து விளங்கினர் என்றவாறு.

விளக்கவுரை : *மங்கல வளம்பலவென்றது அட்ட மங்கலங் களாம்.*

" கவரி நிறைகுடங் கண்ணடி தோட்டி
முரசு விளக்குப் பதாகை யிணைக்கயல்
அளவில் சிறப்பின் அட்டமங் கலமே" — பிங்கலம்-431.

*பொலன்—பொன். நரந்தம்—கத்தூரி. பீடிகை—ஆசனம். மங்கலமுடையவளாய்ச் செந்நிறமான ஆபரண முதலியன வணிந்து செந்நிறமுடைய தாமரை மலராசனத்தில் திகழ்பவள் இலக்குமி தேவி. இம் மகளிரும் இலக்குமிக்குரிய மங்கல முதலியன பெற்றுத் திகழ்தலின் "சிறந்ததிரு வொத்தார்" என்றார்.*

13. மந்திரமு தற்பிறவும் வந்தமணி வீணை
தந்திரந ரம்புதட வந்திசை பயின்று
சிந்தைபுரி மாதவர்கள் செஞ்செவிக வர்ந்து
கந்திருவ மங்கையர் கவின்கொடுவ ளர்ந்தார்.

பொழிப்புரை : மந்திர முதலிய பிறவற்றையும் அழகு பொருந்திய வீணை நரம்பை வருடுதலாகிய இசையையும் கற்று மனம் விரும்புகின்ற முனிவர்களுடைய செவிப் புலன்களைக் கவர்ந்தும், கந்தருவ லோகத்துப் பெண்களின் அழகினைப் பெற்றும் வாழ்ந்தார்கள் என்றவாறு.

விளக்கவுரை : *மந்திர முதல் பிறவும் என்றது மந்திரம் மருந்து மணி எந்திரம் என்பவற்றையாம். இவை ஆடவரை வசப் படுத்துதற்குரியன வாகலின் இசைநாட்டியம் போலக் கணிகையர் குலத்து மகளிர் கற்றற் குரியனவாம்.*

" மந்திரம ருந்துமணி மற்றுமுள வாய
வெந்திரமெ னப்படுமி வற்றுள மடுத்து
மைந்தர்பொருள் வவ்விவரு மாதவர் தமக்கும்
தந்தியத ளாடையர் தமக்குமுத வாதோ"

"மந்திர மருந்துநன் மணிக ளாலிவர்
சிந்தையைத் தெளிவுறத் தெருட்டிக் காமமேற்
புந்தியை மீட்பவர் பொருட ராமலே
செந்திரு வனையவர்ச் சேர்க வென்றனள்"
— சீகாளத்திப் புராணம்-கன்னியர்ச் சருக்கம்-47-69.

*மந்தர முதற் பிறவும் என்ற பாடத்திற்கு மந்தரம், மத்திமம், தார மென்னும் இசையோசைகளெனப் பொருள் கொள்க. இவ் வோசைகள் வீணைக்கு அமைந்தனவாம். மந்தரம் – படுத்த லோசை, மத்திமம் – நலிதலோசை, தாரம் – எடுத்தலோசை.*

"பொருந்தமந் தரத்திஞேடு மத்திமை தாரம் போக்கித்
திருந்திய துள்ளறுங்கல் மெலிவது சிறப்பச் செய்து
மருந்தன செய்யுளோசை யிசையோசை வழாமற் செய்து
விருந்தெனச் செவியின்மாந்தப் பாடினர் வேத கீதர்"
— திருவிளையாடற் புராணம்.

*தந்திர நரம்பு — வீணை நரம்பு. அந்திசை — அழகாகிய இசை. அந்தம் — அழகு. கந்தருவ மங்கையர் — இவர்கள் காதின் பக்கத்தில் யாழை வைத்து ஒலியெழுப்பி அதனிசையைக் கேட்டு மகிழ்ந்திருப்பவர்; தெய்வ சாதி மகளிருள் மிகவும் அழகுடையவர்.*

*இன்பங்களை வெறுத்துப் புலனடக்கமுடைய முனிவர்கள் மனதையும் வீணையிசை கவர்ந்ததாகலின் "மாதவர் செஞ்செவி கவர்ந்து" என்றார்,*

**14. பாரினுள போகமுழு தும்பரிவி னுய்ந்து
வேரிமலர் செம்பொனின் விளங்கிட மிலைந்து
தோரிய மடந்தையர்கள் சூழநட மாடி
யாரவிள மூரலயி ராணிநிக ரானர்.**

**பொழிப்புரை:** பூமியிலுள்ள போகவிதங்கள் (சுகானுபவங்கள்) முழுவதையும் அன்புடன் ஆராய்ந்தும்; தேன் பொருந்திய மலர் மாலைகளைச் செம்பொன்னணிகள் போல விளங்கும்படி சூடியும்; நாடக மகளிர் பலர் சூழ்ந்து நிற்க நடனமாடியும் முத்துப் போன்ற இளமையாகிய புன்முறுவலை யுடைய அயிராணியை ஒப்பாக விளங்கினர். என்றவாறு.

விளக்கவுரை : *அயிராணி-இந்திரனுடைய மனைவி. இவள் தேவ போகங்களை யனுபவித்தும், மலர் மாலைகளை யணிந்தும், அரம்பையர் சூழ நடனமாடியும் வாழ்பவள். வேரி—தேன். மூரல்-பற்கள். தோரிய மடந்தையர்-நடனமாடுதலில் முதிர்ச்சி பெற்ற பெண்கள்.*

"தொன்னெறி யியற்கைத் தோரிய மகளிரும்"

"வாரம் பாடுந் தோரிய மடந்தையும்" — சிலப்பதிகாரம்.

*போக முழுதும் பரிவினுய்ந்து என்பதற்குப் போக விதங்கள் பலவற்றையும் ஆராய்ந்து கற்று எனினுமாம். போகமாவது மகிழ்ச்சி, அன்பு, அவயவ நுகர்ச்சி என்பவற்றில் மாசுணம் (பாம்பு) அன்னம், காட்டுப் பசு என்பவற்றை யொத்துப் புணரும் புணர்ச்சி வகையாம் என்பர். கணிகையர் கற்பனவற்றுள் போக விதமும் ஒன்றும்.*

"தோகை மாமயிற் றூதைப் புருமுதற்
போக வோசை பயிற்றுறு புட்களும்
பாக வாமொழிப் பாவையர் கற்பன
வாக யாழ்முத லாயவு மீட்டினுன்" — சீகாளத்திப் புராணம்.

*நல்லாருக்கு அயிராணியை நிகராகக் கூறலால் இச்செய்யுள் உவமையணியாம்.*

"இருவகைப் பொருளுக் கொருபுணர்ப் பாக
வொப்பனை செய்தலு வமைய தாகும்" — குவலயானந்தம்.

15. **மாமதன வேள்விழி மனம்பிற கவர்ந்து**
**நாமமுறு காமகலை நாடொறுந வின்று**
**தூமமல ரோதியர் தொழும்படி யிருந்து**
**காமர்கழி யாவிரதி கட்டழகை யொத்தார்.**

பொழிப்புரை : பெருமை பொருந்திய மன்மதனுடைய கண்களையும் மன முதலிய பிறகரணங்களையும் தன்பால் கவர்ந்தும்; புகழ் பொருந்திய காம சாத்திரங்களை நாள்தோறும் படித்தும்; அகிற் புகை யூட்டப் பெற்று மலர்களை யணிந்த கூந்தலையுடைய பெண்களெல்லாரும் தம்மைத் தொழும் படியிருந்தும்; அழகு நீங்கப் பெருத இரதிதேவியினுடைய பேரழகை யொத்தவராயிருந்தார்கள் என்றவாறு.

*விளக்கவுரை :* *மதனவேள் ஒரு பொருட் பன்மொழி. முருகவேளின் வேறு பிரித்துக் காட்ட மதன வேள் என்றார். மகளிரிருவரும் பேரழகுடையவராதலின் "மாமதன வேள்விழி மனம்பிற கவர்ந்து" என்றார். காமகலை—மதன நூல். காமனாற் செய்யப் பெற்ற நூல்.*

"மாதவ ஞான மதனாக மத்திலே"— ஆதி நாதர் வளமடல் 113.

*காம நூல் என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கனுள் இன்பத்தை மிகுத்துக் கூறுவது.*

"மணிநகை யாரே தெய்வம் வாக்குப தேசங் கொங்கை
துணைகுரு பீடம் பாதத் துணைவரு டுவதே பூசை
யணைவது முத்தி யாசா னின்னமு மறியாய் போலும்
கணிகையர் முகத்திற் றேன்றும் காமனு கமங்க ளென்றான்"
— திருக்குற்றாலப் புராணம்.

*காம நூலிற் கூறப்படும் பொருள்கள் :*

"சாதி யியற்கைகள் தத்துவ மாந்தர்
நீதில் குணத்தொடு தேச மவத்தை
போது கருத்திவை ஆதிய போர்வேள்
வேத முரைக்கும் விழுப்பொருள் மாதோ"

"அம்மட வாரிய லானவு மன்னோர்
தம்மை யடைந்திடு தன்மையு மேவுஞ்
செம்மைகொ ளாடவர் செய்கையு மெல்லாம்
மெய்மைய தாக விளம்பிடும் வேள்நூல்"
— கந்தபுராணம்-இந்திரபுரிப் படலம்.

*கணிகையர் பயிலுவது காமகலையாகலின் "நாமமுறு காமகலை நாடொறு நவின்று" என்றார்.*

"காமக் கல்வியுங் கானத் திறங்களும்
வாமச் செம்மணி வல்லி பயிற்றினாள்"
— சீகாளத்திப் புராணம்.

*காமர் களியால்—பிரதி பேதம்.*

**16. கெண்டைவிழி காதொடு கிடந்துலவி மீளக்
கொண்டளக வண்டுகுமு றிக்குமுறி யாடத்**

*தண்டைகள் சிலம்புகள் சலஞ்சல வெனத்தாம்*
*பண்டைமுறை போல்நடன மாடுவ பயின்ருர்.*

**பொழிப்புரை :** கெண்டை மீன் போன்ற கண்கள் காது வரையிலும் சென்று கிடந்து திரும்பவும்; கூந்தலிற் பொருந்திய மலர் வண்டுகள் மிகவும் ஒலித் தொலித் தாடவும்; (காலணிகளாகிய) தண்டைகளும், சிலம்புகளும், சலஞ்சலவென வொலிக்கவும் பழமையாகிய பரத நூல் முறைபோல நடனமாடுதற்குப் பழகினுர் என்றவாறு

**விளக்கவுரை :** *நடனத்தில் நிகழும் நிகழ்ச்சி கூறிய திச் செய்யுள். அளக வண்டு என்பதற்குக் கூந்தலும் கை வளையல் களும் எனப் பொருளுரைத்தலுமாம். குமுறிக்குமுறி—அடுக்குத் தொடர். நாட்டிய மாடும் பொழுது அபிநயங்களில் கைகள் சென்ற வழிக் கண் பார்வைகள் செல்லுமாகலின், ''கெண்டை விழி காதொடு கிடந்துலவி மீள'' என்ருர்.*

''கள்ளவிழி போராடக் கையிலபி நயமெடுத்தாள்''
— திருக்குற்ருலப் புராணம்.

''கையொடு செல்லா நின்ற கடைக்கண்ணுல் மாயை காட்ட''

''தண்ணுமை விளங்கவரு தாளமிசை யெல்லாம்
வண்ணமலர் மெல்லடி வழிச்சதி யினிற்பக்
கண்ணிணைகொள் பல்வளைய கைவழி நடப்பப்
பெண்ணமுத மன்னவள் பெயர்ந்தனள் நடித்தாள்''
— பிரபுலிங்க லீலை.

*பண்டை முறைபோல் என்றது மகளிரிருவரும் முன்பு தாம் தேவ மாதராயிருந்த பொழுது ஆடிய முறையைக் குறித்த தெனினுமாம். முறை—நூல். பண்டை முறை—பழமையாகிய நாடக நூல். பரதம்—நாடக நூல் விதி வழியில் நிகழவேண்டு மாதலின் ''பண்டைமுறைபோல் நடனமாடுவ பயின்ருர்'' என்ருர்.*

''நாடக நூல்முறை நன்று நினைந்தே
ஆடவ ரம்பைய ராயுள ரெல்லாஞ்
சேடியர் கின்னரர் சித்த ரியக்கர்
பாடுற வீணைகள் பண்ணினர் பாட''
— கந்தபுராணம், அவைபுகு படலம்-23.

17. பன்னுமிசை யால்முனிவர் பண்பினை முடிப்பார்.
இன்னகையி னுலுலக மேழினையும் விற்பார்
அன்னநடை யால்மல ரயன்றனை யழைப்பார்
வன்னமுலை யான்மதன் முடிக்கவினை மாய்ப்பார்.

*பொழிப்புரை :* சொல்லப்படுகின்ற இசைப் பாடல்களால் முனிவர் களுடைய நல்ல குணங்களை யழிப்பர். இனிய புன்சிரிப்பினுல் ஏழுலகத் தாரையும் விற்பனைக் கிரயம் பண்ணுவர். அன்னப் பறவையின் நடை போன்ற அழகிய நடையால் தாமரை மலரிலுள்ள பிரமதேவனைத் தம்மிடம் வரச் செய்வர். முலையழகினுல் மன்மதனுடைய கிரீடத்தின் அழகினைக் கெடுப்பர் என்றவாறு.

விளக்கவுரை : "பாவோடிணைந்த விசை" — பஞ்சமரபு. *இசை–இசைப் பாடல். அம்மகளிர் பாடுமிசைப் பாடலைக்கேட்ட முனிவர் அப் பாடலின்பத்தில் மனம்செலுத்தித் தவம் குலைகின் றனராதலின் 'பன்னுமிசையால் முனிவர் பண்பினை முடிப்பார்' என்றார். அம் மகளிர் தமது அழகிய புன்சிரிப்பினைப் பெறுவ தற்குக் கிரயமாக ஏழுலகத்தையும் விற்கச் செய்வாரெனினுமாம்.*

*பிரமனது வாகனமாகிய அன்னப் பறவையின் நடையிலும் சிறந்த அழகிய நடையுடையராகலின் அம் மகளிர் தம் நடையழ கைக் காண்பதற்குப் பிரமதேவனும் அவர்பால் வருவான் என் பார் "அன்னநடை யால்மல ரயன்றனை யழைப்பார்" என்றார்.*

*முலைக்கு உவமை கூறும் பொருள்களில் மன்மத கிரீடமு மொன்றாகும்.*

"பிடியிருக்குஞ் சிறுநடையாள் பெருங்காம னபிடேக
முடியிருக்குங் கனதனத்தாள்" — திருக்குற்றாலப் புராணம்.

*உவமானமாகிய மன்தமத கிரீடத்தின் அழகினும் சிறந்தது உவமேயமாகிய முலைகள் என்பார் "வன்னமுலை யான்மதன் முடிக்கவினை மாய்ப்பார்" என்றார். "வன்னமுலை யான் மதன் முடிக்கவினை மாய்ப்பார்" என்று மன்மத கிரீடமாகிய உவமா னத்திற்குக் குறைவு (நிந்தை) தோன்றச் சொல்லுதலால் எதிர்நிலையணியாம்.*

"எதிர்நிலை யுவமா னந்தனக் கிகழ்ச்சி
யடைய வுரைப்ப தாமை வகைத்து" — அணியியல்–9.

18. ஊடிவரை யாமலொரு காசுமுதல் வாங்கும்
பீடுகெழு குலையர் பிறப்பினி லுதித்தும்
நாடுவிதி யின்பயனை யார்நவில வல்லார்
ஆடவர்த மக்குமணி யல்குல்விலை கூறுர்.

பொழிப்புரை : (ஆடவருடன்) பிணங்கி, அளவு செய்யாமல் ஒரு காசு முதல் (கிடைத்தவற்றை யெல்லாம்) வாங்குகின்ற வலிமையுடைய பரத்தையர் குலத்தில் பிறந்திருந்தும் ஆடவர்களுக்குத் தம்முடைய அல்குலை விலை கூறுராயினர். இச் செயல் விரும்பி வருகின்ற ஊழ்வினையின் பயனுயின் இதனை யார் அறிந்து சொல்ல வல்லார் என்றவாறு.

விளக்கவுரை :

"ஊடுதல் காமத்திற் கின்பம்" — குறள்.

என்றபடி மகளிர் ஆடவரிடத்தில் ஊடிக் கூடுதல் காமவின்பத்தை மிகச் செய்வதாம். அம் மகளிர் அதனைச் செய்யாராயினு ரென்பார் "ஊடிவரை யாமல்" என்றுர். வரையாமல்— கூடாமல் என்னும் பொருளிலும் வரும்.

பரத்தைய ரூடல் காமவின்பத்தை மிகுவித்தற் பொருட்டன்றிக் காமத்தை மிகச் செய்து ஆடவர்களிடத்துள்ள சிறிது கைப் பொருளையும் கவருதற்காமென்பார், "ஊடிவரை யாமலொரு காசுமுதல் வாங்கும் பீடுகெழு குலையர்" என்றுர்.

பொருள் பெறுதலே நோக்கமாக வுடைய பரத்தையர் குலத்திற் பிறந்தும் பொருள் பெறுதற்குரிய போகம் விற்றலாகிய தம் குலத்தொழிலைச் செய்யாதிருந்தது முன்வினையாகிய ஊழின் பயனு மென்பார், "நாடு விதியின் பயனை" என்றுர்.

விதியின் பயன் இவ்வாறிருக்கு மென்று முன்னறிந்து சொல்லுதல் யார்க்கும் இயலாததாகலின் "நாடு விதியின் பயனை யார் நவில வல்லார்" என்றுர்.

அல்குல் விற்போர் பரத்தையராகலின் "ஆடவர் தமக்கு மணியல்குல் விலை கூறுர்" என்றுர்.

" தடையற வல்குல் விற்போர் சேரியின் றன்மை சொல்வாம் "
— உறையூர்ப் புராணம்.

அல்குல் என்பதனை குல் தொடர்ந்த அல் என மறைத்து மொழிகிளவியாற் கூறுவர் உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர்.

இச் செய்யுளில் விதியின் பயன் என்னும் பொருளால் ஆடவர் தமக்கு மணி யல்குல் விலை கூறுர் என்னும் பொருள் சாதிக்கப்பட்டதாகலின் இச் செய்யுள் வேற்றுப் பொருள் வைப் பணியாம்.

விதியின் மகிமையால் ஆடவர் தமக்கு மணியல்குல் விலை கூறுதிருந்தது எளிதாயிற்றென வுணர்க. இவ்வாறு கூறுதலைக் குவலயானந்த நூலார் " பயனந்தாம் " என்னும் அணியாகக் கூறுவார்.

" மகிமை புனையு மகத்தெனும் பெரியோர்க்
கொன்று மருமை யிலையெனச் செப்புதல்
பயனந் தாமெனப் பகர்ந்தனர் புலவர் "
— குவலயானந்தம், பொருளணியியல்.

**19. இத்திறமன் னுரவ ணிருந்துவளர் நாளில்**
**சித்தமகிழ் தாயரொடு சேடியர்கள் கூடி**
**யத்தர்திரு முன்பிலரங் கேற்றவென நாடி**
**மெய்த்தவமின் னுரைமணி வீதிகொடு புக்கார்.**

பொழிப்புரை : இத்தன்மையாக அம் மாதர்கள் அந்த ஈரோடைத் தலத்திலிருந்து வளர்ந்த காலத்தில் மனம் மகிழ்ந்துள்ள தாய்மார்களுடன் தோழியர்களும் சேர்ந்து திருத் தொண்டீசுரமுடையான் திருமுன்பில் அரங்கேற்றுவதற்கு விரும்பி உண்மையாகிய தவத்தினையுடைய மகளிரிரு வரையும் அழகிய வீதி வழியாக அழைத்துக் கொண்டு சென்றுர்கள் என்றவாறு.

விளக்கவுரை : அத்தர்—ஈரோட்டிலுள்ள சிவபெருமான். இவருக்குத் தொண்டீசுரர், சோழீசுரர், சேடீசுரர் என்ற பெயர்கள் வழங்குகின்றன. அரங்கேற்றல்—தாம் கற்ற கல்வியை அவையிலுள்ளோர் நன்றென்று ஏற்குமாறு செய்தலாம். ஈண்டு

*அரங்கேற்றவென்றது நல்லாரிருவருடைய நாட்டியப் புலமையை அவையிலுள்ளோர் ஏற்று மதிக்கச் செய்வதன் பொருட்டு என்றபடியாம்.*

"மங்கை மாதவி யரங்கேற்று காதையும்" — சிலப்பதிகாரம்.

"நாடெலாம் பணிகொளவோ நாகநாட் டரம்பயரை
யாடலாற் பணிகொளவோ வரங்கேறத் தொடங்கினுள்"
— திருக்குற்றுலப் புராணம், தருமசாமி 50.

20. கன்னியர்கள் கண்களெதிர் கண்டுழைகள் சூழ
மின்னுலவு சாயலது கண்டுமயில் மேவ
அன்னநடை கண்டுமிக நாணியயல் போக
மென்னடை பயின்றுமெல மெல்லென நடந்தார்.

**பொழிப்புரை:** கன்னியர்களுடைய கண்களை நேராகப் பார்த்த மான்கள் சூழ்ந்து வரவும், ஒளி பொருந்திய உடலின் மென்மைத் தன்மையைப் பார்த்து மயில்கள் விரும்பி வரவும்; நடையின் அழகினைக் கண்டு அன்னங்கள் வெட்கமுற்று அயலில் மறைந்து போகவும், மிருதுவான நடையினைச் செய்து மிகவும் மெதுவாகப் போனுர் என்றவாறு.

**விளக்கவுரை :** *கன்னியர் — சிறுநல்லார், பெருநல்லார். உழை—மான்கள். கன்னியரின் கண்கள், சாயல், நடை ஆகிய வற்றிற்கு முறையே மானும், மயிலும், அன்னமும் உவமைகளாம். கண்களும் சாயலும் தம்மை ஒத்திருத்தலின் மானும் மயிலும் சூழ்தலும், மேவுதலும் செய்தன. இருவரின் நடை தம்முடைய அழகிய நடையினும் மேற்பட்ட நடையாகலின், செருக்குற்றிருந்த அன்னங்கள் வெட்கமுற்று அயலிற் சென்றன வென்க.*

*இச் செய்யுளில் கன்னியர்களின் கண்கள், சாயல், நடை ஆகியவற்றின் காட்சியைக் கண்ட மான் முதலிய அஃறிணைப் பொருள்களினியல்புகள் கூறினுர்.*

21. பேரழகு கண்டுசிலர் பேதுறல்கொள் வாரு
மாரமுலை கண்டுசில ரங்கனயர் வாரும்
போர்விழிகள் கண்டுசிலர் போற்றிமெலி வாரும்
மூரலெதிர் கண்டுசிலர் மோகமுறு வாரும்.

**பொழிப்புரை :** அம் மகளிரிருவருடைய பெருமையாகிய அழகினைக் கண்டு மதி மயக்கம் கொள்வார் சிலரும்; முத்துவட மணிந்த முலையினழகைப் பார்த்து அவ்விதமாகவே தளர்ச்சியடைவோர் சிலரும்; போர் செய்யும் விழிகளைக் கண்டு புகழ்ந்து உள்ளம் மெலிவார் சிலரும், புன்சிரிப்பைக் கண்டு (பல் வரிசை கண்டு) மோக மடைவார் சிலருமாக ஆயினர் என்றவாறு.

**விளக்கவுரை :** *இதுவும் அடுத்த செய்யுளும் ஆடவருக்கு நல்லார் பாலுள்ள விருப்பத்தின் வேறுபாடுகள் கூறலால் சிருங்காரமென்னும் காதற்சுவை பற்றியனவாம்.*

“காதல் புணர்ச்சி புலமெனக் கொண்ட
விருப்பின் வேறுபா டாகு மென்ப”

— அணியியல், சுவைப் படலம்–15.

*இச் செய்யுள் கன்னியர்களின் அழகு, முலைகள், விழிகள், மூரல் ஆகியவற்றின் காட்சியைக் கண்ட உயர்திணைப் பொருள்களாகிய ஆடவர்களின் இயல்பு கூறியது.*

22. நில்லுநில்லு மென்றுசிலர் நெஞ்சுநெகிழ் வாரும்
புல்லுமெமை யேவிலை புரிந்திடுமென் பாரும்
நல்லர்நல்ல ரோவென நவின்றிடுமென் பாரும்
இல்லையிடை யோசிறி திருந்திடுமென் பாரும்.

**பொழிப்புரை :** நில்லுங்கள் நில்லுங்கள் என்று சொல்லி மனம் தளர்வோர் சிலரும்; எம்மைத் தழுவுங்கள் அதற்கு வேண்டிய விலைப் பணம் சொல்லுங்கள் என்பவர் சிலரும்; நல்லார் என்னும் பெயருடைய இம் மாதர்கள் நல்லவராவரோ? நீங்களே சொல்லுங்கள் என்பார் சிலரும்; இம் மாதர்களுக்கு இடுப்பில்லையோ? என்பார் சிலரும்; சிறிதாக இடுப்புண்டென்பார் சிலரும் ஆயினர். என்றவாறு.

**விளக்கவுரை :** *நல்லாரிருவரும் ஒருவரையும் நோக்காது விரைந்து செல்கின்றனராதலின் அவர்பால் மோகமுற்றோர் சிலர் அவரை நிறுத்தித் தம் விருப்பம் அறிவித்தற் பொருட்டு நில்லு நில்லு மென்றனர்.*

*அவர் பொது மகளிராகலின், “எம்மைப் புல்லும்” என்றும்; போகம் விற்போராகலின் “விலைபுரிந்திடும்” என்றும் கூறுவாராயினர். அவர் தம் விருப்பத்திற்கிணங்காது செல்லு*

தலின் நல்லவர் என்னும் பெயருடைய அம்மகளிர் கொடியர் என்பராய், " நல்லர் நல்லரோ? என நவின்றிடும் " என்று வழிவருவோரைக் கேட்பவராயினர். நல்லரோ—ஓகாரம் எதிர் மறை. அம்மகளிருடைய இடுப்பானது மிகவும் நுட்பமாய்த் தோன்றுதிருத்தலின், " இல்லை யிடையோ? " என்றுர். அவ ருள் கருத்துடைய சிலர், முகம், தனம் ஆகிய உறுப்புக்களைத் தாங்கி நிற்றற்கு இடை சிறிதிருத்தல் வேண்டுமென்பாராய், " சிறிதிருந்திடும் " என்பாராயினர்.

23. ஆடவரிவ் வாறுபுடை யஞ்சலி திருத்தப்
பாடக மணிந்தபத நோவநடை கொண்டே
யேடுதிகழ் கொன்றையர்தொண் டீசருறை கோவில்
நாடக நவின்றிட நலங்கொடு புகுந்தார்.

பொழிப்புரை : அம்மகளிரைக் கண்ட ஆடவர்கள் இவ்வாறு கூறிப் பக்கத்தில் நின்று கைகுவித்துக் கும்பிடும்படி சிலம்பினை யணிந்த பாதங்கள் வலியெடுக்குமாறு நடந்து சென்று இதழ்கள் விளங்குகின்ற கொன்றைப் பூ மாலை யணிந்தவராகிய திருத்தொண்டீசுவரர் வாழ்கின்ற கோவிலில் நடனமாடுதற்கு அன்புகொண்டடைந்தார்கள் என்றவாறு.

விளக்கவுரை : அஞ்சலி திருத்த வென்பது கை குவித்து வணங்க வென்பதாம். சிவபிரான் பொன்போற் பொலியும் பிரணவ வடிவமான இதழ்களையுடைய கொன்றைப் பூ மாலை யணிந்தவராகலின், " ஏடுதிகழ் கொன்றையர் " எனப் பெற்றுர். ஈரோட்டிற் சிவபெருமான் சேடியரிருவரால் தொண்டு செய்யப் பெற்றவராகலின், " தொண்டீசர் " எனப் பெயர் பெற்றுர் என்பர். அடியவர் ஒருவர் பொருட்டுத் தொண்டு செய் தவராகலின் தொண்டீசர் எனப் பெயர் பெற்றுர் என்பது முண்டு.

" மறையவனைச் செகம்படைக்க வைத்தீர் பின்னும்
மாவுலக மிரட்சிக்கை மாலுக் கீந்தீர்.
பருவதரா சன்மகளை யிடத்தில் வைத்தீர்
பைம்பொனுறும் மேருதனைப் படைத்தீர் பின்னும்
தரணிபுகழ் உயர்மறந்தை புரந்தை யென்ற
தகவுடைய மயிலையீ ரோடு பெற்றீர்
இறையரச னுனவுமைத் தொண்டீச னென்றே
யிவ்வூரி லேபெயரை யிட்ட தாரே " — பழம்பாடல்.

*நவின்றிட—அவையினர் நன்றென்று மதித்துச் சொல்லுத லின் பொருட்டு, அரங்கேற்றுதலின் பொருட்டு என்றவாறும். நாடகம் இசையும், பாட்டும், நடனமும் கூடியதாகலின் அதனை வாயின் றொழிலாகிய பாடலின் மேலேற்றி "நாடகம் நவின் றிட" என்றுரெனினுமாம்.*

*(வேறு)*

24\. சென்று நடம்புரி பசும்பொற்
செழுமா மணிமண் டபமேவிக்
கன்று மறிமான் புனைந்தவர்தொண்
டீசர் கழற்சே வடிபோற்றி
நின்று தமியேந் தமையாண்டு
கொள்வா யென்று நெகிழ்ந்துருகி
நன்று புரிநா டகநவில
நறைமா மலர்தூய் வணங்கினர்.

**பொழிப்புரை:** கோவிலுட் சென்று நடனமாடுதற்குரிய பசும் பொன்னுற் செய்த அழகாகிய இரத்தினங்கள் பதித்துள்ள நிருத்த மண்ட பத்தை யடைந்து, கன்ருகிய மான் குட்டியைக் கையில் தரித்தவராகிய தொண்டீசுவரருடைய வீர கண்டை யணிந்த செம்மையாகிய பாதங்களைத் துதித்து நின்று தனியர்களாகிய எங்களை அடிமைகொண் டருள்வாயென்று மன நெகிழ்ந்துருகி, நன்மை பொருந்திய நடனமாடுதற்குத்தேன்பொருந் திய சிறந்த மலர்களைச் சொரிந்து வணங்கினர்கள். என்றவாறு.

**விளக்கவுரை:** *கன்றுமறிமான் என்பதனைக் கன்றும் மறி மான் எனப் பிரித்துக் கோபித்து வந்த மான் எனினுமாம். நாடகம் நவில—நாடக மாட; நாடகம் பாட; நாட்டினர் புகழ என வுரைத்துக் கொள்க. தம் நாட்டிய வித்தை வெற்றி பெறு தலின் பொருட்டுச் சிவபெருமானை வணங்கினர் என்பார், "நறை மாமலர் தூய் வணங்கினர்" என்ருர்.*

25\. ஆடற் கேற்ற பல்லியங்க
ளார்ப்பச் சதுமா மறைநெறியிற்
பாடற் கேற்ற குழலிசையாழ்
பயின்றே ழிசையின் பண்ணெழுப்பிக்

கோடற் கேற்ற கைத்தலத்தின்
விதமுங் கூத்தின் குணமும்விழி
நாடற் கேற்ற வவையகத்தின்
நலமும் நயப்ப நடிக்குங்கால்.

*பொழிப்புரை :* தாம் நடனமாடுவதற்குத் தகுந்த பலவகை வாத்தியங்கள் ஒலிக்க; நான்கு வேதங்களின் நெறியில் வந்த பாடலுக்குத் தகுந்த குழலிசையும்; யாழிசையும் (எழுப்பி) ஒலிக்கச் செய்து ஏழிசைகளினின்றும் பிறக்கும் பண்களை யெழுப்பக்; கொள்ளுதற்குத் தகுந்த ஒற்றைக்கை; இரட்டைக் கைகளாற் செய்யப்படும் அவிநய வகைகளும்; ஏழுவகையான கூத்தின் இயல்பும் கண்கள் விரும்பிப் பார்த்தற்குத் தகுந்த அவையினருக்கு மகிழ்ச்சி மிகும்படி நாடகம் நடிக்கின்ற காலத்தில் என்றவாறு.

*விளக்கவுரை : நடனமாடுதற்கேற்ற பலவகை வாத்தியங்கள் வேண்டுமாகலின் "ஆடற்கேற்ற பல்லியங்களார்ப்ப"— என்றார். அவை 'குடமுழா' முதலிய பலவகை இசைக் கருவிகளாம்.*

"குடமுழவங் கொக்கரை பொருதாளங் குழல்வீணை
படகநெடுங் கத்திரிகை தடாரிபணி லங்கள்
துடிகரடஞ் சச்சரி" —கோயிற்புராணம்.

"தண்ணுமை விளங்கவரு தாளமிசை யெல்லாம்
வண்ணமலர் மெல்லடி வழிச்சதியின் நிற்பக்
கண்ணிணைகொள் பல்வகைய கைவழி நடப்பப்
பெண்ணமுத மன்னவள் பெயர்ந்தனள் நடித்தாள்"
— பிரபுலிங்கலீலை. மாயைபூசை கதி–52.

*மறைநெறியிற் பாடல் என்றது வேதநெறியின் பொருள் அமைந்த பாடல்களாம்.*

"வேத முறுவன பாட்டுள" — நான்மணிக்கடிகை.

*பாடலுக்கேற்பன பண்களாமாதலின் "பாடலுக்கேற்ற பண்ணெழுப்ப" — என்றார்.*

"பண்ணென்னும் பாடற் கியைபின்றேல்" — நான்மணிக்கடிகை.

*பண்கள், குழலும் யாழுமாகிய இசைக்கருவிகளிற் பிறப்பனவாமாகலின், "குழலிசை யாழ்பயின் றேழிசையின் பண்*

ணெழுப்ப ''— என்றுர். இசைக்கேற்பஅமைய வேண்டுவன கையாற் செய்யும் அபிநயமாகலின், ''கோடற் கேற்ற கைத்தலத் தின் விதமும் ''–என்றும்; அபிநயத்திற் கேற்ப அமைய வேண்டு வது கூத்தாகலின், '' கூத்தின் குணமும் '' – என்றும் கூறினுர்.

அக் கூத்தும் விரும்பிப்பார்க்கின்ற அவையினருக்கு மகிழ்ச் சியும் நன்மையும் அமையும்படி நடிக்க வேண்டுமாகலின், '' விழி நாடற் கேற்ற வவையகத்தின், நலமும் நயப்ப நடிக்குங் கால் '' — என்றுர். இந்நூலில், '' சுரர்மனங் கவர்ந்து கண் பரப்பி '' என்றதுங் காண்க. '' குழலிசை யாழிசை பயின் றேழிசையின் பண்ணெழுப்ப '' என்றது குழலும் யாழும் பயி லுவதால் உண்டாகும் ஏழிசையினின்றும் தோன்றும் நூற்று மூன்று பண்களேயாம்.

ஏழிசைகளாவன :- குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பவைகளாம். இவ் வேழிசைகளும் பொருந்த வமைந்துள்ளவை யாழ் நரம்புகளாம். ஏழிசையி னின்றும் நாற்பெரும் பண்கள் தோன்றும். அவை பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என்பனவாம்.

'' பாலை குறிஞ்சி மருதஞ் செவ்வழியென
நால்வகை யாழா நாற்பெரும் பண்ணே '' —பிங்கலம்– -1375.

'' தாரத் துழைதோன்றப் பாலையாழ் தண்குரல்
ஓருழை தோன்றக் குறிஞ்சியாழ்—நேரே
இளிகுரலிற் றேன்ற மருதயாழ் துத்தம்
இளியிற் பிறக்கநெய்தல் யாழ் '' — பஞ்சமரபு.

பாலையாழிலிருந்து குரல்குரலாகச் செம்பாலையும்; துத்தம் குரலாகப் படுமலைப் பாலையும், கைக்கிளை குரலாகச் செவ்வழிப் பாலையும்; உழைகுரலாக அரும்பாலையும்; இளிகுரலாகக் கொடிப் பாலையும்; விளரிகுரலாக விளரிப் பாலையும், தாரங்குரலாக மேற்செம் பாலையும் பிறக்கும். பாலை யென்பது பெரும் பண் ணும். மேற்கூறிய ஏழு பாலைகளும் ஒன்றிஒன்று வலிதாம்.

செம்பாலையில் எட்டும், படுமலைப் பாலையில் இருபத்திரண் டும், செவ்வழிப் பாலையில் பன்னிரண்டும், அரும் பாலையில் இருபத்தாறும், கொடிப் பாலையில் பன்னிரண்டும், விளரிப் பாலை யில் ஐந்தும், மேற் செம் பாலையில் பதினெட்டும் ஆக நூற்று மூன்று பண்கள் பிறக்கும்.

இசையென்பதற்கும் பண்ணென்பதற்கும் காரணம் யாதெனில் இயற்பாக்களுடனே இசைத்து நிற்றலால் இசையென்றும் தானங்களெட்டாலும், கிரியைகள் எட்டாலும் ஓசைப்படுதலாற் பண்ணென்றும் பெயராயிற்று.

தானங்களெட்டாவன:- தலை, மிடறு, நெஞ்சு, மூக்கு, இதழ், பல், நா, அண்ணம் என்பன.

கிரியைகள் எட்டாவன:- எடுத்தல், படுத்தல், நலித்தல், கம்பித்தல், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என்பனவாம்.

''பாவோ டிணைத்த லிசையென்றூர் பண்ணென்ற
தோவாப் பெருந்தான மெட்டானும்—பாவா
யெடுத்தல் முதலா விருநான்கும் பண்ணிற்
படுத்தமையாற் பண்ணென்று பார்'' — பஞ்சமரபு.

26. அம்பு ராசி சூழவனி
யரசர் நெருங்கு மவையகத்தோர்
கொம்ப னூர்கூத் தின்பத்தின்
கோப்புக் கேற்ற மண்டபமீ
தெம்பி ரான்மண் டபமேனு
மிதனைக் காணு வாயிரங்கண்
ணும்பர் கோவு மிவணுறைமண்
டபமும் வேண்டு மெனவுரைத்தார்.

பொழிப்புரை: கடல் சூழ்ந்த பூமியை யாளும் அரசர்களும்; மற்றும் நெருங்கியுள்ள சபையினிடத்துள்ளோர்களும்; பூங்கொம்பு போன்ற நல்லார் இருவருடைய இன்பத்தைத் தரும் கூத்தினது அமைப்புக் கேற்ற நிருத்த மண்டபமாகிய இது எம்முடைய சிவபெருமானுக்குரிய மண்டபமாயினும் இதன் அழகைக் காணுத ஆயிரங் கண்களையுடைய தேவர் தலைவனுகிய இந்திரனும் (தன்னுடைய ஆயிரங் கண்களாலும்) பார்த்து மகிழ்தற்கு இவ்விடம் வந்து தங்குவதற்குரிய மண்டபமொன்று இங்கு இருக்க வேண்டுமென்று சொன்னூர்கள். என்றவாறு.

விளக்கவுரை: கடல் பூமிதேவிக்கு ஆடையாக அழகு செய்தலின், ''அம்பு ராசி சூழவனி'' என்றூர். கடல் சூழ்ந்தவுலகெல்லாங் காக்கின்ற பெருமான்களாதலின் அரசர்கள் ''அம்புராசி சூழவனி யரசர்'' எனப் பெற்றனர். மகளிர் மலர்

மலர்ந்த அழகிய பூங்கொம்பு போலும் தோற்றமுடையராகலின், "கொம்பனார்" எனப் பெற்றார். மகளிர் கூத்து இன்பத்தை மிகுவிப்ப தாகலின் அதனைக் "கூத்தின்பம்" என்றார். கூத் தவிநயத்தின் என்பது பிரதிபேதம். கூத்திற்குக் கோப்பமைந்த ஏற்ற இடம் வேண்டுமாகலின், "கோப்புக் கேற்ற மண்டபம்" என்றார். கூத்திற் கேற்ற கோப்புக்களனைத்தும் அமைந்த மண் டபம் சிவாலயத்திலுள்ள நிருத்த மண்டபமாகலின் "ஈது எம் பிரான் மண்டபமேனும்" என்றார். இந்திரனும் பார்த்தறியாத மண்டபமென்பார் "இதனைக் காண வாயிரங்கண் ணும்பர் கோவும்" என்றார். இரண்டு கண்களாற் பார்த்தற் கியலாத இம் மண்டபத்தின் அழகைக் காண ஆயிரங் கண்களையுடைய இந்திரன் வேண்டுமென்பார், "ஆயிரங் கண்ணும்பர் கோவும் வேண்டுமென்றனர்"என்றார். அவ் விந்திரனும் இடைவிடாது எப்பொழுதுந் தங்கிப் பார்த்தற் கேற்ற சிறப்புடைய அலங்கார மண்டபமென்பார், "உம்பர் கோவு மிவணுறை மண்டபமும் வேண்டுமென வுரைத்தார்" என்றார். கூத்தில் விருப்பமுடை யவன் இந்திரனாகலின் அவனை ஈண்டுக் கூறினார்.

"மூவகை மலரும் பூத்து வண்டுளே முழங்கத் தெய்வப்
பூவலர் கொடிபோர்ந் தன்ன பொன்னனார் கூத்து மன்னர்
நாவல ரமுத மன்ன பாடலு நாக நாட்டுக்
காவலன் கண்டு கேட்டுக் களிமதுக் கடலு ளாழ்ந்தான்"

— திருவிளையாடற் புராணம்.

"கோப்பு — அவிநய நிலத்தினும் ஏழுவகைப்பட்ட நிலத்தினும் சென்றெய்தும்படி கோப்புக்களை விவரிக்கும் சிறப்பினையுடைய தலைக் கோற் பட்டம்" — என்பார் அடியார்க்கு நல்லார்.

27. மொழியு மாற்றந் துணைநல்லார்
செவியிற் புகலு மூதுணர்வின்

வழியு மகவான் மொழிந்ததுவு
மனத்தி லுதிப்ப மறைத்ததனை

யொழுகி நின்று சன்னதிப்பே
றளிப்ப வாங்கி யுடையானைத்

தொழுது நினைத்த வரமெமக்குத்
தருதி யென்னத் தொழுதுரைத்தார்.

**பொழிப்புரை :** (சபையோர் இந்திரனைப் பற்றிச்) சொல்லிய சொற்கள் சிறுநல்லார், பெருநல்லார் என்னும் மாதரிருவருடைய செவியினுட் புகுதலும்; அம் மகளிர் தம்முடைய பழமையாகிய பேரறிவின் வழிவழி முறையும் முன்பு இந்திரன் சொல்லியதும்; நினைவில் தோன்ற அந் நினைவைப் பிறருக்குத் தோன்றாமல் மறைத்து நின்று என்றவாறு.

**விளக்கவுரை :** *மூதுணர்வு — முன்பு தேவமாதராயிருந்த பிறப்புணர்ச்சி.*

"முன்னுணர்வின் முயற்சியினால்"

— திருநாவுக்கரசர் புராணம் – 426.

*மகவான் மொழிந்தது—இந்திரன் விண்ணுலகத்தில் "ஊரோடெனவுடைந்து வீழ்தலத்தைப் பற்றி வாழ்மின்" என்று 7-வது செய்யுளிற் கூறியது. சன்னதிப் பேறு—சிவபெருமான் திருமுன்பில் நாடக மாதர் பெறுதற்குரிய தலைக் கோல் என்னும் பட்டம். சன்னதியில் பெறுதற்குரிய பிரசாதமுமாம். உடையான்-எல்லாவுயிர்களையும் ஆளுதலையுடைய சிவபெருமான். நினைத்த வரம்-இந்திரனைக் கூடி வாழும் வரம். வரம்—கடவுட் கொடை.*

28\. விடைகொண் டவையி லொருவரையு
நோக்கா தகன்று மின்னனையார்
புடைகொண் டேத்த வில்லிடத்திற்
போகிப் போகி புணர்ப்பையெண்ணிப்
படைகொண் டிடுகண் படைகொள்ளா
திருக்கும் பருவந் தனிற்பொன்னந்
தொடைகொண் டெழுதோ ளிந்திரன்றொண்
டீசர் பாதந் தொழவந்தான்.

**பொழிப்புரை :** (மகளிரிருவரும்) தொண்டீசரிடம் விடைபெற்றுச் சபையோரொருவரையும் பாராமல் கோவிலினின்றும் நீங்கி மின்னற் கொடி போன்ற பெண்கள் தம்மைச் சூழ்ந்து துதிக்கும்படி தம் இல்லத்தின்கண் சென்று; தேவேந்திரனைக் கூடுதலைத் தம் மனத்திலெண்ணி வேற்படையை யொத்திருக்கின்ற தம்முடைய கண்கள் நித்திரை கொள்ளாதிருக்கும் சமயத்தில் பொன்னரி மாலை யணிந்த உயர்ந்த தோள்களையுடைய தேவேந்திரனானவன் தொண்டீசுவரருடைய திருவடிகளைத் தொழுவதற்கு வந்தான். என்றவாறு.

விளக்கவுரை : போகி—போய்; வினையெச்சம். போகி—இந்திரன். பெயர்ச் சொல். போகி புணர்ப்பு — இந்திரனைப் புணர்தல். படைகொண்டிடு என்பதற்குத் தூக்கத்தைக் கொள்கின்ற எனவுரைத்தலுமாம். கண்படைகொள்ளாது—கண் தூங்காமல். கண்படை—தூக்கம்.

"அன்னங் கண்படு தண்பணை நிடதநாடு" — நைடதம். பொன்னந் தொடை — அழகாகிய பொன்னரி மாலை. மாலை கொள்ளுதற்குரியது தோளாகலின், "பொன்னந் தொடை கொண்டெழுதோள்" என்றார். இனிலிடத்தில்-பிரதிபேதம்.

29. வந்து வழிபா டாற்றியருள்
வழங்க விருவர் மனைமேவி
முந்து நிகழ்ந்த வாறவர்க்கு
மொழிந்து மகிழ்ந்து மானிடர்போற்
சிந்தை புரிந்து கலவியின்பஞ்
செலுத்திச் சிலநாட் செலவதனை
இந்த ஞாலத் தாடவர்க
ளறியார் பிறிதொன் றிசைக்கலுற்றார்.

பொழிப்புரை : இந்திரன் திருத்தொண்டீசுவரத்துக்கு வந்து தொண்டீசுவரரை வழிபாடு செய்து (முன் சொல்லியபடி) அருள் செய்தலின் பொருட்டு நல்லாரிருவரும் வாழும் வீட்டின்கட் சென்று முற்பட நிகழ்ந்த செய்தியை அம் மாதர்களுக்கு எடுத்துச் சொல்லி மகிழ்ந்து மனிதரைப் போல மனம் விரும்பி அம் மாதரிடம் கலவி யின்பம் கொடுத்துச் சிலநாட் கழியவும்; அதனை இந்தப் பூமியிலுள்ள ஆடவர்களறியாதவர்களாய் அம் மகளிர் கருத்துக்கு வேருகிய ஒரு செய்தியைக் கூறுவாராயினர்.

விளக்கவுரை : இருவர்–சிறுநல்லார், பெருநல்லார். முந்து நிகழ்ந்தவாறு என்றது முன் ஏழாவது செய்யுளில் "ஈரோடெனவுடைந்து விழ்தலத்தைப் பற்றி வாழ்மின்" என்று இந்திரன் கூறியது. பிறிது—நல்லாரிருவருடைய விருப்பத்திற்கு மாருன சொல்.

30. தந்த மனையுட் டிரவியங்க
ளெல்லாந் தாமே கொடுசென்று
பந்த முறுங்கா மப்பிணிநோய்
பகர்ந்து குறைபா டுரைத்திடினும்

நிந்தை மொழிந்து நீவிரிது
நிகழ்த்தா தொழியு மெனவெறுத்தே
இந்த நெறியில் ஒழுகிடுங்கால்
இளைஞோர் மயல்கொண் டிகல்கொண்டே.

பொழிப்புரை : தத்தம் வீட்டிலுள்ள செல்வங்கள் எல்லாவற்றையும் தாமாகவே எடுத்துக்கொண்டு (சுமந்துகொண்டு) சென்று தம்மைப் பிணித்துள்ள காமநோயின் துன்பத்தைக் கூறித் தமக்குற்ற குறைபாடுகளைப் பல முறையாகச் சொன்னாலும் அவர்களை நிந்தனையாகப் பேசி இனிமேல் நீங்கள் இப்பொழுது கூறிய இச் சொல்லைச் சொல்லா தொழியுங்கள் என்று வெறுத்து இந்திரனைக் கூடியொழுகும் இந்தக் கற்பு நெறியில் ஒழுகுகின்ற காலத்தில், ஆடவர்கள் இம் மாதர்கள்பால் மிகுந்த காம மயக்கமுற்றுப் பகை மேற் கொண்டு என்றவாறு.

விளக்கவுரை : *காமப் பிணி நோய் — காமம் பிணிபோல நீங்காது துன்பஞ் செய்தலின் காமப் பிணி நோய் என்றார். இந்த நெறி யென்றது இந்திரனை நாயகனாகக் கொண்டொழுகும் கற்பு நெறியாம். தம் விருப்பத்திற் கிணங்காமையால் இளைஞர்கள் அம்மாதர்கள்மேற் பகைகொண்டாரென்க. இகல்—பகை.*

31\. ஒருசொற் கூறித் திசைமுழுது
மொருகோ லோச்சி யுலகாளும்
பொருநற் கிள்ளி வளவனுளம்
பெயர மயர்வுற் றிகுதுரைப்ப •
வருநற் பயனை யறியாம
லவரை யழைத்து வம்மினெனப்
பொருவிற் றூதர் அரசனுமை
விளித்தான் போது மெனப்புகன்றார்.

பொழிப்புரை : (இளைஞர்கள்) ஒரு மொழி கூறி எண்டிசை முழுவதும் செங்கோல் செலுத்திப் பூவுலகத்தை ஆட்சி புரிகின்ற பொருநற் கிள்ளி யென்னும் சோழ மன்னனுடைய மனமானது மயக்கமுற்று அம் மகளிர்பால் திரும்பும்படி, நிகழ்ந்த இச் செய்திகளைச் சொல்லவும் (பொருநற்கிள்ளியானவன்) அம் மாதரால் நாட்டிற்கு வரும் நல்ல பயன்களை யறியாமல் அம் மாதர்களை யழைத்து வாருங்களென்று கட்டளையிடவும் தூதர்கள் விரைவிற் சென்று ''அரசன் உங்களை யழைத்தான் போவோம் வாருங்கள்'' என்று சொன்னார்கள். என்றவாறு.

விளக்கவுரை : ஒருசொற் கூறி — ஒப்பற்ற ஆணையைச் செலுத்தி.

'' ஒருமொழிவைத் துலகாண்ட திருக்குலத்து வளச்சோழன் ''

'' குமரியொடு வடவிமயத் தொருமொழிவைத் துலகாண்ட
சேரலாதற்கு '' — சிலம்பு, ஊர்காண் காதை.

கிள்ளி, வளவன் என்பன சோழ மன்னர்க்குரிய பெயர்கள். பொருநற் கிள்ளி யென்னும் பெயருடைய சோழ வேந்தன் கொங்குச் சோழர்களில் ஒருவனாய் ஈரோட்டில் வாழ்ந்தவன். பொருநற் கிள்ளிவளவன், கிள்ளி வளவன் என்னும் பெயரை யுடைய சோழ வேந்தன் புறநானூற்றில் சொல்லப்படுகிறான்.

'' திருமருந்து விளக்கு நன்னாட்டுப் பொருநன்
கிள்ளி வளவன் நல்லிசை யுள்ளி '' — புறம் 70.

'' ஒள்ளெரி புரையு முருகெழு பசும்பூட்
கிள்ளி வளவற் படர்குவை யாயின் '' — புறம் 69.

விளித்தான் — அழைத்தான். போதும் — போவோம். தன்மைப் பன்மை வினைமுற்று.

'' சென்றணைந்த வமைச்சருடன் சேனைவீ ரருஞ்சூழ்ந்து
மின்றயங்கு புரிவேணி வேதியனா ரடியவரை
யின்றுநுமை யரசனழைக் கெமைவிடுத்தான் போதுமென ''

— என்னும் திருநாவுக்கரசர் புராணவடிகளைப் பின்னிரண்டடிக ளுடன் ஒப்புவைத்து நோக்குக.

32\. அரசர் விளிக்கும் நிமித்தமவர்
தமக்கும் எமக்கும் யாதென்ன
வுரைசெய் துரவுத் தோளினிரும்
முடன்யாம் வருவ தில்லையென்ன
விரைவின் முனிந்து விளம்புதலும்
வெருவி யுழையர் மீண்டிறைவர்ப்
பரவி யுரைப்ப மனந்தெளிந்து
வாளா விருந்தான் படிபுரப்பான்.

*பொழிப்புரை :* அரசர் எங்களை அழைப்பதற்குக் காரணம் என்ன? அரசருக்கும் எங்களுக்கும் யாது தொடர்புள்ளது? என்று கூறி, "வலிமை பொருந்திய தோள்களையுடைய தூதுவர்களே! உங்களுடன் நாங்கள் வருவதற் கியலவில்லை." என்று விரைவிற் கோபித்துப் பேசுதலும் தூதர்கள் அச்சமுற்றுத் திரும்பிச் சென்று; அரசனைத் துதித்து நிகழ்ந்த இச் செய்தியைச் சொல்லவும்; பூமியிலுள்ளவரைப் பாதுகாக்கின்ற சோழ மன்னனானவன் அம் மகளிருடைய மனக் கருத்தை யறிந்து யாதும் செய்யாமற் சும்மா விருந்தான். என்றவாறு.

*விளக்கவுரை : நல்லாரிருவரும் தாமார்க்கும் குடியல்லாத் தன்மையனான சிவபிரானை வழிபட்டும், தேவர் தலைவனான இந்திரனை நாயகனாகப்பெற்றும் ஒழுகும் பெருநெறியினராகலின், "அரசர் விளிக்கும் நிமித்தமவர் தமக்கும் எமக்கும் யாதென்ன" என்றும்; "உம்முடன் யாம் வருவதில்லை" என்றும் முனிந்து விளம்பினர். நல்லாருடைய பெருஞ் சிறப்பினாலும் கட்டளையை நிறைவேற்றுமையால் அரசன் தண்டனை நேருமென்று கருதியதனாலும், "உழையர் வெருவினர்" என்க. உழையர்—தூதர்; பக்கத்திலிருப்பவர்.*

33\. *சிலநா ளிங்ங னிகழ்காலத்*
*தொருநாட் சினவெள் விடையோன்செம்*
*பொலனார் கோயில் புகுந்துபண்டு*
*போலப் பணிகள் புரிந்திடுவோர்*
*கலனார் முலையார் சாந்தாற்றி*
*வீசிக் கவரி கால்சாய்த்துப்*
*பலகால் வீணை விரலுளர்ந்து*
*பாடல் பயிலுங் காலத்தில்.*

*பொழிப்புரை :* இவ்வாறு சிலநாள் நிகழ்ந்து வரும்பொழுது ஒரு நாளில் கோபமுடைய வெண்மையாகிய எருத்து வாகனத்தையுடைய சிவபிரானது அழகு பொருந்திய கோயிலில் சென்று முன்பு போலப் பணிகள் புரிவோராகிய ஆபரண மணிந்த முலையினையுடைய மகளிர் இருவரும் ஆலவட்டம்வீசி வெண்சாமர மசைத்து, வீணையைப் பலமுறையாக விரல்களில் தடவி இசைப் பாடல்களைப் பாடுகின்ற சமயத்தில், என்றவாறு.

*விளக்கவுரை : இப் பாடலின் பின்னிரண்டடிகள் நல்லாரிருவரும் நாள்தோறும் புரிந்துவரும் சிவாலயத் தொண்டினைக்*

கூறுவனவாம். சாந்தாற்றிவீசுதலும் கவரியசைத்தலும் உபசாரத் திருத்தொண்டுகள். வீணை தடவல் இசைத்தொண்டு. பாடல் பயிலுதல் பாடுதற்றொண்டு. கையாற் றடவும் வீணையிசைக் கேற்ப வாயாற் பாடும் மிடற்றுப் பாடலோசையும் ஒத்திருக்க வேண்டுமாதலின் "வீணை விரலுளர்ந்து பாடல் பயிலுங் காலத்தில்" என்றார்.

"வீணை வாங்கினள் மாடக முறுக்கினள் விசித்து
வாண ரம்பெறிந் திருசெவி மடுத்தன ரியக்கர்
நாண மெல்விர னடைவழி நாவினா யமுதம்
பாணர் கோமகன் விறலியும் பலர்செவி நிறைத்தாள்"
— திருவிளையாடற் புராணம், இசைவாது-16.

34\. பெருமான் பொருநற் கிள்ளியுமெம்
பெருமான் மணிப்பொற் கோயிலெய்தி
மருமா மலர்கொண் டருச்சித்து
வழுத்தி வாயிற் புறம்வருங்கால்
இருமா தருந்தம் பணிமுற்றி
யிறைஞ்சி யரச னுறைகின்ற
திருவா யிலின்வந் திடுபோழ்திற்
சிலர்தாம் இறைவர்க் குரைசெய்வார்.

பொழிப்புரை: அரசனாகிய பொருநற் கிள்ளியும் எமது சிவபெருமான் வீற்றிருக்கும் இரத்தினங்கள் பதித்துச் செய்யப்பட்டிருக்கின்ற கோவிலையடைந்து மணம் பொருந்திய சிறந்த மலர்களால் சிவபிரானை அருச்சனை செய்து துதித்துக் கோவில் வாயிலுக்கு வெளியே வரும்பொழுது இரண்டு மாதர்களும் தங்கள் பணிவிடைகளை முற்றுறச் செய்து சிவபிரானை வணங்கிக் கொண்டு அரசன் அமர்ந்திருக்கின்ற கோவில் வாயிலின் கண் வந்த சமயத்தில் சில தூதர்கள் அரசருக்குச் சொல்வாராயினர் என்றவாறு.

விளக்கவுரை: பொருநற் கிள்ளியானவன் தொண்டீசுவரரை வழிபட்டு வாயிலுக்கு வெளியே வந்த சமயத்தில் நல்லாரிருவரும் கோவிலினுள் தாம் செய்யும் பணிவிடைகளை முடித்துக் கொண்டு திருவாயிலின்கண் வந்த சமயம் தூதுவர் சிலர் அரசனுக்கு நல்லாரிருவரைப் பற்றிய செய்திகளைக் கூறினர். அரசன் அம் மகளிரை நேரிற் கண்டு விசாரித் தறிதற் கெளிதான சமயமாதலின்.

35. ''அய்ய நினது மொழிதிறம்பு
மரிவை மாத ரிவ''ரென்னத்
''தைய லீர்! நீர் வம்மி''னெனச்
சாற்று மிறைவ வருகுசெல்கால்
''நெய்யுண் கதிர்வேல் விழிமடவீர்!
நீவிர் யாவ'' ரெனவினவ
''வையம் புரப்பீர்! தேவடிமை
மரபி லுதித்த மாத''ரென்றூர்.

பொழிப்புரை : ''ஐயனே! உனது கட்டளைக்கு மாறுபட்ட மாதர்கள் இவர்தாம்'' என்று சொல்லவும் அரசன் அம்மகளிரை நோக்கி, ''அலங்கரிக்கப் பட்ட மாதர்களே! நீங்கள் வாருங்கள்'' என்று சொல்லிய அரசன் பக்கத்தில் அம் மாதர் செல்கின்ற காலத்தில் ''நெய் தடவப்பட்ட ஒளிபொருந்திய வேல் போன்ற கண்களையுடைய மகளிரே! நீங்கள் யாவிரோ?'' என்று அரசன் கேட்கவும் (அம் மகளிர்) ''பூமியில் உள்ள வரைப் பாதுகாக்கும் அரசரே! தெய்வத்திற்கு அடிமை செய்யும் தேவ தாசிகள் மரபில் பிறந்த மாதராவோம்'' என்று சொன்னூர்கள் என்றவாறு.

விளக்கவுரை : பளபளப்பின் பொருட்டு வேலில் நெய் பூசப் படுமாகலின் ''நெய்யுண் கதிர்வேல்''—என்றூர். பகைவருட லிற் பாய்தலால் நிணநெய் தோய்ந்த வேலெனினுமாம். வேல் விழி—வேல் நுனிபோலக் கூர்மையான விழி. நல்லாரிருவரும் வழிவழியாகச் சிவபெருமானுக்குப் பாடற்றெண்டும், ஆடற் றெண்டும் புரியும் சிறப்புடைய உருத்திர கணிகையர் குலத்தின ராகலின் தம்மைத் ''தேவடிமை மரபிலுதித்த மாதர்'' என்றூர்.

36. பொதுமா மகளி ரெனில்நீவிர்
புரைப் பொருந்தி ஞேர்பொருள்கொண்
டிதுபோ தணேயே மென்பெதெவன்?
என்றூற் ''கருநீர் ஞாலத்தில்
உதியா நிற்போர் தமைப்புணரோம்''
எனவேற் கிறைவ னுளநகையா
மதுவார் குழலீர்! புணர்குறியுன்
டதுநீர் மறைத்தீ ரெனவுரைத்தான்.

பொழிப்புரை : நீங்கள் யாவருக்கும் பொதுவாகிய தேவதாசிகள் என்றூல் உம்மிடம் புணர்தற்கு வந்தோர் பொருளை வாங்கிக்கொண்டு

யாம் இப்பொழுது உம்மைச் சேரமாட்டோம் என்று சொல்வதற்குக் காரண மென்ன? என்று கேட்ட அரசனுக்கு நல்லாரிருவரும் அருமையாகிய கடல் சூழ்ந்த பூமியில் பிறந்த மானிடர்களைப் புணரமாட்டோம் என்று சொல்லவும், வேலையுடைய அரசன் உள்ளத்தில் சிரிப்புக் கொண்டு தேன் பொருந்திய (மலரணிந்த) கூந்தலையுடையவர்களே! உம்மிடம் ஆடவரைப் புணர்ந்த குறி (அடையாளம்) உள்ளது அதனை நீங்கள் மறைத்திருக்கின் றீர்கள் என்று சொன்னான் என்றவாறு.

*விளக்கவுரை : அம்மகளிரிருவரும் இழிபவர், உயர்ந்தோர், மூத்தோர், இளையவர் என்று கருதாமல் யாவருக்கும் பொதுவாகத் தம் போகத்தை நல்கிப் பொருள் பெற்றுவாழும் கணிகையர் குலத்தில் தோன்றினராதலின் "பொதுமா மகளிர்" எனப் பெற்றார்.*

*புணரப் பொருந்தினோர் தரும் பொருளை "வீழ்ந்தோர் நல்கும் வெறுக்கை" என்பர் கொங்குவேளிர். கணிகையர் தெய்வ சம்பந்தமுடையராய் யாவர்க்கு மின்பமுண்டாகப் போக நல்கும் பொதுநல முடையராதலின் அவரையிகழுதல் பாவமாகும்.*

"முன்னவர் கலப்பினு மூரி நீர்ப்புவி
மன்னவர் கலப்பினும் வணிகர் கூடினும்
பின்னவர் கலப்பினும் பெட்டின் பாக்குவார்
என்னவ ருக்குமின் பாக்குமீ சன்போல்"

— திருப்பெருந்துறைப் புராணம்-76.

"கணிகையர் பொதுநலங் கருத்தி லெள்ளுநர்
தணிவரி தாகிய தரும மெள்ளுவார்
அணிதரு மூருணி யறலை யெள்ளுவர்
பிணிதரு முத்தியின் பமுமுட் பேணலார்"

— திருப்பெருந்துறைப் புராணம்-78.

*"புணர்வோம்" என்பது பிரதிபேதம். நல்லாரிருவரும் பரத்தையர் குலத்திற் பிறந்திருந்தும் மனிதரைப் புணரோம் என்றது அரசனுக்கு அதிசயம் விளைத்ததாகலின் மகிழ்ச்சியால் உள்ளத்தில் நகை கொண்டான் என்பார் "எனவேற் கிறைவ னுளநகையா" வென்றார். அன்றியும் உடம்பில் ஆடவரைப் புணர்ந்ததனா லுண்டாகிய புணர்ச்சிக் குறிகள் காணப்படவும்*

மானிடரைப் புணரோ மென்று கூறியது பொய்மையா மெனக் கருதி யிகழ்ச்சிக் குறிப்பால் நகை கொண்டா னெனினுமாம்.

புணர்குறி யென்றது ஆடவர் மகளிரைப் புணரும் பொழுது மகளிர்பால் காம வேட்கை மிகுதலின் பொருட்டு அவர்களு டைய முகம், தனம், கண்டம், இதழ், கன்னம் முதலியவற்றிற் செய்யும் நகக் குறியும் பற்குறிகளுமாம். புணர்குறி–புணர்தற்குச் செய்யும் குறி.

" விருப்புட னிருந்து காமம் வெளிப்படும் குறிகள் செய்தான் "
— சீகாளத்திப் புராணம் : நான்முகச் சருக்கம்–52.

புணர்குறி—புணர்ந்ததனு லுண்டாகிய குறியெனினுமாம். அவை மகளிர்க்கு விழி சிவத்தலும் உதடு வெளுத்தலும் தனங் கள் விம்முதலும் முதலியனவாம்.

37. சொற்ற மாற்ற மதுகேளாத்
தோகை மார்புன் னகைமுகிழா
" உற்ற துரைத்தீர் மானிடரை
உவந்து புணரேம் புரந்தையில்வாழ்
வெற்றி யுடையோன் திருவருளால்
விண்ணுட் டரசை யாம்புணர்வோம்
பெற்ற பெரும்பே ருற்பகர்ந்த
வாய்மை பிறழா தென"மொழிந்தார்.

பொழிப்புரை : மயில் போன்ற சாயலையுடைய அம் மகளிரிருவரும் அரசன் சொல்லிய அந்த வார்த்தையைக் கேட்டு நாணத்தாற் புன்சிரிப் புக் கொண்டு (செய்து) " அரசரே! நிகழ்ந்ததைச் சொன்னீர். நாங்கள் மனிதர்களை விரும்பிப் புணரமாட்டோம். ஈரோட்டில் வாழ்கின்ற வெற்றி யுடைய தொண்டீசுவரனுடைய திருவருளால் வானுலகத்தை யாள்கின்ற தேவேந்திரனைப் புணர்வோம். யாம் முன்பு பெற்ற பெருந் தவப் பயனுற் கூறிய உண்மையானது தவருது " என்று சொன்னுர்கள். என்றவாறு.

விளக்கவுரை : உற்றது — உண்மை. அரசு — பண்பாகு பெயர். பேறு—தவப் பேறு.

*அரசன் மறைவாயுள்ள புணர்ச்சிக் குறிகளை யறிந்து கூற வும் அம் மகளிர் நாணமுற்றன ரென்பார் " தோகை மார்புன் னகைமுகிழா " வென்றும், அரசன் மறைவில் நிகழ்ந்ததை யறிந்து கூறிய திறத்தை வியந்து " உற்ற துரைத்தீர் " என வும், மானிட மகளிர் தேவனுகிய இந்திரனைப் புணர்தல் இயலா தென்று அரசன் நினையாதிருக்குமாறு " புரந்தையில்வாழ் வெற்றியுடையோன் திருவருளால் " என்றும் வாய்மை கூறல் தவமுடையார்க்கே இயலுமென்பார் " தவப் பேருற் பகர்ந்த வாய்மை " யென்றும் உரைத்த வாய்மையினின்றும் தவற மாட்டோம் என்பார் " வாய்மை பிறழாது " எனவும் மொழிந் தார்கள். புரந்தை—ஈரோடு.*

38\. ஆய நீயிர் கற்பகநாட்
டயிரா வதப்பா கனைக்கொண்டித்
தேய மீதிற் பூமாரி
செம்பொன் மாரி பொழிவித்தால்
வாய்மை யுடையீர் கற்புடையீர்
மழவெள் விடையோ னடிமையுநீர்
தூய்மை யுடையீ ரெனமாரி
சொரிவிப் போமென் றுரைசொன்னுர்.

**பொழிப்புரை :** " அவ்வாருயின் நீங்கள் கற்பக மரமுடைய விண் ணுலகை யாள்கின்ற ஐராவத யானையைச் செலுத்தும் இந்திரனைக் கொண்டு இந் நாட்டின் மேல் பூ மழையும், சிவந்த பொன் மழையும் பொழியச் செய்தால் நீங்கள் உண்மையுடையவராவீர்கள். கற் புடையவரும் ஆவீர்கள். இளமையாகிய வெண்மை பொருந்திய இடப வாகனமுடைய சிவபெருமானுடைய அடிமையும் ஆவீர்கள் நீங்கள் தூய்மை யுடையவருமாவீர்கள் "என்று சோழ வேந்தன் சொல்லவும் (அம் மகளிரிரு வரும்) " நீர் சொல்லியபடியே பூமாரியும், பொன் மாரியும் பொழியச் செய்வோம் " என்று உரைத்தார்கள். என்றவாறு.

**விளக்கவுரை :** *சோழ வேந்தன், அம் மகளிரை நோக்கி உங்களுடைய வாய்மையும் கற்பும் சிவபிரானுக் கடிமையும் தூய் மையும் உண்மையா மென்பதை யறிதற் பொருட்டு நீங்கள் இந்திரனைக் கொண்டு பூமாரியும் பொன் மாரியும் பொழியச் செய்ய வேண்டுமென்ருன். அவர்கள் அவற்றில் குறைவுருத கற்புக் கடம் பூண்ட தெய்வங்களாதலின் அவ்வாறே சொரிவிப்*

போமென்றனர். கற்புடைய மகளிராயின், அவர் வேண்டும் போது மழை பெய்யுமென்னும் உண்மை யாவருமறிந்ததே.

''நாடு மூரும் நனிபுகழ்ந் தேத்தலும்
பீடு றும்மழை பெய்கெனப் பெய்தலும்
கூட வாற்றவர் நல்லது கூறுங்காற்
பாடல் சான்மிகு பத்தினிக் காவதே.''— வளையாபதிச் செய்யுள்.

39. அந்த ஞான்றி லிரவரையா
மத்தி லயிரா வதக்கோமான்
வந்து மடவா ரைப்புணர்கான்
மாற்ற முரைப்பத் தொடுத்தகல
முந்து முடிச்சே கரவரையு
முழுது மந்த நாடனைத்துஞ்
சிந்து நறும்பூ மாரிசெம்பொன்
மாரி பொழிந்து வந்தனவால்.

பொழிப்புரை: அந்நாளிரவில் நடுயாமத்தில் அயிராவதத்தை யுடைய தேவேந்திரன் வந்து இளமையுடைய அம் மகளிரைப் புணருகின்ற காலத்தில் (அம் மகளிர்) சோழ மன்னன் கூறிய வார்த்தைகளைக் கூறவும்; (இந்திரனருளால்) விரிவு பொருந்திப் பழமையாயுள்ள சிரகிரியின் எல்லா இடங்களிலும், அம் மலையையுடைய அந்த நாடு முழுவதிலும் தேன் சிந்துகின்ற நல்ல பூமாரியும், சிவந்த பொன் மாரியும் பொழிந்தன. என்றவாறு.

விளக்கவுரை: ஆடவர்கள் இரவில் மகளிரைக் கூடுதற்குரிய சிறந்த காலம் நடுயாம மாதலின் ''இரவரை யாமத்தில்'' என்றார். ஐராவதம்—இந்திரனுக்குரிய தெய்வ யானை. இது நாற்கோடும் வெண்ணிறமு முடையது. மாற்றம் — சொற்கள். முடிச் சேகரவரை—சென்னிமலை. முடி, சேகரம், சென்னி என் பன ஒரு பொருட் பெயர்கள். அந்தநாடு என்றது அம் மலைப் பிரதேசங்கள். இந்திரன் பொன் மிகுதியும் கற்பகப் பூ முதலிய சிறந்த மலர்களையும் மிகுதியாக வுடையவனாதலின் அவன் விரும் பியபடியே பொன்னும் பூவும் மாரியாகப்பொழிந்தன. பூ— சந்தானம், பாரிசாதம், மந்தாரம், அரிசந்தனம், கற்பகமென் னும் தேவலோகத்திலுள்ள ஐந்தருவின் மலர்கள்.

40. பெய்யுந் தொறுங்கண் டதிசயமே
பெரிதும் விளைத்தார் நல்லார்முன்
செய்யுந் தவங்கற் பினைப்போற்றித்
திருந்தத் துதித்தார் தென்புரந்தை
ஐயன் கருணை தனைத்தொழுதே
சிலநா ளிருந்தா யிழைமடவார்
வையந் தணந்தா ரந்தரராய்ப்
பொன்னு டணைத்து மகிழ்சிறந்தார்.

**பொழிப்புரை :** பூமாரியும் பொன் மாரியும் பெய்யுந்தோறும் அவற்றைக் கண்டு அதிசய மடைந்தோர் யாவரும் நல்லாரிருவரும் முன் பிறப்பிற் செய்த தவத்தினையும் கற்பினையும் நன்றாகப் புகழ்ந்து சொன்னார்கள். ஆராய்ந்தெடுத்த ஆபரண மணிந்துள்ள இளமையுடைய நல்லாரிருவரும் அழகிய ஈரோட்டில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுடைய திருவருளை நினைந்து தொழுது சிலநாள் அங்கு வாழ்ந்திருந்தார்கள். பின்பு விண்ணுலகத்தை யடைய விரும்பியவராய்ப் பூமியை விட்டு நீங்கினர். அவர் வருகையைக் கண்ட பொன்னுலகத்தின் எல்லா இடங்களிலுமுள்ள தேவர்கள் யாவரும் மிகுந்த மகிழ்ச்சி யடைந்தார்கள்.

**விளக்கவுரை :** *பொன்மாரி பூமாரி பொழிந்தது உலகியலைக் கடந்த அரிய செயல்களாதலின் அவற்றைக் கண்டார் மிகவும் ஆச்சரிய மடைந்தாரென்பார், "அதிசயமே பெரிதும் விளைத் தார்" என்றும் பூமாரியும் பொன்மாரியும் பெய்தற்குக் காரண மாயுள்ளவை நல்லாரிருவருடைய முன் தவமும் கற்புமாகலின் "நல்லார் முன் செய்யுந் தவங் கற்பினைப் போற்றி" என்றும் கூறினார். மற்றும் அம் மகளிர் இந்திரன் பொன்னாட்டில் முன்பு கூறியவாறு பூமியில் வந்து தம்மைப் புணர்ந்ததும் அவன் தம் பொருட்டுப் பூமாரியும் பொன்மாரியும் பெய்வித்ததும் ஈரோட்டில் வீற்றிருந்தருளும் சிவபிரான் தமக்குச் செய்த கருணையினாலாம் என்றறிந்தனராகலின் "ஐயன் கருணை தனைத்தொழுதே" என்றும் தமக்கு இயல்பாக வுரிமையுடைய விண்ணாடெய்தின ரென்பார், "வையந் தணந்தா ரந்தரராய்" என்றும் "பிரிந் தவர் கூடினால் பேச வேண்டுமோ" என்றபடி முன்பு தம்மை விட்டுப் பிரிந்த மாதரிருவரும் தம்மை வந்து கூடினமையால் தேவர் யாவரும் மிகுந்த மகிழ்ச்சி யடைந்தன ரென்பார், "பொன்னு டணைத்து மகிழ்சிறந்தார்" என்றும் கூறினார்.*

"பொன்னுடணைந்து" — என்ற பாடங் கொள்ளலுமாம். வையந் தணந்தா ரந்தணராய் என்பது பிரதி பேதம். இப் பாடத்திற்கு அந்தம் அணர்—வானத்தையடைந்தனர் என்பது பொருளாகக் கொள்க. பூமாரி பொன்மாரி பெய்த செய்தியை

"சீரிய செங்கம லாலய மேவுந் திருவெழின்மிக்
காரிரு வோருடன் கூடிக் கலந்தங் கவர்பொருட்டாப்
போரியல் வேல்விழி யிந்த்ராணி நாயகன் பொன்னெடுபூ
மாரி பொழிந்தது பீரோடை சூழ்கொங்கு மண்டலமே"

— என்னும் கொங்கு மண்டல சதகப் பாடலானுமுணர்க.

41. அன்னு டதனைப் பூந்துறைநா
டென்று மந்நாட் டுறுபதிக்கு
நன்னு மந்தான் பூந்துறையூ
ரென்றும் நகரில் வாழமலன்
தன்னு மந்தான் புட்பவன
நாத னென்றுந் தடஞ்சிகரப்
பொன்னூர் கிரிக்குப் புட்பகிரி
யென்றும் போற்றப் பொலிந்தனவால்.

**பொழிப்புரை :** (பொன்மாரி பூமாரி பெய்யப்பெற்ற) அந் நாட்டினைப் பூந்துறை நாடென்றும்; அந்நாட்டிலுள்ள நகரத்திற்குப் பூந்துறையூரென்றும்; அந் நகரில் வாழ்கின்ற சிவபெருமானுக்குப் புட்பவன நாதரென்றும்; அழகு நிறைந்த பெரிய சிகரகிரிக்குப் புட்பகிரியென்றும் உலகினர் போற்றும்படி பெயர்கள் சிறந்து விளங்கின. என்றவாறு.

**விளக்கவுரை :** அந்நாடு என்பது பின்வரும் எதுகை நோக்கி அன்னுடெனவாயிற்று. பூ+உறை—பூவுறை. இது பூந்துறை என வழங்குகின்றது. பூ—பூ. உறை—மழை. பூமாரியால் பெயர் பெற்றவை பூந்துறை என்ற நாடும், பூந்துறை யென்ற ஊரும், புட்பவனநாதர் என்ற சிவலிங்கப்பெருமானும், புட்பகிரியென்ற மலையுமாம். புட்பவனநாதர்—பூந்துறையூர்ச் சிவபெருமான் திருநாமம். புட்பகிரி—பூந்துறை நாட்டிலுள்ள சென்னிமலை. இதற்குச் சிகரகிரியென்று பெயர்.

"போதார் சிகரகிரி புட்பகிரி யானதுவும்" — செய்யுள்-42.

" பொன்னின்மா மழைபெய்து மாதரிரு வர்க்காய்ப்
புரந்தரன் பரவு நாடு
பொன்னிநதி வானிநதி காஞ்சிநதி சூழ்கின்ற
பூந்துறைசை நாடு தானே" — நாட்டுப்பாடல்.

*என்று பூந்துறை நாடும்*

" மெய்யனுர் சுரர்துதிக்கும் விமலனு ரரனரியால் விளங்கவந்த
ஐயனுர் பூந்துறையூர்" — பூந்துறைப் புராணம்.

*என்று பூந்துறையூரும்*

" பொன்னுட்டுத் தேவர்வலம் புரியுமெந்தை புட்பவனத் தப்பர்"

" அம்மானை களங்கொடு கந்துகமாடல்
செய்வாடன் ருக மேவும்
பெம்மானைப் புட்பவனப் பெம்மானை" — பூந்துறைப் புராணம்.

*என்று புட்பவன நாதரும்*

" நத்திலகு பொன்னிநதி நன்கரை கடந்து
புத்தமுத பானர்புகழ் புட்பகிரி யுற்ருன்"—பழநித் தலபுராணம்.

*என்று புட்பகிரியும் போற்றப்படுதல் காண்க.*

**42.** *தாதார் முளரி மருமசர
வணமா முனிவ தடம்பொழிற்பைம்
போதார் சிகர கிரிபுட்ப
கிரியா னதுவும் புகன்றனமேல்
வேதா விறைஞ்சுங் கதிரிலைச்செவ்
வேலோ னிடும்பன் றனக்குவழி
ஈதா மெனக்காட் டியசரித
மெடுத்து மொழிதுங் கேட்குதியால்.*

**பொழிப்புரை :** மகரந்தம் நிறைந்த தாமரை மலர் மாலையணிந்த மார்பையுடைய சரவண மா முனிவனே! பெரிய சோலைகளில் செழுமையாகிய மலர்கள் நிறைந்த சிகரகிரியானது புட்பகிரியான வரலாற்றையும் உனக்குச் சொன்ேேம். இனிமேல் பிரமதேவன் வணங்குகின்ற ஒளி பொருந்திய இலைவடிவான செந்நிறம் பொருந்திய வேலையுடைய முருகக் கடவுள் இடும்பனுக்கு ஆவினங்குடி செல்லுதற்குரிய வழியினைக் காட்டி

யருளிய சரித்திரத்தை எடுத்துச் சொல்வோம் அதனைக் கேட்பாய் என்றவாறு.

விளக்கவுரை : முளரி — தாமரைமலர். முள்ளையுடையது காரண விடுகுறிப் பெயர். மரும — மார்பையுடையவனே. மருமம்–மார்பு. மருமன்–மார்பையுடையவன். மரும–அண்மை விளி. ஈற்று னகரம் கெட்டது.

'' அண்மை யினியல்பு மீறழிபும் '' — நன்னூல்.

நாற்பாற் குலத்தில் அந்தணர் குலத்திற்குரியது தாமரைப்பூ வாதலானும், சரவண முனிவன் சிவ மறையோர் குலத்தினனாக லானும் '' தாதார் முளரி மருமசர வணமா முனிவ '' எனப் பெற்றான்.

'' மாலை கமலம் மறை கொடியாகும் '' என்னும் பிங்கல சூத்திரத்தால் தாமரை அந்தணர் குலத்திற்குரிய பூவாதல் காண்க.

'' இடும்பனுக்குக் குளவனுவினங்குடிக்குப் போம்வழி கூறுங் காதை '' என அடுத்த மான்மியங் கூறுதலின் ஈண்டு வழியென் பதற்கு ஆவினங்குடிக்குச் செல்லும் வழியெனப் பொருளுரைத் தாம்.

புட்பகிரி மான்மியம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம்–*126*.

# 4. இடும்பனுக்கு வழிகாட்டிய மான்மியம்.

1. *மலைய மாமுனி வழிபா டுஞற்றமு*
*னலைவரு சிவகிரி சத்தி யங்கிரி*
*நிலைபெறக் கொணர்ந்துமென் றெழுந்து நீங்குபு*
*தலைமைகூர் திரிகுடா சலத்தில் வந்தநாள்*

**பொழிப்புரை :** பொதிய மலையில் வாழ்கின்ற அகத்திய முனிவரானவர் பூசித்து வழிபாடு செய்வதன் பொருட்டு முதன்மையுடையனவும்; அசைதலில்லாதனவு மாகிய சிவகிரி, சத்திகிரி யென்னும் இரண்டு மலைகளையும் இவ்விடத்தில் நிலைபெறுமாறு கொண்டு வருவேனென்று சொல்லிப் பொதியத்தினின்றும் புறப்பட்டு நீங்கித் திருக் குற்றால மலையின் கண் வந்த அதுசமயம் என்றவாறு.

**விளக்கவுரை :** *சிவகிரி, சத்திகிரி யென்பன இரண்டும் கந்த மலையினுச்சியிலுள்ள இரண்டு சிகரங்கள்.*

" உமிழ்மணி யருவிதாழு முயர்பெருங் கந்தவெற்புச்
சிமயவொண் சிகரஞ்சத்தி சிவகிரி " — பழநித் தலபுராணம்.

*முன்பு அகத்திய முனிவரானவர் கந்த மலையை யடைந்து அதன் சிகரங்களில் மிகவும் அழகு பொருந்திய சத்தி, சிவம் என்னும் பெயருடைய சிகரங்கள் இரண்டையும் விரும்பிப் பூசை செய்தார். அப்பொழுது சிவபெருமான் குமாரக் கடவுள் உமையம்மையார் இருவருடனும் வெளிப்பட்டு அகத்தியர் வேண்டிய படியே அம் மலைச் சிகரங்க ளிரண்டையும் அகத்தியருக்குக் கொடுத்தனர். அக் கிரிகளிரண்டையும் எடுத்துக் கொண்டு போய்ப் பூர்ச்சை வனத்தில் வைத்து விட்டுப் பொதிய மலைக்குச் சென்றூர் என்பது புராண வரலாறு.*

*திரிகுடாசலம்—திரிகூட மலை. பொதிய மலையின் வடபாகத்திலுள்ள மூன்று சிகரங்களையுடைய குற்றால மலை.*

" பன்மலைக்குமோர் தலைமலை திசைதொறும் பசுந்தமிழ் மணநாறுந்
தென்மலைக்கொரு வடமலை சிவபிரான் திருமலைத் திரிகூடம் "
— திருக்குற்றாலத் தலபுராணம்.

'' தொண்டர் குழாம்பணிந் தேத்துங் குற்ருலச் சுடரொளியார்
கொண்டல் படிதிரி கூட வரையினில் ''

— திருக்குற்ருலக் கோவை.

'' தேடுதவத் தெய்வத் திருமலைக்கு மாநதிக்குங்
கோடுதவு முத்தலைசேர் குற்ருலம் ''

— திருக்குற்ருலச் சிலேடை வெண்பா.

'' போதும் பொன்னு முந்தி யருவி புடைசூழக்
கூதன் மாரி நுண்டுளி தூங்குங் குற்ருலம் ''

— திருஞான சம்பந்தர் தேவாரம்.

2. *சூரனை முதலியோர் தமக்குத் தொல்படை*
*யாரமுன் பயிற்றிடும் பாசு ரன்றிறல்*
*வீரர்சேய் வேலினல் விளிந்த காலையிற்*
*றூரமோ டகன்றுதென் சயிலத் தெய்தியே.*

**பொழிப்புரை :** முன்காலத்தில் சூரபன்மன் முதலிய அசுரர்களுக்குப் பழமையாகிய படைக்கல வித்தையை (ஆயுதப் பயிற்சி) நிரம்பும் படி பயிற்றிய இடும்பாசுரனுனவன் வலிமை மிகுந்த அசுர வீரர்கள் முருகக் கடவுளது வேற் படையினுல் அழிந்த காலத்தில் தன் மனைவியுடன் வீர மகேந்திரத்தை விட்டு நீங்கித் தென்றிசையிலுள்ள பொதிய மலையை யடைந்து என்றவாறு.

**விளக்கவுரை :** *இடும்பன், சூரபன்மன் முதலிய அசுரர்களுக்குக் குருவாயிருந்து அசுரர்கள் போரிலழிந்த பின்பு உயிர் பிழைப்பதற்குக் காட்டிற்கு வந்தவன் என்பது புராண வரலாறு.*

'' பனவவெஞ் சூரனுதி படிறுடைத் தகுவர்க் கெல்லாந்
தினமடு படைபயிற்றுந் தீமையே னிடும்ப னென்பேர் ''

'' தேனலர் கடம்பன் செங்கைப் படைகளாற் செருவில் வீழ்ந்து
வானகம் புக்கார் யானை யரிமுகன் முதல மற்ருேர்
ஆனவெஞ் சூர னூர்தி கொடியென வடையலுற்ருன்
ஆனவெவ் வினையேன் வாழ விருந்தன னிறந்தி லேனுல் ''

— பழநித் தலபுராணம்.

*தாரம்—மனைவி. சயிலம்—மலை.*

3. மறைவொடு திரிந்தவன் முனிவன் வந்துழி
யறைகழற் றுடொழு தடுத்த வாறெலாம்
குறைவரக் கூறலுங் கும்ப மாமுனி
திறலினேய் வெருவலன் றபயஞ் சேர்த்தியே.

பொழிப்புரை : மறைவில் திரிந்தவனாகிய இடும்பன் அகத்திய முனிவன் எதிரில் வந்த காலத்தில்; ஒலிக்கின்ற வீர கண்டைய யணிந்த அவன் பாதங்களை வணங்கி நிகழ்ந்த செய்திகளை யெல்லாம் குறைவு தீரும் படி சொல்லவும், குடத்தில் தோன்றிய அகத்திய முனிவரானவர் ''வலிமை யுடையவனே! அஞ்சாதே'' என்று சொல்லிப் பயமின்மையையும் செய்து (உண்டாக்கி) என்றவாறு.

*விளக்கவுரை : இடும்பன் அசுரனாதலின் முருகக் கடவுளுக்குப் பயந்து மறைவொடு திரிந்தான். கும்ப மாமுனி—குடத்தைப் பிறப்பிடமாக வுடைய முனிவன்.*

''அலைகடல் குறுமுனி யங்கையி லொடுக்கம்
குறுமுனி யோக சைத்திற் பிறந்தோன்'' — தனிப் பாடல்.

*உருப்பசி யென்னும் நாட்டிய மாதினிடத்தில் மோகங் கொண்ட மித்திரன், வருணன் என்னும் இரண்டு முனிவராலும் ஒரு குடத்திலே வீழ்த்தப் பட்ட விரியத்திலிருந்து அகத்தியரும் வசிட்டரும் பிறந்தார்கள் என்பது பாகவத புராணம். மித்திரனுடைய வீரியத்தினுல் அகத்தியரும் வருணனுடைய வீரியத்தினுல் வசிட்டரும் பிறந்தன ரென்பது இராமாயணம்.*

''ஆதி யகத்தியனும் அங்கே வசிட்டனுந்தங்
காதல ராய்ப்பண்டு கலசத்தில் வந்தகதை
வேதா கமமன்றே'' — ஆதிநாதன் வளமடல் 9, 10.

*அபயம் சேர்த்தி—அபயகரஞ் செய்து எனினுமாம்.*

4. இந்துசூழ் கயிலையெம் மிறைவன் றந்திடக்
கந்தமால் வரையினிற் கவினி யோங்கிய
வெந்தையெம் மிறைவிநா மங்க ளெய்திய
மைந்துறு சிருங்கமோ ரிரண்டும் வாங்கியே.

*பொழிப்புரை:* சந்திரன் (முதலிய கிரகங்கள்) வலமாகச் சுற்று கின்ற திருக் குற்றால மலையில் வாழ்கின்ற எமது சிவபெருமான் எனக்குக் கொடுக்கவும், பெருமை பொருந்திய கந்தகிரியின்கண் அழகுற் றுயர்ந்து எமது தந்தையாகிய சிவபெருமானும் எமது தலைவியாகிய சிவ சக்தியும் ஆகியவர்களுடைய பெயரினைப் பெற்று வலிமையுற்று விளங்கு கிற சிவகிரி சத்திகிரி யென்னும் ஒப்பற்ற மலைச் சிகரங்கள் இரண்டையும் பெற்று என்றவாறு.

**விளக்கவுரை :** *சூரியன் முதலிய நவக் கோள்களும் இமய மலையை வலமாகச் சுற்றி வருகின்றன வென்பது நூற் கொள்கை யாதலால் "இந்துசூழ் கயிலை" என்றார்.*

"திங்கள் சூடிய முடிச்சிகரத் துச்சியில்"
— திருத் தொண்டர் புராணம், நாடு–4.

*கந்தமால் வரை—பெருமையாகிய கந்தகிரி. இது மேரு மலையை யடுத்துள்ள மாலியவான் மலைக்கு மேற்றிசையி லுள்ளதாகப் புராணம் கூறுகின்றது. மைந்து—வலிமை. சிருங்கம்—மலைச் சிகரம்.*

5\. ஈறில்கே தாரவீ சான திக்கினில்
மாறுதிர் பூர்ச்சமா வனத்தில் வைத்தனம்
கூறரு மவ்விரு குவடுங் கொண்டுநீ
யாறுகள் நீந்தியீண் டணைதி யென்றரே.

*பொழிப்புரை:* அழிதலில்லாத திருக் கேதார மலையின் ஈசான திசையில் (வடகிழக்கில்) மிலாறுகளினின்றும் பூக்களுதிர்கின்ற பெருமையா கிய பூர்ச்ச வனத்தில் வைத்துள்ளோம். சொல்லுதற்கரிய அவ்விரு மலைச் சிகரங்களையும் நீ சுமந்துகொண்டு வழிகளைக் கடந்து இவ்விடம் (இப் பொதிய மலை) சேர்வாய் என்று சொல்லி என்றவாறு.

**விளக்கவுரை :** *கேதாரம் — தேவி பூசித்து இடப் பாகம் பெற்ற தலம். இது பனி நிரம்பிய மலை. பூர்ச்சம் என்பது ஒரு வகை மரத்தின் பெயர். பூச்ச மரம் என்பது இம் மரத்தையே போலும். பூச்ச மரப் பட்டையில் தேவியின் மந்திரங்களை யெழுதிப் பூசை செய்யின் எளிதில் சிறந்த பயன் உண்டாகு மென்பர். பூர்ச்சவனம்— வடதிசையி லுள்ளதாகக் கூறுவர்.*

''உத்தர திசையிற் பூர்ச்ச வனமடைந்து''

''தங்குபனி மூழ்கியகே தாரநெறி யேகிப்
புங்கவரி னம்பரவு பூர்ச்சவன மேவி'' — பழநித் தலபுராணம்.

*இரு குவடு — சிவகிரி, சத்திகிரிகள். ஆறுகள் — நதிகள் எனினுமாம். அரோ—அசைச் சொல்.*

6. யோகுறு மந்திர வலிகொ ளுத்திநீ
போகெனப் போற்றியப் பொருப்பை விட்டொரீஇ
வேகமுற் றதரெலா மவித்துக் காசியில்
ஏகியோ ரயனமெம் மிறைவற் போற்றியே.

பொழிப்புரை : தியானம் செய்வதற்குரிய வலிமை தரும் மந்திரங்களைக் கற்பித்து (உபதேசித்து) நீ செல்க வென்று கட்டளையிடவும்; இடும்பன் அகத்திய முனிவரைத் துதித்துக் கொண்டு அந்தப் பொதிய மலையை விட்டு நீங்கி வேகங் கொண்டு வழியிலுள்ள தடங்கல்களை யெல்லாம் அழித்துக்கொண்டு காசித் தலத்திற் சென்று ஓரயனம் (ஆறு மாத காலம்) எம்முடைய விசுவேசுவரரை வணங்கி என்றவாறு.

விளக்கவுரை : *யோகுறு மந்திர மென்பது பிரணவ மந்திரத்தினை.*

''புன்னெறி மாற்று மூல மனுநெறி புகுத்திக் காதில்
இன்னெறி வழாம னிற்றி யெனச்சொலி விடுத்தான்''
— பழநித் தலபுராணம்.

*அதர்—வழி. அவித்து—கெடுத்து.*

7. எந்தைகே தாரவி சானத் தெய்திப்போய்ப்
பைந்தமிழ் முனிவரன் பகர்வ னத்தினில்
அந்தமா முடிகளை யருச்சித் தம்முனி
தந்தமந் திரங்களுச் சரிக்கும் போழ்தினில்.

பொழிப்புரை : பின்பு எம் தந்தையாகிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற திருக் கேதார மலையின் வட கீழ்த் திசையை யடைந்து செழுமையாகிய தமிழிலக்கணம் செய்தருளிய அகத்தியனாகிய முனிவர் தலைவன்

சொல்லிய பூர்ச்சை வனத்திற் போய்ப் பெருமை பொருந்திய அந்த (சத்தி கிரி, சிவகிரியென்னும்) மலைச் சிகரங்களை யருச்சனை செய்து அந்த அகத்திய முனிவர் கற்பித்த மந்திரங்களை உச்சரிக்கின்ற சமயத்தில் என்றவாறு.

*விளக்கவுரை :* *முனிவரன் — முனிவர்களில் மேன்மை யுடையவன்.*

''தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்''

— பன்னிரு படலப் பாயிரம்.

*முத்தமிழிலக்கணம் முற்றும் கூறுவதும் தலைச் சங்கப் புலவ ருக்கும் இடைச்சங்கப் புலவருக்கும் முதனூலாய் விளங்கியது மாகிய அகத்திய மென்னும் அருந்தமிழ் நூலைச் செய்தும்; செம்பூட் சேய், வையாபிகர், அதங்கோட்டாசிரியர், அவிநயனூர், காக்கை பாடினியார்; தொல்காப்பியனுர்; துராலிங்கர், வாய்ப்பியர், பனம்பாரனுர், கழாரம்பர், நற்றத்தர், வாமனர் என்னும் பன்னிரு மாணவருக்கும் அகத்தியத்தை யறிவுறுத்தித் தமிழ் மொழியை வளரச் செய்தமையால், ''பைந்தமிழ் முனிவரன்'' எனப் பெற்றுர் அகத்திய முனிவர். இவ் வரலாற்றைப் பன்னிரு படலப் பாயிரம், புறப்பொருள் வெண்பா மாலைச் சிறப்புப் பாயிரம் முதலியவற்ருனுணர்க. மந்திரங்கள் — அகத்தியர் கற்பித்த மூல மந்திரங்கள்.*

''சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனும்'' — தனிப் பாடல்.

''துதியேந்துந் தமிழ்முனி'' — திருமழபாடிப் புராணம்.

*என்று அகத்தியனுர் தமிழ் முனிவர் எனக் கூறப்படுதல் காண்க.*

8. பிறையெயிற் றுரகரும் பிரம தண்டமும்
இறையினில் மரவுறி யெனப்பி ணித்தரோ
வுறையுமவ் வரைகளை யுறத்தெ டுத்தவன்
குறையிலா வலியொடுங் கொண்டு போந்தனன்.

**பொழிப்புரை :** பிறைச் சந்திரன் போன்ற பற்களையுடைய பாம்பு களையும் (தன்னிடமுள்ள) பிரமதண்டத்தையும் கொண்டு வெகு சீக்கிரத்தில் பெரிய உறி யென்று சொல்லும்படியாகப் பிணைத்து வனத்திலிருக்கின்ற அந்த மலைகளிரண்டையும் சேர்த்தெடுத்து (அவ்வுறிகளில் வைத்து) குறைதலில்லாத மிகுந்த வலிமையுடன் தூக்கிக் கொண்டு சென்றுன். என்றவாறு.

*விளக்கவுரை :* *இடும்பன் அகத்தியர் கூறியவாறு பஞ்சாட்சர மந்திரங்களை யுச்சரித்த பொழுது பிரமதண்டம் புயதண்டமாகவும்; திக்கு நாகங்கள் கயிறுகளாகவும் வந்தன. புயதண்டம் – சுமை சுமப்போர் தோளில் வைக்குந் தண்டு. அதனைக் காவுதடி யென்பர். பாம்புகளையும் பிரமதண்டத்தையும் கொண்டு இடும்பன் காவடி பிணித்தான். பாம்பின் பற்களுக்குப் பிறைச் சந்திரன் உவமை.*

"வேக நஞ்சரு மதிப்பிளவென
……… வாய்தொறுங்கு வாலெயிற் றணியதே"

— தக்க யாகப் பரணி.

"கடுவோ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்று"

— திருமுருகாற்றுப் படை.

*எயிறு – விஷப் பற்கள்.*

"காளி, காளாத்திரி, யமன், யமதூதி என அவ் வெயிறுகள் நான்காம்"

— சித்தவாகடம்.

*இறை —விரைவு. "இறையினலா வுறி" என்பது பிரதி பேதம். பிறையெயிற்றுரகர்என்பது உவமையணி. இதில் மதிமுகம், தருசெங்கை, திரட்டுப்பால்மொழி என்பவற்றிற் போல போன்ற என்னும் உவமை வாசகம் தொக்கி வருதலின் தொகையுவமையாம்.*

"உவமையின் வசன மொன்ரு வுவமை
தொகுத்த லெனவே சொல்லப் பெறுமே"

— குவலயானந்த மேற்கோட் சூத்திரம்.

9. காசியு மேர்திகழ் கங்கையும் நீந்தி
மாசறு விந்த மலைப்புறம் நீங்கி
யாசறு சீர்மல்லி கார்ச்சுன மேவி
வீசிய தென்கயி லாயம் விடுத்தே.

**பொழிப்புரை :** (சென்றவன்) காசித் தலத்தையும், அழகு விளங்குகின்ற கங்கையாற்றையும் கடந்து குற்றமற்ற விந்தியமலைப் பக்கத்தையும் தாண்டிப் பாவங்களைத் தீர்க்கின்ற சிறப்பினையுடைய மல்லிகார்ச்சுனத்தை யடைந்து விரிந்த தென் கயிலாயமென்னும் சீகாளத்தி மலையைக் கடந்து; என்றவாறு

விளக்கவுரை : காசித் தலத்தில் கங்கை சிறந்ததாகலின் "காசியு மேர்திகழ் கங்கையும்" என்ருர்.

தென் கயிலாயம் – திருக்காளத்தி.

"அன்றுதொட் டுலகமேந்து மண்ணலங் களிற்றுக்காடு
மன்றறென் கயிலையென்னும் வான்பெயர் பெற்றதம்ம"

"பொன்கொழிக்கும் வெண்டரங்கப் பொன்முகரி சூழ்போந்த
தென்கயிலை மால்வரையாய்த் திகழ்திருக்கா ளத்திநகர்"
— சீகாளத்திப் புராணம்.

தென் திருக்காளத்தி மலை வட கயிலை போல் விளங்குதலி னுல் தென் கயிலாய மெனப் பெயர் பெற்றது. இதனை நக்கீர தேவர் பாடிய, கயிலை பாதி காளத்தி பாதி யந்தாதியானும் அதன் வரலாற்ருனு முணர்க.

10. அன்பினர் சூழரு ணுசல நேர்ந்து
மின்பொலி நன்முது குன்றினை மேவி
யின்புறு காவிரி யாறு கடந்தே
பொன்பொலி புட்ப கிரிப்புற னுற்ருன்.

பொழிப்புரை : அன்புடைய அடியார்கள் சூழ்ந்திருக்கின்ற திருவண்ணுமலையை யடைந்து; ஒளி விளங்குகின்ற நன்மையாகிய திருமுது குன்றத்தைக் (விருத்தாசலம்) கடந்து இன்பம் மிகச் செய்கின்ற காவிரி யாற்றைக் கடந்து பொன்னிறமாக விளங்குகின்ற புட்ப கிரி (சிரகிரி) யின் பக்கத்தை யடைந்தான் என்றவாறு.

விளக்கவுரை : புட்பகிரி–சென்னிமலை. புட்பகிரிச் சருக்கம் காண்க.

"முத்தநதி நீடுமுது குன்றநெறி யேறி
நத்திலகு பொன்னிநதி நன்கரை கடந்து
புத்தமுத பானர்புகழ் புட்பகிரி யுற்ருன்
மத்தனென நின்றுள மயங்கிவழி காணுன்"
— பழநித் தலபுராணம்.

11. ஆறதர் கண்டில னஞ்சின னெஞ்சம்
ஏறின னவ்வரை மீதி லெடுத்த

கூறிரு வெற்பொடுங் கொட்புற நின்றே
தேறுத லேதுமி லாது திகைத்தான்.

பொழிப்புரை : (அங்கு வழியொன்று மின்மையால்) செல்லுதற்குரிய வழிகாணுதவனுய் மனதில் அச்சமுற்று எதிரிலுள்ள அந்தப் புட்பகிரியின் மேல் ஏறித் தான் எடுத்துள்ள புகழ்ந்து சொல்லுதற்குரிய இரண்டு மலைச்சிகரங்களுடனே மனதிற் சுழற்சி பொருந்த நின்று தெளிவென்பது சிறிதுமில்லாமல் திகைத்தான். என்றவாறு.

விளக்கவுரை : *ஆறுஅதர் — ஒருபொருட் பன்மொழி. கொட்பு—சுழற்சி. கண்டிலன்—முற்றெச்சம்.*

"வினைமுற்றே வினையெச்ச மாகலும்"— நன்னூல்.

*இருவெற்பு—சிவகிரி, சத்திகிரி.*

12. ஆயிடை மேவிய வள்ளிலை வைவேற்
சேயொளி ராதவர் செந்நிற மன்ன
பாயொளி மேனி படைத்த வனப்புந்
தூயவெண் மூரல் துலங்குசெவ் வாயும்.

பொழிப்புரை : அம் மலையினிடத்தில் எழுந்தருளியுள்ள கூர்மையான நுனியையுடைய இலைவடிவமான கூரிய வேலும்; செந்நிறமாகப் பிரகாசிக்கின்ற பன்னிரு சூரியர்களுடைய செந்நிறம் போலப் பிரகாசிக்கின்ற பரந்த ஒளி படைத்த திருமேனியின் அழகும், தூய்மையும் வெண்மையுமான புன்முறுவல் விளங்குகின்ற சிவப்பாகிய வாயும் என்றவாறு.

விளக்கவுரை : *சேய் ஒளிராதவர்–தூரத்தில் பிரகாசிக்கின்ற சூரியர் எனினுமாம். முருகக் கடவுளின் திருமேனியின் நிறத்திற்குச் சூரியருடைய ஒளியுவமை.*

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி"
— திருமுருகாற்றுப்படை.

*பன்னிரு மாதத்திற்கும் பன்னிருவர் சூரியராகலின் "ஆதவ" ரெனப் பன்மையிற் கூறினர்.*

"வைகத்தன் விவச்சுதன் வாசன்மார்த் தாண்டன்
பாற்கர னிரவி யுலோகப் பிரகாசன்
உலோக சாட்சி திரிவிக் கிரமன்
ஆதித்தன் திவாகர னங்கி சமாலி
யாகச் சூரியர் பன்னிரண் டென்ப" — பிங்கலம்.

அ + இடை = ஆயிடை. சுட்டு முதல் நீண்டு யகர வுடம்படு மெய் பெற்றது.

"....................தூக்கிற் சுட்டு,
நீளின் யகரமுந் தோன்றுதல் நெறியே" — நன்னூல்-163.

இது முதல் மூன்று பாடல்கள் புட்பகிரியில் இடும்பன்முன் தோன்றிய முருகக் கடவுளின் அரசகுமாரத் தோற்றத் தன்மை கூறுவனவாகலின் தன்மையணியாம்.

13. செச்சை கமழ்ந்து சிறந்துயர் தோளுங்
கச்சையில் வாளொடு கட்டு மருங்கும்
பிச்சி நறுந்தொடை பெய்சிகை வாய்ப்பும்
வச்சிர மாலை வயங்குபொன் மார்பும்.

பொழிப்புரை : வெட்சிப்பூமாலை மணம் வீசிச் சிறந்து விளங்குகின்ற உயர்ந்த தோள்களும்; வாளுடன் சேர்ந்த கச்சைகட்டிய இடுப்பும்; நல்ல பிச்சிப்பூ மாலையணிந்த தலைமயிர் முடியினழகும்; வயிரமணி மாலை விளங்குகின்ற அழகாகிய மார்பமும். என்றவாறு.

விளக்கவுரை : ஆடவர்களுக்குத் தோள்கள் உயர்ந்திருக்க வேண்டுமாகலின், "சிறந்துயர் தோளும்" – என்றார். "குன்றென வுயரிய குவவுத் தோளினன்" என்பதும் காண்க. கச்சையும் வாளும் இடுப்பிற் கட்டுவராகலின் "கச்சையில் வாளொடு கட்டு மருங்கும்"–என்றார்.

"மேய நீனிறங்கொள் கச்சை விசித்துடை வாளும் யாத்திட்டு"
— சீகாளத்திப் புராணம்.

"கட்டிய சுரிகையன் கடிக்கும் வாயினன்" — கம்பராமாயணம்.

சிகை–மயிர் முடி; குடுமி.

14. தொட்டிடு தோல்கழல் சூழிரு தாளும்
மட்டவிழ் செங்கையில் வாளியும் வில்லும்
கட்டெழில் மிறிய காவல வன்போற்
கிட்டின னோகை கிடைத்தெதிர் நின்ருன்.

**பொழிப்புரை :** தொடுதோல் (மிதியடி) தொடப்பெற்ற வீரகண்டை சூழ்ந்துள்ள இரண்டு பாதங்களும்; தேன் விரிகின்ற (நெகிழ்கின்ற) மலர் போன்ற சிவப்பாகிய கரங்களில் அம்பும் வில்லும் உடைய பேரழகு மிகுந்த அரசனைப்போலச் சமீபமுடையவனுய் மகிழ்ச்சியுற்று எதிரில் நின்ருன் என்றவாறு.

*விளக்கவுரை : தொட்டிடு தோல் தொடுதோல் என்பர்.*

"மாயவன் ரெடுதோல் தொட்டு
வரிசிலை யெடுத்துக் கொண்டான்"
— *சீகாளத்திப் புராணம்.*

*காவலவன் – காத்தலில் வல்ல அரசன்.*

"மாநிலங் காவல ருவான் மன்னுயிர் காக்குங் காலை"
— பெரியபுராணம்.

*ஒகை – மயில். 13, 14-வது பாடல்களுடன் கீழ் வரும் பழநித் தலபுராணச் செய்யுளை ஒப்பிட்டு நோக்குக.*

"ஆவயி னடுக்கலுறை யள்ளிலைவெள் வேலோன்
காவல னெனக்கரிய கச்சையிடை வீக்கித்
தூவடியின் மீதுதொடு தோல்கழல் புனைந்தே
யேவயில்வை வாளிவி லெடுத்தெதிர் புகுந்தான்"
— மலைகள் பழநியடைந்த சருக்கம்-51.

15. எய்திய போழ்தி லிடும்ப னெதிர்ந்தே
மைதவிர் மேனியன் வண்டமர் தாரோன்.
செய்தவ மோருரு வங்கொடு சேர்ந்தே
உய்தர வந்திவ னுற்றது வேயோ.

**பொழிப்புரை :** (எதிர் நின்றவன்) தன்னையடைந்த சமயத்தில் இடும்பாசுரன் எதிர்ப்பட்டு யான் முன்பு செய்த தவமானது குற்றமற்ற

திருமேனியை யுடையவனுகியும் வண்டுகள் மொய்க்கின்ற மலர்மாலை யணிந் தவனுகியும் உள்ள ஒப்பற்ற ஒரு திருவுருவத்தைக் கொண்டு யான் உய்யும் பொருட்டு இவ்விடம் வந்துசேர்ந்ததோ? என்றவாறு.

விளக்கவுரை : ஒருவனுக்குண்டாகும் நன்மைகள் யாவற்றிற்கும் முன்பிறப்பிற் செய்த தவமே காரணமாகும். தான் நெஞ்சம் பிணிக்கும் முருகக் கடவுளது அழகிய தெய்வத் திருக்கோலத்தைக் கண்டு மகிழ்வதற்குக் காரணமாயிருந்தது முன் தவமே யென்பான், "செய்தவ மோருரு வங்கொடு சேர்ந்தே; உய்தர வந்திவ னுற்றது வேயோ" – என்ருன்.

16. ஒண்டொடி பாலுறை யும்பெரு மானே
வண்டுள வம்புனை மாயவ னேயோ
பண்டைய பூமி படைத்தவ னேயோ
அண்டர்கள் சூழயி ராவத னேயோ.

பொழிப்புரை : (அன்றியும்) ஒளி பொருந்திய வளையலை யணிந்த உமாதேவியார் ஒருபக்கம் உறையப் பெற்ற சிவபெருமானே! வளம் பொருந்திய துளவமலர் மாலையணிந்த கருநிறமுடைய திருமாலோ! பழமையாகிய பூமியைப் படைத்த பிரமதேவனே! தேவர்களால் சூழப்பட்ட ஐராவத யானையுடைய தேவேந்திரனே! என்றவாறு.

விளக்கவுரை : ஒண்டொடி—பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப் பெயராய்ப் பார்வதியை யுணர்த்திற்று. இது முதல் மூன்று பாடல்கள் முருகக் கடவுளைக் கண்ட இடும்பன், சிவன்முதல் காவலனீருக வுள்ளவர்களில் இவன் யாவனே வென வெவ்வேறுகக் கூறி ஐயமுற்றதைக் கூறுவதால் ஐயவணியாம்.

"ஒருபொரு ளேக்கி யதுவோ விதுவோ
வெனவே ருகி யெண்ணுத லையம்"— குவலயானந்தம்.
"வஞ்சியிவள் கண்ணம்போ வல்லையமோ கெண்டையோ
கஞ்சமல ரோகடலோ காணப்பெறு கிலமே"
— குவலயானந்த மேற்கோட் சூத்திரம்.

இச்செய்யுளில் இவள்கண் அம்போ, வல்லையமோ, கெண்டையோ; கடலோ என வெவ்வேருகி யெண்ணப் பெற்றமையால் ஐயமெனக் கண்டுகொள்க. பூமி என்றுமுள்ள தாகலின் "பண்டைய பூமி"—என்ருர்.

"உள்ளது போகாது இல்லது வாராது"— சைவசித்தாந்தம்.

17. கன்னலு மைங்கணை யுங்கை கரந்தே
மன்மத னிவ்வழி வந்தன னேயோ?
பன்னிரு செங்கை படைத்தசெவ் வேற்சே
யென்னையு மாட்கொள வெய்தின னேயோ?

**பொழிப்புரை :** கையிலுள்ள கரும்பு வில்லையும் ஐந்தாகிய அம்புகளையும் மறைத்து மன்மதனானவன் இவ்விடத்தில் வந்தானோ? பன்னிரண்டு சிவப்பாகிய கைகளைப்பெற்ற செந்நிற வேலையுடைய முருகக் கடவுள் என்னையும் அடிமை கொள்ளுதலின் பொருட்டு இவ்விடம் வந்தானோ? என்றவாறு.

*விளக்கவுரை : கன்னல்—கரும்புவில். இது மன்மதனுக் குரிய வில் ஐந்தனுள் முதன்மையானது.*

"தேங்கன்னல் கமுகு செழிந்தநல் வாகை
பூங்கொம்பு தாமரை போற்றுவில் லைந்தே"
— மன்மதோபாலங்காரக் கொத்து.

*ஐங்கணை—தாமரை மலர், மாம்பூ, அசோக மலர், முல்லை மலர், நீலோற்பல மலர் என்னும் ஐந்துமாம். மன்மதன் பூ வில்லால் தேவர் மீதும்; கரும்பு வில்லால் மனிதர் மீதும்; இரும்பு வில்லால் இராக்கதர் மீதும் மலரம்புகள் எய்வான் என்றும்; முற்கூரிய தாமரைமலர் முதலிய ஐந்து புட்ப பாணங்களுடன் மல்லிகைமலர், நெய்தல்மலர் என்னும் மறுகணைகளிரண்டுடன் ஏழு பாணங்கள் மன்மதனுக்குண்டென்றும் ஆண்டிப் புலவர் செய்த ஆசிரிய நிகண்டு கூறும்.*

"கதியுடைத் தேவர்மேற் பூவில்மா னிடர்மேல்
கருப்புவி லிராக்கதர் கண்மேற்
காமுறு மிருப்புவில் வண்டுநாண் பூட்டுகணை
கஞ்சமலர் சூத மலர்வாள்
பொதியவிழ சோகமலர் முல்லை மலர் நீலமலர்
பொருபஞ்ச பாண மன்றிப்
போற்றுமல் லிகைநெய்தல் மறுகணையி ரண்டுடன்
புகலிலேழ் பாண மாமே"
— தெய்வப் பெயர்த் தொகுதி-6.

*இப்பாடலுடன் (17-ஆம் பாடலுடன்)*

"முன்னேவந் தெதிர்தோன்று முருகனே பெருகொளியால்
தன்னேரின் மாரனே தார்மார்பின் விஞ்சையனே
மின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருள்பெற் றுடையவனே
என்னேயென் மனந்திரித்த விவன்யாரோ வெனநினைந்தார்"

*என்னுந் தடுத்தாட்கொண்ட புராணச் செய்யுளை உடன் வைத்து நோக்குக.*

*என்னையும் என்பதிலுள்ள உம்மை இழிவு சிறப்பு. இதுவும் அடுத்த பாடலும் ஐயவணியேயாம்.*

"ஐயமொன் றனைக்கண் டதுவோ விதுவோ
வெனவொப் புமையினை யுறுவது தானே"

— அணியியல். பொருளணி-15.

18. அன்றியு மோர்குடை நீழ லனைத்தும்
வென்றிகொள் காவலர் வேந்திவ னேயோ?
வன்றிறல் அம்புவில் வன்கை யினேந்தி
நின்றவன் யாரென நெஞ்ச நினைந்தே

பொழிப்புரை : அல்லாமலும் ஒப்பற்ற வெண் கொற்றக் குடையின் நிழலிலிருந்து எல்லா நாடுகளையும் வெற்றியாற் கொண்ட மன்னவர் மன்னனே? மிகுந்த வலிமையுடைய அம்பையும், வில்லையும் தன்னுடைய வலிமையாகிய கையில் ஏந்திக்கொண்டு நின்றவன் மேற்குறித்தவர்களில் யாரோ? என்று மனதில் நினைந்து என்றவாறு.

விளக்கவுரை : *அரசர்கள் குடைநிழலிலிருந்து உலகத்தை ஆட்சி செய்கின்றார்கள் என்பது கவிமரபு. ஆதலின் "ஓர் குடை நீழலனைத்தும் வென்றிகொள் காவலர் வேந்து" எனக் கூறினார்.*

"திங்கள் வெண்கவிகை மன்னன்றிரு வளர்கோயில்"

"தண்ணளி வெண்குடை வேந்தன் செயல்கண்டு".

பெரியபுராணம்.

*வன்றிறல் — ஒருபொருட் பன்மொழி. நேசம் நினைந்து. பிரதிபேதம்.*

*வேறு*

19. ஆரைநீ யீண்டை வந்த
காரண மென்னை யென்னப்
பாரையோர் செங்கோ லோச்சிப்
பனிமதிக் கவிகை நீழல்
ஆருயி ரனைத்துங் காக்கு
மரசரே றென்றன் றாதை
வேரியந் தாரோய்! ஈண்டை
வேட்டைமேல் வந்தே னென்றான்.

**பொழிப்புரை :** (முருகக் கடவுளை நோக்கி) "நீ யார்? இவ்விடம் வந்த காரணம் யாது?" என்று கேட்கவும்; (முருகக் கடவுள்) "பூமி முழுவதையும் ஒப்பற்ற நீதி செலுத்திக் குளிர்ச்சியாகிய சந்திரவட்டக் குடையின் நிழலிலிருந்து அருமையாகிய உயிர்க் கூட்டங்களெல்லாவற்றையும் காக்கின்ற அரசர் சிங்கமாயுள்ளவன் எனது தந்தை. தேன் நிறைந்த அழகிய மலர் மாலை யணிந்துள்ளவனே! இவ்விடம் வேட்டையாடுதலின் பொருட்டு வந்தேன்" என்றான் என்றவாறு.

**விளக்கவுரை :** *ஆரை–யார்; ஐ–சாரியை. ஆரை என்பது வினா. யாரை என்பது ஆரை யெனவாயிற்று. ஈண்டை–இவ்விடம். ஐகாரவீற்றுக் குற்றுகர மொழி. இப்பாடலுடன் இராவணன் வினாவாகவும் அனுமன் விடையாகவும் வரும் கம்பராமாயணச் செய்யுட்களை யொப்பிட்டு நோக்குக.*

"யாரை நீ என்னையிங் கெய்து காரணம்
ஆருனை விடுத்தவ ரறிய வாணையால்
சோர்விலை சொல்லுதி யென்னச் சொல்லினான்
வேரொடு மமரர் தம்புகழ் விழுங்கினான்"

"சொல்லிய வனைவரும் அல்லென் சொன்னவப்
புல்லிய வலியினோர் ஏவல் பூண்டிலேன்
அல்லியங் கமலமே யனைய செங்கணோர்
வில்லிதன் றூதன்யா னிலங்கை மேயினேன்"

— சுந்தரகாண்டம் பிணிவீடு 73-74.

20. நீயசு ரேசன் போல
நின்றனை வரைக ளேந்திச்
சேயிடை பரந்து மீண்டுந்
திரும்பினை போலும் யாண்டை
ஆய்வுறு சிந்தை வைத்தீண்
டடைந்தனை வரையின் மீது
மேயகா ரணமே தென்னும்
வேலவற் குரைக்க லுற்றான்.

பொழிப்புரை : (முருகக் கடவுள் இடும்பனை நோக்கி) '' நீ அசுரர் தலைவனைப் போல நின்றாய். மலைகளைச் சுமந்து கொண்டு தூரமான இடத்தில் சென்று மீண்டும் திரும்பி வந்தாய் போலிருக்கின்றது. எவ்விடம் செல்வதற்கு ஆராய்கின்ற மனதை வைத்து இவ்விடம் வந்தாய். இந்த மலையின்மீது வந்த காரணம் யாது? '' என்ற வேலையுடைய முருகக் கடவுளை நோக்கி இடும்பன் சொல்லுதற்குத் தொடங்கினான் என்றவாறு.

விளக்கவுரை : அசுர + ஈசன் = அசுரேசன் — குணசந்தி. சேய்—தூரம். யாண்டை—யாண்டு. ஐகாரவிற்றுக் குற்றுகர மொழி. ஈண்டு—சுட்டு. இப்பொழுது எனினுமாம்.

21. மன்னவன் குரவன் கும்ப
மாமுனி வரையி ரண்டும்
தன்னுழி கொணர்தி யென்று
சாற்றிய பணிமேற் கொண்டு
சொன்னவா றடைந்து பூர்ச்ச
வனங்குறிஇச் சுரும்பி ரண்டு
மென்னிரு புயத்திற் றூங்கி
வருமிடத் திடையூ றுற்றேன்.

பொழிப்புரை : '' அரசனே! குருவாகிய அகத்திய முனிவன் இரண்டு மலைகளையும் தன்னிடம் கொண்டு வருவாயென்று சொல்லிய கட்டளையை மேற்கொண்டு அவர் சொன்ன வழியிற்சென்று பூர்ச்ச வனத்தையடைந்து மலைகளிரண்டையும் என்னுடைய இரண்டு தோள்களிலும் சுமந்துகொண்டு வருமிடத்தில் துன்பமடைந்தேன் என்றவாறு.

*விளக்கவுரை :* வழி–இடம், குறி இ-குறுகி. சொல்லிசையளபெடை. சுரும்பு—மலை.

"சுரும்புறை மணித்தோள் துணிய வீசி" – மணிமேகலை 20–107.

22. அருண்முனி சொற்ற வாறு
பிழைத்துவந் தடைந்தேன் விந்த
மருவிய வதர்கொ டண்டு
வந்துழி மருண்டு நெஞ்ச
மிருண்மிடைந் தலம்வந் திந்த
வரைமிசை யேறுங் காலை
நிருப ! நிற் கண்டே னேகு
நெறியினை நிகழ்த்து கென்றுன்.

*பொழிப்புரை :* அருளையுடைய அகத்திய முனிவர் சொன்னபடி துன்பங்களினின்றும் பிழைத்து வந்துசேர்ந்தேன். விந்திய மலையிற் பொருந்திய வழியினை மேற்கொண்டு இவ்விடம் வந்த காலத்தில் வழி காணுமல் அச்சமுற்றும்; மயக்கம் மிகப்பெற்றும்; சஞ்சலமடைந்தும் இந்த மலையின்மேல் ஏறுங்காலத்து அரசனே! உன்னைப் பார்த்தேன் பொதியமலைக்குச் செல்லும் வழியைச் சொல்லுக என்றுன் என்றவாறு.

*விளக்கவுரை :* முனிவர்கள் ஓரறிவுயிர்க்கும் ஊறு செய்யாத அருட்குண முடையரா யிருத்தல் வேண்டுமாகலின் அகத்திய முனிவரை "அருண்முனி" என்றுன்.

23. தானவ ! நீமுன் ஞற்றுந்
தவ்பபய னிவணி வந்தாய்
வானவர் போற்றுஞ் சென்னி
மாமலை யாகி யும்பைந்
தேனிமிர் பொழில்சூழ் புட்ப
கிரியெனுஞ் சிறந்த பேரும்
ஆனதிவ் வரையீண் டென்று
மறுமுகக் கடவுள் வைகும்.

*பொழிப்புரை :* "அசுரனே ! நீ முற்பிறப்பிற் செய்த தவத்தின் பயனுக நீ இவ்விடத்திற்கு வந்தாய். தேவர்கள் புகழ்கின்ற சிறந்த

சென்னிமலை யென்னும் பெயருடையதாகியும் குளிர்ச்சியாகிய தேன் மிகுந்த புட்ப கிரியென்னும் சிறந்த பெயருடையதுமான இம் மலையினிடத்தில் எக்காலத் தும் ஆறு முகங்களையுடைய முருகக் கடவுள் நீங்காது அமர்ந்திருப்பான் என்றவாறு.

விளக்கவுரை : *தானவ—அண்மைவிளி. தானவன்—அசுரன். தனு என்பவளின் வயிற்றிற் பிறந்தவர் தானவர். முருகப் பெருமான் வைகும் தலத்தின் கட்சேறல் முன் செய்த தவமுடையார்க்கே இயலு மாகலின், "நீ முன்னுற்றுந் தவப்பய னிவணீ வந்தாய்" என்றார். தேன்+இமிர்=தேனிமிர்—தேன் வண்டுகள் ஒலிக்கின்ற எனினு மாம். வைகும்—செய்யு மென்னும் வாய்பாட்டு வினைமுற்று ஆண் பாலில் வந்தது.*

24. சொல்வழி முனிவன் முன்னஞ் சொற்றவவ் வழியி லீது
நல்வழி நடந்து சென்று நகுமணி வராக வெற்பிற்
செல்வழி யருவிச் சாரல் வடதிசை வைகிச் சேறி
பல்வழிக் கவலை தீர்தி படருதி மலையத் தென்றான்.

பொழிப்புரை: புகழ் வழிகின்ற அகத்திய முனிவன் முன்பு சொல்லிய அவ் வழியில், இந்த வழி செல்வதற்குரிய நல்ல வழியாகும். இவ் வழியாக நடந்து போய்ப் பிரகாசிக்கின்ற இரத்தினங்களையுடைய வராக மலையின்கட் செல்லுமிடத்து வராக மலையினது வழிந்து செல்கின்ற அருவியொழுகும் (பக்க மலையின்) மலைப் பக்கத்தின் வடதிசையில் தங்கிச் செல்வாய். பலவழியாகப் படர்ந்து செல்லும் கவர் வழிகளில் செல்லுதலை விடுவாய். நேர்வழியாகப் பொதிய மலையின்கட் செல்வாயென்றான் என்றவாறு.

விளக்கவுரை : *வராக வெற்பு–இது திருவாவினங்குடிக்குச் சமீப மாய்க் கொங்கு நாட்டின் தெற்கெல்லையாய் விளங்குவது.*

25. எந்தைசொன் மாற்றங் கேளா விதயத்து ளுவகை பூத்து
முந்துறு கவலை தீர்ந்து முதலவ னிச்சை யேற்று
நந்தலில் வழிந டாயா வினன்குடி நணுகுங் காலைச்
சுந்தர வரையி ரண்டுஞ் சுமந்ததோள் வலிதொ லைந்தே.

பொழிப்புரை : எம்முடைய தந்தையாகிய முருகக் கடவுள் சொல்லிய சொற்களைக் கேட்டு மனதில் மகிழ்ச்சி கொண்டு எதிர்ப்பட்ட கவர் வழிகளை விட்டு முதன்மையுடைய முருகக் கடவுள் சொல்லிய சொற்களை மேற்கொண்டு கெடுதலில்லாத பெருவழியில் நடந்து சென்று திருவாவினன்குடியை அடையும் பொழுது அழகாகிய மலைகளிரண்டையும் சுமந்த தோள்களின் வலிமை நீங்கப் பெற்று என்றவாறு.

*விளக்கவுரை :* *ஆவினன்குடி - திருவாவினன்குடி. இலக்குமியும் காமதேனும் சூரியனும் பூசித்த தலமாகலின் திருவாவினன்குடியெனப் பெயர் பெற்றது. பழநி மலையை யடுத்துள்ள நகரம்.*

'' ஏவின னிவன்கருணை வள்ளலென வெண்ணி
மேவினன் விரைந்தனன் விசும்பினுயர் கேழன்
மாவின சலத்துவட பாலருகு மாவோ
டாவினன் வலம்புரியு மந்நக ரடைந்தான் ''

— பழநித் தலபுராணம், மலைகள் பழநியடைந்த சருக்கம் 56.

*இது முருகக் கடவுளின் படைவீடுகளாறனுள் ஒன்று. ஆவி யென்னும் குறுநில மன்னனும் அவன் மரபினரும் வாழ்ந்த ஊராக லின் ஆவினன்குடி யெனப் பெயர் பெற்றதென்பர்.*

26. நிலந்தனில் வைத்துப் போந்த நெறியிளைப் பாறி மேவி
யுலம்பெறு தோளான் மீள வுபயவெற் பெடுக்கும் போழ்திற்
பிலங்குறைந் துளங்க னன்று பேதுற லுற்றுள் ளோர்ந்து
சலந்தனை யெய்தி யண்ண லசலத்தைச் சாரு மேல்வை.

*பொழிப்புரை :* (வரைகளிரண்டையும்) நிலத்தின்மேல் வைத்து வழி நடந்த இளைப்புத் தணியப் பெற்றுப்போய், திரண்ட கல்போன்ற தோள்களால் திரும்பவும் இரண்டு மலைகளையும் எடுக்கின்ற சமயத்தில் மலைகளை எடுக்க முடியாதபடி வலிமை குறைந்து உள்ளத்தில் பலவாறு ஆராய்ந்து சஞ்சலமுற்றுச் சிவனுக்குரிய சிவகிரியின்மேற் சேர்ந்தகாலத்தில் என்றவாறு.

*விளக்கவுரை :* *அண்ணல் அசலம் என்றது இடும்பன் சுமந்து கொண்டு வந்து திருவாவினன்குடியில் வைத்த கிரிகளில் ஒன்றுயுள்ள சிவன்வடிவாகிய சிவகிரியாம். இம் மலையில் முருகக் கடவுள் மிகவும் விரும்பி வீற்றிருப்பர்.*

'' நாவடித்தசெந் தமிழ்முனி யேவலி னயந்திடும் பாசுரன் கொணர்ந்த
காவடிச்சிவன் மலைமிசை நிலைபெறுங் கமழ்குரா நீழன்மேற் கடவுள் ''

— அப்பரமேய தலபுராணம்-அம்பாநதிச்சருக்கம் 27.

'' திலநெய்போ லுயிர்க டோறுஞ் செறிகதிர் வடிவேற் செம்மல்
மலர்தலை யுலக மேய தலந்தொறும் வைகு மேனும்
தலனிவை யாறு நீங்கான் றலத்துளா வினன்கு டிப்பாற்
பலர்புகழ் சிவாச லத்திற் பரஞ்சுடர் வடிவி னுேங்கும் ''

— பழநித்தலபுராணம்-சண்முகநதிச்சருக்கம் 11.

*இடும்பன் தான்கொணர்ந்த கிரிகளைத் தூக்கமுடியாமைக்குக் காரணம் யாதோ வென்றறியச் சிவகிரியின் மேலேறிப் பார்த்தானென்க.*

27. ஒருபெருங் குரவ நீழ
லொண்கையி னெடுத்த கோலு

மருவுநூன் மார்பும் பின்ருழ்
குஞ்சியும் மருங்குல் சாத்தும்

பொருவில்கோ வணமுந் தண்டை
புனைந்தசீ ரடியுந் தோன்றக்

குருமணி வேற்சேய் நின்ற
குழந்தையம் பருவங் கண்டான்.

*பொழிப்புரை :* ஒரு பெரிய குராமரத்தின் நிழலில் ஒளி பொருந்திய கையில் எடுத்த தண்டமும், முந்நூல் பொருந்திய மார்பும்; பின்புறம் தாழ்ந்த சிகையும் இடையில் அணிந்துள்ள கோவணமும், தண்டையணிந்த சிறப்பாகிய பாதங்களும் தோன்றும்படி ஒளி பொருந்திய இரத்தினம் பதித்த வேலை யேந்திய முருகக்கடவுள் நின்றுகொண்டிருந்த அழகிய குழந்தைப் பருவத்தின் தோற்றத்தைப் பார்த்தான் என்றவாறு.

*விளக்கவுரை :* இச்செய்யுள் சிவகிரியென்னும் பழநிமலையில் குராமர நீழலில் தோன்றிய குழந்தைக் குமாரக்கடவுளின் தோற்றம் கூறுவது. இத் தோற்றம் பழநித் தலபுராணத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

''மறுவ றுங்குரா வடியினோர் மழலையங் கனிவாய்ச்
சிறுகு ழந்தைநின் றிடுவது தெரிதரத் தெரிந்தான்''

— பழநித் தலபுராணம்-62.

''பிடர்கி டந்தபுன் குஞ்சியும் பெருகிய கருணைக்
கடல லம்புகண் களுங்கவி னொழுகிய முகமும்
வடிவு நூலுமார் புங்கையொண் கோலும் வயங்க
நெடிய கோவண வுடையுட னின்றது கண்டான்''

— பழநித் தலபுராணம்-63.

''கொந்தணவுங் குடுமியுங் கோவணவுடையு நூன்மார்புங்
கோலுங் கொண்டோ
ரந்தணனுய் வடுகுருவந் தரித்துநின்ரு னவனடிகள்
முடிமேல் வைப்பாம்''

— பழநித் தலபுராணம்-கடவுள் வாழ்த்து-12.

*கையில் தண்டமும் இடுப்பில் கோவணவுடையு முடைய வராய் விளங்கும் முருகக்கடவுளைத் தண்டபாணிமூர்த்தம் என்பர். இவ்வடிவத்தைக் குமாரதந்திரம் முதலிய வடமொழி நூல்களிற் கூறப்பெறும் முருகக்கடவுளின் சக்திதரர் முதலாகிய பதினாறு வடிவங்களில் இரண்டாவது வடிவமாகக் கூறப்பெறும் ஸ்கந்த வடிவம் என்பர்.*

"கல்பத்ருமம் ப்ராணமதாம் கமலா ருணுபம்
ஸ்கந்தம் புஜத்வய மனுமய மேகவக்த்ரம்
காத்யாயநீ ஸுதமஹம் கடிமத் ததாம
கௌபீன தண்டதர தக்ஷிண ஹஸ்தமீடே"

"கௌபீந தண்ட திருக் ஸவ்ய"

— குமார தந்திரம், மந்திராவதாரப் படலம்.

*தண்டபாணி முண்டிதமான சிரமுடையவரென்றும் தண்டத் துடன் வேலும் திகழப்பெறுவர் என்றும் சிற்சில உபாசகர்களு டைய உள்ளத்தில் சடையுடன் தோன்றப் பெறுவரென்றும் தவத்திரு "தண்டபாணி சுவாமிகள்" அருளிய கௌமார முறைமை என்னும் நூல் கூறுகின்றது.*

"முண்டிதமும் கோவணமும் கீளும் தண்டும்
முழுநீறும் பாதுகையும் முறுவல் வாயும்
கண்டிகையுங் கதிர்வேலும் இரண்டு தோளும்
கமலமல ரடித்துணையுங் காட்டும் மூர்த்தி
தொண்டினர்சிற் சிலருளத்திற் சடிலத் தோடு
தோன்றலுமுன் டதன்பெருமை சொலவொண் ணுது
குண்டிகைக்கைத் தவமுனிவர் அறிவார் அன்னேன்
குமரகுரு பரனெனும்பேர் கொடுநின் ருனே"

— கௌமார முறைமை, பக்திக்காண்டம்,
தண்டபாணிமூர்த்தி தியானம்–73.

*பழநித் தண்டபாணியின் வடிவமே சென்னிமலைத் தண்டாயுதபாணியின் வடிவமாம் என்பதனை இந்நூலின் காட்சி மான்மியம் 11-வது செய்யுள் நோக்கியறிக. குருமணி—ஞானு சிரியர்களில் மாணிக்கமணிபோன்று சிறந்தவன் எனினுமாம்.*

"குருமாமணிக் கொழுந்தே கூறு" — பெருந்தேவனர் பாரதம்.

*இச் செய்யுள் குழந்தைக் குமாரக் கடவுளின் தோற்றத் தன்மை கூறுதலின் பொருட்டன்மை யணியாம்.*

28. காண்டலு முருகி மீட்டுங்
கனன்றதொல் வினையி னீட்டம்
பூண்டவா றழன்று பொங்கிப்
பொருதிநீ யார்கா ளென்று
மூண்டமர் புரியுங் காலை
முடிந்தன னிடும்ப னெங்கள்
ஆண்டகை யருளால் மீட்டு
மாருயிர் படைத் தெழுந்து.

பொழிப்புரை : கண்டவுடனே அன்பினால் மனமுருகித் திரும்பவும், கோபித்த பழமையாகிய ஊழ்வினையின் கூட்டம் தன்னைப் பொருந்திய படியே சினந்து சீறி என்னுடன் போர் செய்கின்றாய் நீ யார் என்று முயன்று போர் செய்யும் காலத்தில் இடும்பன் இறந்தான். எங்களுடைய ஆண்மைத் தன்மையுடைய முருகக் கடவுளின் திருவருளால் மீண்டும் அருமையான உயிர் உடலில் வரப் பெற்றெழுந்து என்றவாறு.

விளக்கவுரை : "பொருது நீ" பிரதிபேதம். முருகக் கடவுளின் இளமையாகிய குழந்தைப் பருவத்தின் தோற்றம் கண்டவர் நெஞ்சினைக் கவர்ந்து அன்பினால் உருகச்செய்யும் தெய்வத் திருக்கோலமாதலின் "காண்டலு முருகி" என்றார். கோபித்தலும் பழைய ஊழ்வினை காரணமாக நிகழ்வதாகலின் "தொல்வினையி னீட்டம் பூண்டவா றழன்று பொங்கி" என்றார். ஆண்டகை—பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப்பெயர்.

"ஆண்டகையே தூதுவனாய்ச் சென்றவனி வேண்ட"
— நள வெண்பா.

29. மாமலர் பொழிந்து போற்றி
வழுத்தியேத் தெடுத்து நின்று
தேமலர்ச் செச்சை யாய்நின்
றிருவுளச் செயலார் தேர்வார்
பூமலர் பொதுளும் புட்ப
கிரியினிற் போதும் போதில்
ஏமுற மயக்க நல்கி
யிறையெனக் காட்சி தந்தாய்.

பொழிப்புரை : பெருமை பொருந்திய (சிறந்த) பூக்களைச் சொரிந்து வணங்கித் தோத்திரம் செய்து நின்று தேன் பொருந்திய வெட்சிமலர் மாலை யணிந்தவனே! உன்னுடைய திருவுள்ளத்தின் செய்கையை யார் தெரியவல்லவர்? அழகாகிய மலர்கள் நெருங்கிய புட்பகிரியின்மேல் சென்ற காலத்தில் கலக்கமுறும்படி வழிமயக்கத்தைத் தந்து விரைவாக நின் காட்சியையும் தந்தாய் என்றவாறு.

விளக்கவுரை : மாமலர் — வண்டுகள் மொய்க்கின்ற மலர் எனினுமாம். போற்றி–வணங்கி. ''ஈசனடி போற்றி எந்தையடி போற்றி'' என்பது வணக்கமென்னும் பொருளில் வரும் ஒருவகை வியங்கோள் வினைமுற்று. ஈண்டுப் போற்றி என்பது வணங்குதல் என்னும் பொருள் தரும் ''போற்றுதல் என்னும் தொழிற் பெயரின் போற்று என்னும் பகுதியினடியாகப் பிறந்த வினையெச்சமாம். வழுத்தி–வாழ்கென வாழ்த்தி. ஏத்தெடுத்து–புகழ்ந்து. தேம்—தேன்.

உயிர்களுக்கு அவற்றின் வினை காரணமாக மயக்கத்தையும் தன் அருள் காரணமாக ஞானக் காட்சியையும் நல்குதல் இறைவனுக் கியல்பாதலின் ''ஏமுற மயக்க நல்கி யிறையெனக் காட்சி தந்தாய்'' என்றார்.

30. வழிவிடுத் தடிய னேற்கிம்
மலையினு மயக்கி யாவி
யொழிவுறக் கண்டு தொல்லை
வினையெலா மொழித்து மீட்டு
மழிவுரு வகைநின் காட்சி
யளித்தனை யாது செய்தேன்?
பொழியருள் புரியும் ஞானப்
புனிதனே! போற்றி! போற்றி!

பொழிப்புரை : சொல்லுதற்குரிய நல்வழியை விட்ட அடிமையாகிய எனக்கு இந்த வராக மலையின் சார்பிலும் மயக்கம் தந்து உயிர் நீங்குமாறு செய்து பழமையாகிய ஊழ்வினைகளெல்லா வற்றையும் ஒழியச்செய்து மீட்டும் அழியாமல் இருக்கும்படி உன்னுடைய திருவுருவக் காட்சியினைத் தந்தாய். இப் பேறு பெறுவதற்கு என்ன தவம் செய்தேன்? சொரிதலையுடைய அருளைச் செய்யும் தூய்மையான அறிவு வடிவமானவனே! வணக்கம்! வணக்கம்! என்றவாறு.

**விளக்கவுரை :** *விடுத்த அடியனேற்கு என்பது விடுத்தடிய னேற்கு என்ருகியது. நிலைமொழி ஈற்று அகரம் விகாரத்தால் தொக்கது. இறைவன் அடியார்களுடைய ஊழ்வினையை யொழி யச் செய்து பின்னரே தன் திருவுருவக் காட்சி தந்து உயர்வளிப் பான். ஆதலின் "தொல்லை வினையெலா மொழித்து மீட்டு மழிவுரு வகைநின் காட்சி யருளினை" என்ருர்.*

"ஊழ்வினையை மாற்றி யுலவாத பேரின்ப
வாழ்வுதருஞ் செய்ய மலர்முகமும்" — கந்தர் கலிவெண்பா.

*இறைவன் ஊழ்வினையை யொழியச் செய்தலும் காட்சி நல்குதலும் பெருந்தவ முடையார்க்கே யாதலின் இவற்றைப் பெற யாது தவம் செய்தேன் என்பான். "யாது செய்தேன்?" —என்ருன். போற்றி போற்றி—அடுக்குத் தொடர்.*

31. போற்றியென் றிறைஞ்சி நிற்கும்
பொருவில்சீ ரிடும்ப னன்று
சாற்றிய வரனெ லாமுந்
தணப்பற நல்கி மந்தக்
காற்றிகழ் கிரியி ரண்டுங்
காவல்பூண் டிருத்தி யென்னுத்
தேற்றெருடு மருளிச் செவ்வேள்
மறைந்தனன் சிலம்பின் மன்னே.

**பொழிப்புரை :** போற்றி என்று சொல்லி வணங்கி நின்ற ஒப்பில்லாத சிறப்பினையுடைய இடும்பனுனவன் அப்பொழுது கேட்ட வரங் கள் எல்லாவற்றையும் நீங்காமல் இருக்கும்படி கொடுத்துத் தென்றற்காற்று விளங்குகின்ற இரண்டு கிரிகளையும் காத்தலை மேற்கொண்டு இங்கேயிருப்பா யென்று தெளிவாக அருளிச் செய்து சிவந்த நிறமுடைய முருகக் கடவுள் சிவகிரியில் மறைந்தருளினுன். என்றவாறு.

**விளக்கவுரை :** *மந்தக்கால் + திகழ் = மந்தக்காற்றிகழ். மந்தக்கால்—மந்தமாருதம், தென்றற் காற்று. சிவகிரி, சத்திகிரி இரண்டிலும் இடைவிடாது வசந்தமாகிய தென்றற் காற்று உலவுதலின், "மந்தக் காற்றிகழ் கிரியிரண்டும்"—என்ருர். மலைகளைக் காவல் செய்தலில் வல்லவன் இடும்பன் ஆகலின் அவனைக் "காவல்பூண் டிருத்தி"—என்ருர். சிலம்பு—மலை. ஆகுபெயர்.*

32\. கிளர்சிர வெற்பாம் புட்ப
    கிரிமிசை யிடும்ப னுக்குக்
குளவனு வினன்கு டிக்குப்
    போம்வழி கூறுங் காதை
வளமுற வுரைத்திட் டோஞ்செப்
    பேட்டினில் வரைந்த மாற்றந்
தளர்வற வுணர்தி யென்னச்
    சரவண முனிக்குச் சொற்றூர்.

*பொழிப்புரை :* விளங்குகின்ற சென்னிமலையாகிய புட்பகிரியின் மேல் முருகக் கடவுளானவர்; இடும்பனுக்கு ஆவினன்குடிக்குப் போகின்ற வழியினைக் கூறும் வரலாற்றை அழகு பொருந்த வுனக்குச் சொன்னோம். மற்றும் செப்பேட்டில் வரைந்துள்ள செய்திகளைச் சோர்வு தீரும்படி யறிவாயாக வென்று சரவண முனிவருக்குச் சொன்னார்கள். என்றவாறு.

விளக்கவுரை : *சிரவெற்பாம் புட்பகிரி—இருபெயரொட்டு. சென்னிமலை. குளவன்—குமாரக் கடவுள்.*

'' தேமலை வாரிசை யுந்தன வள்ளிமெய் சேர்குளகா ''

— சென்னிமலை யமகவந்தாதி 69.

*குழவன் என்னும் சொல் எதுகை நோக்கிக் குளவன் என வந்தது. குழவன், குழகன் என்னும் இச் சொற்களுக்கு இளமை யுடையவன், முருகன் என்பது பொருள். குழ என்பது உரிச் சொல். இளமைப் பொருளுணர்த்துவது.*

'' மழவுங் குழவு மிளமைப் பொருள ''

— தொல்காப்பியம், உரியியல் 14.

*காஞ்சிவாழ் மறையவர் தோன்று எழுவாய். சொற்றூர் பயனிலை. ஆவினன்குடி—திருவாவினன்குடி. கொங்கு நாட்டில் முருகனுக் குரிய படைவீட்டுத் திருப்பதிகளில் ஒன்றாய் விளங்குவது.*

'' தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவினன்குடி யசைதலு முரிய னதாஅன்று

— திருமுருகாற்றுப்படை.

33. தகைபெறச் சொற்ற வாய்மை
சரவண முனிவன் கேளா
வகமகிழ்ந் தோங்கிச் செப்பேட்
டிருந்தவா றவரைக் கொண்டே
யிகலற வேறு செப்பேட்
டிவையெலா மெழுதி வாங்கி
மிகவிடை பெற்று மீண்டான்
வேதியர் குலத்தின் மிக்கோன்.

பொழிப்புரை : முனிவர்கள் அன்பு பொருந்தச் சொல்லிய உண்மைகளைச் சரவண முனிவன் காதிற் கேட்டு மனதில் மகிழ்ச்சி கொண்டு உடல் பூரித்துச் செப்பேட்டி லிருந்தபடியே அம்மறையவர்களைக்கொண்டே மாறுபாடில்லாமல் வேறு செப்பேட்டில் (இதுவரையிலும் கூறிய) இச் செய்திகளையெல்லாம் எழுதி வாங்கிக் கொண்டு காஞ்சிபுரத்தைக் கடந்து செல்வதற்கு (அம் மறையவர்களிடம்) மிகவும் வேண்டி விடைபெற்றுச் சென்றான். மறையவர் குலத்தில் மேலானவனான சரவண முனிவன். என்றவாறு.

விளக்கவுரை : சரவண முனிவன், சிரகிரியின் வரலாறு கேட்டதினால் உள்ளத்தில் உண்டாகிய மகிழ்ச்சி மிகுதியினால் உடல் பூரித்தான் என்பார், ''சொற்ற வாய்மை சரவண முனிவன் கேளா வகமகிழ்ந் தோங்கி'' என்றார்.

வேறு செப்பேட் டெழுதி என்றது படியெடுத் தென்றவாறும். திருவிருந்தபுரத்து வாழ் மறையவர்களில் கல்வி, அறிவு, ஒழுக்கம், தவம் முதலியவற்றால் மேன்மையுடையோனாதலின் சரவண முனிவன் ''வேதியர் குலத்தின் மிக்கான்'' எனப் பெற்றான்.

செப்பேட் டிருந்தவாறு என்றது செப்பேட்டிலுள்ள வரலாறுகளாம். அவை இந்நூலின் முற்பகுதியாகவுள்ள செப்பேடு கண்ட மான்மியத்தில் வரும் 47, 48 செய்யுள்களில் வரும் செய்திகளும், 2. சிரகிரி மான்மியம், 3. புட்பகிரி மான்மியம், 4. இடும்பனுக்கு வழிகாட்டிய மான்மியம் ஆகியவற்றிலுள்ள வரலாறுகளுமாம்.

மேல் வரும் காட்சி மான்மியம், ஆலயங் கண்ட மான்மியம் ஆகியவற்றிலுள்ள செய்திகள் சிரகிரியில் சரவண முனிவனுக்கு

முருகக் கடவுள் காட்சி நல்கியதும் சரவண முனிவன் முருகனுக்கு ஆலயத் திருப்பணி முதலிய பல திருப்பணிகள் செய்து முத்தி யடைந்ததுமாகிய நிகழ்ச்சிகள் கூறுவனவாம்.

இடும்பனுக்கு வழிகாட்டிய மான்மியம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம் — *159*.

# 5. காட்சி மான்மியம்.

1. சதுமறைத் தலைவன் சரவண முனிவன்
தலந்தொறுந் தலந்தொறுஞ் சார்ந்து
நதிமதி வேணி நம்பனைக் குகனை
நறுமலர் தூய்ப்பணிந் தகன்று
முதுமறை பழிச்சும் பொன்னியா றருவி
முரல்ஞிமி றீட்டங்க ளார்க்கும்
புதுமலர்ப் பொதுளும் பொழிற்றிரு விருந்த
புரத்தினிற் போந்தனன் புனிதன்.

பொழிப்புரை : நான்கு வேதங்களையும் பயின்று தலைமை பெற்றவனுகிய சரவண முனிவன் க்ஷேத்திரங்கள் தோறுஞ் சென்று கங்கையாற்றையும் பிறைச் சந்திரனையும் அணிந்த சடையையுடைய சிவபெருமானையும், முருகனையும் நல்ல மலர்களைச் சொரிந்து (அருச்சித்து) நீங்கிப் பழமையாகிய வேதங்கள் போற்றுகின்ற பொன்னையுடைய காவிரியாற்றைக் கடந்து ஒலிக்கின்ற வண்டின் கூட்டங்கள் நிறைந்திருக்கின்ற புதுமையாகிய மலர்கள் நெருங்கியுள்ள சோலைகள் சூழ்ந்த திருவிருந்த புரத்திற்குப் போனான். (பின்பு) தூய்மையுடைய சரவண முனிவன் என்றவாறு.

விளக்கவுரை : *காவிரி பழமையும் தெய்வத் தன்மையுமுடையதாய்த் தன்கண் மூழ்குவோருடைய பாவங்களைப் போக்கி ஞானத்தைத் தரும் புண்ணிய நதியாகலின் அதனைப் பழமையாகிய வேதங்களும் துதிக்கின்றனவென்பார், "முதுமறை பழிச்சும் பொன்னியா"றென்றார்.*

*முரல்ஞிமிறு—வினைத்தொகை. திருவிருந்தபுரம்—சரவண முனிவனது ஊர். சென்னியங்கிரியை யடுத்து விளங்குவது.*

2. சந்தனக் குறடுங் கவரியுஞ் சுதைவெண்
டரளமால் யானையின் கோடும்
உந்திவெள் ளருவி யிருவியஞ் சார
லூடல்நெளிந் தொடுபாம் பென்னக்
கொந்துயிர்த் தொழுகு நறவொடுங் கலந்து
பாய்தருங் கொழுமலர்ச் சுனையிற்
சிந்துர நுதலார் தினங்குடைந் தாடுஞ்
சிகரமால் வரையினைச் சேர்ந்தான்.

**பொழிப்புரை :** சந்தனக் கட்டைகளையும், கவரிமான் மயிர்க் கற்றைகளையும், மிகவும் வெண்மையாகிய முத்துக்களையும், பெரிய யானையின் தந்தங்களையும் தள்ளிக்கொண்டு வெண்மையாகிய நீரருவியானது தினைத் தாள்கள் நிறைந்துள்ள அழகாகிய மலைப் பக்கத்தில் (மலைச் சரிவுகளில்) உடல் நெளிந்து ஓடுகின்ற பாம்பு போலப் பூங் கொத்துக்கள் சொரிதலால் ஒழுகுகின்ற தேனுடன் கலந்து பாய்கின்ற கொழுமையாகிய மலர்களையுடைய சுனைகளில் சிந்துரப் பொட்டணிந்த நெற்றியையுடைய மகளிர்கள் நாடோறும் மூழ்கி விளையாடுகின்ற பெருமை பொருந்திய சிரகிரியை யடைந்தான் என்றவாறு.

**விளக்கவுரை :** *சென்னிமலையின் வருணனை கூறுவதிச் செய்யுள். சென்னிமலையானது நீரருவி, தேனொழுக்குடன் கலந்து பாய்கின்ற சுனையையுடையது. அச் சுனையில் மகளிர் நாள் தோறும் விளையாடுவர் என்பது கருத்து.*

*ஆசிரியர் நீரருவியின் வருணனை கூறும்பொழுது அந் நீரருவியால் உந்தப்படுகின்ற சந்தனக் கட்டை, கவரிமான் மயிர்க் கற்றை, முத்து, யானைத் தந்தம் என்னும் சென்னிமலையின் கண்ணுள்ள மலைபடு பொருள்களையும் உடன் கூறினர். அருவி வருணனை கூறும்பொழுது மலைபடு பொருள்களையும் உடன் கூறியது ஆசிரியர் நக்கீர தேவர் பழமுதிர் சோலை மலையின் அருவி வருணனை கூறும் பொழுது அம் மலையிலுள்ள குறிஞ்சி நிலப் பொருள்கள் அனைத்தையும் உடன் கூறியது போல வென்க.*

"வேறுபல் துகிலி னுடங்கி யகில்சுமந்து
......... ......... ......... .........
இழுமென விழிதரு மருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே" — திருமுருகாற்றுப் படை.

*நீரருவி துகில் போல வெண்மை நிறமுடையதாகலின் அதனை "வெள்ளருவி" என்றார்.*

"தெண்ணீ ரவிர்துகில் புரையு மவ்வெள் ளருவி"
— குறிஞ்சிப் பாட்டு.

*தேனொழுக்கிற்கு நெளிந்தோடும் பாம்பினை உவமை கூறினர்.*

"பொதிக்க ணிறைற் பூம்புறம் புதைஇ
மதிக்கண் மறைந்த மாசுண மான
மணிவரை மருங்கி னணிபெற வொழுகி"
— கொங்குவேள் மாக்கதை-குறிஞ்சிநிலம் கடந்தது 35, 37.

" காம்பு கால்பொரக் கண்ணகன் மால்வரை
பாம்பு நான்றெனப் பாய்பசுந் தேறலே "
— கம்ப ராமாயணம்-நாட்டுப் படலம் 35.

*சிந்துரம்—சிவப்புப் பொட்டு. சிந்துர நுதலார்—மலைவாழ் குறவர் மகளிரெனினுமாம். அவரே இடைவிடாது மலையின் கணுள்ள சுனையில் மூழ்கி விளையாடுவராகலின். சுனை—இயற்கைத் தடாகம்.*

" மலைவாழ் குறவர் மகளிர் குடையுஞ்
சுனைவாய் நிறைக்குஞ் சூருடைச் சிலம்பில் "
— கொங்குவேள் 50—39, 40.

*அரம்பையர் ஆடும் சுனை எனினுமாம்.*

" உற்றிசைபா டுங்கொடிச்சி யொண்குறிஞ்சிச் சுணமரைக்கச்
சுற்றியரம் பையராடுஞ் சுனையருவி மணங்கமழ "
— தக்கராமாயணம் அயோத்திய காண்டம். சித்திரகூடப் படலம்-7.

*அருவி நீர் நிறைக்கும் சுனைகளில் மகளிர் நீராடுவரென்பது;*

" வண்ண நெடுங்கோட் டிழிதரு தெண்ணீர்
அவிர்துகில் புரையு மவ்வெள் ளருவித்
தளர்வில் வேட்கையேந் தண்டா தாடிப்
பளிங்கு சொரிவன்ன பாய்சுனை குடைவுழி "
— குறிஞ்சிப் பாட்டு 54—57.

" சுதைவெண் குன்றச் சிமைபரந் திழிதரு
மந்தர வருவி வந்துழி நிறையும்
பொற்சுனை தோறும் புக்குவிளை யாடியும் "
— கொங்குவேள் மாக்கதை, வத்தவ காண்டம் 11. 93, 95.

*குடைந்து—மூழ்கி. குடைதல்—மூழ்குதல்.*

" கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்க " — திருவாசகம்

" அருவி யாடியும் அகன்சுனை குடைந்தும்
அலமுற்று வருவேமுன் " — சிலம்பு, உரைப்பாட்டு மடை.

*குடைந்து—கைகளால் நீரையிறைத்து எனினுமாம்.*

"தம்பொய்கை புக்கு முகே ரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி"
— திருவெம்பாவை 11.

*இருவி—தினைத்தாள்*

"அருவி தினைத்தாள் இருவியு மாகும்" — பிங்கலம் 2969.

*மலைநிலச் சரிவுகளில் தினை விளைவிப்பராகலின் "இருவி யஞ் சாரல்" என்றுர். குறிஞ்சி நிலக் கருப் பொருள்களில் தினையும் ஒன்று. இருவி யென்பது ஈண்டு தினைப் பயிரை யுணர்த்திற்று.*

3\. வேறுசெப் பேட்டி லெழுதிய வாறும்
விண்ணவர் முதலிய ரிடமும்
கூறிய பஞ்ச துந்துமி முதலாய்க்
கொம்மென முழங்கிய முழக்கும்
தேறுநால் வகையாந் திப்பிய மருந்துந்
திகழ்ந்துகை யாதகாஞ் சிரையும்
பேறுறற் கரிய நெரச்சியும் பிறவும்
பிரசமார் பொழில்களுந் தடமும்.

**பொழிப்புரை :** சிரகிரி மான்மியத்தை வேறு செப்பேட்டில் எழுதிய வரலாறும் தேவர்கள் வாழிடங்களும் கூறப்பட்ட பஞ்ச துந்துமி முதலாகிய தேவ வாத்தியங்கள் கொம்மென்று முழங்கிய முழக்கமும் தெளிதற்குரிய நால்வகைத் தெய்வத் தன்மையுடைய மருந்துகளும் செழித்து விளங்கிக் கசத்தலில்லாத எட்டி மரமும், பெறுவதற்கரிய கருநொச்சியும் பிறபொருள் களும் பூந்தாதுகள் நிறைந்த சோலைகளும் மலைப் பக்கங்களும் (தடமும்) என்றவாறு.

**விளக்கவுரை :** *பஞ்ச துந்துமி—பேரி முதலிய ஐவகையான தேவ வாத்தியங்கள் என்பர்.*

"பண்ணினுன் மறையு மார்த்த பஞ்சதுந் துமியு மார்த்த"
— திருக்காளத்திப் புராணம்.

*தோற் கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி, கண்டக் கருவி என்னும் ஐவகைக் கருவிகளின் ஒலி பஞ்ச துந்துமி முழக்கமாம். இவற்றைப் பஞ்சமா சத்தம் என்பர்.*

" சொல்லிய நற்றேல் துளிதுய்ய மென்னரம்பு
கல்விமிகு கஞ்ச மிடறெனவே — வெல்லுமதன்
அஞ்சப் படும்விழி யாயுங்கா லிவ்வைந்தும்
பஞ்சமா சத்தமெனப் பார்" பஞ்சமரபு, வகையொழிபு 2.

*கொம்மென — ஒலிக் குறிப்பு. நால்வகை மருந்து — சல்லிய கரணி, சந்தான கரணி, சமனிய கரணி, மிருத சஞ்சீவனி என்பனவாம்.*

" மருந்துநால் வகைத்தே " — பிங்கலம்.

*சிரகிரி மான்மியம் 25-ஆம் செய்யுளிற் காண்க. பிரசம் — தேன், வண்டு, பூந்தாது, தேன் கூடு; காஞ்சிரை — எட்டி மரம்.*

" கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குங் காஞ்சிரங்கா யீந்ததேல் "
— நல்வழி.

4. தீர்த்தமுங் காண்டற் கரியபுட் புறவுந்
தெய்விக முதற்பல வளமும்
பார்ப்பன பார்த்துங் கேட்பன கேட்டும்
பனுவலுட் புகன்றவா ரோர்ந்துங்
கூர்ந்தநெஞ் சினனு யதிசயம் விளைத்துங்
குறிப்பதற் குரியனு தலினுற்
கார்த்திகை சேய்காங் கெயனவ லிடத்திற்
கருணையங் கடலமு தருள்வான்.

*பொழிப்புரை :* புண்ணிய தீர்த்தமும் பிறவிடங்களிற் காணுதற் கரிய பறவைப் புருக்களும்; தெய்வத் தன்மையும ஆகியவற்றுள் கண்ணாற் பார்ப்பதற்குரியவைகளைப் பார்த்துங் காதாற் கேட்டற்குரியவைகளைக் கேட்டறிந்தும்; நூலினுட் சொல்லியவற்றையெல்லாம் ஆராய்ந்தும் மேன்மை பொருந்திய மனமுடையவனும் அதிசயத் தன்மையுற்றும் விளங் குதலால் முருகக் கடவுளால் குறித்து அருள் செய்தற்குரியவனுதலால் கார்த்திகை மாதர்களின் புத்திரனும்; கங்கையில் வளர்ந்தவனுமாகிய முருகக் கடவுள் அச் சரவண முனிவனுக்கு அழகிய அருளாகிய கடல் போன்ற அமுதத்தை யருளுவதற்கு என்றவாறு.

விளக்கவுரை : *தீர்த்தம்-சென்னிமலையிலுள்ள தீர்த்தங்கள். அவை சரவண தீர்த்தம் (குமார தீர்த்தம்), மாமாங்க தீர்த்தம் " பெருக்குமா மகத்திற் பெருகிடு தீர்த்தம் " — சிரகிரி மான்*

*மியம் 27. காணுச் சுனை என்பனவாம். புள் பறவு—'' காண் பதற் கரியபுள்ளும் '' சிரகிரி மான்மியம் 28. பனுவல் — நூல். பனுவல் என்றது ஈண்டுச் செப்பேட்டினையாம். அருளுவான் — அருளுதற்கு; எதிர்கால வினையெச்சம். இவ் வினையெச்சம் 6-ஆவது பாடலில் வரும் நல்கினன் என்னும் வினை கொண்டு முடிதலால் குளகமாம்.*

'' குளகம் பலபாட் டொருவினை கொள்ளும் ''—தண்டியலங்காரம்.

*பார்ப்பன — கண்ணால் பார்ப்பதற்குரியவைகள். அவை தேவர் வாழிடங்கள், நால்வகை மருந்து, தீர்த்தம், பறவை முதலியன. கேட்பன—கேள்வியாலறிதற்குரியவைகள். அவை பஞ்ச துந்துமியின் முழக்கம், தெய்விக வொலி முதலியனவாம். கார்த்திகை சேய்—கார்த்திகேயன். கார்த்திகை மாதர் அறுவ ரால் வளர்க்கப் பெற்றவன்.*

'' தாயென வாரல்போந்து தனங்கொள்பா லருத்தலாலே
ஏயதோர் கார்த்திகேய னென்றொரு தொல்பேர்பெற்றான் ''
— கந்தபுராணம்.

*காங்கேயன் — கங்கையால் சுமக்கப் பெற்றுச் சரவணப் பொய்கையிலிடப் பெற்றவன்.*

'' ஈங்கன நமது கண்ணி லெய்திய குமரன் கங்கை
தாங்கினள் கொண்டு சென்று சரவணத் திடுதலாலே
காங்கெய னெனப்பேர் பெற்றான் ''
— கந்தபுராணம்-திருவிளையாடற்படலம்.

5. **மூவிரு முடியு முகங்களோ ராறு**
**மூன்றுநான் கமைந்தவாள் விழியும்**
**மேவுபன் னிருவார் குழைகளுங் கனிவாய்**
**விளைத்தருட் புன்னகை முகிழ்ப்புந்**
**தாவில்வச் சிரம்வே லிருதலைச் சூலந்**
**தண்டுவாள் பலகைவில் வாளி**
**கூவுகுக் குடஞ்சக் கரமிளிர் வரதா**
**பயமிவை கொண்டகைத் தலமும்.**

*பொழிப்புரை :* ஆறுசிரங்களும் (முடி); ஆறுமுகங்களும்; பன்னிரண்டாக வமைந்த ஒளிபொருந்திய கண்களும்; பொருந்திய பன்னிரண்டாகிய நீண்ட காதுகளும்; கொவ்வைக்கனி போன்ற வாயினிற் செய்யும் புன்சிரிப்பின் தோற்றமும்; கெடுதலில்லாத வச்சிரம், வேல், இருதலைச் சூலம், தண்டு, வாள், கேடயம், வில், அம்பு, கூவுகின்ற கோழிச் சேவல், சக்கரம், விளங்குகின்ற அபய வரதம் ஆகிய இவைகளைக் கொண்ட கைத்தலங்களும் என்றவாறு.

*விளக்கவுரை : இதுவும் அடுத்த பாடலும் முருகக் கடவுள் சென்னிமலையில் சரவண முனிவனுக்குக் காட்டிய காட்சிச் சிறப்புக் கூறுவனவாம். இருதலைச் சூலம்—இரண்டு தலையுள்ள வேல்.*

''ஏயென முருகன் விட்ட விருதலை படைத்த ஞாங்கர்''
— கந்தபுராணம்-சூரபன்மன் வதைப்படலம்-465.

*வரதம் அபயம் — இடப்புறமுள்ள வரதகரமும்; வலப்புறமுள்ள அபயகரமுமாம். வரதம்–வரத்தைக் கொடுப்பது. அபயம் —அஞ்சாதே என்று பயம் தீர்ப்பது. சரவண முனிவனுக்குக் காட்டிய முருகக் கடவுளின் இக்காட்சி வீரமகேந்திரபுரியில் சயந்தனுக்குக் கனவில் காட்டிய காட்சியோடொப்பதாகும்.*

''வீறு கேதனம் வச்சிர மங்குசம் விசிகம்
மாறி லாதவேல் அபயமே வலமிடம் வரதம்
ஏறு பங்கயம் மணிமழுத் தண்டுவில் கிசைத்த
வாறி ரண்டுகை யறுமுகங் கொண்டுவே ளடைந்தான்''
— கந்தபுராணம், சயந்தன் கனவு-4.

*முருகக் கடவுள் ஆறுமுகமும் பன்னிரண்டு கரமும் உடையவராய்ச் சரவணப் பொய்கையில் அவதரித்தார் என்பது புராண வரலாறு.*

''அருவமு முருவமாகி யநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலக முய்ய''
— கந்தபுராணம் திருவவதாரம் 92.

'' மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினுல் அளக்கொணுமல்
நிறைவுடன் யாண்டு மாகி நின்றிடு நிமலமூர்த்தி
அறுமுக வுருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப் போதில் வீற்றிருந் தருளினுனே ''

— கந்தபுராணம்-திருவவதாரப் படலம்-96.

குமாரதந்திரம் என்னும் ஆகமம் முருகக் கடவுளுக்குரிய பதினறு வடிவங்களைக் கூறுகின்றது. அவை:- 1. சக்திதரன் 2. ஸ்கந்தன் 3. சேனுபதி 4. சுப்பிரமணியன் 5. கஜ வாகனன் 6. சரவணபவன் 7. கார்த்திகேயன் 8. குமாரன் 9. சண்முகன் 10. தாரகாரி 11. ஸேநாநீ 12. பிரமசாத்தா 13. வல்லிகல்யாணசுந்தரன் 14. பாலஸ்வாமி 15 கிரௌஞ்ச மேத்தா 16. சிகி வாகனன்-என்பன. இவற்றுள் ஆருவதாகக் கூறிய ''சரவணபவ'' வடிவமே இப்பாடலிற் கூறிய வடிவமாம்.

'' ஞாங்கர்ப் படைகே டகங்கண்டை
நளினஞ் சேவல் கதையிடங்கம்
ஓங்கும் பகழி வாள்வரதம்
ஒளிரு மபயஞ் சிலையவைதாம்
தாங்குங் கரங்க ளீராறுந்
தயங்கும் வதன மோராறும்
ஆங்கு விளங்க வருட்சரவ
ணபவ னுருவ மாக்குநரும் ''

— தணிகைப் புராணம்-அகத்தியனருள்பெறு படலம்-69.

சரவணபவன்—ச ர வ ண வாவியிற் பிறந்தவன். சரம்—தருப்பை; வனம்-நீர். இது தருப்பை சூழ்ந்த தடாகத்திற்குப் பெயராயிற்று. இத் தடாகம் இமயமலையின்கண் உள்ளது.

'' நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனே ''

— திருமுருகாற்றுப்படை.

சரவணபவன் என்னும் பெயர்க்குரிய '' சரவணபவ '' என்பதே முருகக் கடவுளுக்குரிய சிறந்த ஆறெழுத்து மந்திரமாகத் திகழ்கின்றது.

இதுவும் அடுத்த கவியும் அறுமுகக் கடவுளின் பலவிதமான இயல்புகளை யுள்ளவாறு அலங்கரித்துக் கூறுதலின் பொருட்டன்மை யணியாம்.

6. மருமிகு கடப்ப மாலையுந் தோளும்
வலயமும் நீறணி மார்பும்
குருமணி யுதர பந்தமும் மருங்கிற்
குலவிய கோசிக வுடையுந்
திருவரை ஞாணுந் தண்டையுஞ் சிலம்புஞ்
சீரடித் துணைகளுந் தெரிய
வருமறைத் தலைவன் புரிதவப் பயனு
லருட்பெருங் காட்சிநல் கினனால்.

*பொழிப்புரை :* மணம் மிகுந்த கடப்ப மலர் மாலையும், தோள்களும் தோள் (வாகு) வலயமும், திருநீறணிந்த மார்பும், ஒளி பொருந்திய இரத்தினம் பதித்த உதர பந்தமும் இடையில் விளங்குகின்ற செம்பட்டாடையும் அழகிய அரைநாணும், தண்டையும், சிலம்பும், சிறப்புப் பொருந்திய இரண்டு பாதங்களும் தெரியுமாறு அருமையாகிய வேதங்களை யோதி யுணர்ந்த தலைமையான சரவண முனிவன் முன்பு செய்த தவப் பயனால் அவனுக்குத் தமது அருட்பெருங் காட்சியைத் தந்தருளினான் என்றவாறு.

விளக்கவுரை : *உதர பந்தம்—வயிற்றின் நாபியின் மேற் கட்டப்படும் ஆபரணம்.*

" அகட சக்கர வின்மணியாய் " — கந்தபுராணம் 1.

*கோசிகவுடை—பட்டுடை.*

" பட்டும் புடவையும் கோசிக மாகும் " — பிங்கலம் 3443.

*முருகக் கடவுளின் அருட் காட்சி கூறும் 5, 6-ஆம் பாடல் களுடன் கீழ் வரும் பாடல்களை நினைவு கூர்க.*

" முழுமதி யன்ன வாறு முகங்களு மூந்நான் காகும்
விழிகளி னருளும் வேலும் வேறுள படையின் சீரும்
அழகிய கரமீ ராறும் அணிமணித் தண்டை யார்க்குஞ்
செழுமல ரடியுங் கண்டா னவன்றவஞ் செப்பற் பாற்றோ "
— கந்தபுராணம்—தாரகன் வதை 126.

" திருவடி யுந்தண்டை யுஞ்சிலம் புஞ்சிலம் பூடுருவப்
பொருவடி வேலுங் கடம்புந் தடம்புய மாறிரண்டும்
மருவடி வான வதனங்க ளாறும் மலர்க்கண்களுங்
குருவடி வாய்வந்தெ னுள்ளங் குளிரக் குதிகொண்டவே "
— கந்தரலங்காரம்.

7. அளித்திடுங் காட்சி யமிழ்தினை யள்ளி
யள்ளியா னந்தநீர் வெள்ளந்
துளித்திடுங் கண்க ளால்முகந் துண்டு
சுகோதயம் பிறந்தநெஞ் சினனாய்க்
களித்தனன் கரங்கள் கொட்டிநின் றுடிக்
கரஞ்சிர முகிழ்ப்புற நின்று
தெளித்தநான் மறையும் முறைமுறை பாடிச்
செயசெய போற்றியென் றேத்தி.

பொழிப்புரை : முருகக் கடவுள் அளித்த காட்சி (தரிசனம்) யாகிய அமுதத்தைச் (சரவண முனிவன்) தன்னுடைய ஆனந்தமாகிய நீர் வெள்ளம் துளித்துக் கொண்டிருக்கின்ற கண்களினால் அள்ளியும் (வாரியும்); மொண்டும், உண்டு சுகமாகிய வொளி பிறந்த மனமுடையவனாய் மகிழ்ந்து கைகளைக் கொட்டியும் ஆடியும் கைகள் சிரசில் குவியும்படி நின்றும் தெளிவு பொருந்திய நான்கு வேதங்களையும் முறையாகப் பாடிச் செயசெய போற்றி என்று வாழ்த்தி என்றவாறு.

விளக்கவுரை : கண்களுக்கு இன்பந் தரும் முருகக் கடவுளின் காட்சியானது நாவிற்குச் சுவை தரும் அமுதம் போல இன்பந் தருதலின் அதனைக் "காட்சியமு" தென்றும்; காட்சி யமுதம் கண்களால் கொள்ளப்படுதலின் "கண்களால் முகந் துண்டு" என்றும்; அதனை உண்டலாற் பயன் சுகமாம் என்பார் "சுகோதயம் பிறந்த நெஞ்சினனாய்" என்றும்; சுகத்தால் நிகழ்வது களிப்பாம் என்பார் "களித்தனன்" என்றும்; களிப்பால் நிகழ்வன கரங்கள் கொட்டுதலும் ஆடுதலும் கரஞ்சிர முகிழ்த்தலும் பாடுதலும் ஏத்துதலுமாகலின் "கரங்கள் கொட்டிநின் றுடிக் கரஞ்சிர முகிழ்ப்புற நின்று; தெளித்த நான் மறையும் முறைமுறை பாடிச் செயசெய போற்றியென் றேத்தி" என்றும் முறைபெறக் கூறினர். உள்ளத்தில் பெருகும் ஆனந்தத்தைக் கண்களில் நீர் பெருகுதல் காட்டுமாகலின் "ஆனந்த நீர்வெள்ளம் துளித்திடுங் கண்களால்" என்றார்.

"அன்பிற்கு முண்டோ வடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்" — திருக்குறள்.

அள்ளுதலும், முகத்தலும் கைகளின் செயல்கள். உண்ணல் வாயின் செயலாம். பார்த்தலும் அனுபவித்தலும் கண்களின் செயல்களாம். கட்புலனுக்குரிய காட்சியை யமுதமென்றதற்கு

ஏற்பக் கண்ணின் செயலாகிய பார்த்தலையும் அனுபவித்தலையும் "முகந்து" என்று கையின் செயலாகவும் "உண்டு" என்று வாயின் செயலாகவும் கூறினர். கை, வாய் இவற்றின் வினையைக் கண்ணின் மேல் ஏற்றிக் கூறியது இலக்கணையாம்.

"உண்டற் குரிய வல்லாப் பொருளை
யுண்டன போலக் கூறலும் மரபே"

— தொல்காப்பியம், பொருளியல் 19.

என்னும் சொல் வேறுபட்டுப் பொருளுணர்த்தும் வழுவமைதிச் சூத்திரம் காண்க. காட்சியமுதம்—உருவகம். அள்ளியள்ளி; முறைமுறை; செயசெய என்பன அடுக்குத் தொடர்கள். சுகோதயம்—இன்ப வொளி; இன்பத் தோற்றம். வடமொழிப் புணர்ச்சி.

8. கந்த! காங்கேய! கார்த்திகை புதல்வ!
கவுரிகா கோதர வேணி
மைந்த! கூதாள மாலிகை மார்ப
மாயவன் மருகவேள் முருக!
தந்திமா முகனுக் கிளையசண் முகவ!
சரவணோற் பவ!பவ நாச
செந்தமிழ் வீர! மாமுதற் றடிந்த
செங்கைவேற் சேவக! போற்றி.

பொழிப்புரை: கந்த! காங்கேய! கார்த்திகை புதல்வ! கவுரிகையின் குமார! சடையையுடைய சிவனது குமார! கூதாளம் பூ மாலை யணிந்த மார்பனே! திருமாலின் மருகனே! வேல் முருக! பெருமையாகிய யானை முகனுக் கிளையவனே! ஆறு முகங்களை யுடையவனே! சரவணப் பொய்கையில் தோன்றியவனே! பாவங்களை நாசம் செய்கின்றவனே! செந்தமிழ் மொழியைக் காக்கும் வீரனே! மாமரத்தினது முதலை வெட்டிய சிவப்பாகிய கைவேலை யுடைய பெருவீரனே! உனக்கு வணக்கம் என்றவாறு.

விளக்கவுரை: கந்தன்—ஆறு வடிவங்களாயிருந்து ஒன்றாகச் சேர்க்கப்பட்டவன். சத்துருக்களை நாசம் செய்பவன் என்பது சிவாக்கிர யோகிகள் சிவஞான சித்தியார் உரை.

"அந்த மில்லதோர் மூவிரு வடிவு மொன்றாகிக்
கந்த னென்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்"

— கந்தபுராணம்.

*முருகக் கடவுளின் பதினறு வடிவங்களில் ஒன்று ஸ்கந்தன் என்பது. கவுரிகாகோதரன் — கவுரிகையென்ற பெயருடைய அம்பிகையின் வயிற்றிற் பிறந்தவன். வடமொழித் தொடர். வேணி—சடை, நதி.*

> " வேணிநீள் சடையினுமம் விசும்பாறே முப்பேர் செப்பும் "
> — அரும்பொருள் விளக்கம்.

*வேணி — சடையையுடைய சிவபெருமானுக்குப் பெயராயிற்று. சினையாகு பெயர். வேணி மைந்தன் - கங்கை குமாரன் என்ற பொருளுமுடையது. கூதாள மாலிகை—வெண் கூதாளம் பூ மாலை.*

> " வெண்கூ தாளந் தொடுத்த கண்ணியன் "
> — திருமுருகாற்றுப்படை 192.

*கூதாளம் கூதாளியெனவும் வழங்கும்.*

> " துடிகூ தாளங் கூதாளி யென்ப " — பிங்கலம்.

*சங்கப் புலவருடனிருந்து தமிழாராய்ந்தும்; தமிழ் முருகாற்றுப்படைக்குவந்து பெரும் பூதத்தைக் கொன்றும்; சூரபன்மன் முதலிய அசுரர்களைக் கொன்று தேவரைக் காத்தும்; தமிழ் நாட்டினரால் வீரக் கடவுளாகப் போற்றப் பெற்றும் விளங்குபவராகலின் முருகக் கடவுள் செந்தமிழ் வீரன் எனப் பெற்ருர்.*

*சென்னிமலை முருகர் அருணகிரிநாதர் பாடலுக்கு மகிழ்ந்து படிக்காசு அளித்தனர் என்பது தலச் செய்தி.*

> " நாட்டிற் கருணகிரி நாதன்றிருப் புகழ்சொல்லப்
> பாட்டிற் குவந்து படிக்கா சளித்தபிரான் "
> — சென்னிமலைக் காதல்.

> " உருக்கரிக் கொண்டலையா தமிழ்ச்சீர்த்தி யுடையவனே "
> — சென்னிமலை யமகவந்தாதி.

*சேவகன்—ஈண்டுப் பெருவீரனை யுணர்த்தி நின்றது. சூரபன்மன் மாமர உருக்கொண்டு கடலில் நிற்கவும் வேலை விட்டு அச் சூரனுகிய மாமரத்தை யழித்தவர் முருகக் கடவுளாதலின் அவரை " மாமுதற் றடிந்த செங்கைவேற் சேவக " எனப் போற்றினர்.*

"அவுணர் நல்வல மடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்
தெய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்"
— திருமுருகாற்றுப்படை 59—61.

*அன்றியும் அசுரர்களெல்லாம் தம்மை யெதிர்த்த பகைவர்களின் வலிமையில் பாதி தமக்குண்டாகும்படி மந்திரங் கொண்டு சாதித்திருந்ததொரு மாமரத்தை வெட்டினரென்னும் பழைய வரலாற்றையும் உட்கொண்டு கூறினரெனினுமாம்.*

"நீர்நிரந் தேற்ற நிலந்தாங் கழுவத்துச்
சூர்நிரந்து சுற்றிய மாதபுத்த வேலோய்" — பரிபாடல் 18. 3-4.

"அணங்குடை யவுண ரேமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்கு" — பதிற்றுப்பத்து 11.

9. *அய்யநின் விளையாட் டாரறி கிற்பா
ராவினன் குடிதனி லன்று
வெய்யனே னுளத்தி லுதித்துவாய் மலர்ந்து
விளங்குமிக் கிரியின்மான் மியந்தான்
செய்யகாஞ் சியிற்செப் பேட்டுள தென்றுய்
திறம்பிடா தனைத்துளந் தெரிந்தே
னுய்யுமான் மியத்தின் சிறப்பனைத் தையுமிவ்
வரையினிற் கண்டுகேட் டுய்ந்தேன்.*

பொழிப்புரை : ஐயனே! உனது திருவிளையாடலை அறியவல்லவர் யாவர்? அக்காலத்தில் திருவாவினன் குடியில் கொடியேனது உள்ளத்தில் தோன்றித் திருவாய் திறந்து விளங்குகின்ற இச் சிரகிரியின் மான்மியம் அழகிய காஞ்சிபுரத்தில் செப்பேட்டிலுள்ள தென்றாய். நீ சொல்லிய அம் மான்மியம் எல்லாவற்றையும் மாறுபாடில்லாமல் உள்ளத்தில் அறிந்தேன். ஈடேறுதற்குரிய மான்மியத்திற் கூறிய சிறப்பாகிய செய்திகளெல்லாவற்றையும் இம் மலையில் கண்டும் கேட்டும் ஈடேற்றமுற்றேன் என்றவாறு.

விளக்கவுரை : *அய்ய — அண்மைவிளி. யார் என்னும் வினாவிற்கு ஒருவருமில்லையென்பது விடையாம். இக் கிரியின் மான்மியம் காஞ்சியில் செப்பேட்டிலுள்ள தென்ற செய்தி செப்பேடு கண்ட மான்மியம் 35-ஆம் செய்யுளிற் காண்க.*

10. தீட்டருஞ் சதுமா மறைச்சிரப் பொருளே
சிரகிரிச் சிரமிசை யின்று
தோட்டலர் பொழில்சூழ் சிவகிரி மிசையிற்
சொற்றவா றறுமுகந் தோன்றக்
காட்டிய காட்சிக் கென்னகை மாறு
காட்டுவே னெனக்கரங் கூப்பி
வாட்டமில் களித்த ளநிநெக் குருகி
மயர்வற வலைங்குறும் போழ்தில்.

பொழிப்புரை : எழுதுதற்கரிய பெருமையாகிய நான்கு வேதங்களின் உச்சியில் விளங்குகின்ற சிறந்த பொருளாயுள்ளவனே! இதழ்கள் விரிந்த மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த சிவகிரியின் மேல் (திருவாவினன்குடி மலை) சொல்லிய படியே இன்று சிரகிரியின் உச்சியின் மீதில் ஆறுதிரு முகங்களுந் தோன்றும்படி காட்டிய நினது காட்சிக்கு (தரிசனத்திற்கு) என்ன பிரதி யுபகாரம் செய்வேன் என்று கைகளைக் குவித்து வாட்டமில்லாத மகிழ்ச்சியுள்ள முடையவனுகி உள்ளம் நெகிழ்ந்துருகி வணங்குகின்ற சமயத்தில் என்றவாறு.

விளக்கவுரை : வேதங்கள் நான்கும் எழுதுதற்கியலாத ஒலி வடிவமுடையன வாதலின் அவற்றைத் "தீட்டருஞ் சதுமா மறை" என்றும்; வேதங்களின் முடிந்த முடிபாகிய பொருளைக் கூறுவன வேதசிர சென்னும் உபநிடதங்களாதலின் "சதுமா மறைச்சிரம்" என்றும்; வேத சிரசில் கூறும் உண்மைப் பொருளாய் விளங்குபவன் முருகக் கடவுளாதலின் "மறைச் சிரப் பொருள்" என்றும் கூறினர். சொற்றவாறு என்றது முருகக் கடவுள் சரவண முனிவருக்குத் திருவாவினன்குடி மலையில் காட்சி தந்தது போலச் சிரகிரியிலும் காட்சி தருவோம் என்பாராய் "அந்தவரையிற் காட்சி தருதும்" எனச் செப்பேடு கண்ட மான்மியம் 33–ஆம் செய்யுளிற் கூறியதையாம். காட்டுவேன்—செய்வேன் என்னும் பொருளில் வந்தது.

திருவிளையாடற் புராணத்தில் திருநகரஞ் செய்த படலம் என்பது திருநகரங் கண்ட படலம் என வழங்குதலும் காண்க. முற்றறிவுடைய ஆண்டவன் செய்த உபகாரத்திற்குச் சிற்றறிவுடைய அடிமையாகிய ஆன்மாவினுற் செய்யும் பிரதியுபகார மொன்றில்லை யென்பான் "அறுமுகந் தோன்றக் காட்டிய காட்சிக் கென்ன கைமாறு காட்டுவேன்" என்றுன்.

11. குஞ்சித நிலைத்த சீரடி யிரண்டுங்
கோவண வுடையு மேகலையும்
விஞ்சுநூன் மார்பும் வேத்திர முக்கம்
விளங்குகைத் தலங்களுங் குழைதாழ்
செஞ்செவித் துணையுந் துணைமலர்க் கண்ணுந்
திகழ்தனி வதனமும் பின்றாழ்
எஞ்சலில் சிகையுந் தோன்றமுன் னருள்சூ
விருமுக வுருவினி னொடுத்தே.

*பொழிப்புரை :* குஞ்சிதமாய் நிலைத்துள்ள அழகிய பாதங்களிரண்டும், கோவண மாகிய ஆடையும், அரைப்பட்டிகையும், மேன்மை மிகுந்த முப்புரி நூலணிந்த மார்பமும், தண்டம்(வேத்திரம்) விளங்குகின்றதும் இடுப்பில் சேர்த்தி விளங்குகின்றதுமாகிய கரங்களும், குண்டலங்கள் தொங்குகின்ற அழகாகிய காதுகளிரண்டும், தாமரை மலர் போன்ற கண்களிரண்டும், ஒன்றாக விளங்குகின்ற முகமும், பின்புறம் தொங்குகின்ற குறைதலில்லாத மயிர் முடியும் விளங்கும்படி முன்பு காட்டியருளிய ஆறுமுக வடிவினின்றும் மற்றொரு வடிவத்தை யெடுத்து என்றவாறு.

*விளக்கவுரை : சிரகிரியில் அறுமுக வடிவில் காட்சி நல்கிய முருகக் கடவுள் சரவண முனிவன் தோத்திரங்களும் வணக்கங்களும் செய்த சமயத்தில் அறுமுக வடிவிலிருந்து ஒருமுகத் திருவுருவ மெடுத்தார்.*

"மாவே லறுமுக னொருமுகமாய்
வளர்பன் னிருதோளு மிரண்டான
கோவே யிவனென் றிந்த்ரசித்தைக்
குறித்தங் கனுமனுங் கொண்டாடி"
— தக்கராமாயணம், ஊர்தேடு படலம் 13.

*அறுமுக வடிவமென்றது சரவணபவன் என்னும் வடிவமாம்.*

"ஆறு திரு முகங்களும், பன்னிரு கண்களும், அபயம், வரதம், வேல், மணி, சேவல், பாசம், தண்டம், டங்கம், அம்பு, வில் என்னும் இவற்றை யேந்திய பன்னிரண்டு திருக் கரங்களும், மஞ்சள் நிறத்துடன் அன்றலர்ந்த புதிய தாமரை மலர் போன்ற அழகிய திருமுகங்களுமுடையவர் சரவணபவர்"

— என்று குமாரதந்திரம் கூறுகின்றது.

மூவிரு முக வடிவினுள்ளிருந்து எடுத்த வடிவம் என்றது இப் பாடலில் கூறும் பாலஸ்கந்த வடிவமாம். ஒரு முகமும் இரு கரமும் வலக் கரத்தில் தண்டமும் இடுப்பில் இடது கரமும் கோவண வாடையும்; வலக் கால் ஊன்றி இடக்கால் சிறிது வளைந்து நின்ற குஞ்சித பாதமும் உடையவராய்க் காட்சியருளு பவர் ஸ்கந்தர் என்று வடமொழித்தியான சுலோகம் கூறுகின்றது.

'' ஏகாநநம் த்விபாகும்ச; த்விநேத்ரம்ச த்விகர்ணகம்
வாமஹஸ்தே குக்குடம்ச; சக்திம் திருத்வாதட்சிணே
கிம்சித் குஞ்சிதபதம்; குமாரம் மோதரூபிணம் '' — ஸ்ரீ தத்வநிதி.

'' வைவாய் கணிச்சிப் படையென்ன
வதிவித் திடுங்கோ வணத்தண்டு
கைவாய் வலத்தி னமைத்தருளிக்
கடியி லிடக்கை பதித்தருளி
ஐவாய் வழங்கும் பொறிபுலனை
யவித்த வுறுவரி மையவர்கள்
உய்வா னிறைஞ்ச வருள் வழங்குங்
கந்த னுருவமு ஞற்றுநரும் ''
— தணிகைப் புராணம்-அகத்தியப் படலம் 65.

'' குஞ்சித நிலைத்த சீரடி யிரண்டும் ''–என்றது வலக்கால் நேரே யூன்றியும் இடக்கால் பார்ப்போர் கண்ணுக்குத் தோன்றாத அளவில் சிறிது வளைத்தும் நிற்றலையாம்.

குஞ்சிதம்—குஞ்சிப்பு. '' ஒரு காலை யூன்றி ஒரு காற் பெரு விரலை நிலத்திலூன்றி நிற்றலும், குந்தி நிற்றலும் குஞ்சிப்பாம் '' —என்பது பரதநாட்டியம்.

'' ஒருகாலை யெடுத்து வளைத்துக் குஞ்சித்தல் '' — பஞ்சமரபு.

'' குந்திய கால்நிலை குஞ்சித்த லாகும் '' — பிங்கலம்.

சமநிலை, உற்கடிதம், சஞ்சாரம், காஞ்சிதம், குஞ்சிதம் என்னும் ஐவகைப் பாத நிலைகளில் ஒன்று. மேகலை—அரைப் பட்டிகை. இடையிலுடுத்துள்ள ஆடை யெனினுமாம்.

'' மேகலை யுடுத்த வாடை விளங்கரைப் பட்டிகைப்பேர் ''
— அரும்பொருள் விளக்கம் 28.

வேத்திரம்—பிரம்பு. உக்கம்—இடை. குழை—குண்டலம். வதனம்—முகம். சிகை—குடுமி. உக்கம்—கோழியெனினுமாம்.

"உக்கமே மருங்கின் பக்க மொண்மருங் கால வட்டம்
குக்குடஞ் சுரபி செந்தீக் கோவிடை முகமேழ் பேராம்"
— அரும்பொருள் விளக்கம் 44.

*அறுமுகக் கடவுள் ஒருமுக வடிவு கொள்வரென்பதனைக் கீழ்வரும் கந்தபுராணச் செய்யுளானுமுணர்க.*

"எழுதிரென் றுரைத்த லோடு மிந்திரன் முதலா வுள்ளோர்
விழியிடைத் தெரிய வள்ளோர் மெய்த்தவம் புரிந்த நீரால்
அழிவற வுலகிலாடு மறுமுகன் வதன மொன்றில்
குழவிய தென்ன வன்ன குன்றிடைத் தோன்றி னுனல்"
— கந்தபுராணம், திருவிளையாட்டுப் படலம். 39.

"தொண்டினர் சிற்சில ருளத்தில் சடிலத்தோடு
தோன்றலு முண்டு"

*என்பராகலின் "பின்றூழ் சிகையும்" கூறினர்.*

"பிடர்கி டந்தபுன் குஞ்சியும்" — பழநித் தலபுராணம்.

*தண்டாயுதபாணி வடிவம் கூறியது இச் செய்யுள் என்க.*

*மூவிரு முகம் என்றது ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம், அதோமுகம் என்னும் ஆறுமாம்.*

"தொல்லைத் திருமுகம் ஆறுங் கொண்டான்" — கந்தபுராணம்.

*ஐசுவரியம், வீரியம், கீர்த்தி, சம்பத்து, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறு குணங்களும் ஆறுமுகமாம் எனக் கூறலுமாம். இவ் வாறு குணங்கட்கும் பகம் என்னும் பெயருண்மையின் பகவன் என்பதன் பொருள் அவ் வாறு குணங்களையும் உடையவன் என்பதாம். இப் பாடல் பொருட்டன்மை யணியாம். "மூவிரு மகவுரு" பிரதிபேதம்.*

12. ஆரணம் பரவ வந்தர முரச
மதிரவா னவர்புடை போற்றப்
பாரண முனிவர் கரஞ்சிர முகிழ்ப்ப
விஞ்சையர் பாவிசை மிழற்றக்
காரணங் கடந்த கதிரிலை நெடுவேற்
கடவுள்நின் றருளினன் கமலத்
தாரணி மார்பன் சரவண முனியித்
தனிப்பெருங் காட்சியுங் கண்டே.

**பொழிப்புரை :** வேதங்கள் புகழவும்; வானத்தில் தேவமுரசம் ஒலிக்கவும்; தேவர்கள் பக்கத்தில் நின்று துதிக்கவும்; உபவாச மிருந்து உண்ணுதலையுடைய முனிவர்கள் கைகளைச் சிரசின்மேற் குவிக்கவும்; வித்தியாதரர்கள் இசைப் பாடல்களைப் பாடவும்; மூலத்தைக் கடந்து நின்ற ஒளி விளங்குகின்ற இலைவடிவாகிய நீண்ட வேலைக்கையிற் கொண்ட முருகக்கடவுள் தோன்றி நின்றருளினன். இந்த ஒப்பற்ற பெருமையாகிய காட்சியைத் தாமரை மலர்மாலை யணிந்த மார்பையுடைய சரவண முனிவன் பார்த்து என்றவாறு.

**விளக்கவுரை :** *அந்தரமுரசம்–தேவதுந்துமி, பஞ்சதுந்துமி. பாரண முனிவர்–பலநாள் உபவாசமிருந்து உண்ணுதலையுடைய முனிவர்கள்.*

"நன்பகற் பலவுடன் கழிந்த வுண்டியர்"

— திருமுருகாற்றுப்படை.

*பாவிசை— இசைப்பாடல்கள்.*

"பைந்தொடி யாயின் னிசையின்பா"

"பாவோ டிணைத்த லிசையென்றூர்" — பஞ்சமரபு.

*முருகப்பெருமான் காரணமாகியும், காரணங்கடந்தவ ராகியும் விளங்குவராலின் ஈண்டு "காரணங் கடந்த கதிரிலை நெடுவேற் கடவுள்"—என்றூர். இவ்விரு தன்மையராய் விளங்குவரென்பதை.*

"மூல காரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தியன்றே"

"காரண மில்லா வள்ளல் கடிமணந் தாமுங் காண்பான்"

"மூல காரண மில்லதோர் பராபர முதல்வன்"

*எனவரும் கந்தபுராண வடிகளானு முணர்க.*

*அந்தணர்சாதிப்பூ தாமரை மலராகலின், "கமலத் தாரணி மார்பன் சரவண முனி"—என்றூர். "தாதார் முளரி மருமசர வணமா முனிவ"–என இந்நூல் புட்பகிரி மான்மியம் கூறுதலுங் காண்க. இத் தனிப்பெருங் காட்சியென்றது சிரகிரியிற் காட்டிய முருகனது தண்டாயுதபாணித் திருக்கோலக் காட்சியையாம் காட்சியும் என்பதிலுள்ள உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை.*

13. மூவிரு மூவா முதலே! சரணம்
முகில்வணன் மருகா! முருகா! சரணம்
கூவிய காலா யுதனே! சரணம்
குலவுகை வேலா யுதனே! சரணம்
மாவிரு கூருய் வகிர்வாய்! சரணம்
மலைமுனி குருவாய் வருவாய் சரணம்
தேவர்கள் சேனு பதியே! சரணம்
சிகரா சலனே! சரணம். சரணம்.

பொழிப்புரை : ஆறுவடிவமான அழிதலில்லாத முதற் பொருளாயுள்ளவனே! சரணம். இயற்கையழகை யுடையவனே! சரணம். கூவுகின்ற கோழிக் கொடியையுடையவனே! சரணம். கரத்தில் விளங்கு கின்ற வேலாயுதத்தை யுடையவனே! சரணம். சூரபன்மாவாகிய மாமரத்தை இரண்டு கூருய்ப் பிளந்தவனே! சரணம். சிகரகிரியில் வாழ்பவனே! சரணம் சரணம் என்றவாறு.

*விளக்கவுரை : இதுமுதல் ஐந்து கவிகள் நிறைமொழியாள ராகிய சரவண முனிவர் செய்த தோத்திரப் பாடல்கள். சரவணப் பொய்கையில் முதற்பொருளாகிய முருகப் பெருமான் கார்த்திகை மாதர் அறுவரின் பொருட்டு ஆறு வடிவங்களாய் விளங்கின ரென்னும் புராண வரலாற்றினை யுட்கொண்டு "மூவிரு மூவா முதலே சரணம்"-என்ருர். முருகப்பெருமான் என்றும் மூத்தலில்லாத இளமைத் தன்மையுடைய கடவுளாகலின் "மூவா முதலே"—என்ருர்.*

"என்றும் இளையாய் யழகியாய்"

"மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி"

— திருமுருகாற்றுப்படை.

"மறுவரும் ஆரலாகும் மாதர்மூ விருவர் தாமும்
நிறைதரு சரவணத்தின் நிமலனை யடைந்து போற்ற
உறுநர்கள் தமக்கு வேண்டிற் றுதவுவோன் ஆத லாலே
அறுமுக வொருவன் வேருய் அறுசிருர் உருவங் கொண்டான்"

— கந்தபுராணம். திருவவதாரம் 116.

*கார்த்திகை மாதரறுவரும் தாமுற்றிருந்த கருப்பத்தைச் சரவணப் பொய்கையிலுள்ள தாமரைப் பூம் பாயலில்*

குழந்தைகளாகப் பெற்றனர் என்னும் பரிபாடல் வரலாற்றினை யுட்கொண்டு கூறினுரெனினுமாம்.

"நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவரு ளொருவ னங்கை யேற்ப
அறுவர் பயந்த வாறமர் செல்வ"—முருகாறு.

மூவிருமுதலே மூவாமுதலே எனக்கூட்டிப் பொருள்கொள்க. முருகக் கடவுள் திருமாலின் தங்கையாகிய பார்வதிதேவியாரின் புதல்வராதலினுலும், முற்பிறவியில் திருமாலின் புதல்வியராய் அமுதவல்லி, சுந்தரவல்லி என்னும் பெயர்கொண்டு விளங்கித் தவம் புரிந்த தெய்வயானையாரையும், வள்ளியம்மையாரையும் மணந்தமையாலும் "முகில்வணன் மருகா" என்றனர்.

"குருந்து கைக்குந் திருமான் மருமான் கொங்கில்"
— திருச்செங்கோட்டுக் கோவை.

"வெய்யவா ரணம்போல் கைதானிரு பதுடையான்
றலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருக னுமையாள் பயந்த விலஞ்சியமே"
— கந்தரலங்காரம்.

கூவிய என்பதற்கு ஏனைய வொலிகளெல்லாம் அடங்கும்படியாகக் கூவின எனப் பொருளுரைத்தலுமாம்.

"ஆரண முழங்கொலி யமரர் வாழ்த்தொலி
சீரண இயவொலி சேனைப் பேரொலி
காரண மில்லவன் கடவு மாமயில்
வாரண வொலிகளான் மறைதலுற்றவே"
— கந்தபுராணம் தேவகாண்டம் 1—21.

காலாயுதம்—காலையாயுதமாகவுடைய கோழி.

"ஒருதொடையான் வெல்வது கோழி" — நான்மணிக்கடிகை.

காலாயுதன் — (சூரனது பிளவாகிய) கோழிக்கொடியை யுடையவன். முருகக் கடவுள் எப்பொழுதும் கரத்தில் வேலை வைத்திருப்பவராதலின் "குலவுகை வேலாயுதனே" —என்றுர். "வேலே விளங்கு கையான்"—என்பதுங்காண்க. மா வென்பது ஈண்டு மாமரம். முருகக் கடவுள்மாமரத்தைப் பிளந்தாரென்பது

வரலாறு. சூரனுகிய மாமரமும் அசுரர்கள் மந்திரங்கொண்டு சாதித்து வளர்த்த மாமரமுமாம். பிரமதேவனும் தெளிய அறியாத பிரணவ மந்திரப் பொருளை முருகக்கடவுள் அகத்திய னுக்கு உபதேசம் செய்தனர் என்னும் புராண வரலாற்றினை யுட்கொண்டு, " மலைமுனிகுருவாய் வருவாய் சரணம் " என்ருர்.

" அம்பு யாசனன் அறிகிலா வருமறை முதலைக்
கும்ப மாமுனிக் குதவியே மெய்யருள் கொடுத்த
எம்பிரான்.............. " — கந்தபுராணம். நகர்புகு படலம் 92.

அன்றியும் குன்றமெறிந்த முருகவேளிடம் முன்பு அகத்தியனுர் தமிழிலக்கணம் பயின்றனர் என்னும் பழைய வரலாற்றினை யுட்கொண்டு கூறினுரெனினுமாம்.

" வேங்கடம் வடக்கெல்லையாக உரைக்கப்பட்டதற்குக் காரணம்; அகத்தியருக்குத் தமிழருளிய முருகவேள் வரைப் பாதலாம் "—என்பது சிவஞான முனிவர் தொல்காப்பிய சூத்திர விருத்தி.

இந்திரன் மேருமலையில் முருகக் கடவுளை வணங்கித் துதித்துக் " கருணைக்கடலே! நீர் சூரபன்மன் முதலிய அசுர ரெல்லாரையும் கொன்று நானும் தேவர்களும் தொண்டு செய்யும்படி நீர் சுவர்க்கத்தை யரசாட்சி செய்ய வேண்டும் " என்று வேண்டினுன். முருகக் கடவுள் அதற்கு இசைந்து " இந்திரனே ! நீ நமக்குத் தந்த அரசை உனக்குத் தந்தேம். தேவர்களாகிய நீங்கள் சேனைகளாக, நாம் சேனுபதி யாகி, யசுரர்களெல்லாரையும் கொன்று உம்மைக் காப்போம் " என்றுசொல்லித் தேற்றினர். இந்திரனுடைய வேண்டுகோளின் படி தேவர்கள் சேனைகளாக முருகக் கடவுள் சேனுபதியாக விளங்கினர் என்பது புராணவரலாறு.

" ஆன காலை யமரர்கள் வாசவன்
ஞான நாயக நாங்கள் உனக்கொரு
தானை யாகுந் தலைவனை நீயெனு
வான நீத்தத்து மஞ்சன மாட்டினுர் "
— கந்தபுராணம். திருவிளையாட்டு 121.

" தானவர்கட் காற்றுது தன்னடைந்த நன்மைவிறல்
வானவர்கள் வேண்ட மயிலூருங் கோனவனைச்

சேனை பதியாகச் செம்பொன் முடிகவித்து
வானுள வைத்த வரம் போற்றி. ''

— 11-ஆம் திருமுறை, நக்கீரர், போற்றித் திருக்கலிவெண்பா.

'' சேனைத் தலைவர் செங்கோடை நாதர் ''

— திருச்செங்கோட்டுக் கோவை.

'' வானோர் வணங்குவில் தானைத் தலைவ ''

— திருமுருகாற்றுப்படை.

*முருகப் பெருமான், ஏனைய மலையிடங்களினும் மிகவும் விரும்பி நித்திய வாசம் செய்து அருள்புரியும் தலம் சிரகிரி யாதலின் '' சிரகிரி வாழ்வே! சரணம் '' என்றார். சரணம் என்பது பாதம், அடைக்கலம் என்னும் பொருளில் வருவது. ஈண்டு நின்பாதங்களுக்கு அடைக்கலம் என்னும் பொருளில் வந்தது. சரணம் என்னுஞ் சொல்லும் பொருளும் பின்னும் வரச் செய்யுள் செய்திருப்பதால் இச்செய்யுள் சொற்பொருட்பின் வருநிலையணியாம்.*

14. *முத்தா! முத்தித் துணைவா! சரணம்*
*முதிரா முலையுண் முருகா! சரணம்*
*அத்தா! வத்திக் கிறைவா! சரணம்*
*அமராபதி காவலனே சரணம்*
*சுத்தா சுத்தத் துறையாய் சரணம்*
*தோகா திபவே தியனே சரணம்*
*சித்தா! சித்திப் பொருளே சரணம்*
*சிகரா சலனே சரணம் சரணம்.*

**பொழிப்புரை :** முத்தியையுடையவனே! சரணம். ஆன்மாக்கள் முத்தியடைவதற்குத் துணையாயுள்ளவனே! சரணம். அறுவர் கார்த்திகை மாதர்களின் முதிராத இளமையாகிய முலைப்பாலை யுண்ட இளமையுடையவனே! சரணம். பரமபிதாவாயுள்ளவனே! சரணம். தெய்வயானைக்கு நாயகனே! சரணம். அமராபதி நகரைக் காப்பவனே! சரணம். தூய்மையுடையவனே! சரணம். சுத்த தத்துவத்தின் துறைகளையுடையவனே! சரணம். மயிலுக்குத் தலைவனே! சரணம். வேதங்களையுடையவனே! சரணம். சித்திகளையுடையவனே! சரணம். சித்திப் பொருளாயுள்ளவனே! சரணம். சிகரகிரியில் வாழ்பவனே! சரணம். என்றவாறு.

**விளக்கவுரை :** முருகக் கடவுள் முத்தியை யுடையவனுகியும் அதனைப் பெறுவதற்கு அடியார்களுக்குத் துணை செய்பவனுகியும் உள்ளவன் ஆதலின், "முத்தா! முத்தித் துணைவா!"—என்ருர்.

"முத்தனே முதல்வா" — திருவாசகம்.

"முத்தியை யுதவு நோன்ருள் மூவிரு முகத்தன்"
— கந்தபுராணம் சூரன் வதைப் படலம் 373.

"நினைக்குமவர் வீடுபெற வைத்தருள் உதாரக் காரன்"

"ஏழு பிறவிக்கடலை ஏறவிடு நற்கருணை யோடக் காரன்"
— திருவகுப்பு-4.

"ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்"
— கந்தபுராணம். திருவிளையாட்டு 19.

சரவணப் பொய்கையில் தாமரை மலரின்கண் ஆறு முகமுடைய ஒருவடிவாய்த் தோன்றிய முருகக் கடவுள் திருமால் முதலிய தேவர்களின் கட்டளையின்படி கார்த்திகைமாதர் முலைப் பாலூட்டி வளர்க்க வளர்ந்த காலையில் வேறு ஆறு சிறு குழந்தை களாய் உருக்கொண்டு அவர்கள் தரும் முலைப் பாலமுதத்தை யுண்டான் என்னும் புராண வரலாற்றினை யுட்கொண்டு, "முதிரா முலையுண் முருகா! சரணம்"—என்ருர்.

"ஆறுரு வாத லோடும் அறுவரும் மகிழ்ந்து வேறு
வேறுதா மெடுத்துத் தத்தம் வியத்தகு துணைமென் கொங்கை
ஊறுபா லமுத மன்னேற் குதவலு முறுவல் செய்து
மாறிலா அருளா லாற்ற வருந்தினன் போல வுண்டான்"
— கந்தபுராணம்-திருவவதாரம் 117.

"சரவணப் பூம்பள்ளி யறைத்தாய் மாரறுவர்
திருமுலைப் பாலுண்டான்" — சிலம்பு–குன்றக் குரவை-9.

அன்றியும் சிவபிரானும் உமையம்மையாரும் சரவணப் பொய்கைக்குச் சென்றிருந்த போது உமையம்மையார் தமது குழந்தைகள் ஆறினையும் கண்டு மகிழ்ந்து இரு கரங்களாலும் எடுத்துத் தழுவி ஆறுமுகமும் பன்னிரண்டு தோள்களுமுடைய ஓருருவமாகச் செய்து தன் கொங்கையிலூறிய பாலை யருத்தினள் என்னும் வரலாற்றினையுமுட்கொண்டு கூறினுரெனினுமாம்.

" ஆதி நாயகன் கருணையாய் அமலமாய்ப் பரம
போத நீரதா யிருந்ததன் கொங்கையிற் பொழிபால்
ஏதி லாததோர் குருமணி வள்ளமீ தேற்றுக்
காதல் மாமகற் கன்பினு லருத்தினள் கவுரி "
— கந்தபுராணம், சரவணப் படலம் 23.

அருணகிரிநாத சுவாமிகள் இவ்விரு வரலாற்றினையும் அமைத்துப் பாடிய அலங்காரச் செய்யுள் அறிந்து மகிழ்தற் குரியது.

" திருந்தப் புவனங்க ளீன்றபொற் பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டி லேறி யறுவர்கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் ரேதுங் குவலயமே "
— கந்தரலங்காரம்.

முருகக் கடவுள் உலகுயிரனைத்திற்கும் காரணனுகலின் அவனை " அத்தா " என்ருர். பிணிமுக மென்னும் ஊர்தியா கிய யானையை யுடையவன் முருகக் கடவுளாதலின் " அத்திக் கிறைவா " என்றுங் கூறினுரெனினுமாம். அமராபதி இந்திர னுடைய இராசதானி நகரம். அதனை " இந்திர கோநகர் " என்பர். அசுரர்களால் அழிவுருத வண்ணம் அதனைக் காப்பவன் முருகக் கடவுளாதலின் " அமராபதி காவலனே " என்ருர்.

" குமரா சரணஞ் சரணமென் றண்டர்குழாந் துதிக்கும்
அமரா பதியிற் பெருமாள் "

" கந்தா விளங்குமரா வமராபதி காவலனே " — கந்தரலங்காரம்.

" அமராபதியைக் காத்துத்தேவர் கடுஞ்சிறை விடுத்தாய் "
— கந்தர் சஷ்டிக் கவசம்.

சுத்தத்துறைவாய்—பிரதிபேதம். சுத்த தத்துவம்—சுத்த மாயா தத்துவங்கள். அவை சுத்த வித்தை, ஈசுரம், சாதாக் கியம், சத்தி, சிவம் என்னும் ஐந்துமாம்.

" சுத்ததத் துவங்க ளென்று முன்னமே சொன்ன வைந்தும் "
— சிவஞான சித்தியார்.

" பான்மையிற் றத்துவ மைந்தென்பர் சுத்தம் "
— தத்துவ விளக்கம் 24.

அசுத்தத் துறையா யெனப் பதம் பிரித்து (அசுத்தத்தை) அசுத்த தத்துவங்களைச் சேராதவனே யெனப் பொருளுரைத்தலு மாம். அசுத்த மாயா தத்துவங்களவான — பூதங்கள் 5; புலன்கள் 5; ஞானேந்திரியங்கள் 5; கன்மேந்திரியங்கள் 5; அந்தக்கரணங்கள் 4. இவை ஆன்ம தத்துவமெனவும் பெயர் பெறும். சுத்தா சுத்தம் என்பதை ஒரு தொடராகக் கொண்டு சுத்தமு மசுத்தமுமாகிய வித்தியா தத்துவங்களெனினுமாம். அவை காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை என்னும் ஏழுமாம். இவை மிசிர தத்துவம் எனப் பெயர்பெறும்.

தோகா என்னும் ஆகாரவீற்று வடமொழிப் பெயர் தமிழில் தோகையென வழங்கப் பெறும். தோகை யென்பது சினையாகு பெயராய் மயிலுக்குப் பெயராயிற்று. தோகா வென்பதை உவமையாகு பெயராகக் கொண்டு வள்ளி அல்லது தெய்வ யானைக்குப் பெயராக வுரைத்தலுமாம். தோகாதிபன், வடமொழிப் புணர்ச்சி தீர்க்க சந்தி.

சித்தி எண் வகைப்படும். அவை அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பனவாம். அவை அட்டமா சித்தியெனப் பெயர் பெறும். முருகன் எண்வகைச் சித்திகளை யுடையவனுதலின் அவனுக்குச் சித்தன் என்பது பெயர். முருகனுகிய சித்தன் வாழ்தலின் பழனிக்குச் “ சித்தன் வாழ்வு ” எனப்பெயருண்டாயிற்றென்பர்.

“சித்தன் வாழ்வில் லந்தொறு மூன்றெரி யுடைத்து” — பழம்பாடல்,

அடியார்களுக்குச் சித்திக்கும் பொருளாயுள்ளவனெனினுமாம்.

“ செங்கே ழடுத்த சினவடி வேலுந் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளஞ் செறியுஞ் செங்கோடைக் குமரனென
வெங்கே நினைப்பினு மங்கேவந் தென்மு னெதிர்நிற்பனே ”

— கந்தரலங்காரம்.

சிந்தித்ததைத் தருபவன் எனினுமாம்.

“ இகமொடு பரமும் வீடு மேத்தினர்க் குலப் புறுமல்
அகனம ரருளால் நல்கு மறுமுகத் தவற்கு ” — கந்தபுராணம்.

15. உருவா யருவாய் வருவாய் சரணம்
ஒருவா ஒருவாய் வருவாய் சரணம்

தருவாய் புரியே தருவாய் சரணம்
தருணு கருணு கரனே! சரணம்

மருமா லிகைசேர் மருமா! சரணம்
மயிலாய் அயிலாய் வருவாய் சரணம்

திருமால் மருகா! முருகா! சரணம்
சிகரா சலனே! சரணம் சரணம்.

**பொழிப்புரை:** அடியார்களுக்கு அருளுதலின் பொருட்டு உருவமாகியும்; அருவமாகியும் வருபவனே! சரணம். ஒப்பற்றவனே! சரணம். எல்லா உயிர்களிடத்தும் நீங்காதவனே! சரணம். அடியார்களின் முன்னிலையில் வருபவனே! சரணம். ஐந்தருக்கள் பொருந்திய அமராவதி நகரத்தைத் தருபவனே! சரணம். அடியார்களுக்கு அருள் செய்யும் தருணத்தை யறிந்தவனே! சரணம். அருளுக்கு இருப்பிடமானவனே! சரணம். மணம் பொருந்திய கடப்பம்பூ மாலை யணிந்த மார்புடையவனே! சரணம். மயிலையுடையவனுகியும் வேலையுடையவனுகியும் வருகின்றவனே! சரணம். விட்டுணுவின் மருமகனுயுள்ளவனே! சரணம். முருகனே! சரணம். சிகரகிரியில் வாழ்பவனே! சரணம் சரணம் என்றவாறு.

**விளக்கவுரை:** முருகன் கொள்ளும் மூவகைத் திருமேனிகள் அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூன்றும். அவற்றுள் அருவமாவது வடிவமில்லாதது. அருவுருவமாவது வடிவமற்றும் வடிவமுற்றும் விளங்குவது. உருவமாவது வடிவமுடையது. இம் மூன்றனுள் முருகன் உருவமாகியும் அருவமாகியும் வருவான் என்ருர். அருவுருவம் உபலட்சணத்தாற் கொள்க.

'' அருவு மாகுவன் வுருவமு மாகுவன் அருவும்
உருவு மில்லதோர் தன்மையு மாகுவன் ஊழின்
கரும மாகுவன் நிமித்தமு மாகுவன் கண்டாய்
பரம னுடலை யாவரே பகர்ந்திடற் பாலார் ''

'' அருவமு முருவமாகி யநாதியாய்ப் பலவா யொன்ருய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகிக்
கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
யொருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலக முய்ய ''

— கந்தபுராணம்.

அடியார்களுக்கு இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றை யும் தருபவன் முருகன். அவன் தன்னடியார்களுக்குச் சுவர்க்க மாகிய மறுமைப் பயன் அருளுதலை நோக்கித் "தருவாய் புரியே" என்றார். "தருவாய்" என்பதற்கு வள்ளி யம்மையின் பொருட்டு வேங்கை மரமானவனே என்றும்; விரும்பியதையே தருவாய் என்றும் பொருளுரைத்தலுமாம்.

தருணன் என்னும் பெயர்ச்சொல் விளிவேற்றுமையேற்றுத் "தருணா" வென வாயிற்று. தருணம் என்னும் பெயர்ச் சொல்லினடியாகப் பிறந்த பெயர் தருணன் என்பது. தருணம்—சமயம், இளமை என்னும் பொருளில் வருவது.

கருணாகரன் — கருணைக்கிருப்பிடமா யுள்ளவன். வட மொழித் தொடர், தீர்க்க சந்தி. கிருபாகரன் என்றாற் போல்வது.

"இருள்படப் பொதுளிய பராரை மராஅத்
துருள்பூந் தண்டார் புரளு மார்பினன்"

என முருகன் மார்பிலணியும் மாலை கடம்பின் பூமாலை யெனக் கூறப்படுதலானும்; அது மண மிக்கதாகலினாலும்; மார்பிலணி யும் போகத்திற்குரிய பூமாலை யாதலினாலும் "மருமா லிகைசேர் மருமா!" என்பதற்குக் கடம்ப மலர் மாலை யணிந்த மார்பை யுடையவனே! யென்று பொருளுரைக்கப் பட்டது. மருமாலிகை என்பதற்கு "மருவு" என்னும் வாசனைப் பூண்டினாற் றொடுத்த மாலை யெனினுமாம்.

முருகன் அடியார்களுக்கு அருள் செய்ய வரும்பொழுது வேலும் மயிலும் விளங்க வந்தருளுவனாகலின் "மயிலா யயி லாய் வருவாய்" என்றார். முருகனுடைய படை, ஊர்தி ஆகி யவைகளில் வேலும் மயிலுமே அடியார்களுக்குப் பயந் தீர்க்க வருவனவாகலின் அதனை யுட்கொண்டு கூறினாரெனினுமாம்.

வேலும் மயிலும் துணை என்பது உலக வழக்காகலானும்

"பயந்ததனி; வழிக்குத்துணை வடிவேலுஞ் செங்கோடன்
மயூரமுமே" — என்றும்,

"மரணப்ரதாப நமக்கில்லை யாமென்றும் வாய்த்ததுணை
கிரணக்க லாபியும் வேலுமுண்டே"

என்றும் அருணகிரியார் கூறுதலானும் அறிக.

16. *மகநான் மறைகால் வெளியே சரணம்*
*மறையா கமநூ லிறைவா! சரணம்*
*துகிர்வார் சடையார் சுதனே! சரணம்*
*சுடர்வேல் வரையூ டெறிவாய் சரணம்*
*முகிலார் குழன்மா மகுணு! சரணம்*
*முருகார் முதுநூன் முறையே! சரணம்*
*சிகிவா கனனே! சரணஞ் சரணம்*
*சிகரா சலனே! சரணம் சரணம்.*

*பொழிப்புரை :* வேள்வியாகவும், வேள்வியில் ஓதப்பெறும் நான்கு வேதங்களாகவும்; வேதங்களிற் சொல்லப்பெறும் காற்றுகவும்; ஆகாயமாக வும் விளங்குகின்றவனே! சரணம். வேத நூல்களுக்கும், ஆகம நூல் களுக்கும் தலைவனுயுள்ளவனே! சரணம். பவளம் போலச் சிவப்பாகிய நீண்ட சடையினையுடைய சிவபிரானது குமாரனே! சரணம். ஒளி பொருந்திய வேலாயுதத்தைக் கிரவுஞ்ச கிரியில் எறிபவனே! சரணம். மேகம் போன்ற கருநிறம் பொருந்திய கூந்தலையுடைய வள்ளிநாச்சியாரின் கணவனே! சரணம். அழகு பொருந்திய பழமையாகிய வேதாகம நூல்களின் கிரமமாயுள்ளவனே சரணம். மயில்வாகனத்தை யுடையவனே! சரணம் சரணம். சிகரகிரியை யுடையவனே! சரணம் சரணம்.

*விளக்கவுரை : கடவுள் வேள்வியாகவும், வேதமாகவும், வேதங்களிற் சொல்லப்படும் ஆகாயம் முதலிய பூதங்களாகவும், விளங்குகின்றுன் என்பது நூற் கொள்கையாதலின், "மகநான் மறைகால் வெளியே" — என்றுர்.*

"வேத வேள்வியை விண்ணவர் தலைவனை"
"வேதமும் நீயே வேள்வியும் நீயே"

"விண்முதற் பூதம் ஐந்தவை நீயே" — பெருந்தேவபாணி.

"நால்வகை வேதமும் ஐவகைப் பூதமும் ............
பத்தின் வகையும் ஆகிய பரமனை"

— கோபப்பிரசாதம்.

*இறைவன் ஆதியில் உயிர்களின் பொருட்டாக அருளிச் செய்த முதனூல்கள் வேதமும் சிவாகமங்களுமாதலின், "மறையாகம நூலிறைவா" — என்றுர்.*

"வேதமோ டாகம மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவும் சிறப்புமென் றுன்னுக
நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே" — திருமந்திரம்.

"நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த அருந்தவத் தோற்கே" — புறநானூறு 1.

*எனச் சடையாற் பெயர்பெற்ற கடவுள் சிவபிரானுகலின் அவர், "துகிர்வார் சடையார்" — எனப்பெற்ருர். அவரது சடை பவளம்போற் சிவந்ததென்பதனைக் கீழ்வரும் பாடலடிகளானுணர்க.*

"பவள வனமடர் பல்சடைக் காட்டினர்"
— மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ்.

"பவளமே மகுடம் பவளமே திருவாய் பவளமே திருவுடம்பு"
— கருவூர்த்தேவர் திருவிசைப்பா.

"செந்நீர் வளர்சடைத் திங்கட் பிளவொடு கங்கைவைத்த
முந்நீர்ப் பவளத் திரட்செக்க ரொக்கு முதலவனே"
— 11-ஆம் திருமுறை திருமும்மணிக்கோவை.

*முருகக் கடவுள் தாரகனையும் அவனுக்குரிய கிரவுஞ்சமலையையும் வேலைவிட்டுப் பிளந்து அம்மலையினுள் மயங்கிக் கிடந்த வீரவாகு முதலிய வீரர்கள் எல்லோரையும் மயக்கம் நீங்கியெழச் செய்தனரென்னும் கந்தபுராண வரலாற்றினை யுட்கொண்டு, "சுடர்வேல் வரையூ டெறிவாய்"— என்ருர்.*

"தாரகனு மாயத் தடங்கிரியுந் தூளாக
வீர வடிவேல் விடுத்தோனே" — கந்தர் கலிவெண்பா.

"வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றங் கொன்ற குன்ருக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ"
— திருமுருகாற்றுப்படை.

"வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
குருகுபெயர்க் குன்றங் கொன்ற நெடுவேலே"
— சிலம்பு குன்றக்குரவை.

முருகன் பழமையாகிய வேதாகமங்களில் முறையாகச் சொல்லப்படும் பழம்பொருளாயுள்ளவனாதலின், " முதுநூன் முறையே "— என்றார்.

"வேதாகம சித்ர வேலாயுதன்"—என்பது கந்தரலங்காரம். வேதநூலின் முறை; வேதாந்தம். ஆகம நூல்முறை; சித்தாந்தம். இவ்விரு முறைகளிலும் போற்றப் படுபவன் முருகன் என்க.

" போதாந்தப் புண்ணியர்கள் போற்றிசய போற்றியென்னும்
வேதாந்த வீட்டில் விளக்கே பராபரமே "

" முத்தாந்த வீதி முளரிதொழு மன்பருக்குச்
சித்தாந்த வீதிவருந் தேவே பராபரமே "
— தாயுமானவர் பராபரக் கண்ணி.

முகிலார் குழல் என்பதற்குத் தெய்வயானையார் எனப் பொருளுரைத்தலுமாம். முருகன் மயில், யானை, தகர் என்னும் மூவகை யூர்திகளுடையவனாயினும் அவன் மிகுதியும் விரும்பி யேறுவது மயிலாகலின்; அவனைச் " சிகிவாகனனே " என்றார்.

" நீலச் சிகண்டியி லேறும்பிரா னெந்த நேரத்திலும்
கோலக் குறத்தியுடன் வருவான் " — கந்தரலங்காரம்.

" நீலப் பறவைமேல் நேரிழை தன்னோடும்
ஆலமர் செல்வன் புதல்வன் வரும் " — சிலம்பு குன்றக்குரவை.

" செய்யோய் மயிலேறிய சேவகனே "

" மன்னே மயிலேறிய வானவனே " — கந்தரனுபூதி.

17. கந்தா ! வுயர்சம் பந்தா ! சரணம்
கலையாய் ! சிவமா மலையாய் ! சரணம்
மந்தா கினிதன் மைந்தா ! சரணம்
மஞ்சார் குழலாள் மைந்தா ! சரணம்
நந்தா தெழுமா னந்தா ! சரணம்
நாமா துறைபன் னுமா சரணம்
சிந்தா மணியாய் வந்தாய் சரணம்
சிகரா சலனே ! சரணம் சரணம்.

பொழிப்புரை : பற்றுக் கோடாயுள்ளவனே ! சரணம். உயர்வாகிய ஞான சம்பந்தனே ! சரணம். நூல்களை யுணர்ந்தவனே ! சரணம். பெருமை பொருந்திய சிவமலையை யுடையவனே ! சரணம். கங்கையி னுடைய புத்திரனே ! சரணம். மேகம்போன்ற கூந்தலையுடைய பார்வதி தேவியின் மைந்தனே ! சரணம். கெடுதலில்லாமல் மேலு மேலும் பெருகு கின்ற பரமானந்தத்தையுடையவனே ! சரணம். கலைமகளிடம் உறைகின்ற பலவாகிய பெயர்களையுடையவனே ! சரணம். சிந்தித்ததைத் தருகின்ற சிந்தாமணியாய் வந்தவனே ! சரணம். சரணம் என்றவாறு.

விளக்கவுரை : *கந்தன்—ஆறு வடிவங்களாயிருந்து ஒன்றுகத் திரண்டவன் என்பர். "சேயவன் வடிவமாறுந் திரட்டி நீ யொன்றுய்ச் செய்தாய், ஆதலி னுலேகந்த னுமெனு நாமம் பெற்றுன்" என்பது கந்தபுராணம். மற்றும் கந்தன் என்பதற்குப் பற்றுக்கோடாயுள்ளவன்; மணங்கமழுந் திருமேனியன்; கந்தில் உறைபவன் எனப் பொருளுரைத்தலுமாம். முருகக் கடவுளின் அமிசமாகத் தோன்றியவர் ஞானசம்பந்தர் என்பராகலின் அவரை "உயர் சம்பந்தா" — என்ருர்.*

"........................ தவறிலாம லாளப்பிறந்த
தமிழ்செய் மாறன் கூன்வெப் பொடன்று
தவிரவால வாயிற் சிறந்த — பெருமாளே" — திருப்புகழ்.

"பைந்தமிழ்ச் சம்பந்த ராகிச் சமணர்களைப்
பறித்து நிலைகொண்ட முருகா !"
— சென்னிமலைப் பிள்ளைத்தமிழ் முத்தப் பருவம்.

"காமனை வேதனைச் சார்சம ணுரைக் கழுவிலிட்டோய்
காமனை வேதனை செய்யும்வெஞ் சூரர்தங் காதகனே"
— சென்னிமலையமகவந்தாதி.

"பொய்வழிச் சமணப் புலையிரு ணீக்கிச்
சைவம் வளர்க்கும் சம்பந்த மூர்த்தி"
— திருச்செந்தூர் அகவல்.

*முருகன் தென்கலை வடகலைகளை யுணர்ந்த புலமையுடை யோனுகலின் அவனைக் "கலையாய்"— என்ருர்.*

"செந்தமிழ் வடாதுகலை சேர்ந்துமி யுலாவும்
சங்கத் தவர்க்குள் தலையாந் தமிழ்ப்புலவன்" — கந்தபுராணம்.

" கலையுணர் புலவன் கார்த்தி கேயன் " — திருச்செந்தூரகவல்.

" மாலை மார்ப நூலறி புலவ "

" பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே " — திருமுருகாற்றுப்படை.

" சங்கத் தமிழின் தலைவா! புலவா! "
— முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்.

*என்பன ஈண்டறிதற்குரியனவாம். அன்றியும் தலைச் சங்கத்தில் தேனூற்றெடுப்பச் செழுந்தமிழ் பகர்ந்தோர் நானூற்று நாற்பத் தொன்பதின்மரென்பர். அவருள் குன்றமெறிந்த முருக வேளும் ஒருவராகக் கூறுவர்.*

" அவருள் தலைச்சங்க மிருந்தார் ............
குன்றமெறிந்த முருகவேளும்.........என இத் தொடக்கத்தார் "

*என இறையனுர் களவியலுரை கூறுதலும் அறிதற்குரியதாம்.*

*சென்னிமலையை யடுத்து அதனையொப்ப முருகனுக்கினிய தாய்க் காங்கேய நாட்டில் சிறந்து விளங்கும் மலை சிவமலை யாதலின் " சிவமா மலையாய் " என்றுர்.*

" இன்ன தன்மைய வாகிய வெழிற்சிவ மலையின்
அன்ன வாகனன் மாதவ ரருமறை பரவும்
சென்னி யாறுடைத் தேசிக னினிதுவீற் றிருப்பான்
அன்ன வெற்பினுக் கிணையெழு புவனத்து மரிதால் "
— சிவமலைப் புராணம்.

*பழநி மலையைச் சிவகிரியெனத் தலபுராணங் கூறுதலின் அதனைச் சிவமலையெனக் கூறினுரோ வெனின்; பழநிமலையைச் சிவமலையெனக் கூறும் வழக்கின்மையின் அதனை மறுத்துரைக்க.*

*முருகக் கடவுள் கங்கையினுல் சரவணப் பொய்கையில் விட்டு வளர்க்கப்பெற்றவராகலின்; "மந்தாகினிதன் மைந்தா " எனப்பெற்றுர்.*

" மந்தா கினிதந்த வரோதயனே " — கந்தரனுபூதி.

*மெல்ல வளைந்து செல்லும் நதி கங்கையாகலின் அதற்கு மந்தாகினி யென்னும் பெயருண்டாயிற்று.*

*சிவசக்தியின் குமாரனுகலின் முருகனை, " மஞ்சார் குழலாள் மைந்தா "— என்றுர்.*

"பார்வதீ நந்தனாய நம"  — அஷ்டோத்ர சத நாமாவளி.

"ஒருவரைப் பங்கி லுடையாள் குமாரன்"  — கந்தரலங்காரம்.

"கங்கை யுமைமைந்த நம"  — கந்தபுராணம்.

*முருகன் மேலு மேலும் பெருகும் ஆனந்த வடிவுடையவனாகலின் அவனை "நந்தா தெழுமானந்தா" — என்றார். முருகன் தன்னை நினைப்போருக்கு மேலு மேலும் பெருகு மானந்தத்தைத் தருபவனாதலின் அங்ஙனம் கூறினாரெனினுமாம்.*

"ஓங்கும் பரைக்குள் உள்ளொளி யாகித்
தேங்கு மானந்தச் சுடரொளி கண்டேன்"
— திருச்செந்தூர் அகவல்.

"பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல் காக்கின்ற பேதைகொங்கை
விரும்புங் குமரனை மெய்யன்பி னால்மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் தனிப்பர மானந்தந் தித்தித் தறிந்தவன்றே
கரும்பும் புளித்துச் செந்தேனும் புளித்தறக் கைத்ததுவே"
— கந்தரலங்காரம் 6.

"பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கு மமுதுகண் டேன்செயல் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மானந்த சாகரத்தே" — கந்தரலங்காரம்.

*ஆயிர நாமத்தையன் முருகனாதலில் அவனைப் 'பன்னமா' என்றார். ஒன்றின் மேற்பட்டது பலவாம். பெயர் வினை இடையுரி யென்னும் நால்வகைச் சொற்களுக் கிடமாயுள்ளவள். கலை மகளாகலின் "நாமாதுறை பன்னமா" என்றார். நாமம்–பெயர்.*

"பெருந்திரு வுஞ்சய மங்கையு மாகியென் பேதைநெஞ்சில்
இருந்திடுஞ் செஞ்சொல் வஞ்சியை"  — சரசுவதியந்தாதி.

"சொல்லின் கிழத்தி மெல்லியள்"  — தண்டியலங்காரம்.

*நாமாது—பிரமனது நாவில் வீற்றிருப்பவள்.*

"மேவுங் கலைகள் விதிப்பா ளிடம்விதி யின்முதிய, நாவும்"
— சரசுவதியந்தாதி-9.

*உயிர்களின் நாவில் வீற்றிருப்பவள் எனக்கூறுதலுமுண்டு.*

"பல்லுயிர், நாவுதொறிருந்திடு நலங்கொள்வாணிதன்"
— கந்தபுராணம்.

*அடியார்கள் நாவில் வீற்றிருப்பவள் எனினுமாம்.*

"ஞான வாணிவந் திருந்தனள் அன்பர்தம் நாவில்"
— திருவிளையாடற்புராணம்.

"போற்றிசெய்த வாதவூர்ப் பொறுமையோகி
நாவிருக்குங் கலைமகளே யலங்காரத்தை
நடத்தினுள் குவலயா னந்தமென்றே"
— குவலயானந்தம் சிறப்புப்பாயிரம்.

*தன்னடியார்கள் சிந்தித்த பொருளைச் சிந்தித்தபடியே தந்தருள்தலின் முருகனைச், "சிந்தாமணியாய் வந்தாய்" — என்றார்.*

"*சீ*ரணி சிந்தாமணி — ஊரன் நினைத்தது கொடுத்தலின்
*சீ*ரையுடைய நல்ல சிந்தாமணியோ டொக்கும்"
— திருச்சிற்றம்பலக்கோவை–400 சேனாவரையருரை.

"கல்வனைச் செய்யவருட்; சிந்தாமணி வரக்காணேம்
பயோதரச் செல்வினமே" — கல்வளையந்தாதி.

"சித்திக்குச் சிந்தாமணி புலவோர்கட்குத் தெள்ளமுதம்"
— சிவகிரிச் சண்முக மாலை.

*சிந்தாமணி — இந்திரனால் அணியப்படுவது.*

"அணிவது சிந்தாமணி சூளாமணி" — பிங்கலம் 175.

*சிந்தித்ததைத் தருதலின் முருகன் சிந்தாமணியாகின்றான்.*

*முருகன் சிந்தாமணியாய் வந்த வேறு வரலாறு உண்டெனின் வந்தவழிக் கண்டுகொள்க.*

*விந்தமலையில் தேவர்கள் எடுத்த கோவிலில் அவர்கள் விரும்பிய படியே முருகக் கடவுள் வல்லி சமேதராய் விளங்கும் கல்யாணக் கோலமுடையவராய்த் தோன்றியபொழுது இலக்குமி தேவி முதலாயினோர் செய்த தோத்திரத்தில் முருகன் சிந்தாமணி யெனப் போற்றப்படுகின்றான்.*

" சிந்தா மணியே தெய்வத் தருவே
கொந்தார் தருவிற் குலவுங் கொடியே
யந்தா மரைகங் கெனுமா நிதியே
நந்தா வொளியே நறையே யமுதே
மாவின் குயிலே மருதின் கிளியே
காவின் மயிலே கானப் புறவே
பூவின் னனமே புறவின் பிணையென்
றேவின் விழியா ரினிதேத் தினரால் "

— சுப்பிரமணிய பராக்கிரமம் 397-ஆம் பக்கம்.

*சரவண முனிவன் " சிகரா சலனே சரணம் சரணம் " என்னும் மகுடம் வைத்துப் பஞ்சரத்நமாகப் பாடிய 13 முதல் 17 வரையிலுமுள்ள பாடல்கள் ஐந்தும், " சரவண பஞ்சகம் " — எனப் பெயர் பெறும். நாமாதுரை என்பது பிரதிபேதம்.*

" ஐந்தரு, சுரபி, சிந்தாமணி, இரவலர் கற்பகம், கவிஞர்க்கொரு புயல் என வருவன ஈகையினுற் றிரிபுபெற்ற உயர்திணைக் காரணச் சிறப்புப்பெயராம் " — என்பர் குவலயானந்த உரைகாரர்.

(வேறு)

18. சரணெனத் தாழ்ந்தி ரண்டு
சரணமா மலரும் போற்றி
யரணெனக் கினிமே லுன்ற
னரணலாற் பிறிதொன் றுண்டோ ?
கிரணவேற் கரனே ! யுன்றன்
கிளர்திருப் பணியா னுற்றக்
கரணமோர் வழித்தாய் நிற்பக்
கடைக்கணி யளித்தி யென்றுன்.

**பொழிப்புரை :** ஒளி பொருந்திய வேலைக் கையிலுடைய முருகப் பெருமானே ! நீயே எனக்குப் புகலிடமென்று இரண்டாகிய பெருமை பொருந்திய திருவடி மலர்களையும் வணங்கித் துதித்து நின்று இனிமேல் எனக்குப் பாதுகாவலாவது உன்னுடைய பாதுகாவலன்றி வேறொரு பாதுகாவலுண்டோ? நீ வீற்றிருந்து விளங்குதற்குரிய ஆலயத்திருப் பணியை நான் செய்தலின்பொருட்டு என்னுடைய மனம் முதலிய அந்தக் கரணங்கள் ஒருவழிப்பட்டு நிற்கும்படியாக உன்னுடைய கடைக்கண் பார்வையைச் செய்தருள்வாய் என்று வேண்டினுன் என்றவாறு.

**விளக்கவுரை :** *முருகன் ஒளி பொருந்திய வேல் விளங்குகின்ற திருக்கரமுடையனுகலின், "கிரண வேற் கரனே" — யென்றும்; அவனைச் சரண் புகுதலினுஞ் சிறந்ததொன்றின்மையின், "சரணெனத் தாழ்ந்து" — என்றும்; சரணம் புகுதல் திருவடிகளிலாமாதலின், "சரணமா மலரும் போற்றி" —என்றும்; உன்னைச் சரண்புகுந்த எனக்கு உன்னையன்றிப் பாதுகாவலராயுள்ளோர் பிறரில்லை யென்பான், "இனிமேல் உன்றன் அரணலாற் பிறிதொன்றுண்டோ" — என்றும்; முருகனுக்குச் செய்யும் பணிகளில் ஆலயத் திருப்பணியே சிறந்ததாம் என்பான், "நின்றன் கிளர் திருப்பணி" என்றும்; தான் உடம்பெடுத்தலாற் பெறும் பயன் தான் முருகனுக்குக் கோவிலெடுப்பித்தலா மென்பான், "நின்றன் கிளர் திருப்பணி யானுற்ற" — வென்றும்; தான் அத்திருப்பணி செய்தற்குத் தன்னுடைய மனம், வாக்கு, காயங்களாகிய கரணங்களொன்றுபட்டிருந்தாலல்லது இயலாதாகலின், "கரணமோர் வழித்தாய் நிற்ப"—என்றும்; கரணங்கள் ஒருவழிப்படுதற்கும் அவனருள் செய்யவேண்டுமாகலின் "அருள்தி"–யென்றும்; அவ்வருளும் கண்ணுற் பார்த்தருள வேண்டுமாகலின், "கண்ணீ யளித்தி"–யென்றும்; அக் கண் பார்வையும் சிறிது செய்தாற் போது மென்பான், "கடைக்கணீ யளித்தி" — யென்றும் கூறினன். "கடைக்கணித்தருள்தி"– என்பது பிரதிபேதம்.*

*உயிர்கள் சரண்புகுதற்கிடமாவன முருகக் கடவுளின்திருவடிகளாமென்பதும்; சரண்புகுந்தாரைக்காப்பவன் முருகனையன்றிப் பிறரில்லை யாமென்பதும் முன்னிரண்டடிகளின் கருத்தாம்.*

"நலத்தகு கண்ணுதல் நாதற் சேர்ந்தனர்
கலத்தலை யகன்றிடாக் காகம் போலவே"

"செஞ்சரண் அடைந்தனம் தெரியின் நீயலால்
தஞ்சம துளதுகொல் எம்மைத் தாங்கவே"

*என்னும் கந்தபுராணப் பாடலடிகளை இப் பாடலுடன் ஒப்பிட்டு நோக்குக.*

*உடம்பெடுத்தலாற் பெறும் பயன் இறைவனை யறிந்து வழிபடுவதும்; அவன் விரும்பி யுறைதற்குரிய ஆலயத் திருப்பணி செய்தலுமாம் என்பர் ஆன்றோர்கள்.*

"உடம்பினாற் பெற்ற பயனாவ தெல்லாம்
திடம்பெறவே யீசனைநீ தேடு" — ஔவையார் குறள்.

'' மானிடப் பிறவிதானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்துமாடு மரன்பணிக் காக வன்றே
வானிடத் தவருமண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலுமூம ரொன்றையு முணரா ரந்தோ ''
— சிவஞான சித்தியார் 182.

'' எட்டுச் செங்கலி னுயினு மீர்ம்புனல் வேணி
வட்டச் சென்னியா னுலயத் திருப்பணி வகுத்தல்
ஒட்டிப் பெற்றவிவ் வுடற்பய னுவதென் றுணர்வீர்
அட்டுத் தீவினை யைந்தவித் தொழுகுமந் தணர்காள் ''
— காஞ்சிப் புராணம், சிவபுண்ணியப் படலம் 56.

*பணிகளிற் சிறந்தது ஆலயப் பணியாகலின் அதனைத் திருப்பணியென்ருர்.*

'' ஏற்றின் மேலவ னுலயத் திருப்பணி '' — காஞ்சிப் புராணம்.

19. மற்றவன் போற்ற வேட்ட
வரமெலா முதவி வைவேற்
கொற்றவன் சிகர மேருக்
குடிகொண்டு மறைந்து நின்ருன்
நற்றவன் விடைகொண் டந்த
நவிரம்விட் டொருவி மீண்டு
கற்றவன் புடையோர் வைகும்
கமலைமூ தூரில் வந்தான்.

**பொழிப்புரை :** மேலும் அச் சரவண முனிவன் துதிக்கவும் அவன் விரும்பிய வரங்களெல்லாவற்றையும் தந்து கூர்மையான வேல் வெற்றியை யுடைய முருகப் பெருமான் மேருசிகரமென்னும் சிகரகிரியில் வீற்றிருந்து மறைந்தருளினுன். நல்ல தவமுடைய சரவண முனிவன் முருகப் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு அந்தச் சிகரகிரியைவிட்டு நீங்கித் திரும்பவும் பல நூல்களையுங்கற்ற அன்புடைய அடியார்கள் வாழ்கின்ற கமலையென்னும்(திருவிருந்தபுரம்)பழமையாகிய ஊரின்கண்வந்தான் என்றவாறு.

**விளக்கவுரை :** *சரவண முனிவன் உண்மையன்புடைய அடியவனுதலின் முருகக் கடவுள் அவன் விரும்பிய வரங்களெல்லாவற்றையும் அவன் விரும்பியபடியே உதவினன் என்க.*

தெய்வம் கொடுப்பதை வரம் என்றும் மக்கள் கொடுப்பதைக் கொடை என்றும் கூறுவர். சென்னிமலை, மேருமலையின் சிகங்கரளிலொன்ருகலின் அதனைச் "சிகர மேரு" என்ருர். திருவிருந்தபுரத்தில் வாழ்ந்தோர் நல்ல நூல்கள் பலவற்றைக் கற்றவறிவுடையராகவும் உயிர்களிடத்தில் அன்புடையோராகவும் திகழ்ந்தமையின் அவர்களைக் "கற்றவன் புடையோர்" என்ருர்.

கமலை யென்பது திருவிருந்தபுரம். அது பிடாரியூர் என வழங்குகின்றது. நான்கு யுகங் கண்ட பழமையான ஊராதலின் அதனைக் "கமலை மூதூர்" என்ருர். நவிரம்—மலை.

**20.** **பதியது புகுங்கா லத்தப்**
**பதியுறை முதியோர் யாரும்**
**எதிரெதிர் வணங்கி யேத்தி**
**யிடையிடை தழீஇத் தழீஇக்கொண்**
**டதிசயம் விளைய நோக்கி**
**யகன்மனைக் கொடுபோய் வேண்டும்**
**புதுவிருந் தளித்து வேருேர்**
**பூந்தவி சிருத்திப் போற்றி.**

**பொழிப்புரை :** சரவண முனிவன் அத்திருவிருந்தபுரத்திற்கு வந்த காலத்தில் அவ்வூரில் வாழ்கின்ற அறிவின் முதிர்ந்த பெரியோர்கள் யாவரும் அம்முனிவனது எதிர் சென்று முன்னுற வணங்கிப் புகழ்ந்து இடையிடையே தழுவிக்கொண்டு அதிசயமுண்டாகும்படி பார்த்துத் தமது அகன்ற இல்லத்தின்கண் அழைத்துக் கொண்டு போய்ப் புதுமையாகிய உணவினைப் படைத்து உண்ணச் செய்து; பின்பு வேருெரு அழகாகிய ஆசனத்தில் அமரச் செய்து புகழுரை கூறி என்றவாறு.

**விளக்கவுரை :** தழீஇ — தழுவி. சொல்லிசையளபெடை. தழீஇத் தழீஇ என்னும் அடுக்குத் தொடர் அவ்வூரவரின் மகிழ்ச்சி மிகுதியை யுணர்த்திற்று. சரவண முனிவர் சிறந்த அடியவராதலினுலும்; அவரிடத்துச் சிரகிரி மான்மியம் கேட்க விரும்பினராதலினுலும் திருவிருந்தபுரம் வாழ் அறிஞர்கள் அவரைத் தம் மில்லத்தின் கண் அழைத்துச் சென்று புது விருந்தளித்துப் பூந்தவி சேற்றிப் போற்றினர். தவிசு — ஆசனம். பூ—அழகு. கீழ்வரும் பாடல்களை இப் பாடலுடன் ஒப்பு நோக்குக.

" ஆர மென்புபு னைந்த ஐயர்தம் அன்ப ரென்பதோர் தன்மையால்
நேர வந்தவர் யாவ ராயினும் நித்த மாகிய பத்திமுன்
கூர வந்தெதிர் கொண்டு கைகள்கு வித்து நின்றுசெ விப்புலம்
ஈர மென்மது ரப்பதம்பரி வெய்த முன்னுரை செய்தபின் "

" கொண்டு வந்து மனைப்புகுந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலி னாதனத்திடை வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்திலாறு சுவைத்திறத்தி னிலட்டபின்
அண்டர் நாயகர் தொண்ட ரிச்சையில் அமுதுசெய்ய
அளித்துளார் "

— பெரியபுராணம்—இளையான்குடி மாறர்-3-4.

" ஓங்கு சீர்த்திருக் காதை யுரைக்குநர்
தாங்கு பீடிகை யின்றித் தரையிரார் " - பிரமோத்தர காண்டம்.

21. *மாமறை முனியி ரெங்கள்*
*மரபினி லுதித்து நீபத்*
**தேமலர் மிலைந்த வேற்சேய்**
*திருவருள் பெற்று யர்ந்தீர்*
**யாமுனம் புரித வப்பே**
*றீதுநீ ரெமக்கு நன்றாய்க்*
**காமரு** *சிகர வெற்பின்*
**கதையெலா** *முணர்த்து மென்றார்.*

**பொழிப்புரை :** பெருமையாகிய வேதங்களையுணர்ந்த சரவண முனிவரே! நீர் எங்களுடைய வமிசத்தில் பிறந்து தேன் பொருந்திய கடப்பம் பூமாலை யணிந்த வேற்படையை யுடைய முருகக் கடவுளின் திருவருளைப் பெற்று உயர்ந்தவராயினீர். இவ்வாறு நீர் உயர்வு பெற்ற தற்குக் காரணம் நாங்கள் முற்பிறப்பிற் செய்த தவத்தின் பயனாகும். நீர் எங்களுக்கு அழகாகிய சிகரகிரியினைப் பற்றிய கதைகள் (சரிதம்) எல்லாவற்றையும் அறிவித்தருள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள் என்றவாறு.

**விளக்கவுரை :** *சரவண முனிவர் இல்லறம் துறந்த துறவின ராதலின் அவரை "மாமறை முனியீர்" என்றனர். அவர் முருகப் பெருமான் திருவருள் பெற்றுயர்ந்தது தம் மரபின ரெல்லோருக்கும் சிறந்த புகழ் புண்ணியங்களைத் தருவதா மாதலின் "யாமுனம் புரிதவப் பேறீது" என்றும்; சரவண*

முனிவர் முன்பு தம்மிடம் கூறியபடியே காஞ்சிபுரத்திற் சென்று சிகரகிரி மான்மியமறிந்து வந்தனரென்பதை யறிந்தனராகலின் "நீ ரெமக்கு நன்ருய்க் காமரு சிகர வெற்பின் கதையெலா முணர்த்தும்" என்றும் கூறினரென்க. ஈண்டுச் செய்யும் என்னும் வினைமுற்று முன்னிலையிலும் வருதல் காண்க. முருகக் கடவுளின் திருவருட் பொலிவுடன் இயற்கைக் காட்சியும் நிறைந்து விரும்பத்தகுந்த வளமுடைய அழகாகிய மலையாகலின் சிகரகிரியை "காமரு சிகரவெற்பு" என்ருர்.

காமர்—அழகு, விருப்பம். முன்னைத் தவம் பயன்றரு மென்பது "யாமுனம் புரிதவப் பேறீது" என்றதனுல் விளங்கும்.

"தவமுயன்ற, முன்னைப்பய னல்லவோ விருந்தாய்வந்து
முன்னின்றதே." — திருச்செங்கோட்டுக் கோவை 386.

"......................................நகர்நீயான்
வலஞ்செய்து வணங்கவெளி வந்தவிது முந்தென்
குலஞ்செய் தவமென்றினிது கூறமுனிகூறும்"
— கம்பராமாயணம்–கையடைப் படலம்-6.

22. அவரவர் மனங்க ளிப்ப
வாயிடைக் கதைகள் முற்றுந்
தவலருஞ் சிறப்பி னேடுந்
தடைபடா தருளிப் பின்னர்
அவிர்கதி ரிலைச்செவ் வேலர்க்
காலயம் வகுத்து மென்னச்
சிவவிர தியர்கள் யாருஞ்
சிந்தையி லுவகை பூத்தார்.

பொழிப்புரை: அப்பொழுது சரவண முனிவர் அங்குள்ள மறைய வர்களுடைய மனம் மகிழ்வெய்துமாறு சிரகிரியின் சரிதங்கள் முழுவதையும் தடங்கலுண்டாகாமற் சொல்லியருளிப் பின்னர் நாம் ஒளி விளங்குகின்ற இலைவடிவமான சிவந்த வேற் படையை யேந்திய சிரகிரி முருகக் கடவுளுக்குக் கோவிலெடுப்போம் என்று சொல்லவும் சிவத்தை வழிபடும் நியமமுடைய அந்தணர்களெல்லோரும் மனதில் மகிழ்ச்சி கொண்டார்கள் என்றவாறு.

**விளக்கவுரை :** *சரவணமுனிவர் திருவிருந்தபுரத்துச் சைவ வேதியர்களுக்குச் சிகரகிரியின் வரலாறு கூறி ஆலயமெடுக்கத் தொடங்கியது கூறியதிச் செய்யுள். திருவிருந்தபுரத்துச் சபையின் கணிருந்தோர் பலதிறத்தினராகலின் அவரை "அவரவர்" என்றும்; சொல்லுவோன் கேட்போருடைய தரமறிந்து அவர் விரும்பும்படி சொல்லவேண்டுமாகலின் "மனங் களிப்ப" வென்றும்; நியமமாகக் குறித்த இடத்திற் சொல்லவேண்டுமாகலின் "ஆயிடை" என்றும்; சொல்லும் வரலாற்றினைக் குறைவுறச் சொல்லலாகாதாதலின் "கதைகள் முற்றும்" என்றும்; சொற் சுவையும், பொருட் சுவையும் பொருந்த ஏதுவும் மேற்கோள்களுமாகிய சிறப்பமையச் சொல்ல வேண்டுமாகலின் "தவலருஞ் சிறப்பினேடும்" என்றும்; இடையில் விடாது ஆற்றொழுக்குப் போலத் தொடர்புறச் சொல்ல வேண்டுமாகலின் "தடைபடாதருளி" என்றும்; சிரகிரியின் வரலாற்றினையுணர்ந்ததற்குப் பயன் கூறவேண்டுமாகலின் "ஆலயம் வகுத்தும்" என்றும் கூறினர்.*

"ஒருமையிற் பன்மையும் பன்மையி னொருமையும்
ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே"

*—என்பது நன்னூல் விதியாகலின் வகுத்தும் எனப் பன்மையிற் கூறினர்.*

*சரவணமுனிவர் ஆலயம் வகுப்பேம் எனக் கூறியது ஆங்குள்ள சிவமறையோரனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சி தருவதாயிருந்தமையால் அவர்கள் சிந்தையிலுவகை பூத்தார் என்றார்.*

*சென்னிமலையில் திருக்கோயில் எடுப்பித்தவனும் பிரதிட்டை, பூசை, விழா முதலிய செய்தவனும் சரவண முனிவனே என்பது இந் நூலால் நன்கு விளங்குவதாகும். சிகரகிரி முருகன் காட்சி கண்டு தோத்திரம் செய்த சரவண முனிவன் "கிரண வேற் கரனேயுன்றன் கிளர்திருப் பணியானுற்றக் கரணமோர் வழித்தாய் நிற்பக் கடைக்கணீ யருள்வாய்" என்று வரம் வேண்டிப் பெற்றமையாலும்; அடுத்துவரும் ஆலயங்கண்ட மான்மியத்தில், நன் முகூர்த்தமொன்றில் சரவண முனிவன் மயனையழைத்துச் சிரகிரிச் சேய்க்குக் "கோமகன் புரியென" கோவிலெடுக்க வென்று "காமரு சிறப்பெலாங் கடிதினுற்றினன்" என்றும்; "வேறுபல் கோவிலும் வியப்பச் செய்தனன்" என்றும்; கூறுதலாலும் ஆலயம் எடுப்பித்தவன் சரவண முனிவன் என்பது தெளிவாம்.*

கோவிலில் பிரதிட்டை, பூசை, விழா முதலிய செய்தவனும் சரவண முனிவனேயென்பது ஆலயங் கண்ட மான்மியம் 7, 8, 9 முதலிய செய்யுட்களானறியப்படும். ஆலயம் என்பது கடவுள் வீற்றிருந்தருள் செய்யுமிடமாம். ஆலயத்தில் கடவுளுடைய திருமேனியைக்கண்டு வாழ்த்தியும் வணங்கியும் வழிபடுவோர்க்குக் கடவுள் அவர்வேண்டிய இம்மை, மறுமை, வீடு என்னும் மும்மைப் பயன்களையும் தந்தருளுவர்.

"திருக்கோவி லுள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே"
— சிவஞான சித்தியார்.

ஆலயம், அண்டாலயம், பிண்டாலயம், மானதாலயம், பிரதிட்டாலயம் என நான்கு வகைப்படும். அவற்றுள் ஈண்டுக் கூறியது பிரதிட்டாலயமாம். பிரதிட்டாலயமாவது கருப்பக் கிரகம், கோபுரம், மண்டபம், கொடிக்கம்பம், திருமதில், முதலியன அமையச் சிவாகம முறையில் செய்யப்படுவதாம்.

காட்சி மான்மியம் முற்றும்.

ஆகத்திருவிருத்தம்–181.

# 6. ஆலயங் கண்ட மான்மியம்.

1. சீலிய சிரகிரிச் சேய்க்குச் செம்பொனற்
கோலிய வாலயங் குறித்தளந் தறீஇ
வாலிய நூலுணர் மயனைக் கூவியே
யேலுறு முகூர்த்தமொன் றின்று நன்றென.

**பொழிப்புரை :** அழகுடைய சென்னிமலையில் வீற்றிருக்கும் சிவந்த நிறமுடைய முருகக் கடவுளுக்குச் சிவந்த பொன்னினால் கோவில் எடுப்பதற்குக் கருதித் தூய்மையாகிய சிற்ப நூலை நுட்பமாகவுணர்ந்த சிற்பியை யழைத்து இன்று பொருத்தமாகிய சுப முகூர்த்தமொன்று நன்றாக அமைந்துள்ளதென்று ஆலயம் எடுத்தற்குரிய நிலத்தின்அளவினை யளந்தறிந்து என்றவாறு.

**விளக்கவுரை :** *சேய்—செந்நிறமுடைய முருகக் கடவுள்.*

"எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்" — முருகாறு.

*கல்லால் ஆலயம் எடுத்தலினும் பொன்னால் எடுத்தல் சிறந்ததாகலின், "செம்பொனல் ஆலயம் கோலிட"வென்றார். சரவண முனிவன் சோதிட நூலும் சிற்ப நூலும் கற்றறிந்தவனாதலின் தானே நன்னாளறிதலும் ஆலயமமைக்கும் இடமளத்தலும் செய்தான் என்க. ஆலயந் தொடங்கும் நாள் நன்னாளாயிருத்தல் வேண்டுமாகலின் "ஏலுறு முகூர்த்த மொன்றின்று நன்றென" வென்றான்.*

"சாதனத் தோடு தச்சர் தம்மையு மனத்தாற் றேடி
நாதனுக் கால யஞ்செய் நலம்பெறு நன்னாட் கொண்டே
ஆதரித் தாக மத்தா லடிநிலை பாரித் தன்பாற்
காதலிற் கங்குற் போதுங் கண்படா தெடுக்க லுற்றார்"

— திருத்தொண்டர் புராணம் – பூசலார் 6.

*சீலிய—சீலம் என்னும் பண்பினடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். கோலிய—கோலுதற்கு, எதிர்கால வினையெச்சம். வாலிய—வாலிமை என்னும் பண்பினடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். அறீஇ—அறிந்து. சொல்லிசை யளபெடை. மயனைக் கூவி யளந்தறியச் செய்து எனப் பிறவினையாக்கிக் கோடலுமாம்.*

*ஆலயவளவு — தலைமையான மூர்த்தியின் உயர முதலிய அளவிற் கேற்ப ஆலய முதலியவற்றின் அளவு அமைந்திருத்தல் வேண்டும். முருகக் கடவுளின் கோயில்கள் மூன்று முழம் முதல் முந்நூறு முழம் வரை பரப்புடையதாக அமைந்திருக்க வேண்டு மென்றும்; அவ்வமைப்பு அம்ச கோணம், கெச கோணம் என்னும் அமைப்பில் அமைந்திருக்க வேண்டு மென்றும் உத்தரகாமிகம் என்னும் ஆகமம் கூறும்.*

**2. மாமணிக் குப்பையு மாடை யீட்டமும்**
**தாமதற் கேற்பன சமைப்ப நல்கியே**
**கோமகன் புரியெனக் குயிற்று கென்றுநற்**
**காமரு சிறப்பெலாங் கடிதி னுற்றினன்.**

*பொழிப்புரை :* பெரிய இரத்தினக் குவியல்களும், பொன்னின் குவியல்களும் ஆகிய ஏற்புடைய பொருள்களை (தான்) ஆலயமெடுத்தற்குக் கொடுத்து இந்திரனுடைய இராசதானி நகரம் போன்ற நகரமொன்றும் செய்கவென்று விரும்பத் தகுந்த நல்ல சிறந்த பொருள்கள் எல்லாவற்றையும் மிகுதியாகக் கொடுத்தான் என்றவாறு.

*விளக்கவுரை : அதற்கு என்னும் சுட்டுப் பெயர் ஆலயத்தைச் சுட்டி நின்றது. ஆலயமெடுத்தற்குரிய பொருள்கள் பல வற்றிலும் மணியும், பொன்னும் சிறந்தனவாதல் பற்றி "மாமணிக் குப்பையு மாடை யீட்டமும்" என்றார்.*

"ஈட்டு கின்றதம் பொருள்வரு வாயினுக் கிசைய
ஊட்ட ருஞ்சுடர் டிணிகளில் கனகத்தி னெட்பங்
காட்டு தாதுவில் வெள்ளியிற் சுதையினிற் கனலின்
வாட்டு செங்கலின் மரத்தினின் மண்ணினி னுதல்"

"துளங்கு வெண்டிரைக் கருங்கடற் சுடர்விடம் பருகிக்
களங்க றுத்தவ னுலயங் காண்டக வெடுப்பர்"

— காஞ்சிப் புராணம் சிவபுண்ணியப் படலம் 50.—52.

*கோமகன்புரி — அமராவதி நகரம். குயிற்றுக வென்பற்கு நகரம் என்னும் செயப்படுபொருள் வருவித்துரைத்துக் கொள்க. மேல் வரும் 11-ஆம் செய்யுளில் "நகர மொன்றிணைப் பொலன் கெழு நகரெனப் பொலியச் செய்தபின்" என வருதலான்.*

சிறப்பு—சிறப்பாகிய பொருள்கள். ஆகுபெயர். காமரு சிறப்பு என்பதற்கு மயன் விரும்புகின்ற சிறந்த வரிசைகள் எனினுமாம். அதற்கேற்ப ஆற்றினன் என்பதற்குச் செய்தான் எனப் பொருளுரைத்துக் கொள்க. சரவண முனிவன் கோவிலெடுப்பதற்கு மாமணிக் குப்பையும் மாடை யீட்டமும் நல்கி நகரமெடுப்பதற்கு ஏற்ற சிறப்பாகிய பொருள்களெல்லாவற்றையும் கொடுத்தான் என்க. ஆற்றினன் என்பது கொடுத்தான் என்னும் பொருளில் வந்தது. மாடை—பொன். சரவண முனிவன் ‘‘மயனைக் கூவி ஏற்பன சமைப்ப நல்கிக் குயிற்றுகவென்று சிறப்பெலாங் கடிதி னாற்றினன்’’ என்றமையால், ஆலயம் எடுப்பதற்கும், நகரமெடுப்பதற்கும் ஏவுதற் கருத்தாவா யிருந்தவன் சரவண முனிவனென்றும் இயற்றுதற் கருத்தாவாயிருந்தவன் மயன் என்றும் அறிதல் வேண்டும்.

3. சரவண மாமுனி தருஞ்சி றப்பொடுங்
குரவணி வோர்குநற் குமரகோட் டம்போல்
இரவம ரிரியுமா றிமைப்ப வேறுவச்
சிரவண நகரம்போற் செய்ய லுற்றனன்.

**பொழிப்புரை :** பெருமையுடைய சரவண முனிவன் தந்த சிறந்த பொருள்களைக் கொண்டு குரவ மலர் மாலை யணிந்த முருகக் கடவுளுக்கு அழகாகிய குமர கோட்டம் போன்ற கோவிலை இரவிலுள்ள இருளானது ஓடும்படி பிரகாசிக்கச் செய்து அதனின் வேருக வச்சிராயுதந் தரித்த தேவேந்திரனுடைய அமராவதி நகரம் போன்ற நகரத்தையும் செய்தற்குத் தொடங்கினன் என்றவாறு.

**விளக்கவுரை :** குமரகோட்டம் — காஞ்சிபுரத்திலுள்ள முருகன் கோவில்.

‘‘குருகோட்டும் பெடைமணந்த குமரகோட் டத்தடிகள்’’
— காஞ்சிப் புராணம்.

‘‘கோவில்கொண் டருளின் வைகுங் குமரகோட் டத்து மேயோன்’’
— கந்தபுராணம்.

குமரகோட்டம் சிகரகிரி முருகன் கோவிலுக்கு உவமை. வச்சிர வணல் நகரம்—அமராவதி நகரம். இது சிகரகிரியை யடுத்துச் செய்த நகரத்திற்கு உவமை. கோவில், நகரம் என்னும் உவமே

யங்கள் அவாய் நிலையான் வருவித்துரைக்கப்பட்டன. இடத்திற் கேற்ப ஒரு சொல்லேனும் பல சொல்லேனும் வருவித்துரைத்தலை இசையெச்சமென்பர் இலக்கண நூலார்.

> ''பெயர்வினை யும்மை சொற்பிரிப்பென வொழியிசை
> எதிர்மறை யிசையெனுஞ் சொல்லொழி பொன்பதும்
> குறிப்புந் தத்த மெச்சங் கொள்ளும்'' — நன்னூல், பொதுவியல்.

கவிஞன் தான் சொல்லக் கருதிய உவமேயத்தினைக் கூறாமல் அதனைப் புலப்படுத்தும் உவமானத்தை மட்டும் கூறுதல் ஒட்டணி யென்பர் அணியிலக்கண நூலார். செய்யலுற்றனன் என்னும் பயனிலைக்கு எழுவாய் இயற்றுதற் கருத்தாவாகிய மயன் என்னும் தச்சன்.

4. கெர்ப்பவன் கிரகமும் கிரண மாமணிப்
பொற்பமர் சிகரமும் பொலன்பொ னற்புரி
விற்பொலி யத்தமண் டபமு மேலையோர்
நிற்பமா மண்டப நியமமும் செய்தபின்.

பொழிப்புரை : வலிமையாகிய கருப்பக் கிரகமும், ஒளி பொருந்திய இரத்தினங்கள் பதித்த அழகாகிய கோபுரமும் அழகிய பொன்னால் செய்த ஒளி விளங்குகின்ற அருத்த மண்டபமும் மேலிடத்தில் வாழும் தேவர்கள் நிற்பதற்குரிய மகா மண்டபமாகிய தேவ கோட்டமும் செய்த பின்பு என்றவாறு.

விளக்கவுரை : மூர்த்தி யிருக்கு மிடம் மூலஸ்தான மாகிய கருப்பக் கிரகம். அது மிகவும் வலிமையுடையதாயிருக்க வேண்டுமாகலின் ''கெர்ப்பவன் கிரகமும்'' என்றார்.

சிகரம்—கருப்பக் கிரகத்தின் மேற்கோபுரம். வில்—ஒளி. அத்த மண்டபம்—கருப்பக் கிரகத்தை யடுத்துள்ள மண்டபம். மண்டப நியமம் — மண்டபமாகிய நியமம். இருபெயரொட்டு நியமம்—கோட்டம். ''செய்ததே'' பிரதிபேதம்.

5. முத்தவெண் ணகையினர் முயலு நாடக
நிர்த்தமா மண்டப நிரைத்த மூவிரண்
டுய்த்தது ணைத்தம்பொ னேங்கு மண்டபம்
வைத்திடு திருநடை மாளி கைப்புறம்.

பொழிப்புரை : முத்துப் போன்ற வெண்மையாகிய ஒளி பொருந்திய புன்சிரிப்பினையுடைய நாடக மாதர்கள் முயன்று நடனமாடுதற்குரிய பெரிய நிருத்த மண்டபமும் தாங்குகின்ற ஆறு தூண்களையுடைய அழகிய உயர்ந்த மண்டபமும், அழகிய சுற்றுப்பிரகார நடைகளில் அமைக்கப்பெற்ற வெளி மாளிகைகளும் என்றவாறு.

விளக்கவுரை : தாளவொத்திற் கியைய நடிப்பது நாடகமாம். நாடகம், நிருத்தம் என்பன ஒரு பொருட் சொற்கள். சிறப்பாகக் கோவிலில் நாடகம் நடித்தற்குரியவர் மகளிராதலின் "முத்தவெண் ணகையினர் முயலு நாடகம்" என்றார். நிருத்த மாடுதற்குரிய மண்டபம் நிருத்த மண்டபம்.

தூணத்து—அத்துசாரியை. பொன்—பொன்னாற் செய்த எனினுமாம். பொன்—அழகு, பொன். "மூவிரண்டு தூணத்து மண்டப" மென்றது அறுகாற் பீட மண்டபமாம். "வைத்திடு திருநடை மாளிகைப் புறம்" என்றதற்கு வைக்கப்பெற்ற வாயிற் கடவுகளையுடைய வெளி மாளிகை யெனினுமாம். இப் பாடலில் மூன்று எண்ணும்மைகள் தொக்கு வந்தன.

6\. நூறுதூ ணத்துமண் டபமு நூற்றுப்பத்
தேறுதூ ணத்துமண் டபமு மிஞ்சியும்
கூறுநாற் கோபுரக் கோட்டி வாயிலும்
வேறுபல் கோயிலும் வியப்பச் செய்தனன்.

பொழிப்புரை : நூறு தூண்களையுடைய நூற்றுக்கால் மண்டபமும் ஆயிரந் தூண்களேறப்பெற்ற ஆயிரக்கால் மண்டபமும் மதிலும் சொல்லப் படுகின்ற நாற்றிசைக் கோபுரங்களும் கோபுர வாயில்களும் வேறுபலவாகிய கோயில்களும் கண்டோர் அதிசயிக்கும் படியாகச் செய்தனன் என்றவாறு.

விளக்கவுரை : இஞ்சி — மதில்.

"அரைம ணிஞ்சி நாற்கொடி நுடங்கும்" — புறம் 341.

"இஞ்சியே மதிலேயல்ல மிலங்குதோற் பலகைக் கும்பேர்"
— அரும்பொருள் விளக்கம்-113.

"இஞ்சியே புரிசை யிஞ்சி" — சூடாமணி.

நாற்கோபுரக் கோட்டிவாயில் என்பதற்கு நான்கு கோபுர வாயில்களும் எனப் பொருளுரைத்தலுமாம். கோட்டிவாயில்—கோபுரவாயில். வேறுபல் கோவிலும் என்றது கருப்பக் கிரகத்தைச் சூழ்ந்துள்ள பரிவாரங்களின் கோவில்களையாம். அவை மயில் அல்லது யானை, சாஸ்தா, பிரமன், சப்தமாதர்கள், சேட்டாதேவி, துர்க்கை, சந்திரன், சூரியன் என்னும் எட்டுப் பரிவாரங்களின் கோவில்களாம். இவற்றின்மேல் பனிரண்டு, பதினாறு, முப்பத்திரண்டு என்னும் அளவில் பரிவாரங்கள் அமைத்தலும் உண்டு. அன்றியும் வேறுபல் கோவிலும் என்றது அத்தலத்திற்குரிய விக்கினேசுவரர் முதல் ஸ்கந்த சண்டர் என்னும் சண்டிகேசுவரர் ஈருகவுள்ளவர்களின் கோவில்களாம் எனக் கூறுதலுமாம்.

7\. சிகரமா மணிமிளிர் சினக ரத்தினைச்
சகமகிழ் சதுமறைத் தலைவன் கண்ணுற்றி
யகனமர்ந் தடல்மயி லண்ண லுக்கிது
மிகவுகந் ததுவென வுவகை மீக்கொளா.

**பொழிப்புரை :** கோபுரத்தில் பெரிய இரத்தினங்கள் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற கோவிலை, உலகத்தார் மகிழ்கின்ற நான்கு வேதங்களையும் கற்றுவல்ல சரவண முனிவன் கண்களால் உற்றுநோக்கி, மனதில் மிகவும் விருப்பமுற்று வலிமை பொருந்திய மயில் வாகனத்தையுடைய முருகப் பெருமானுக்கு இக்கோவில் மிகவும் உவப்பானதாகுமென்று மகிழ்ச்சி மிகுதியைக் கொண்டு என்றவாறு.

**விளக்கவுரை :** சினகரம்—கோவில். சரவண முனிவன் சிற்பாகமங்களும் அறிந்தவனாதலின் கோவிலைக் கண்ணுற்று அதன்கண் கோவிலுக்குரிய இலக்கணமும் பொலிவும் நிறைந்திருந்தமையால், “அகனமர்ந் தடல்மயி லண்ண லுக்கிது மிகவுகந் ததுவென வுவகை மீக்கொளா”–வென்றான். கொளா வென்னும் இறந்தகால வினையெச்சம் அடுத்தபாட்டில் வரும் ஓர்ந்துழி என்னும் வினையெச்சங்கொள்ள நிற்றலால் இப்பாடல் குளகமாம். சரவண முனிவன் இது நூலாகலின் தன்னைப் பிறன் போற் கூறுங் கூற்றுகச் “சதுமறைத் தலைவன்”—எனப் படர்க்கையிற் கூறினான்.

8\. உண்ணெகிழ்ந் திருகரங் கூப்பி யோர்ந்துழி
யண்ணலங் கதிரிலை யடலயிற் செவ்வேள்

**விண்ணவர் புடையிடை வியந்து போற்றிட**
**நண்ணியொன் சினகர நாப்ப ணெய்தினன்.**

**பொழிப்புரை :** அன்பினுல் மனம் நெகிழ்ந்து இரண்டு கைகளையும் சிரமேற்குவித்து முருகக் கடவுள் இவ்வாலயத்தில் விரும்பி யெழுந்தருள வேண்டும் என்று ஒருமுகமாக மனதில் சிந்தித்தபொழுது தலைமையும் அழகும் ஒளியும் வலிமையும் அமைந்த வேலையேந்திய சிவந்த நிறமுடைய முருகக் கடவுளானவர் தேவர்கள் பக்கத்திற் சூழ்ந்து அதிசயமுற்றுத் துதிக்கும்படியாகச் சென்று அழகாகிய ஆலயத்தின் நடுவிலமைந்த பீடத்தை யடைந்தான் என்றவாறு.

*விளக்கவுரை : உள்–மனம். நண்மை–அழகு. நாப்பண்–நடுவில். உவகையினுலும் அன்பினுலும் உள்ளம் நெகிழ்ந்து என்க. ஓர்ந்துழி என்பது சரவண முனிவன் முருகக் கடவுள் இக்கோவிலில் எழுந்தருள வேண்டுமென்று சிந்தித்ததை யுணர்த்தியது.*

*அன்பனுகிய சரவண முனிவன் சிந்தித்தபடியே செவ்வேளானவன் கோவிலின் நடுவில் எழுந்தருளினுன் என்பது, "செவ்வேள்......நாப்பணெய்தினுன்" என்பதால் விளங்கும். அடியார்கள் விரும்பித் துதிக்கும் இடங்களில் முருகன் விரும்பி யெழுந்தருளுவன் என்பது*

> "ஆர்வலரேத்த மேவரு நிலையினும்............உறைதலும்"
> என்னும் திருமுருகாற்றுப்படையடியாலும்

*அதற்குக் கவிப்பெருமாள் என்னும் உரையாசிரியரெழுதிய*

> "தன்மேல் அன்புகொண்ட அடியார்கள் துதிக்கத்தான் விரும்பி வீற்றிருக்கின்ற விடத்திலும்............உறைதற்குரியவன்"
> என்னும் உரைப்பகுதியாலும் விளங்கும்.

9. **பேரொளி யாகவே பிறங்கு மெந்தையை**
**யோரொளி மனத்தினி லுவந்து போற்றினன்**
**நீரொளி மலர்பிற நிகழ்ந்த வாற்றினுற்**
**சீரொளி பெறவருச் சனைகள் செய்தனன்.**

**பொழிப்புரை :** பெரிய ஒளிவடிவமாக விளங்குகின்ற எங்கள் தந்தையாகிய முருகக் கடவுளை ஒப்பற்ற ஞானவொளி நிறைந்த மனதில் மகிழ்ந்து துதித்தனன். பின்பு பூசைக்கு வேண்டிய சலம், விளக்கு, மலர்,

தூப முதலிய பிற பொருள்கள் ஆகியவற்றைக் கொண்டு விளங்குகின்ற ஆகம முறையால் சிறப்பும் விளக்கமும் பொருந்தப் பூசை செய்தான் என்றவாறு.

விளக்கவுரை : *போற்றினன்—வழிபட்டான் எனினுமாம்.*

''போற்றலே வணங்க லோம்பல்''- அரும்பொருள் விளக்கம் 661.

''போற்றலே புகழ்த லோம்பல்'' — சூடாமணி.

*எந்தை யென்றதனால் நூலாசிரியருக்கு முருகக் கடவுள் பாலுள்ள அன்பு விளங்குவதாகும். அருச்சனைகள்—பூசைகள். மந்திரங்கொண்டு மலர் தூவி வழிபடுதல் அருச்சனை யென்பர். அருச்சனைக்கு வேண்டிய பொருள்களில் நீரும் விளக்கும் மலரும் ஆகிய மூன்று பொருள்களைக் குறித்தார். மற்றும் அருச்சனைக்கு வேண்டிய அமுதமும் தூபமுமாதியவற்றைப் பிறவும் என்பதனால் அறியவைத்தார்.*

குறிப்பு:— *காஞ்சிபுரம் சென்று செப்பேடு கண்டு சிரகிரியின் வரலாற்று மகிமையறிந்த சரவண முனிவனே சென்னிமலை மேற் சென்று முருகக் கடவுளின் அறுமுக வுருவக் காட்சியும் ஒருமுகவுருவக் காட்சியும் கண்டு துதித்து அவனருள் பெற்றுச் சென்னிமலைமேற் கோயிலெடுப்பித்து முருகக்கடவுளைப் பிரதிட்டை செய்து வழிபட்டவன் என்பது இதுகாறும் கூறியவற்றால் விளங்குவதாம். இம் மான்மியத்தின் 10 முதல் 18 வரையிலுமுள்ள செய்யுட்கள் சரவண முனிவன் வள்ளி தெய்வயானையாருக்குத் தனியாகக் கோவிலெடுப்பித்துப் பிரதிட்டை செய்து வழிபட்டதும் சிகரகிரியை யடுத்து நகரமுண்டாக்கியதும்; அந்நகரத்தில் கைலாசநாதர் ஆலயம் எடுப்பித்ததும்; ஓவிய மண்டபம் அமைத்து அதில் வள்ளி தெய்வயானையாருடன் முருகனைப் பிரதிட்டை செய்ததும்; தேருண்டாக்கி விழாவியற்றியதும்; பின்னர்ச் சிலகாலத்தில் முத்தியெய்தியதுமாகிய செய்திகள் கூறுவனவாம்.*

*10.* **ஒருபெருங் கோயிலு ளும்பர் கோமகன்**
**திருமக ளாய்வருந் தேவ குஞ்சரி**
**மருமலர் வார்குழல் வள்ளி நாயகி**
**யிருவர்கள் தம்மையும் இச்சித் தேற்றினன்.**

பொழிப்புரை : மற்றொரு பெரிய கோயிலினுள்ளே தேவர்களுக்கு அரசனாகிய இந்திரனுடைய சிறந்த மகளாய் வளர்ந்த தெய்வயானையும், மணம் பொருந்திய மலர்களை யணிந்துள்ள நீண்ட கூந்தலையுடைய வள்ளி நாயகியும் ஆகிய இரண்டு பெருந்தேவியர்களையும் விரும்பி எழுந்தருளச் செய்தான் என்றவாறு.

விளக்கவுரை : *சிகரகிரிக் கோவிலின்கண் முருகக் கடவுள் திருக்கரத்தில் தண்டேந்திக் கோவணந்தரித்த பிரமசாரிக் கோலத்தில் வீற்றிருப்பதால் முருக சக்திகளாகிய வள்ளி தெய்வ யானையாரை அவர் பக்கத்தில் பிரதிட்டை செய்யாமல் வேறொரு தனிப்பெருங் கோவிலமைத்துப் பிரதிட்டை செய்தான் சரவண முனிவன்.*

## தெய்வயானையார் வள்ளியம்மையார் வரலாறு.

*முன்பு திருமாலின் புதல்வியர்களாய் விளங்கிய அமுத வல்லி சுந்தரவல்லி என்னும் இருவரும் முருகக் கடவுளை மணம் செய்துகொள்ள விரும்பிச் சரவணப் பொய்கைக்கரையில் முருகக் கடவுளை நோக்கித் தவம் செய்துகொண்டிருந்தனர். முருகக் கடவுள் அவர்முன் தோன்றி அமுதவல்லியை இந்திரன் மகளா கவும்; சுந்தரவல்லியைச் சிவமுனிவன் மகளாய் உதித்து வேடர் மகளாகவும் வளருமாறு கட்டளையிட்டுப் பின்பு உங்களை மணம் செய்து கொள்ளுவோம் என்றனர். பின்பு அமுதவல்லி இந்திர னிடம் சென்று என்னை உன் மகளாக வளர்க்கக் கடவாய் என்றனள். இந்திரன் மகிழ்ந்து ஏற்று அமுதவல்லியைத் தெய்வத்தன்மை பொருந்திய தன் ஐராவதம் என்னும் யானை யினிடம் கொடுத்து வளர்க்கச் செய்தனன். இந்திரன் தன் மகளாக ஏற்றமையின் இந்திரன் திருமகள் என்றும்; ஐராவத யானையால் வளர்க்கப்பட்டமையால் தெய்வயானை யென்றும் அமுதவல்லிக்குப் பெயருண்டாயிற்று.*

*சுந்தரவல்லி பூமியில் தொண்டை நாட்டிலுள்ள வள்ளி மலைச் சார்பில் தவம் புரிந்துகொண்டிருந்த சிவமுனிவன் புதல்வி யாய் மான் வயிற்றிற் பிறந்து காட்டில் வள்ளிக் கிழங்கு தோண் டிய குழியில் குழவியாய்க் கிடந்தனள். பின்பு அங்கு வந்த வேடர் தலைவனாகிய நம்பிராசன் எடுத்து வந்து அக் குழவிக்கு வள்ளி யென்னும் பெயர் வைத்து மனைவியின் கையில் கொடுத்து அன்புற வளர்த்தனன். அம் மகளிரிருவரும் மணப்பருவம்*

எய்தினர். பின்பு முருகக் கடவுள் தெய்வயானையாரைத் திருப்பரங்குன்றத்தில் கற்பு முறையாகவும்; வள்ளியம்மையாரைக் களவு முறையாகவும் திருமணம் செய்து கொண்டனர். தெய்வயானையாரும் வள்ளியம்மையாரும் முறையே முருகக் கடவுளின் ஞான சக்தியாகவும், இச்சா சக்தியாகவும் விளங்குகின்றனர்.

> ''கல்லகங் குடைந்த செவ்வேற் கந்தனோர் தருவதாகி
> வல்லியர் கிரியைஞான வல்லியின் கிளையாய்ச் சூழப்
> பல்லுயிர்க் கருளைப்பூத்துப் பவநெறி காய்ந்திட் டன்பர்
> எல்லவர் தமக்குமுத்தி யிருங்கனி வழங்கு மன்றே''
>
> — கந்தபுராணம், வள்ளியம்மை திருமணப் படலம்-258.

11. தலம்புக ழவ்வரைச் சாரல் வாய்ச்சுரர்
வலம்புரி சுப்பிர மணிய தீர்த்தத்தின்
நலம்புனை யயன்மய னகர மொன்றினைப்
புலன்கெழு நகரெனப் புகலச் செய்தபின்

**பொழிப்புரை :** உலகினர் புகழ்கின்ற அந்தச் சிரகிரியின் சார்பில் தேவர்கள் வலமாகச் சுற்றுகின்ற அழகு பொருந்திய அயலிடம் (அருகில்) ஒன்றில் சிற்பியானவன் ஒரு நகரத்தைப் பொன்மயமாக விளங்குகின்ற அமராவதி நகரமென்று சொல்லும்படி செய்தனன் என்றவாறு.

**விளக்கவுரை :** இயற்கையான மலைவளமிகுந்து முருகப் பெருமான் திருவருளை உயிர்களுக்கு எளிதில் நல்குவதாய்ச் சென்றிருக்குந் திசையளவுஞ் சீர்த்தியுடையதாய் விளங்கலின் சிகரகிரியைத் "தலம் புகழவ் வரை"—என்றார்.

> ''உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீர்
> அலைவாய்................. ,,
>
> — திருமுருகாற்றுப்படை.

சாரல்வாய் என்பதற்கு வடசார்பில் எனப் பொருளுரைத்துக் கொள்க. சுப்பிரமணிய தீர்த்தம் விளங்குவது சிகரகிரியின் வடசார்பிலாகான். சுப்பிரமணிய தீர்த்தம் குமார தீர்த்தமாம். இது முருகனுக்குரியதாகலினாலும்; சரவண முனிவன் திருப்பணி பெற்றதாகலினாலும் சரவணப் பொய்கையென வழங்குகிறது. இத்தீர்த்தம் தொன்மையும் புகழுமுடையது.

நகரம் அமைத்தது சுப்பிரமணிய தீர்த்தத்தையடுத்துள்ள அயலிடத்தாகலின் "சுப்பிரமணிய தீர்த்தத்தின் நலம்புனை யயல்" — என்றார். மலையாற் பெயர் பெற்ற நகரமாதலின்

அதனைச் சென்னிமா நகரம், சென்னிமலை என வழங்குவர். "புலன்கெழு நகர்"— என்றது பொன்னகரமாம். அது இந்திரனுக்குரியது. புலன் — பொன்.

"புலனே செம்பொன் னடுக்கம்"— அரும்பொருள் விளக்கம்-525.

பொலன் என்பதும் பாடம். சென்னிமலை நகரத்திற்குப் "புலன்கெழுநகர்" — உவமானம். முன்பு, "கோமகன் புரிமென"; "வச்சிரவணனகரம்போல்"– என்றதும் காண்க; மயன் இயற்றுதற் கருத்தா.

12. விதுமறுத் துடைத்தகே தனமி டைந்தபொன்
மதிலும்வா தாயன வனப்புந் தோரணக்
கதிர்மணி வீதியுங் கவின்செய் குன்றமும்
நிதிவளர் நியமமும் நியமித் தானரோ

**பொழிப்புரை :-** சந்திரனிடத்திலுள்ள களங்கத்தைத் துடைத்த உயர்ந்த கொடிகள் நெருங்கிய அழகு பொருந்திய மதில்களும், அழகாகிய பலகணிகளும் (சன்னல்) ஒளி பொருந்திய இரத்தின மாலைகள் தொங்கு கின்ற விழாவரு வீதிகளும், அழகாகிய செய்குன்றங்களும் (கட்டுமலை); நவநிதியம் பெருகுகின்ற கடைவீதிகளும் ஆகியவற்றை அமைத்தான் என்றவாறு.

**விளக்கவுரை :-** விது — சந்திரன். கேதனம் — கொடி. விது மறுத்துடைத்த கேதனம் என்பது மதிலின் மேற் கட்டப் பெற்றுள்ள கொடிகளின் உயர்வைக் காட்டுதலால் உயர்வு நவிற்சி யணியாம். மதிலின்மேற் கொடி கட்டுதல் இயல்பாதலின் "கேதன மிடைந்த பொன் மதிலும்"—என்றார்.

"கொடிபுனைந்த மதிலிலங்கைக் கோநகருன் காவலென்றான்"
— தக்கராமாயணம். வீடணன் அபிடேகப்படலம்-6.

இயல்பாக மதிலின்மேல் உயர்ந்துள்ள கொடியைச் சந்திரனது களங்கத்தைக் கண்டிரங்கி அதனைத் துடைத்ததாகக் கவிஞன் தன் கற்பனையையேற்றி, "விதுமறுத் துடைத்த கேதனம்"–எனக் கூறுதலால் தற்குறிப்பேற்ற வணியாம்.

" தற்குறிப் பென்பதோர் பொருளை மற்றொரு
பொருட்டன் மையினு லிஃதஃ தன்றென
வறிந்து மஃதாத் தான்குறிப் பதுவாம்
— அணியியல் விளக்கம்.

" விண்டொட நிவந்த வியன்றுகிற் கொடிகள்
மண்டலம் போழ்ந்து மதியக டுடைப்ப "
— திருவாரூர் நான்மணி மாலை.

*வாதாயனம்—காற்றுச் செல்வதற்கு வழியாயுள்ளது. பலகணி.*

" சாளரம் பொளித்தகால் போகு பெருவழி "
— மணிமேகலை.

" சாலேயம் வாதாயனங் குறுங்கண் சாலை " — ஆசிரிய நிகண்டு.

*தோரணக் கதிர்மணி வீதி யென்றது விழா வருவீதியாம்.*

" ..................... வாணிலாத் தெளிக்கு
நித்தில நிரைத்த விழாவரு வீதி " — திருவிளையாடற் புராணம்.

*நிதிவளர் நியமம்—வாணிகருறையும் கடைவீதி.*

" ஒக்கு மந்நகர் வாணிக ருறையுள்சூழ் நியமம் "
— திருவிளையாடற்புராணம்.

**13. வெயிலுமிழ் மாளிகை மிளிர்பொற் சூளிகை
வயிரமா மணிகொளும் மாடகூ டஞ்செய்
துயிரினுக் குடலென வொருபொன் னாலயங்
கயிலைநா யகர்க்கது கவினச் செய்தனன்.**

*பொழிப்புரை* :- (மற்றும்) ஒளியை வீசுகின்ற மாளிகைகளும், மாளிகைகளின்மேல் விளங்குகின்ற சூளிகைகளும், பெரிய வயிரம் பொருந்திய இரத்தினங்களைக் கொண்ட மாடகூடங்களும் (பேரறை, சிற்றறை) செய்து; உயிர் தங்கி வாழ்வதற்கு இன்றியமையாத உடலைப் போலக் கயிலாய நாதர் வீற்றிருந்து வாழ்தற்குரிய ஒப்பற்ற அழகு பொருந்திய ஆலயமொன்றும் அழகு பொருந்தச் செய்தான் என்றவாறு.

**விளக்கவுரை :** *மாளிகை—வீடு. சூளிகை—மாளிகையின் மேலிடத்திலுள்ள அறை.*

"சூளிகை வைத்த மாளிகை வைப்பில்"

— பண்டாரமும்மணிக்கோவை.

மாடம் — பேரறை. கூடம் — சிற்றறை. உயிர் விரும்பி யுறைதற்கு இடமாயுள்ளது உடம்பு. அதுபோலக் கயிலை நாயகன் விரும்பியுறைதற் கிடமாயுள்ளது ஆலயம். ஆதலின் "உயிரினுக் குடலென வொருபொன் னாலயங்; கயிலை நாயகர்க் கதுகவினச் செய்தனன்"—என்றார்.

"பெருநீர் வையை வளைநீர்க் கூடல்
உடலுயி ரென்ன வுறைதரு நாயகன்"

— கல்லாடம்.

"உடம்புக் குயிரன்றி வாழ்தல்சொல் லாதிவ் வுலகெங்குமே"

"செங்கோ டையிலென் காயங் கலந்த வுயிரனையீர்"

— திருச்செங்கோட்டுக் கோவை.

கயிலைநாயகர் சென்னிமாநகர்ச் சிவபெருமான் திருநாமம். அம்மன் பெரியநாயகி. இச் செய்யுள் உவமையணியாம். "என" வென்னும் உவமையுருபு விரிந்து வருதலின் விரி யுவமையாம்.

"உவமை யென்ப தோரிரு பொருளுக்
கொப்புமை தோன்றச் செப்புவ ததுதான்
விரியுந் தொகையு மெனவிரு வகைத்தாம்"

— அணியியல் விளக்கம்.

"விரித்தல் தொகுத்த லெனவிரு வகைகொண்
டுவமை வருமென் றோதினர் புலவர்"

"உவமையின் வசன மொன்றி வருதல்
விரித்த லெனவும் விளம்பப் பெறுமே"

— குவலயானந்த மேற்கோட் சூத்திரம்.

**14.** **பன்னிற மணிகளாற் பசும்பொ னாற்பிற**
**நன்னிற வனப்பினுல் நலங்கொ ளோவிய**
**மின்னவிர் மண்டபம் விளங்கச் செய்தனன்**
**அன்னெறி சைவநூ லாயும் வேதியன்**

*பொழிப்புரை :* பல நிறம் பொருந்திய இரத்தினங்களாலும்; பசுமை நிறமுடைய பொன்னினாலும் வேறு பலவாகிய நல்ல நிறங்கள் பொருந்திய அழகிய பொருள்களினாலும் அழகு பொருந்திய ஒளிவிளங்குகின்ற ஓவிய மண்டபமும் விளங்கும்படி செய்தான். (அப்பொழுது) நல்ல நெறிகளைக் கூறும் சிவாகம நூல்களை யுணர்ந்த சரவண முனிவன் என்றவாறு.

*விளக்கவுரை : மணிகள் ஒன்பது வகையினவாய்ப் பன்னிற முடையனவாகலின் அவற்றைப், "பன்னிற மணிகளால்" — என்றார். அவை நவமணிகள் என்று பெயர் பெறும்.*

"வைரம் முத்தம் மாணிக்கம் பவளம்
மரகதங் கோமே தகம்வை டூரியம்
நீலம் புருட ராக மென்ன
நானிலம் புகழு நவமணிப் பெயரே" — பிங்கலம் 436.

*பிற நன்னிறம் என்றது வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, பசுமை என்னும் பஞ்சவர்ணங்களும் அவற்றின் கலப்பு வர்ணங்களுமாம்.*

*ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம் என்னும் நால்வகைப் பொன்களுள் கிளிச்சிறை பசுமை நிறமுடையதாக லின் அதனைப், "பசும்பொனால்" — எனக்கூறினா ரெனினுமாம்.*

*ஓவியமண்டபம் — சித்திரச்சாலை.*

"காவுறையுங் காவினிலோ ரோவிய மண்டபத்தில்"
— சிவன்மலைப் பிள்ளைத்தமிழ்

"வித்தக வினைஞர் பத்தியிற் குயிற்றிய
சித்திரச் சாலை" — கொங்குவேள் மாக்கதை.

*இதை எழுத்து நிலை மண்டபம் என்றுங் கூறுவர்.*

*அந்நெறி யென்பது எதுகை நோக்கி அன்னெறி யென்று ஙிற்று. அம்நெறி — அந்நெறி; அழகாகிய நெறியென்பது பொருள். சைவசமயம் ஏனைய சமயங்களெல்லாவற்றையும் ஒதுக்காது அவற்றைச் சோபானமாகத் தன்னுட் கொண்டு தலைமை பெற்று விளங்கும் அழகாகிய நெறியாதலின் அதனை, "அந்நெறி சைவம்" — என்றார்.*

"இயல்பென்றுந் திரியாம லியமமாதி
யெண்குணமுங் காட்டியன்பா லின்பமாகிப்
பயனருளப் பொருள்கள்பரி வாரமாகிப்
பண்புறவுஞ் சௌபான பட்சங்காட்டி
மயலறுமந் திரஞ்சிட்சை சோதிடாதி
மற்றங்க நூல்வணங்க மௌனமோலி
அயர்வறச்சென் னியில்வைத்து ராஜாங்கத்தில்
அமர்ந்ததுவை திகசைவ மழகிதந்தோ"

— தாயுமானவர்-சிதம்பர ரகசியம் 14.

"முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அன்னெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமசி வாயவே" —அப்பர் தேவாரம்.

*சைவநூல் என்றது வேதசிவாகமங்களும் அவற்றின் வழிவந்த சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்குமாம். சிவாகமங்கள் சைவத்திற்குச் சிறப்புநூலாதலின் அவற்றைச் சைவநூல் என்றுரெனிமாம்.*

"வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கும் நூலிவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூ லநாதியம லன்றருநூ லிரண்டும்
ஆரணநூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலாம்
நீதியினா லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கும்
நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள்வே தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும்"

— சிவஞான சித்தியார்.

*சித்தாந்த சாத்திரங்களாகிய ஞான சாத்திரங்கள் பதினான்காவன. திருவுந்தியார் முதல் சங்கற்பநிராகரணம் ஈறாகக் கூறப்படுகின்ற பதினாலு சாத்திரங்களுமாம்.*

"உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் வந்தவருட்
பண்புவினாப் போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று"

பதி, பசு, பாச உண்மை தெளிந்து ஞானம் கைவரப் பெறுதற்கு இடைவிடாது சைவ நூல்களை யாராயும் நியமமுடை யவனு யிருந்தமையின் சரவண முனிவன், "சைவ நூலாயும் வேதியன்"—எனப்பெற்றுன்.

15. தேவகுஞ் சரிகுறச் செல்வி தம்முடன்
பூவலர் சிரகிரிப் புனிதன் றன்னையும்
ஆவலி னுடனெழுந் தருளப் பண்ணியே
யோவறு மனத்தெழு முவகை மிக்கினுல்.

பொழிப்புரை : அந்த ஓவியம் நிறைந்த மண்டபத்தில் தெய்வயானை யாரும், குறக்குலத்தின் செல்வமாகிய வள்ளி நாச்சியாரும் ஆகிய இருவருடன் அழகிய மலர்கள் விரிந்த சிரகிரிக்குமாரக் கடவுளையும் விருப்பத் துடன் எழுந்தருளச் செய்து ஒழிவில்லாமல் மனத்தின்கண் வளர்கின்ற மகிழ்ச்சி மிகுதியினுல் என்றவாறு.

விளக்கவுரை : சிரகிரிக் குமாரக் கடவுளைத் தெய்வயானை யாருடனும், வள்ளி நாச்சியாருடனும் ஓவிய மண்டபத்தில் எழுந்தருளப் பண்ணிய (பிரதிட்டை) செய்தி கூறுவது இச் செய்யுள். தேவகுஞ்சரி-தெய்வயானையால் வளர்க்கப்பெற்றவள்.

"முலையென விரண்டு முரட்குவடு மரீஇ
கொலையொடு புணர்ந்த யானை மகள்" — கல்லாடம்.

தெய்வயானையார், பொன்னிறமும் புன்முறுவல் பூத்த முகமும் உடையவராய் இடது காலையூன்றி வலது காலைச் சிறிது வளைத்து வலக்கரத்தில் கருங்குவளை மலரேந்தி இடது கரத்தைத் தொங்க விட்டிருப்பர்.

குறச்செல்வி — குறவர் மகள்.

"செங்கட் குறவர் கருங்காட்டு வளர்த்த
பைங்கொடி வள்ளி" — கல்லாடம்.

"வள்ளியம்மையார் நீல நிறமும் புன்முறுவலும் பூத்த திருமுகமும் உடையவராய் வலது காலை யூன்றி யிடது காலை வளைத்தும் நிற்பர். இடது கரத்தில் தாமரை மலர் விளங்க வலது கையைத் தொங்கவிட்டுக் கொண் டிருப்பர்" — குமாரதந்திரம்.

*முருகப் பெருமான் இருபுறத்தும் தெய்வயானையாருடனும் வள்ளியம்மையாருடனும் எழுந்தருளும் காட்சி நெஞ்சம் பிணிக்கும் இனிய தெய்வக் காட்சி யாதலின், "ஆவலினுடனெழுந்தருளப் பண்ணி"–என்றும்; அக்காட்சியைத் தேர்மேற் காண இடையறாது விரும்பினராகலின், "ஓவறு மனத்தெழு முவகை மிக்கினால்" — என்றும் கூறினார். உவகை மிக்கினால் என்பது அடுத்த பாட்டில் வரும், "தேர்கண் டானரோ"— என்னுந் தொடர் கொண்டு முடிகின்றது.*

"சூர்க்கடல் பருகும் வேலோன் துணைவிய ரிருவரோடும்
போர்க்கடல் கொண்டசீயப் பொலன்மணி யணைமேற் சேர்ந்தான்
பார்க்கட லமளிதன்னில் பாவையர் புறத்து வைகக்
கார்க்கடற் பவளவண்ணன் கருணையோ டமரு மாபோல்"

"பெண்ணொரு பாகங்கொண்ட பிஞ்ஞகன் வதன மொன்றில்
கண்ணொரு மூன்றுவைகுங் காட்சிபோல் எயினர் மாதும்
விண்ணுல குடையமாதும் வியன்புடை தன்னில் மேவ
அண்ணலங் குமரனன்னாற் கருள்புரிந் திருந்தான் அன்றே"

*—என்று வரும் கந்தபுராணப் பாடல்கள் முருகன் தேவியரிருவரோடும் திகழும் தெய்வக் காட்சியைப் புலப்படுத்துவனவாம்.*

16. செம்பொன்மால் வரைசிர கிரியைக் காணவென்
றும்பர்கள் போற்றவந் துற்ற தேயென
வெம்பிரா னேறிவீற் றிருப்ப மாமணி
யம்பொனா லொருதிருத் தேர்கண் டானரோ.

**பொழிப்புரை :** செம்மையாகிய பொன் மயமான பெருமை பொருந்திய மேருமலையானது தன் முடிகளில் ஒன்றாகிய சிரகிரியைக் காண்பதற்கென்று தேவர்கள் போற்றும்படி வந்து சேர்ந்ததுபோல எமது தலைவனாகிய முருகப் பெருமான் ஏறி வீற்றிருந் தருளுதற்குப் பெரிய இரத்தினங்களாலும் அழகிய பொன்னினாலும் ஓரழகிய தேரைச் செய்தான் என்றவாறு.

**விளக்கவுரை :** *மேருமலை தேருக்குவமை.*

"உருவ மாட்சியா லோங்குபொன் வரையென வுரைப்பாம்
... ... ... ... ... ... ... ... ...
வெருவ மாற்றலர் முழக்கெழீஇத் தோற்றிடும் வியன்றேர்"

— திரு அம்பர்ப் புராணம் 177.

"ஊரும் வார் கொடிப்பொற்றேர்க ளுட்கொளு நிலைகள் யாவும்
மேருவோ டிகலி நின்ற விந்தமால் வரையை யொத்தே"
— உறையூர்ப் புராணம் நகரம்–22.

*சிரகிரி தன் முடிகளிலொன்றாதலின் மேருமலையானது அதனைக் காண வந்ததென கவி தன் கற்பனையை யேற்றிக் கூறுதலால் இது தற்குறிப்பேற்ற உவமையாம். தேர்கண்டான் —தேர் செய்தான்.*

*காண்டலின்பின் செயல் நிகழுமாகலின் தேர் செய்தலைத் தேர் கண்டான் எனக்கூறினார். காரியத்தைக் காரணமாகக் கூறும் உபசாரம் பற்றி இங்ஙனங் கூறினார். "ஆலயங் கண்ட மான்மியம்" "திருநகரங் கண்ட படலம்" — என்பனவும் இது போன்றதே.*

17. மோதுவார் கடலென முரச மார்த்தெழ
வாதரித் திறைவனோ டமரர் போற்றிட
மாதவ ரெதிர்மலர் மாரி பெய்திட
மேதினி தொழுத்திரு விழா நடத்தினான்.

**பொழிப்புரை :** கரையில் மோதுகின்ற அலைகளையுடைய கடலொலி போல முரசவாத்தியங்கள் ஆரவாரித்தொலிக்கவும், தேவேந்திரனுடன் தேவர்களும் விரும்பித் துதிக்கவும்; பெருந்தவமுடைய சிறந்த முனிவர்கள் எதிர்நின்று பூமாரி சொரியவும், பூமியிலுள்ளோர் யாவரும் கைகூப்பித் தொழவும் தேர்த்திருவிழாவினைச் செய்தான் என்றவாறு.

**விளக்கவுரை :** *முரசொலிக்குக் கடலொலி உவமை. திருவிழா, விண்ணவருக்கும்மண்ணவருக்கும் மகிழ்ச்சி விளைவிப்பது. ஆகலின், "அமரர் போற்றிட மாதவர் மலர் மாரிபெய்திட மேதினி தொழத் திருவிழா நடத்தினான்"—என்றார். இகபர மோட்சங்களை யெளிதில் நல்குவது தேர்த் திருவிழா வாகலின் யாவரும் அதனை விரும்பிக் காண்பர்.*

18. பத்தர்க டொழச்சில பகலி ருந்தபின்
உத்தம முனிசிவ போக முள்ளுணர்ந்
தத்தநீள் சிரகிரி யமலன் ருளினின்
முத்தர்தா மடைந்திடு முத்தி யெய்தினான்.

பொழிப்புரை : பின்பு மேலான தவத்தையுடைய சரவணமுனிவன் பக்தியையுடைய அடியார்கள் தொழுது வணங்கும்படி சில காலம் வாழ்ந்திருந்த பின்பு முத்தியிற் சிவபோகம் துய்த்தலை விரும்பி நீண்ட காடுகளையுடைய சிரகிரியில் வீற்றிருக்கின்ற குற்றமற்ற முருகப் பெருமானுடைய திருவடிகளில் சீவன் முத்தராயுள்ளோர் அடைவதற்குரிய மேலான பரமுத்தியை யடைந்தான் என்றவாறு.

விளக்கவுரை : *சரவண முனிவன் உத்தமமான துறவு நிலையில் நின்று தவம் புரிந்து முருகனருள் பெற்று ஆலயத்திருப்பணி, தேர்த் திருப்பணி முதலிய பல திருப்பணிகள் புரிந்தும், முருகக் கடவுளின் திருவுள முவப்பவும் உலகினர் தரிசித்துப் பேறுபெறவும் தேர் விழாச் செய்தும் அருள் நெறியில் வாழ்ந்தனனாகலின் அடியார்கள் தொழுதற் குரியவனயினன். ஆகலின், " பக்தர்கள் தொழ " என்றும்; திருவிழாவியற்றிய பின்னர் அவன் பூமியில் வாழ்ந்தது வெகுசில நாட்களே யாதலின், "சிலபகலிருந்தபின்" என்றும் அச்சில நாட்களிலும் முத்தி வேட்கை யுடையவனாய் முத்தியடைந்தான் என்பார், " சிவபோக முள்ளுணர்ந்து சிரகிரி யமலன்ருளின் முத்தி யெய்தினன் "— என்றுங்கூறினர்.*

*சிவபோகமாவது சிவத்தோடிரண்டற நின்று அனுபவிக்கும் பேரின்பமாம். அச் சிவபோகத்தினியல்பு உள்ளத்தால் அறியப் படுமாகலின், " சிவபோக முள்ளுணர்ந்து " என்றார். அச்சிவ போகம் ஆன்மா உடலுடன் கூடி நின்ற சீவன் முத்த நிலையிலும் ஆன்மா உடலை விட்டுப் பிரிந்த முத்த நிலையிலும் அனுபவிக்கப் படுவதாம். சிவ ஞானமுடைய சிவயோகிகளே சிவயோகந் துய்ப்பர். சிவஞானம் புசித்த சிவயோகிகளின் இயல்பினைச் சைவ சித்தாந்த நூல்களிற் கண்டு கொள்க.*

" தொண்டர்க ளிடத்தும் வானோர் தொழுந்திரு மேனிதானும்
அண்டருங் கண்டி லாத வண்ணலே யெனவணங்கி
வெண்டர ளங்கள் சிந்த விழிமொழி குளறிமெய்யே
கண்டுகொண் டிருப்பர் ஞானக் கடலமு தருந்தினோரே "

— சிவப்பிரகாசம்-48.

" செப்பொணு தென்னு லத்தைச் சிரசாதி பாதமந்தங்
கப்பெலாம் விட்டு ரோமங் கம்பித்து விதிர்விதிர்த்து
அப்படி யுளேசீ தத்தா யங்கங்க ளனைத்துநெக்கு
ஒப்பில் பேரின்ப மெங்கு முகமதா யுதித்ததன்றே "

— மெய்மொழிச் சரிதை-அனுபோக விலக்கணம் 2.

*ஆன்மா முத்தி நிலையிற் பெறும் சிவானந்தம் வாக்கினுற் சொல்லுதற் கியலாத பேரின்ப நிலையாம்.*

"விரும்பிப்பொன் னிணைக்குளிகை யொளிப்பதுபோ லடக்கி
மேலித்துத் தானெல்லாம் வேதிப்பா னுகிக்
கரும்பைத்தே னைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியையொத் திருப்பனந்த முத்தியினிற் கலந்தே"
— சிவஞானசித்தியார் 11-ஆம் சூத்திரம். 2-ஆம் அதி. 12-ஆம் செ.

*முத்தியாவது பாசங்களாற் கட்டுப்பட்டுப் பெத்த நிலையில் துன்புற்றுக் கொண்டிருந்த ஆன்மாவானது அப்பெத்த நிலையினின்றும் விடுபட்டு இறைவன் திருவடிக்கீழ்ச் சென்று இன்ப முற்றிருப்பதாம்.*

"துன்னியவைம் புலவேடர் சுழலலிற் பட்டுத்
துணைவனையு மறியாது துயருறுந் தொல்லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரி. னீக்கி
மலமகற்றித் தானுக்கி மலரடிக்கீழ் வைப்பன்"
— சிவஞான சித்தியார் 253.

"மாயமெலா நீங்கியரன் மலரடிக்கீ ழிருப்பன்
மாருத சிவானு பவமருவிக் கொண்டே"
— சிவஞான சித்தியார் 310.

*இறைவன் திருவடிக் கீழ்ச் சென்று இன்பமுற்று இருமாந் திருத்தலே முத்தியாகலின், "சிரகிரி யமலன் ருளினில்; முத்தர் தாமடைந்திடு முத்தியெய்தினுன்"— என்ருர். பெத்தத்தைக் கடந்த முத்தர் முத்தியையடைவராகலின், "முத்தர் தாமடைந் திடு முத்தி யெய்தினுன்"—என்ருர்.*

*சரவண முனிவன் சீவன் முத்த நிலையில் வாழ்ந்தவனுகலின் தான் சில நாளில் முத்தி யெய்தும் எதிர்கால நிகழ்ச்சியை யறிந்து தெளிவினுல், "முத்தி யெய்தினுன்"— என இறந்த காலத்தாற் கூறினுன்.*

"விரைவினு மிகவினுந் தெளிவினுமி யல்பினும்
பிறழவும் பெறூஉமுக் காலமு மேற்புழி"

*என்னும் நன்னூற் பொதுவியற் சூத்திரத்தான் எதிர்காலம் இறந்தகாலமாகக் கூறுமியைபினையறிக.*

(வேறு)

19. கன்னியம் பிகைசேய் போற்றி
கலைமதிப் புலவா போற்றி
பொன்னியந் துறையாய் போற்றி
பூந்துறை நாடா போற்றி
மின்னில மியம்ப வானோ
ரிறைஞ்சநான் மறைநின் றேத்தச்
சென்னியங் கிரியில் வாழுந்
தேவனே ! போற்றி போற்றி.

பொழிப்புரை : கன்னிகையாய் விளங்குகின்ற அம்பிகையின் குமரனே! வணக்கம். நூலறிவுடைய சங்கப் புலவனே! வணக்கம். அழகிய காவிரித்துறைகளை யுடையவனே! வணக்கம். பூந்துறை நாட்டை யுடையவனே! வணக்கம். இந் நிலவுலகத்தோர் துதிக்கவும், தேவர்கள் வணங்கவும், நான்கு வேதங்களும் சேர்ந்து நின்று புகழவும், அழகிய சென்னிமலையில் வாழ்கின்ற தெய்வமாயுள்ளவனே! வணக்கம் வணக்கம் என்றவாறு

விளக்கவுரை : *இம்மான்மியத்தில் 19 முதல் 26 வரையிலுமுள்ள தோத்திரங்களும் நூற் பயனும் வாழ்த்துக்களுமாய் வரும் பின்வரும் செய்யுட்களெட்டும் சரவண முனிவன் முத்தியடைவதன் முன்பு சிவன் முத்தனுய்ப் புராணம் பாடிய காலத்தில் இயற்றிய செய்யுட்களாம்.*

*எல்லா வுலகுயிர்களையும் ஈன்றருளிய அம்பிகை என்றும் கன்னியாய் வாழ்பவளாதலின் அவளைக் "கன்னியம்பிகை" என்றார்.*

"அண்டப் பெருந்திரள் அடைவின் றளித்த கன்னி"
— எனக்கல்லாடத்திலும்

"பவன்பிரம சாரியாகும் பான்மொழி கன்னியாகும்
தவந்தரு ஞானத்தோர்க்கித் தன்மைதான் தெரியுமன்றே"
— எனச் சிவஞான சித்தியாரிலும்

*கூறுவன காண்க. முருகன் சங்கப் புலவர்களுடன் தானுமொரு புலவனாய் வீற்றிருந்து தமிழாராய்ந்தமையால் "கலைமதிப் புலவா போற்றி"— என்றார்.*

"மாலை மார்ப நூலறி புலவ" — திருமுருகாற்றுப்படை.

"ஆறுதிரு வெழுத்தும் கூறுநிலை கண்டு
நின்றுட் புகழுநர் கண்ணுட் பொலிந்தோய்
இறையோன் பொருட்குப் பரணர்முதல் கேட்பப்
பெருந்தமிழ் விரித்த வருந்தமிழ்ப் புலவனும்
பாய்பா ரறிய நீயே யாகலின்
வெட்சிமலர் சூழ்ந்த நன்னிரு கழற்கால்
குழந்தை யன்பினெடு சென்னிதலைக் கொள்ளுதும்"
— கல்லாடம்.

பொன்னியாற்றின் துறையால் புகழ்பெற்ற நாடு பூந்துறை நாடாகலானும்; அவ்விரண்டிற்கும் உரிமையுடையவன் சிரகிரி முருகக் கடவுளாகலினுலும், "பொன்னியந் துறையாய் போற்றி பூந்துறை நாடா போற்றி"— என்ருர்.

"பொன்னி நதியிலங்கும் பூந்துறைநன் ஞட்டில்வைகும்
சென்னிமலை வேலாவுன் திருவடியான் பெறுவதென்ரே"
— சென்னிமலைப் பிரதாபக் கண்ணி.

பொன்னி காவிரி நதியாமென்பதை,

"மேவுபொரு ளைப்பெயரான் பொருந்தம் பொன்னி
மிக்ககா வேரியின்பேர்"

— என்னும் ஆசிரிய நிகண்டானு முணர்க.

இச்செய்யுளில் வரும் போற்றி யென்னும் சொல்லும் பொருளும் பின்னும் பல வடிகளில் வருமாறு செய்யுள் செய்திருப்பது சொற் பொருட் பின்வருநிலையணியாம். 19, 20, 21-ஆம் செய்யுட்கள் இவ் வணியேயாம்.

20. ஆவலங் கொழிந்தார் போற்றி
யடிதொழு மடிகேள் போற்றி
பூவலங் கொண்டாய் போற்றி
புலாதிகட் கணுகாய் போற்றி
கேவலங் கடந்தாய் போற்றி
கிளரொளிப் பொருளே போற்றி
சேவலங் கொடியாய் போற்றி
சிரகிரி வாழ்வே போற்றி.

பொழிப்புரை : (இந் நிலவுலகத்துடனே) அவ் விண்ணுலகிடத்துமுள்ள ஆசையை ஒழித்தவர்கள் துதித்து வணங்குகின்ற அடிகளையுடைய அடிகளே! (சுவாமிகளே) வணக்கம். ஐம்புலன் முதலியவற்றால் அணுக முடியாதவனே! வணக்கம். கேவலத்தைக் கடந்தவனே! வணக்கம். விளங்குகின்ற ஒளி யென்னும் பொருளாயுள்ளவனே! வணக்கம். சேவற் கொடியை யுடையவனே! வணக்கம். சிரகிரியில் வாழ்கின்றவனே! வணக்கம் வணக்கம். என்றவாறு.

விளக்கவுரை : அங்கு என்னும் சுட்டுப் பெயர் அமரருலகத்தைச் சுட்டி நின்றது. தேவ போகங்களைத் தருவது அமரருலகம். ஆதலின் யாவரும் அதனை விரும்புவர். மண்ணுலகத்தில் மாத்திரமல்லாமல் விண்ணுலகத்தாசையுந் துறந்தவர்கள் முனிவர்கள். ஆசையற்றமுனிவர்களால் வணங்கப்படுகின்றவன் முருகப்பெருமான் என்பார், "ஆவலங் கொழிந்தார் போற்றி யடிதொழு மடிகேள்"—என்றார்.

"ஆழி ஞாலமே லாசையு மமரர்வான் பதமேல்
வீழு மாசையும் வெறுத்தவர்க் கன்றி மண்ணுண்டு
பீழை மூழ்கிவா னரகொடு பிணிபடச் சுழலும்
ஏழை யேங்களுக் காவதோ வெந்தை நின்கருணை"
— திருவிளையாடற் புராணம். திருநகரங் கண்டது-23.

"கேடு மாக்கமுங் கெட்ட திருவினர்
ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்
கூடு மன்பினில் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்"
— பெரியபுராணம். திருக்கூட்டச்சிறப்பு-8.

இப் பாடலால் ஆசையற்றோ ரியல்பினை அறிக. "அடிகேள்" என்பது அடிகள் என்பதன் விளி. அச் சொல் ஈற்றயல் திரிந்து அடிகேள் என்றாயிற்று. அடிகள் என்னும் தமிழ்ச் சொல்லிற்கு நேரான வடசொல் 'சுவாமிகள்' என்பது.

"ஆருக்குரைக்கேம் அடிகேள் அடிகேளோ"- மதுரைக்கலம்பகம்-32.

சிவபெருமானிடம் மாங்கனி பெறுதற் பொருட்டு இளைய பிள்ளையார் பூமியை வலமாக மும்முறை சுற்றி வந்தாரென்னும் புராண வரலாற்றினை யுட்கொண்டு "பூவலங் கொண்டாய் போற்றி" — என்றார். புலாதிகள் என்றது ஐம்புலன்கள்; ஐம்பொறி, அந்தக் கரணங்கள் என்பவைகளையாம். கேவலம்

என்பது அற்பம், சிறுமை. "கேவலங் கடந்தாய்" என்பதற்கு ஆன்மாவிற்குள்ள கேவல முதலாகிய மூன்றவத்தைகளையுந் தாண்டியவனே என வுரைத்ததுமாம்.

"மூன்றவத்தையுங் கழற்றி முத்தருடனே யிருத்தி
யான்ற பரமுத்தி யடைவித்து" —கந்தர் கலிவெண்பா.

மூன்றவத்தைகளான கேவலம், சகலம், சுத்தம் என்பன வாம். கேவலாவத்தையாவது ஆன்மா, இச்சை, ஞானம், கிரியை ஆகிய வற்றில் ஒரு சிறிதுமின்றித் தத்துவங்களில் ஒன்ற னையுஞ் சாராதிருப்பது. சகலாவத்தையாவது பின்பு தனுகரண முதலிய தத்துவங்களுடன் கூடி அவ்விச்சா ஞானக்கிரியைகள் ஒருபுடை விளங்க நிற்பது. சுத்தமாவது ஆன்மா, கேவல சகல மென்னு மிரண்டும் தாக்காமல் முன் செய்த சிவ புண்ணிய முதிர்ச்சியால் நித்தியா நித்திய விவேகம், இருவினையொப்பு, மல பரிபாகம், சத்திநிபாதம் ஆகிய இவைகள் தனக்கு முறையே நிகழ அப்பருவம் நோக்கி, நித்த முத்த சித்தெனப் படும் சிவன் குருவடிவங் கொண்டு வந்து தீட்சையால் மலங்களைப் போக்கி ஞானமருளப் பெற்றுச் சிவானந்த மனுபவிப்பது.

21. மோகற மொழிந்தாய் போற்றி
முராரி மாமருகா போற்றி
யாகர மறையாய் போற்றி
யறுமுக விறைவா போற்றி
மாகர வயிலாய் போற்றி
மரகத மயிலாய் போற்றி
சேகர கிரியாய் போற்றி
சிரகிரி வாழ்வே போற்றி.

பொழிப்புரை: மோகம் நீங்கும்படி அகத்தியருக்கு உபதேசித் தவனே! வணக்கம். முரன் என்னும் அசுரனையழித்த திருமாலின் மருகனே! வணக்கம். வேதங்களை யிருப்பிடமாகக் கொண்டவனே! வணக்கம். ஆறுமுகங்களை யுடைய கடவுளே! வணக்கம். பெருமை பொருந்திய கரத்தில் வேலையுடையவனே! வணக்கம். பசுமையாகிய மயில்வாகனத்தை யுடையவனே! வணக்கம். கூட்டமாகிய மலைகளை யுடையவனே! வணக்கம். சிரகிரியில் வாழ்பவனே! வணக்கம் என்றவாறு.

விளக்கவுரை: மோகு மோகம் என்பதன் கடைக்குறை. மோகம்—மயக்கம்.

“மோகமே மயக்கங் காதல்” — அரும்பொருள் விளக்கம்.

*சரவண முனிவர் தமது மயக்கம் தீரும்படி முருகப் பெருமான் சிரகிரி மான்மியம் காஞ்சியில் செப்பேட்டிலுள்ளது அறிவாய் என்று தமக்குத் திருவாவினன்குடியில் கூறியதனை யுட்கொண்டு, “மோகற மொழிந்தாய்” — என்று கூறினாரெனி னுமாம். மோகர மென்னும் பாடத்திற்கு மோகத்திலிருந்து நீங்கியவனே எனப் பொருள் கொள்க. மோகரம் — மோகம், விருப்பம், ஆசை.*

“தாக மிசையே வடவை சாகரம தெல்லாம்
மோகர மதாயுணவே வந்ததென முன்னி”
— வள்ளியம்மை புராணம். சூரன் யுத்தச் சுருக்கம் 19.

*சேகரகிரி — மலைக்கூட்டம் எனினுமாம்.*

“சேயோன் மேய மைவரை யுலகம்” — தொல்காப்பியம்.

22. தென்செய்தே னிமிர்கூ தாளஞ்
செச்சைபூங் குரவ நீப
மின்செய்பூ ணிமைக்குந் திண்டோள்
மிலைந்தபொன் மாலை யோடு
மின்சொலும் பொருளு மின்றி
வெளிறியீர்ஞ் சுவைய திர்ந்த
புன்சொலாற் றமியேன் சாற்றும்
தொடையலும் புனைவாய் போற்றி.

பொழிப்புரை : இசையைச் செய்கின்ற தேன் வண்டுகள் ஒலிக் கின்ற கூதாளம் பூ மாலையும் வெட்சிப் பூ மாலையும் அழகு பொருந்திய குரவ மலர் மாலையும் கடம்பமாலையும் ஒளி செய்கின்ற (வாகு வலய முதலிய) ஆபரணங்களும் பிரகாசிக்கின்ற வலிமையாகிய தோள்களில் தரித்த பொன்னரி மாலையுடன் இனிய சொற்களும் இனிய பொருள்களும் இல்லாமல் வெளிறிக் (வெண்மையுற்று) குளிர்ச்சியாகிய சுவை சிதைந்த புன்மையாகிய சொற்களால் தொடுத்துத் தனியேன் சாற்றுகின்ற பாமாலை களையும் தரிப்பவனே வணக்கம். என்றவாறு.

விளக்கவுரை : *தென் — இசை, அழகு. தேன் — வண்டு. இமிர் — ஒலிக்கின்ற. சாற்றுதல் — சொல்லுதல். சாத்தும் என்ற பாடத்திற்கு அணிகின்ற எனப் பொருள் கொள்க. முருகன்*

கூதாளிப் பூமாலை முதலியன விளங்குகின்ற திருத் தோள்களில் தரித்துள்ள பொன்னரி மாலையுடன் சுவையில்லாத புன்சொற் களாற்றொடுத்த தன் பாமாலையையும் ஏற்றுப் புனைந்தமைக்கு ஆசிரியர் வணக்கங் கூறினார்.

புனைவாய் என்பதற்கு "அணிந்து கொள்வாய்" என வேண்டுகின்றாரெனினுமாம். சொல் மலர்களால் அடியார்கள் தொடுக்கும் பாமாலையை முருகன் தன் திருத் தோள்களில் விரும்பித் தரித்தருள்வான் என்பது இப் பாடலால் விளங்குவ தாகும்.

"இலக்க ணங்களு மியலிசை களுமிக
விரிக்கு மம்பல மதுரித கவிதனை
யியற்று செந்தமிழ் விதமொடு புயமிசை — புனைவோனே"
— திருப்பரங்கிரித் திருப்புகழ்.

"உடைக்கணு திபன்றனக் கிளஞ்செந் தூர்த்தமிழ்த்
தொடைக்கணுன் றுயர்புயத் தோகை பாகனே"

"குழையுமென் வாய்மைத் தமிழுந னீபத்
தொடையலு மொண்பொற் சந்துந் தவழ்ந்தன
கடலலை வாய்முத் தினவனை வீசிக்
கரைபொரு செந்திற் கந்தன் புயங்களே"
— திருச்செந்தூர்க் கலம்பகம்.

"தருசுவை யமுதெழ மதுரம தொழுகு
பசுந்தமிழ் மாலை நிரம்பப் புனைந்தன
சவுந்தர மாறர் தடம்பொற் புயங்களே"
— மதுரைக் கலம்பகம் 2.

இறைவன் பாமாலையும் பூமாலையும் விரும்பியணிவன்.

"பாமாலை சூடும் பரமற்கு நாயடியேன்
பூமாலை பாடிப் புனைகின்றேன்" புட்பவிதி, காப்பு 1.

சொல்லாலுணர்த்தப்படுவது பொருளாகலின் "இன்சொலும் பொருளும்" என்றார். இன்சொலும் பொருளும் — இனிமை யாகிய சொல்லலங்காரமும் பொருளலங்காரமு மில்லாமல் என வுரைத்தலுமாம். சுவை—சொற்சுவையும் பொருட் சுவையுமாம். காவிய நாடகங்களில் வரப்பெறும் சிருங்கார முதலிய ஒன்பான்

சுவையென வுரைத்துக் கோடலுமாம். ஆசிரியர் விநயத்தால் தன்னைத் தாழ்த்தி என் புன்சொலும் என்றார்.

ஆசிரியர் தான் பாடிய பாமாலையை முருகன் திருமுன்பில் "இன்சொலும் பொருளுமின்றி வெளிறியீர்ஞ் சுவைய திர்ந்த புன்சொலாற் றமியேன் சாற்றும் தொடையல்" என இழித்துக் கூறினர். இங்ஙனம் கூறுதல் உயர்ந்த கவிகளின் மரபாம்.

"முன்சொல் நின்ற முனிவட நூறெரீஇத்
தென்சொ லாற்சிறி யேனுரை செய்தலான்
மென்சொ லேனும் வெளிற்றுரை யேனும்வீண்
புன்சொ லேனு மிகழார் புலமையோர்"

"வெற்றெ னத்தொடுத் தீர்த்து வெளிற்றுரை
முற்று மாக மொழிந்தவென் பாடலிற்
குற்ற நாடினர் கூறுப தொல்லைநூல்
கற்று ணர்ந்த கலைஞ ரல்லோர்களே"
— கந்தபுராணம் - அவையடக்கம் 3, 5.

"முன்பா வலரின் முத்தமிழ்ப் பாவு முதன்மை யில்லா
வென்பா டலுமுவந் தார்செங்கை வேலர்தென் னேரகத்தே"
— திருச்செங்கோட்டுக் கோவை 281.

23. இக்கதை படிப்போர் கேட்போர்
ஏட்டினில் எழுதி வைத்தோர்
அக்கதை படிப்போர் சங்கத்
தடைபவ ரலர்மான் வீணை
மிக்கதை வந்த வாணி
தருபயன் மேவி நாளும்
கைக்கதை வடிவேற் கந்தன்
கனகமற் பாதஞ் சேர்வார்.

பொழிப்புரை : இந்தச் சென்னிமலைப் புராணசரிதத்தை நியமமாகப் படிப்பவர்களும் படிப்பதைக் கேட்பவர்களும் ஏடுகளில் எழுதிவைத்தவர்களும் அச் சரித்திரத்தைப் படிப்பவர்களுடைய கூட்டத்தைச் சேர்ந்தவர்களும் செந்தாமரைப் பூவில் வீற்றிருக்கும் இலக்குமியும் வீணையை மிகுதியாகத் தடவிக் கொண்டிருக்கின்ற கலைமகளும் கொடுக்கின்ற செல்வமும் கல்வியும் ஆகிய பொருள்களை யடைந்து எப்பொழுதும் கரத்தில் தண்டா

யுதத்தையும் கூர்மையான வேலையும் தரித்துள்ள முருகக் கடவுளுடைய ஒலிக்கின்ற வீரகண்டையை யணிந்த பாதங்களை யடைவார்கள் என்றவாறு.

**விளக்கவுரை :** *இச் செய்யுள் நூற்பயன் கூறுவது. இக் கதை அக் கதை என்பன சென்னிமலைப் புராணமாம். அலர் மான் – வெண்டாமரை மலர்ப் பெண். மிக்க – மிகுதியாக. தைவந்த—தடவிய. வாணி தருபயன்—கல்வியும், செல்வமும் ஞானமும் புகழுமாம்.*

"பெருந்திரு வுஞ்சய மங்கையு மாகியென் பேதைநெஞ்சில்
இருந்தரு ளுஞ்செஞ்சொல் வல்லியைப் போற்றிலெல் லாவுயிர்க்கும்
பொருந்திய ஞானந் தருமின்ப வேதப் பொருளுந்தரும்
திருந்திய செல்வந் தருமழி யாப்பெருஞ் சீர்தருமே"
— கம்பர் சரசுவதியந்தாதி 30.

*கலைமகள் எப்பொழுதும் கரத்தில் வீணையை வைத்துத் தடவிக் கொண்டிருப்பதால் "வீணை மிக்கதை வந்த வாணி" என்றார்.*

"துதியார்ந் திலங்கு கலைமகட் பெயர்கொண்டு
தூய்படிக மாலை வீணை
சுருதிநூற் புத்தகங் கரமேந்தி யெண்கண்
டுளங்குமொரு வனைம ணந்து
விதியாக மங்களுணர் பாவாணர் நாவினர்
மேன்மைபெற வேந டிக்கும்
வெண்கமல நாயகி மணிச்சிலம் பணிபாத
மென்மலரை முடித ரிப்பாம்"
— திரிபுரசுந்தரி பிள்ளைத் தமிழ், காப்பு 1.

*சென்னிமலைப் புராணத்தினைப் படித்தல் முதலிய செய்வோர் இம்மையிற் கல்வியும் செல்வமும் ஞானமும் பெற்று முடிவில் முத்தியும் பெறுவரென்பதாம். "கந்தன் கனைகழற் பாதஞ் சேர்வர்" என்பது முத்தி பெறுவர் என்பதாம்.*

*"சிரகிரி யமலன் ருள்களில், முத்தர்தா மெய்திடு முத்தி யெய்தினன்"— காட்சி மான்மியம் 18.*

*கந்தருக்குத் தண்டமேயன்றி வேலும் உண்டென்று கூறுதலின் "கைக்கதை வடிவேற் கந்தன்" என்றார். கதை—தண்டம்.*

"முண்டிதமும் கோவணமும் கீளும் தண்டும்
முழுநீறும் பாதுகையும் முறுவல் வாயும்
கண்டிகையும் கதிர்வேலும் இரண்டு தோளும்
கமலமல ரடித்துணையும் காட்டும் மூர்த்தி"
— கௌமாரமுறைமை, பக்தி காண்டம்,
தண்டபாணி மூர்த்தி தியானம் 73.

*கீழ்வரும் வள்ளியம்மை புராணப் பாயிரக் காப்புச் செய்யுளை இச் செய்யுளுடனும் அடுத்த செய்யுளுடனும் ஒப்பிட்டுக் காண்க.*

"பூமகள் புயத்தில் வாழ்வாம் புண்ணிய மென்று நாடும்
நாமகள் நாவி லேறும் நாடிய பொருள்கை கூடும்
காமனை வென்ற கண்ணுர் தந்தருள் கந்த னூர்தம்
சேமமா மயிலும் வேலும் தினந்தினம் வாழ்த்து வோர்க்கே"

**24** கூர்கெழு வாய்ச்செஞ் சூட்டுக்
குக்குடத் துவசம் வாழி
கார்கெழு மிமையப் பைங்கட்
கலாபமா மஞ்ஞை வாழி
சீர்பர வியபூஞ் சோலைச்
சென்னியங் கிரிவேள் செங்கை
சூர்முதற் றடிந்த வென்றிச்
சுடரிலை நெடுவேல் வாழி.

**பொழிப்புரை:** கூர்மை பொருந்திய வாயினையும் சிவப்பாகிய உச்சிக் கொண்டையையுமுடைய கோழிக் கொடி வாழ்க. கருநிறம் பொருந்தியதும் ஒளி செய்தலை உடையதும் பசுமையாகிய கண்களைப் பொருந்தியதுமாகிய தோகைகளையுடைய பெருமை பொருந்திய மயில் வாழ்க. சிறப்புப் பொருந்திய பூஞ்சோலைகளையுடைய அழகிய சென்னிமலையில் வீற்றிருக்கும் முருகக் கடவுளின் கையிலுள்ளதும் சூரபன்மனைக் கொன்ற வெற்றியை யுடையதும் ஒளி பொருந்தியதும் ஆகிய நீண்ட வேலாயுதம் வாழ்க என்றவாறு.

**விளக்கவுரை:** *நூலினிறுதியில் வாழ்த்துக் கூறும் ஆன்றோராசாரம் பற்றி இந் நூலாசிரியரும் நூலிறுதியில் வரும் மூன்று செய்யுட்களிலும் வாழ்த்துக் கூறுகின்றார்.*

*இச் செய்யுளில் இத் தலபுராணக் காவியத் தலைவனாகிய சென்னியங்கிரி முருகக் கடவுளின் கொடியும் ஊர்தியும் படையு மாகிய கோழியும் மயிலும் வேலும் ஆகிய மூன்றின் வாழ்த்துக் கூறினர்.*

" சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி "
— கந்தபுராணம்.

*"கார்கெழு" என்பதற்குக் கார்காலத்தில் விரிந்து விளங்கு கின்ற என வுரைத்தலுமாம்.*

" கார்பெற்ற தோகையோ " — நளவெண்பா.

" மேகத்தைக் கண்டு சிறகைவிரித்து நடிக்குமயிலே "
— திருத்தணிகைச் சந்நிதி முறை.

*இமையம்—இமைத்தல், பிரகாசம். கலாபம்—தோகை. சூர்முதல்—சூரபன்மன். முருகக் கடவுளின் கையிலுள்ள வேல் சூரனைக் கொன்று வெற்றிகொண்டு விளங்கிய செய்தி கந்தபுராணத்திற் காண்க.*

" விடம்பிடித் தமலன் செங்கண் வெங்கன லுறுத்திப் பாணி
இடம்பிடித் திட்ட தீயில் தோய்த்துமுன் னியற்றி யன்ன
உடம்பிடித் தெய்வ மிவ்வா றுருகெழு செலவி னேகி
மடம்பிடித் திட்ட வெஞ்சூர் மாமுதல் தடிந்த தன்றே "
— கந்தபுராணம் சூரபன்மன் வதைப் படலம் 487.

*வாழ்கென வாழ்த்துதலும், இவருக்கு இன்ன நன்மையுண் டாகவெனத் தாம் நினைத்ததைச் சொல்லுதலும் வாழ்த்தணியாம் ஆகலின் இப்பொருள் பற்றிய இதுமுதல் மூன்று செய்யுட்களும் வாழ்த்தணியாம்.*

" வாழ்த்துவ தாமே வாழ்த்தெனப் படுமே "
— மாறனலங்காரம் 246.

" இன்னார்க் கின்ன தியைக வென்றுதா
முன்னியது மொழிதல் வாழ்த்தென மொழிப "
— தண்டியலங்காரம் 86.

*பொன் பற்றி காவலனாகிய புத்தமித்திரனார் வாழ்த்தினை ஆசீர் வசனமென்பர்.*

" திகழாசியின் சீர்மை சொலிற், றப்பாத வாசீர் வசனமெனவுணர்
தாழ்குழலே " — வீரசோழியம், அலங்காரப் படலம் 33.

25. திங்கள்மும் மாரி பெய்க
செழும்றை வேள்வி யோங்க
பொங்குமா னினங்க ளுளும்
புதுவளஞ் சுரப்ப வேலே
யங்கண்மா ஞாலங் காக்கும்
அரசர்செங் கோல்லி ளங்க
சங்கவெண் குழையோன் சைவ
சமயநூல் வழாது வாழ்க.

பொழிப்புரை : மாதத்தில் மூன்று முறை மழை பெய்க. செழுமையாகிய வேதநெறியிற் செய்யப்படும் வேள்விகள் ஓங்குக. விளங்குகின்ற பசுக் கூட்டங்கள் எப்பொழுதும் பாலாகிய புதிய வளத்தினைச் சுரக்குக. கடல் சூழ்ந்த அழகிய இடத்தையுடைய பெரிய பூமியை யாளுகின்ற அரசர்களுடைய நீதி விளங்குக. வெண்மையாகிய சங்க குண்டலத்தை யணிந்த சிவபிரான் அருளிச் செய்த வேத சிவாகமங்களென்னும் சைவ சமய நூல்கள் தவறுதலில்லாமல் வாழ்க என்றவாறு.

விளக்கவுரை : இப் பாடலில் மழை, வேள்வி, பசுக்கூட்டம், அரசர், செங்கோல், சைவ நூல் என்னும் உலகிற்கின்றியமையாத தெய்வ சம்பந்த முடைய ஆறு பொருள்கட்கும் வாழ்த்துக் கூறினர். பூமியில் பொருளும் இன்பமும் நிகழ்வதற்குக் காரணமாயுள்ளது மழையாகலின் "மாரி பெய்க" என்றும், அம் மழையும் மாதத்தில் மூன்று முறை பெய்தாலன்றிச் சிறந்த பயன் விளையாதாகலின் "திங்கள்மும் மாரி பெய்க" என்றும் மாதத்தில் மூன்று முறை மழை பெய்வதற்குக் காரணமாயுள்ளது வேத விதிப்படி செய்கின்ற யாகங்களாமாதலின் "செழுமறை வேள்வி யோங்க" என்றும் அவ் வேள்வி நிகழ்தற்குப் பசுக் கூட்டங்களின் பால் முதலிய பஞ்ச கௌவியங்கள் இன்றியமையாதனவாமாதலின் "பொங்குமா னினங்க ளுளும் புதுவளஞ் சுரப்ப" என்றும் ஆனினங்கள் முதலியன பாதுகாக்கப்படுவதற்கு அரசர்களுடைய செங்கோல் இன்றியமையாதனவாகலின் "அரசர்செங் கோல் விளங்க" என்றும் அரசர்கள் அருளுடையராய் நீதி செலுத்துவதற்கு அருள்நெறி கூறும் சைவ சாத்திரங்கள் இன்றியமையாதனவாகலின், சிவபிரான் அருளிச் செய்த சிவாகமம் முதலிய சைவ சமய நூல் வாழ்கவென்றும் கூறினர். சிவ சம்பந்தமான சமயம் சைவ சமயமாகலின் "சங்கவெண் குழையோன் சைவ சமயம்" என்றுர்.

"தெய்வஞ் சிவனே சிவனருள் சமயஞ்
சைவஞ் சிவத்தொடு சம்பந்த மென்றுன்"

— திருச்செந்தூரகவல்.

புதுவளம் என்றது—புதுமையான பால் முதலிய பொருள் களையாம். வளம் செல்வமுமாம் பசுவின் பால் செல்வத்திற்குக் காரணமாயுள்ளதாகலின் அதனை வளமென்றுரெனினுமாம்.

எப்பொழுதும் நீங்காத செல்வம் நிறையும்படி பசுக்கள் பாலைச்சொரியுமென்று ஆண்டாள் திருப்பாவையிற் கூறியிருத் தலும் ஈண்டு அறிதற்குரியது.

"தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளற்பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்"—

26. பொன்னிநீர் வாழ்க வெற்றிப்
பூந்துறை நாடும் வாழ்க
சென்னியங் கிரிவேள் பூசை
செழித்துமென் மேலும் வாழ்க
சன்னிதா னத்தி லன்பர்
தாநிகர் வாழ்க வாழ்க
மன்னிநீ டுலக மெல்லாம்
மலிவளஞ் சுரந்து வாழ்க.

**பொழிப்புரை :** பொன்னையுடைய காவிரியாற்றின் நீர் வாழ்க. அதனுடன் வெற்றியை யுடைய பூந்துறை நாடும் வாழ்க. அழகிய சென்னிமலையில் வீற்றிருக்கும் சிவந்த நிறமுடைய முருகக் கடவுளுக்குச் செய்யும் பூசையானது வளர்ச்சியுற்று மேலும் மேலும் வாழ்க. முருகனுடைய சன்னிதானத்தில் அன்புடைய அடியார்கள் தமக்குத்தாமே நிகராக வாழ்க வாழ்க. நீண்ட உலகங்கள் யாவும் நிலைபெற்று மிகுந்த செல்வம் பெருகி வாழ்க என்றவாறு

**விளக்கவுரை :** இச் செய்யுளில், காவிரியாறு, பூந்துறை நாடு, சென்னியங்கிரி முருகன் பூசை, அடியார்கள், உலகம் என்னும் ஐந்து வகையில் வாழ்த்துக் கூறினர். பொன்னிநீர் —காவிரியாறு.

"பொன்னிநீர் நாட்டினிடும் பொற்பதி"
— சிறப்புலிநாயனார் புராணம்.

குடகு மலையிலுள்ள பொன்னைக் கொழித்து வருதலின் பொன்னி யெனப் பெயர் பெற்றது.

"மலைத்தலைய கடற்காவிரி, புனல்பரந்து பொன்கொழிக்கும்"
— பட்டினப்பாலை.

"செம்பொன்னுரையுந்திப், பகராவருபுனற் காவிரி"
— திருஞானசம்பந்தர் தேவாரம். (திருநெய்த்தானம்)

"தேங்கிக்குடகந் தருபொன்னி சூழுஞ்செங் கோடைவெற்பில்"
— திருச்செங்கோட்டுக்கோவை-131.

"கோணிலை திரிந்து கோடை நீடினுந்
தானிலை திரியாத் தண்டமிழ்ப்பாவை" —மணிமேகலை. பதிகம்.

என்று ஆன்றோராற் புகழப்பெற்று இடையறாது பெருகிச் சென்று உலகுயிர்களை வளர்த்துப் புண்ணியந்தரும் புனித நதியாய் நாட்டிற்கு அணிசெய்து விளங்குவது காவிரியாகலின் அதனைப் "பொன்னிநீர் வாழ்க" வென்றும் அதன் இருபுறத்துக் கரைகளிலுமுள்ள பூக்கள் நிறைந்த நீர்த்துறைகளாற் பொலிவு பெற்றுத் தலைமையுற விளங்கும் நாடு பூந்துறை நாடாகலின் அதனை "வெற்றிப் பூந்துறை நாடும் வாழ்க" என்றும் அந் நாட்டில் வாழ் மக்கள் எப்பொழுதும் பொருளும், பொன்னும், போகமும் பெற்று அருளுற வாழ்தற்குக் காரணமாயுள்ளது அந் நாட்டில் விளங்கும் சென்னியங்கிரிவாழ் செவ்வேள் முருகனுக்கு இடையறாது யாண்டுஞ் செய்யுஞ் சிறப்புறு பூசனையாமாகலின், "சென்னியங்கிரிவேள் பூசைசிறப்புறமேலும்வாழ்க" என்றும் செவ்வேளின் பூசை சிறப்புடன் நிகழ்வதற்குக் காரணமாயுள்ளவர்கள் அவன் திருமுன்பில் அன்புடைய மெய்யடியார்களாமாதலின் "சன்னிதானத் திலன்பர்தா நிகர்வாழ்க" வென்றும் நன்மைமிக்க அடியார்கள் செய்யும் நாட்பூசை, விழாப் பூசை முதலியன சிறப்புற நிகழ்தற்கு வேண்டிய பொருள்களெல்லாந் தருவது பூமியாகிய உலகமாதலின் "மன்னிநீடுலக மெல்லாம் மலிவளஞ்சுரந்து வாழ்க" வென்றும் கூறினர். "வையநீடுக" என்பது பெரியபுராண வாழ்த்து. கொங்கில் பொன்னி நதியும்

பூந்துறை நாடும் ஒன்றற்கொன்று இன்றியமையாச் சிறப்புடையனவாக விளங்குதலின் "பொன்னி நீர் வாழ்க வெற்றிப் பூந்துறை நாடும் வாழ்க" என்று ஆசிரியர் அவற்றை இணைத்துக் கூறினர்.

"வெங்கோ டையிற்பயில் வேடக நீடிய வெவ்வழற்கா
னிங்கோ டரிக்கண்ணி யிவ்விடை போது மிதுகடந்தாற்
சங்கோ லிடும்புனற் பூந்துறை நாடுஞ்ச டானனர்வாழ்
செங்கோ டையும்பொழில் சூழ்குட காவிரித் தீர்த்தமுமே"
— திருச்செங்கோட்டுக்கோவை-366.

சன்னிதானத்தில் அன்பர் தாநிகர் வாழ்க வென்றது, முருகன் திருமுன்பில் அன்புடைய அடியார்கள் உயர்ந்தோரும் ஒப்போரும் இல்லையாம்படி தமக்குநிகர் தாமாக வாழ்க வென்பதாம். நிகர்—உவமையுருபு. அன்பர்களுக்கு ஒப்பாவோர் அன்பர்களாம். பிறரில்லை என்பது கருத்தாம். "தானே யுவமை தனக்கு" என்பது போல்வதாம். இவ்வாறு வருவதனைப் பொது நீங்குவமை யென்பர் தண்டியாசிரியர். அநந்வயாலங்கார மென்பது குவலயானந்தம்.

"ஒருமொழி யாகிய வுவமானப் பொரு
ளதுவே யுவமா னப்பொரு ளாகில்
அநன்வய மெனவே யறைந்த னர்புலவர்".

"மொழியுந் தமிழ்க்குதவும் முத்தின் மதுரைநகர்ச்
செழியன் றனக்கொப்புச் செழியனே யம்புவியில்"
— மாணிக்கவாசகத் தம்பிரான் — குவலயானந்தம்.

ஆகத்திருவிருத்தம் — 207.

ஆலயங்கண்ட மான்மியம் முற்றும்.

சென்னிமலைப் புராணம் மூலமும், உரையும் முற்றும்.

உ

சென்னிமலையாண்டவன் துணை.

# செய்யுள் முதற்குறிப் பகராதி.


| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| அரசர் | 116 | இசைமுனி | 65 |
| அருண்முனி | 144 | இடைவிடா | 71 |
| அருந்துமா | 79 | இருகுரும்பை | 88 |
| அவரவர் | 194 | இக்கதை | 223 |
| அளித்திடுங் | 164 | இத்திறமன் | 104 |
| அங்கோடி | 29 | இந்திரன் | 76 |
| அச்சபையை | 55 | இந்துசூழ் | 130 |
| அந்த ஞான்றி | 123 | ஈறில்கே | 131 |
| அந்தண நீ | 45 | உருவா | 180 |
| அந்தணன் | 62 | உருச்சந்தி | 14 |
| அம்புராசி | 111 | உண்டுகெதி | 52 |
| அய்ய நினது | 119 | உண்நெகிழ்ந்து | 202 |
| அய்ய நின் | 167 | ஊடிவரை | 103 |
| அவ்வரையின் | 47 | எனமனஞ் | 66 |
| அன்னது கண் | 59 | எழுது செப் | 64 |
| அன்னுடதனை | 125 | எந்தைகே | 132 |
| அன்பினர் | 135 | எந்தைசொன் | 145 |
| அன்றியு | 141 | எம்மையா | 73 |
| ஆடலன் | 90 | எய்திய | 138 |
| ஆடவரிவ் | 107 | என்றலுங் | 67 |
| ஆடற்கேற்ற | 108 | ஐய யான் | 74 |
| ஆடினன் கூத் | 55 | ஒருசொற் | 115 |
| ஆயகாலை | 91 | ஒருபெருங் | 147 |
| ஆயபதி | 36 | ஒருபெருங்கோ | 204 |
| ஆய நாட்டிடை | 28 | ஒண்டொடி | 139 |
| ஆய நீயிர் | 122 | ஓதுரிவை | 32 |
| ஆயவற்றுக் | 54 | கண்டனன் | 70 |
| ஆயிடை | 136 | கந்த | 165 |
| ஆரணம் | 171 | கந்தாவுயர் | 184 |
| ஆரை நீ | 142 | கன்னலு | 140 |
| ஆவலங் | 218 | கன்னியம் | 217 |
| ஆறதர் | 135 | கன்னியர்கள் | 105 |
| ஆங்கவற்றுள் | 57 | காவனந்தி | 17 |
| ஆண்டகை | 24 | காசியு | 134 |

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| காண்டலு | 149 | செய்யவுள | 48 |
| காண்பதற் | 83 | சென்றிமவான் | 51 |
| கார்த்திகை | 85 | சென்றுநடம் | 108 |
| கிளர்சிர | 152 | சென்னிமலை | 19 |
| குயிலாய | 12 | சேற்கண்டே | 13 |
| குஞ்சித | 169 | சொல்வழி | 145 |
| கூசுவ | 68 | சொல்கொண்ட | 6 |
| கூர்கெழு | 225 | சொற்றமாற்ற | 121 |
| கெண்டை விழி | 100 | சொற்றருள் | 92 |
| கெர்ப்பவன் | 200 | தமர்மொழிந்த | 53 |
| கொழுமாத்தூங் | 35 | தலம்புக | 206 |
| கொங்கிடை | 74 | தழுதழுத்து | 46 |
| கொந்தவிழ் | 34 | தகைபெற | 153 |
| சரணென | 189 | தந்தமனை | 114 |
| சரவண மாமுனி | 58 | தாமரை | 77 |
| சரவணமா | 199 | தானவ | 144 |
| சதுமறை | 155 | தாதார் | 126 |
| சந்தனக் | 155 | தாமரி | 31 |
| சாத்துவிக | 42 | திருமுடிகள் | 16 |
| சார்ந்துசிவன் | 45 | திருக்கிளர் | 81 |
| சாற்றுமலை | 1 | திங்கள்மும் | 227 |
| சிகரமா | 202 | திட்டருஞ் | 168 |
| சிரகிரி | 85 | தீர்த்தமுங் | 159 |
| சிலநாளிங் | 117 | தென்செய் | 221 |
| சிந்துயிர் | 80 | தேமலர்த்திரு | 26 |
| சில்பகற் | 54 | தேவகுஞ்சரி | 212 |
| சில்போதில் | 44 | தொட்டிடு | 138 |
| சீரோடு | 30 | தொல்பதி | 39 |
| சீலிய | 197 | தோற்றுகை | 84 |
| சீர்கிடந்த | 89 | நரம்புளர் | 72 |
| சூரனை | 129 | நறைக்கோல | 16 |
| சூரன் முத | 56 | நிலந்தனில் | 146 |
| செயிரறு | 64 | நில்லுநில்லு | 106 |
| செச்சை | 137 | நின்னது | 70 |
| செந்தமிழ் | 23 | நீயசு | 143 |
| செம்பொன் | 213 | நூறுதூ | 201 |

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| நோற்பருமா | 60 | மந்திர | 97 |
| பழமுதிர் | 76 | மற்றவன் | 191 |
| பதியது | 192 | மன்னவன் | 143 |
| பத்தர்க | 214 | மன்னுயிர் | 72 |
| பஞ்சதுந் | 78 | மாமணிக் | 198 |
| பன்னருஞ் | 25 | மாமதன | 99 |
| பன்னிற | 209 | மாமலர் | 149 |
| பன்னுமிசை | 102 | மாமறை | 193 |
| பாரினுள | 98 | மீட்டுமுன் | 69 |
| பாருதித்திடு | 94 | முருந்தார் | 11 |
| பிரமச்சாரி | 40 | முத்தவெண் | 200 |
| பிறையெயிற் | 133 | முத்தா | 176 |
| புலன்களு | 50 | முன்னைய | 62 |
| புனைந்துரை | 68 | மூவிருமுடி | 160 |
| பூதலம் | 65 | மூவிரு மூவா | 173 |
| பூங்கழங்கு | 94 | மூப்புவெம் | 81 |
| பெருமான் | 118 | மெய்யிலணி | 8 |
| பெய்யுந் | 124 | மொழியு | 112 |
| பெற்றவா | 49 | மோகற | 220 |
| பேரழகு | 105 | மோதுவார் | 214 |
| பேரொளி | 203 | யோகுறு | 132 |
| பொதுமா | 119 | வழிவிடுத் | 150 |
| பொருங்கொடி | 84 | வண்டமிழு | 96 |
| பொன்னிநீர் | 228 | வந்துவழி | 114 |
| போதமுடன் | 22 | வான நாயகி | 13 |
| போகியன் | 90 | வான நாட்டினில் | 87 |
| போழிளவெண் | 21 | விதுமறுத்து | 207 |
| போற்றியென் | 151 | விடைகொண்ட | 113 |
| போற்றிவிடை | 52 | விண்ணினின் | 93 |
| மகநான் | 182 | வீற்றிருந்து | 43 |
| மருமிகு | 163 | வெயிலுமிழ் | 208 |
| மலையமா | 128 | வெண்ணிலா | 27 |
| மறைவொடு | 130 | வேறுசெப் | 158 |
| மங்கல | 96 | | |

# பிழையும் திருத்தமும்.

| பக்கம் | பாட்டு | வரி | பொழிப் புரை | விளக்க வுரை | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 13 | | | பாடுதவற்கு | பாடுவதற்கு |
| 10 | 3 | 11 | | | வித்தியாதத்தும் | வித்தியாதத்துவம் |
| ,, | ,, | 26 | | | புரிஞதலின் | புரிவஞதலின் |
| 12 | 4 | 8 | | | செய்தார் | செய்தாள் |
| 14 | 7 | 8 | ,, | | வளர்கின்ற என்பதொடு ... | சென்னியங்கிரியில் வீற்றிருக்கின்ற (சேர்க்கை) |
| 36 | 26 | 1 | | | சந்னப் பூங்கா | சந்தனப் பூங்கா |
| 39 | 27 | 12 | | | சென்னிமலைக் | சென்னிமலைச் |
| 50 | 39 | 3 | | | நலங்கிளறும் | நலங்கிளரும் |
| 52 | 41 | 1 | | | முதுக்குறைவினர் | முதுக்குறைவினிர் |
| 54 | 45 | 3 | | | மண்டபத்திலிருந்து ... | மண்டபத்திருந்து |
| 56 | 47 | 11 | | | கழனினன் | கழலினன் |
| 69 | 11 | 6 | | | கொணர்த்தி | கொணர்தி |
| 70 | 12 | 3 | ,, | | தலைவராகிய | தலைவஞகிய |
| ,, | ,, | 4 | ,, | | மேரு வென்னும் மந்தர மலையை | மேரு மலையை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 71 | 13 | 4 | | மந்தர மலையை | மேரு மலையை |
| 72 | 15 | 8 | | வாடி | வாட |
| ,, | ,, | 5 | ,, | வாட்டமுற்று | வாட்டமடைய |
| 72 | 16 | 5 | ,, | கரம்பயல் | கரம்பயில் |
| 78 | 23 | 1 | | துந்துமியுமல்லற் | துந்துமியுமல்லாப்<br>துந்துமியுமல்லல்—பி-ம். |
| 79 | 24 | 1 | | ... | அமுதமோர்பால்—பி-ம். |
| 85 | 31 | 2 | ,, | பூசநாளினும்<br>என்பதொடு ... | புகழ்தற்குரிய வைகாசி மாதத்தில்<br>வரும் விசாக நட்சத்திரத்திலும்<br>(சேர்க்கவும்) |
| 88 | 2 | 2 | ,, | தனங்களும்<br>என்பதொடு ... | ஆபரணங்களும் என்று சேர்க்கவும் |
| 89 | 3 | 2 | | தாங்கிய | தங்கிய |
| 93 | 7 | 8 | | கூறினாரென்க | கூறினானென்க |
| ,, | 8 | 3 | ,, | கோவிலினடத்தில் ... | கோவிலினிடத்தில் |
| 94 | 9 | 2 | ,, | சிறந்த அழகுகள்<br>தோன்றவும் திருவருள்<br>பெருகவும் | சிறப்பாகிய அப் பருவங்களுக்குரிய<br>அழகுகள் சிறந்து விளங்கவும் |
| 95 | 10 | 10 | ,, | கான்மாற்றி ... | கான்மாறி |
| 96 | 11 | 3 | | மாதலைவளத் | மாலைதவளத் |
| 99 | 14 | 17 | ,, | மீட்டினான் ... | மீட்டினாள் |
| 104 | 18 | 4 | ,, | கூறுவர் உரையாசிரிய<br>ராகிய நச்சினார்க்<br>கினியர் ... | கூறுவர் |

| பக்கம் | பாட்டு | வரி | பொழிப்புரை | விளக்கவுரை | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 109 | 25 | 4 | | | எழுப்பக் | எழுப்பி |
| ,, | ,, | 7 | | | மகிழ்ச்சி | மகிழ்ச்சியும் |
| ,, | ,, | 16 | | | பாடலுக்கேற்ற | பாடற்கேற்ற |
| 113 | 27 | 5 | ,, | | நின்று என்றவாறு | நின்று |
| ,, | ,, | ,, | ,, | | | சிவ சன்னதியில் உள்ளோர் பெறு தற்குரிய பேற்றினையளிப்ப அதனைப் பெற்றுக்கொண்டு எல்லாவற்றையு முடைய சிவபெருமானைத் தொழுது எண்ணிய வரங்களை யெமக்குத் தரு வாயென்று வணங்கியுரைத்தவராய் என்றவாறு. உரைத்தார் என்பது விடைகொண்டு என்னும் வினை கொள்ள நிற்றலால் முற்றெச்சமாம். |
| 126 | 41 | 10 | | ,, | களங்கொடு | கழங்கொடு |
| 128 | 1 | 3 | | | கொணர்ந்துமென் | கொணர்துமென் |
| 130 | 3 | 3 | | | குறைவர ... | குறைவற |
| 133 | | 3 | | ,, | பன்னிருபடலப் பாயிரம் | புறப் பொருள் வெண்பாமாலைச் சிறப்புப் பாயிரம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 133 | | 18 | | திருமழபாடிப் புராணம் | திருக்குற்ருலப் புராணம் |
| 138 | 14 | 8 | | ஒகை | தோகை |
| 140 | 17 | 10 | | முற்கூரிய | முற்கூறிய |
| 140 | 17 | 11 | | மறுகணைகளிரண் டுடன் | மறுகணைகளிரண்டும் சேர |
| 143 | 21 | 3 | | அவர் சொன்ன | அவன் சொன்ன |
| 149 | 28 | 1 | | ஈட்டும் | மீட்டும்—பி-ம். |
| 150 | 29 | 5 | ,, | விரைவாக | அரசனைப் போல |
| ,, | 30 | 2 | ,, | வராக மலையின் சார்பிலும் ... | சிவகிரியினிடத்திலும் |
| 155 | 1 | 7 | | புதுமலர்ப் | புதுமலர் |
| 156 | 2 | 21 | | ணிறுற் | ணிருற் |
| 158 | 3 | 1 | | வாறும் | வாறு |
| ,, | 3 | 2 | ,, | எழுதிய வரலாறும் | எழுதியுள்ளபடி. (சிரகிரியில்) |
| 173 | 13 | 2 | ,, | பொருளாயுள்ளவனே சரணம் என்பதொடு... | மேக நிறமுடைய திருமாலின் மருமகனே (சேர்க்கை) |
| ,, | 13 | 5 | ,, | பிளந்தவனே ... சரணம் என்பதொடு | (சேர்க்கை) அகத்தியமுனிவனுக்குக் குருவாக வந்தவனே சரணம் தேவர்களாகிய சேனைகளுக்குத் தலைவனுயுள்ளவனே வணக்கம். |

| பக்கம் | பாட்டு | வரி | பொழிப்புரை | விளக்கவுரை | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 173 | 13 | 12 | | ,, | சரவணத்தின் | சரவணத்தில் |
| 174 | | 1 | | ,, | குழந்தைகளாக | ஆறு குழந்தைகளாக |
| 178 | 14 | 16 | | ,, | என்றுங் | என்று |
| 193 | 21 | 6 | | | றெமக்கு | ரெமக்கு |
| 203 | 8 | 3 | | | ஓர்ந்துழி | ஓர்ந்து |
| 206 | ,, | 2 | | | சுற்றுகின்ற என்பதொடு ··· | சுற்றுகின்ற சுப்பிரமணிய தீர்த்தத்தின் (சேர்க்கை) |
| ,, | | 9 | | ,, | சார்பிலாகான் | சார்பிலாகலான் |
| 207 | ,, | 7 | | ,, | புரிமொன | புரியென |